V211,32 'N80
N80.16731
122006

92

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY 23rd JUNE 1980
25th to 28th June 1980

Index - Nil

**Volume CLXVII No. 1-5**

©
GOVERNMENT OF TAMIL NADU
1980

*Legislative Council Department*
*Fort St. George, Madras-600 009.*

PRICE 2 *Rupees.*]

D L
V211-32 N80
N80-16731
122004

பொருளடக்கம்

23—6—1980

பக்கங்கள்.

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி. i

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். .. .. .. iii—vii

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள். .. .. .. ix

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல். .. .. .. xi—xiv

இரங்கற் குறிப்பு—

சட்ட மன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. வி. குருநந்தன் ராவ் மறைவு குறித்து. .. .. .. 1

இரங்கற் தீர்மானங்கள்—

(1) சட்ட மன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் மறைவு குறித்து. .. 2—3

(2) பாராளுமன்ற உறுப்பினர் திரு. சஞ்சய் காந்தி அவர்களின் மறைவு குறித்து. 4—22

D-II 127/25 1

## பொருளடக்கம்


பக்கங்கள்

புதிய அமைச்சரவைக்கு வரவேற்பு .. .. 53—54

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு 75வது பிறந்த நாள் பாராட்டுரை. .. .. 54—72

அறிவிப்புகள்—

(1) வினாக்கள் செயலற்றவை ஆனது குறித்து 72

(2) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல் குறித்து .. .. 73

(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து 74

(4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து 74

(5) அவைக் கொறடா நியமனம் குறித்து 74

(6) பிரதான எதிர்க் கட்சி அங்கீகாரம் குறித்து .. .. .. .. 74

மாற்றுத் தலைவர் பட்டியல் .. .. 74

ஆளுநர் உரையின் மீது விவாதம் .. .. 75—120

அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 120—125

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| அறிவிப்பு— | |
| (1) உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் குறித்து. | 137 |
| (2) ஆளுநர் உரையின்மீது விவாதம் குறித்து | 137 |
| ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. | 137–206 |

## பொருளடக்கம்


பக்கங்கள்.

1. அறிவிப்பு—

புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் ஏடுத்துக் கொண்டது குறித்து .. .. 209

2. கவன ஈர்ப்பு—

சேலம் கோட்டை மாரியம்மன் கோவிலுக்கு 120 அடி உயர இராஜ கோபுரம் கட்டுமாறு ஆர்ப்பாட்டம் செய்தது குறித்து .. .. 209—210

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 210—258


D-II C 30—1

## தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி

President's Rule was imposed in the State of Tamil Nadu on 17th February 1980 through a Presidential Proclamation G.S.R. 42 (E) and 43 (E), dated the 17th February 1980.

The Presidential Proclamation was revoked on the 9th June 1980 by Proclamation G.S.R. 308 (E), dated the 9th June 1980.

9. THE HONOURABLE THIRU C. PONNAIYAN, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. THE HONOURABLE THIRU P. KOLANDAIVELU, Minister in-charge of Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Highways.

11. THE HONOURABLE THIRU S. RAGAVANANDHAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THE HONOURABLE DR. H. V. HANDE, Minister in-charge of Health.

13. THE HONOURABLE THIRU K. RAJA MOHAMMED, Minister in-charge of Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. THE HONOURABLE THIRU S. MUTHUSAMY, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. THE HONOURABLE THIRU S. THIRUNAVUKKARASU, Minister in-charge of Large Scale Industries, Mines, Textiles and Minerals.

16. THE HONOURABLE THIRU S. N. RAJENDRAN, Minister in-charge of Handlooms, Khadi, Prohibition excluding grant of liquor permits and Passports.

17. THE HONOURABLE THIRU M. VIJAYASARATHI, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. THE HONOURABLE THIRUMATHI GOMATHI SRINIVASAN, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி மற்றும் ஆட்சிமொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு சி. பொன்னையன் (கூட்டுறவு மற்றும் சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டுநிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மற்றும் கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப்பட்டவை, பூமிதானம், கிராமதானம் மற்றும் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளிவிவரங்கள், தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை.



13. மாண்புமிகு திரு. கா. இராசா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், மற்றும் வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், மற்றும் துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பெருந்தொழில்கள், சுரங்கமும்-கனிவளமும், மற்றும் நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. செ. நி. இராசேந்திரன் (கைத்தறி மற்றும் கதர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கைத்தறி, கதர், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), மற்றும் பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

அரிசன நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைந் தொழிலாளர், மற்றும் வேலைவாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

**டாக்டர் ம. பொ. சிவஞானம்**

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. புலவர் புலமைப்பித்தன்.
2. திரு. சோ. ஆறுமுகம்.
3. திரு. பா. ரா. தாமஸ்.
4. திருமதி தாரா செரியன்.

மேலவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

சார்புச் செயலாளர்

திரு. த. ப. டில்லிதுரை, பி.எஸ்சி., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.,

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1. அருணாசலம் திரு. கே. | நியமனம். |
| 2. ஆறுமுகம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 3. ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4. இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5. இராசா முகமது, திரு. கா. (பாசனத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 6. இராமமூர்த்தி திரு. க. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7. சங்கரலிங்கம், திரு. ம., எம்.ஏ. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 8. சந்தோஷர், திரு. த., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 9. சனார்த்தனம், டாக்டர் இரா. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 10. சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 11. சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி. | நியமனம். |
| 12. சுவாமிநாதன், திரு. ஜி. பி. பார்ம். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 13. தாமஸ், திரு. பா. ரா. | மதுரை-இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 14. தாமோதரன், திரு. ஏ. ஆர் பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 15. தாரா செரியன், திருமதி. | நியமனம். |
| 16. நல்லசிவன், திரு. ஆ. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 17. நீலநாராயணன், திரு. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 18. புலவர் புலமைப்பித்தன். | நியமனம். |
| 19. மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 20. மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 21. மியாகான், திரு. ஜே. எம். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22. மீனாட்சி சுந்தரம், திரு. க. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 23. முத்துசாமி, திரு. செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 24. முத்தையா செட்டியார், டாக்டர், எம்.ஏ. | நியமனம். |
| 25. முனுசாமி, திரு. பி. | நியமனம். |
| 26. ராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27. லீலாவதி, செல்வி ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 28. லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர்கள் தொகுதி. |
| 29. வசந்தபை, திரு. ஜி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 30. வீரப்பன், திரு. இராம. (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 31. வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 32. ஹண்டே, டாக்டர், எச். வி. (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்). | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 33. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 34. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 35. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 36. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 39. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 40. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 41. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42. வெற்றிடம் | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 43. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44. வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46. வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48. வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர்இலக்கமும், உப்பினர் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 49. வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50. வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 52. வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54. வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56. வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58. வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60. வெற்றிடம் | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62. வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்றத்தின் ஐம்பத்தி எட்டாவது கூட்டத் தொடர்.

---

**திங்கட்கிழமை, 1980 ஜூன் 23.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் குறிப்பு.

**சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. வி. குருநந்தன் ராவ் மறைவு குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. வி. குருநந்தன் ராவ் அவர்கள் 5—4—1980 அன்று பெங்களூரில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர் 1952 முதல் 1958 வரை மேலவை உறுப்பினராக இருந்தார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றார்கள்.

## 2. இரங்கற் தீர்மானங்கள்.

### (1) சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவை உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் சென்ற 18—4—1980 அன்று சிதம்பரத்தில் இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு தலைவர் அவர்களே,

"இந்த அவையில் 1977 முதல் உறுப்பினராக இருந்த திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் 18—4—1980 அன்று இயற்கையெய்தியது குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது"

என்ற தீர்மானத்தை தங்களின் அனுமதியோடு இந்த அவையில் முன்மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மறைந்த திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் சுய மரியாதை இயக்கம் உருவான காலத்திலிருந்து தந்தை பெரியார் அவர்களுடைய தலைமையிலும், பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலும் தொடர்ந்து பணியாற்றி திராவிட இயக்கத்தில் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர் ஆவார்.

குறிப்பாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் நெசவாளர்களுடைய துயரையெல்லாம் கண்டறிந்து அவர்களுடைய வாழ்வில் ஒளிவிளக்கை ஏற்ற வேண்டும் என்பதற்காக அப்போது தேங்கிக் கிடந்த துணியைத் தம் கட்சித் தொண்டர்கள் தெருத் தெருவாக எடுத்துச் சென்று விற்றிட வேண்டும், அதன் மூலம் நெசவாளர்களின் வாட்டத்தைப் போக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டபோது, தென்னாற்காடு மாவட்டத்தில் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு கைத்தறித் துணிகளை தெருத் தெருவாக எடுத்துச் சென்று விற்று கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்கும் பணியில் முன்னணியில் நின்றார்கள்.

அதற்குப் பிறகு அவர்கள் பல்வேறு பொறுப்பிலே இருந்தார்கள். இந்த மன்றத்தின் உறுப்பினராக அவர்கள் ஆன பிறகு அவர்கள் இங்கே செயல்பட்ட விதத்தை நாம் நேரிலேயே பார்த்திருக்கிறோம். சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய, குறிப்பாக திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்



களுடைய சிறந்த பண்பும் குண நலன்களும் அவரிடம் இருந்ததை நாம் பார்த்தோம். வயது வித்தியாசம் பார்க்காமல் யாரையும் மிகுந்த மரியாதையோடு அழைப்பார். அப்படியே பழகுவார். இந்தப் பாங்கினை அவர் பல்வேறு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறார். அப்படிப்பட்ட நல்ல பண்பு படைத்தவர் அவர். புதிய சூழ்நிலையில் இந்த மன்றம் கூடுகிறபோது நம்மிடையே இருந்து இங்கே விவாதத்தில் பங்கு கொண்டு அவரது அனுபவ உரைகளைத் தெரிவிக்கும் வாய்ப்பு இல்லையே என்று நினைக்கிறபோது, நமக்கு மிகுந்த வருத்தமாக இருக்கிறது. அன்னாரை இழந்து வாடிக்கொண்டிருக்கும் அவரது குடும்பத்ினருக்கும் திராவிட இயக்கத்தினர் அனைவருக்கும் நாம் அனுதாபம் தெரிவிக்கும் இந்த வேளையில் நமக்கு நாமே ஒவ்வொருவரும் ஆறுதல் சொல்லிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனினும் இந்த வேளையில் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, அவர் 1916 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் 1939 ஆம் ஆண்டு முதல் சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டு தொடர்ந்து திராவிடர் கழகத்திலும், திராவிட முன்னேற்றக் கழகத்திலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலும் ஈடுபாடு கொண்டு பணியாற்றினார். 1939-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றிருக்கிறார். அவர் பழைய நல்லூர் பஞ்சாயத்துத் தலைவராக 25 ஆண்டுகள் பணியாற்றினார்.

அவர் மேலவை உறுப்பினராக 31—12—1977-ல் ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டு இந்த அவையில் பணிபுரிந்தார். அவர் மேலவை விவாதங்களில் கலந்துகொண்டு அமைதியாக தனது கருத்துக்களை வெளிப்படுத்தியவர். அவரது மறைவால் ஒரு நல்லவரை இந்த அவை இழந்து விட்டது.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறு வேண்டுகிறேன்.

*அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.*

**தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.**

[திரு. கா. இராசா முகமது]

[1980 ஜுன் 23

நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களுக்கும் நம்முடைய ஆழ்ந்த
வருத்தத்தையும் அனுதாபத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,
இந்த அவையில் 1977 ஆம் ஆண்டு முதல உறுப்பினராக இருந்து நம்மோடு
அரிய பணியாற்றிவந்த பெரியவர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள்
இன்று நம்மிடையேயில்லை; அவருடைய வரலாற்றைப் பார்க்கிறபோது, அவர்
அறிவு வந்த நாளிலிருந்து தந்தை பெரியார் அவர்கள் வழியில் நின்று,
பகுத்தறிவுக் கொள்கைகளை, திராவிட பாரம்பரியத்தினை வளர்க்கிற பணி
யிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பல போராட்டங்களிலே கலந்துகொண்டு,
பல்வேறு, ஆக்க ரீதியான பணிகளிலே ஈடுபட்டு, தொண்டு செய்து, வளர்ந்த
வர்களாவார் என்பது தெரியும். அந்தப் பெரியவர் தன்னுடைய அரசியல்
தொண்டு காரணமாகவும், முதிர்ச்சியுற்ற தனது அனுபவத்தின் காரண
மாகவும், இந்த அவையில் அவர் கடந்த 3 ஆண்டுகாலமாக ஆற்றிய பணி,
ஒளி மிக்கதாய், வழிகாட்டும் ஆற்றலுடையதாய் அமைந்திருந்தது. அதைத்
தொடர்ந்து பெறும் நிலை நமக்கு இல்லாத வகையில் அவர் இன்று
நம்மிடமிருந்து பிரிந்திருக்கிறார். எனவே அவருடைய குடுபத்தினருக்கும்
அவரைச் சார்ந்தவர்களுக்கும், இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்த
அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கூறிய உணர்வுகளோடு ஒன்றுபட்டு,
நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எங்களின்
அஞ்சலியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4.10)

அடுத்து, இந்திய துணைக் கண்டம் முழுவதையும் மட்டுமல்ல, உலகம்
முழுவதையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கக்கூடிய ஒரு கொடிய சம்பவம்
இன்று காலையில் நடந்துவிட்டது. பலர் இந்தச் செய்தியைச் சொன்னார்
கள். நான் நம்பவில்லை. அதை என்னால் நம்பவும் முடியவில்லை.
இன்னும் சந்தேகப்படக்கூடியவர்கள்கூட உண்டு என்ற நிலைமையும்
இருக்கிறது. நம்ப முடியாதது, நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. வருங்
கால இளைஞர் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய திரு.
சஞ்சய் காந்தி அவர்கள் விமான விபத்துக்கு ஆளாகிவிட்டதால், அவர் இன்று
நம்மிடையே இல்லாமலிருக்கக்கூடிய சூழ்நிலையை நாம் பார்க்கிறோம்.
திரு. சஞ்சய் காந்தி பிரதமரின் உறுதுணை, காங்கிரஸ் கட்சியினுடைய
பொதுச் செயலாளர், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையா
ருடைய தவப்புதல்வர் என்ற நிலை மட்டுமல்ல இந்தி[illegible] [illegible]க்கும்



1980 ஜுன் 23] [திரு. ம. சங்கரலிங்கம்]

விடுதலை என்ற ஒரு கருத்தை எடுத்து வைக்கின்றபோது, ஒன்றை
எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அந்நிய ஆட்சியை எதிர்த்த செல்வந்தர்
கள் மத்தியிலே இந்தக் கருத்தை வளர்த்து இந்திய விடுதலை இயக்கத்திற்குக்
காரணமாக இருந்த ஒரு செல்வந்தர் குடும்பத்திலே பிறந்தவர் திரு. சஞ்சய்
காந்தி. அதாவது இந்திய விடுதலைக்கு வித்திட்ட பண்டித மோதிலால்
நேரு அவர்கள் வீட்டில் பிறந்தவர். இந்திய விடுதலை இயக்கத்தை உருவாக்கி,
சுதந்திர இந்தியாவை உருவாக்கிய காந்தியடிகளினுடைய வலதுகரமாக
இருந்து இந்திய விடுதலை இயக்கத்திலே பணிபுரிந்த பண்டித நேருஜியின்
வீட்டிலே பிறந்தவர். இந்திய அரசுக்குச் சிறப்பினை உருவாக்கித் தந்து,
சிறந்த முறையில் இந்தியாவை வழி நடத்திச் செல்லத்தக்க நமது பாரதப்
பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாருடைய தவப் புதல்வராகப்
பிறந்தவர் திரு. சஞ்சய் காந்தி அவர்கள். இந்தியாவில் பிறந்த சூழ்நிலைக்கு
ஏற்ப தன்னை ஒளி மிக்கவராய், ஆற்றல் மிக்கவராய் ஆக்கிக்கொண்டவர்.
இந்தியா விடுதலை அடைந்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு நாம்
விரக்தியடைந்திருக்கக்கூடிய நிலையில், இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு
நம்பிக்கை ஊட்டுகின்ற நிலையில் தன்னை வளர்த்துக்கொண்டிருந்தார்கள்.
இளைஞர்கள் எல்லாம் அவரையே நம்பியிருந்தார்கள். இந்தியா ஒரு நல்ல
எதிர்காலத்தைப் பெறும் என்ற நம்பிக்கைக்கு வழி வகுத்திருக்கின்ற நிலை
யிலே, நல்ல நம்பிக்கையை உருவாக்கிய ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இருந்
தார் திரு. சஞ்சய் காந்தி அவர்கள். அப்படிப்பட்டவர் இன்று நம்மிடையே
இல்லை. இந்த இழப்பு நேருஜி. இந்திரா காந்தி அம்மையார் குடும்பத்திற்கு
மட்டும் ஏற்பட்ட பேரிழப்பு அல்ல, இந்திய பெருங்குடும்பத்திற்கே ஒரு நல்ல
எதிர்காலத்தை உருவாக்கித்தர இருந்த நம்பிக்கை நட்சத்திரமே இன்று
அழிந்துவிட்டது என்பதைப் பார்க்கிறபோது, அந்தத் துயரை நாம்
எத்தனை சொற்களால் சொன்னாலும்கூட, சொல்லித் தீர்த்துக்கொள்ள
முடியாது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் வாய்மொழிப்படி
'உடம்பெல்லாம் வாயாகக் கொண்டு அழுதாலும், துயர் தணியாது' என்றுதான்
சொல்லலாமே தவிர, நாம் நீண்டநேரம் பேசினாலும், அழுதாலும் துயரை
மாற்றிக் கொள்ள முடியாத சம்பவமாக அது இருக்கிறது. அவர் அகில
இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய பொதுச் செயலாளராக இருந்து நல்ல
பணியாற்றுவார், வருங்கால இந்தியாவை நல்ல நிலையில் நடத்திச் செல்வார்
என்றும் இந்திய நாடு எதிர்பார்த்ததைப்போல உலகமும் எதிர்பார்த்தது
ஆனால் அதற்கு நேர்மாறாக நடந்துவிட்டது. வள்ளுவன் வார்த்தையில்
இதைச் சொல்லவேண்டுமானால்,

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 ஜூன் 23

" நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை படைத்திவ்வுலகு "

எனும் குறள்தான் நம் நினைவுக்கு வருகிறது.

திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்கூட அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவருடன் பல சமயங் களில் நீண்ட நேரம் சேர்ந்து அரசியல் பேசியிருக்கிறார்கள். இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்க நல்ல உறுதுணையாக இருந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்ட செய்தியெல்லாம் நாம் அறிந்து மகிழ்ந்த துண்டு. இந்த நிலையில், அவருடைய அரசியல் வாழ்வு தொடராத நிலை ஏற்பட்டுவிட்டது. அவர் இன்று மறைந்துவிட்டார். அவரைப் பெற்ற தாய் எவ்வளவு பெரும் துயரம் அடைந்திருப்பார்கள் என்பதை நாம் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க முடியாது. இந்த நிலையில் அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கூறிய உணர்வுகளோடு நானும் கலந்துகொண்டு, பாரதத்திற்கும், பாரத பிரதமர் அவர்களுக்கும் ஏற்பட்ட இந்தப் பேரிழப்பிற்கு என் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துயரத்தில் எங்கள் பங்கினையும் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லி அமைகிறேன்.

திரு. த. சந்தோஷம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே மேலவையின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரண்டு இரங்கல் தீர்மானங் களையும் ஆதரித்து ஆசிரியர்கள்—பட்டதாரிகள் முற்போக்கு முன்னணியின் சார்பாக ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

முதலில் காலஞ்சென்ற திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களுடன் எனக்கு நேரடியாகத் தொடர்பு கிடையாது. இருந்த போதிலும் அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. லெட்சுமிகாந்தன் அவர்களிடம் அவருடைய குடும்பத்தா ருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவராக இருந்தார்கள். அங்கத் தினர் அவர்களிடம் நான் சில உண்மைகளைக் தெரிந்துகொண்டேன். கடந்த 30 ஆண்டுக் காலமாக அவர் தந்தை பெரியார் இயக்கத்திலே பங்கு கொண் டிருந்தார்கள். அவருடைய பகுத்தறிவு இயக்கத்திலே அவர்கள் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்கள். கொஞ்சமும் தன்னலம் கருதாமல், தியாகத்தையே தன்னுடைய வழிமுறையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பல சேவைகளைச் செய்து வந்திருக்கிறார்கள். அவருடைய 30



1980 ஜூன் 23] [திரு. த. சந்தோஷம்]

ஆண்டுக் காலச் சேவைக்கு எந்தக் கட்சியாலும், எந்த அரசியல் கட்சியாலும் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை. நம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் அந்த 30 ஆண்டுக்காலச் சேவையை மனத்தில் கொண்டு, அவருடைய சேவைக்கு 'ரெகக்னிஷன்' (Recognition )கொடுக் கின்ற அளவில், அவருக்கு இந்த மேலவையிலே உறுப்பினர் பதவியைக் கொடுத்தார்கள். அது நமது முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன் மையை, ஒரு நல்ல உணர்ச்சியைக் காட்டுகிறது. இந்த நிலையில் நான் அறிந்த ஒரு உண்மையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இப்படிப் பொதுப் பணியிலே, தன்னலமற்றவராகச் செயல்பட்டதன் காரணமாக தன்னுடைய குடும்பத்தை அவர்கள் ஒரு சிக்கலான நிலைமையில் விட்டு மறைந்து விட்டார்கள். அவருடைய ஒரே மகள் இன்றும் வேலை யில்லாமல் தான் இருக்கிறார். அவர் இறக்கின்ற சமயத்திலே அவர் விட்டுச் சென்ற வங்கியிலுள்ள தொகை மொத்தம் ரூ. 250 தான். தன்னைப் பற்றியும் தன் குடும்பத்தைப் பற்றியும் கருதாமல், சேவை செய்திருக்கிறார்கள். அவருடைய பொதுமக்கள் சேவையையும், பகுத்தறிவுப் பணியையும் மனதில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருக்கு ஒரு 'ரெகக்னிஷன்' கொடுப்பதுபோல, எப்படி இந்த மன்றத்திலே உறுப்பினராக இருக்கின்ற அளவுக்குச் செய்தாரோ அதுபோல அவருடைய குடும்பத்தினருக்கும் ஒரு நல்ல உதவியைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். அவருடைய மறைவுக்கு எங்கள் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மறைந்த இளைஞர், இளைஞர் சமுதாயத்தின் தலைவர் திரு. சஞ்சய் காந்தி அவர்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். இன்று காலையிலே அவர் மறைந்தார் என்ற சோகச் செய்தி நம் அனைவருக்கும் மாபெரும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தருவதாக இருந்தது. நிச்சயமாக எதிர்கால இந்தியாவிலே அவர் ஒரு பெரிய சாதனையைச் செய்வார். அவருடைய இளம் உணர்ச்சிகள், தீவிர கொள்கை கள், தீவிரமான சாதனை, சக்தி அனைத்தும் இந்த நாட்டிற்குப் பயன்படும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் நாம் ஒன்று நினைக்க இறைவன் ஒன்று நினைத்து, யாரும் எதிர்பாராத சமயத்திலே அவர் கொடூரமான விபத்திலே சிக்கி நம்மைவிட்டு மறைந்திருக்கிறார். இது நாட்டிற்கு மாபெரும் இழப்பு. அதே சமயத்திலே அந்தத் தாயுள்ளம் எப்படித் துடிக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தனையோ சோதனைகளுக்குள் சிக்கி அவதிப்பட்டு அந்தத் தாயுள்ளம் மீண்டும்

[திரு. த. சந்தோஷம்] [1980 ஜூன் 23

வெற்றியின் சிகரத்தை எட்டிப்பிடித்து மீண்டும் ஒரு இன்பமான, ஒளிமயமான வாழ்க்கையை நடத்தலாம் என்று இருந்த நேரத்திலே தன் மகனையே, தான் நம்பிக்கொண்டிருந்த மகனை, தன்னுடைய தோல்வியை வெற்றியாக மாற்றிய மகனை திடீரென்று சாகக் கொடுப்பதை எப்படி சகித்துக்கொள்ள முடியும்? அந்தத் தாயுள்ளம் எப்படித் துடித்திருக்கும்? நம் இந்திய மக்கள் அனைவரும் அந்தத் தாய்க்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அது நம் நாட்டிற்கு மாபெரும் இழப்பாகும். நம்முடைய பாரத பிரதமர் அவர்களுக்குத் தாங்க முடியாத துயரம் இருக்கும் இந்த நேரத்திலே நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தை எங்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

**திரு. ப. மாணிக்கம் :** மேலவைத் தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள், மறைந்த பெரியவர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களைப்பற்றிக் குறிப்பிட்ட உணர்வுகளை ஏற்று, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் சுய மரியாதை இயக்கத்தில் ஆரம்ப காலத்தில் பல சோதனைகளை ஏற்றவர். அந்த இயக்கத்தின் தோற்ற காலத்தில் அவர்கள் ஏற்ற பல்வேறு சோதனைகளை, இன்றைய இளைய தலைமுறையினர் படித்துத் தெரிந்துகொள்ளலாமே தவிர, அதை அனுபவிக்க முடியாது. அப்படிப் பட்ட சோதனைகளை ஏற்று, அவற்றை மனோதிடத்துடன் சமாளித்தவர். அப்படிப்பட்ட அனுபவம் நிறைந்த ஒரு முதியவர் மறைந்தது அவர் சார்ந்துள்ள இயக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்ற முறையிலே, அவர் சார்ந்துள்ள கட்சிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை உணர்ந்து நான் சார்ந்துள்ள கட்சியின் சார்பாக அவருடைய மறைவால் ஏற்பட்ட வேதனையில் நான் பங்குகொள்கிறேன். என்னுடைய கட்சியின் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்று காலை நடந்த விபத்தில் திரு. சஞ்சய் காந்தி அவர்கள் காலமாகிவிட்டார். திரு. சஞ்சய் காந்தி அவர்கள் நாட்டின் பிரதமருடைய பிள்ளை என்பதோடு மட்டுமல்லாமல், இந்திரா காங்கிரசின் பொதுச் செயலாளராகவும் சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். அரசியலில் தாவாவிற்குரிய பிரமுகர் என்றாலும்—'கான்ட்ரவர்சியல் பெர்சனாலிட்டி' என்றாலும் ஒரு பழமையான இயக்கத்தில் மிக இளமையான தலைமுறைக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய அவர், இப்படி எதிர்பாராமல் அதிர்ச்சி தாக்கூடிய முறை



1980 ஜூன் 23] [திரு. ப. மாணிக்கம்]

யில், நம்ப முடியாத முறையில் மறைந்தது அந்தக் கட்சிக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பு அல்ல. ஒரு பழைய இயக்கத்தினுடைய இளைய பிரதிநிதி மறைந்தார் என்பது உண்மையிலேயே வேதனை அளிக்கக்கூடியதுதான். குறிப்பாக காங்கிரஸ் கட்சியினுடைய எதிர்காலத்திற்கு நம்பிக்கையாகத் திகழ்ந்த அவர் மறைந்தது இந்திய தேசியக் காங்கிரசுக்கும், நாட்டின் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கும் ஏற்பட்ட மிகப் பெரிய நஷ்டமாகும். அவர் மறைவால் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அனுபவிக்கின்ற வேதனையில், நானும் என்னுடைய கட்சியின் சார்பாகப் பங்கு கொள்கிறேன். என்னுடைய கட்சியின் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டின் பிரதமருக்கும், அவருடைய இந்தச் சோதனையான நேரத்தில், மன வேதனையான நேரத்தில் என்னுடைய கட்சியின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த இரண்டு தீர்மானங்களையும் என்னுடைய கட்சியின் சார்பிலே ஆதரித்து, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பெரியவர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களை எனக்கு நேரடியாக அதிகம் தெரியாது என்றாலும், இங்கே அவர்கள் இருந்த காலத்தில், சில சமயங்களில் அவர் ஊராட்சி மன்றங்கள் பிரச்சினைகள் சம்பந்தமாகவும், கூட்டுறவுத் துறை சம்பந்தமாகவும் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்டபோது, பொது வாழ்வில் அவருக்கு இருக்கின்ற ஆழ்ந்த அனுபவத்தைப் புரிந்துகொள்ள முடிந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் கூறியதுபோல, மறைந்த திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் தன்னுடைய குடும்பத்திற்கு ஒரு ஏற்பாடும் செய்யாமல், பொது வாழ்விலேயே இருந்துகொண்டு, தன்னைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவரை உருவாக்கிய இயக்கத்திற்கும், அவருடைய குடும்பத்திற்கும் என்னுடைய கட்சியின் சார்பிலே மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று காலையிலே நடந்த ஒரு விபத்திலே திரு. சஞ்சய் காந்தி அவர்கள் துர் மரணம் அடைந்தார்கள். எல்லோரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கக்கூடிய மரணம் அடைந்திருக்கிறார்கள். அது குறித்து என்னுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேக்கமடைந்திருந்த இந்திய அரசியலில் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஒரு அரசியல் புயலைக் கிளப்பியவர் அவர் என்பதை இந்தியச் சரித்திரம் எழுதி வைக்கும். அவரிடமிருந்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியும், அதனுடைய ஆதரவாளர்களும், இளைய தலைமுறையினரும்

[திரு. ஆ. நல்லசிவன்] [1980 ஜூன் 23

நிறைய எதிர்பார்த்தார்கள். நிறைய நம்பிக்கையோடு இருந்தார்கள்.
அவர் மிக இளம் வயதிலேயே, ஒரு பழம் பெரும் ஸ்தாபனத்திலுடைய
பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் வயதில் அந்தப்
பொறுப்புக்கு யாரும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறியவில்லை. நாட்
டின் பிரதான அரசியல் கட்சியின் முக்கிய பொறுப்புக்கு அவர் தேர்ந்
தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் தேர்ந்தெடுக்கப்
பட்டார். பல எதிர்பார்ப்புகளை, நம்பிக்கைகளை உண்டாக்கிய அவர்
இப்படி துர் மரணமடைந்தது எங்கள் கட்சிக்கு மிக்க வேதனையை அளிக்
கிறது. இப்படிப்பட்ட மரணம் யாருக்கும் நேரிடக் கூடாது. அந்த முறை
யிலே அவருடைய மரணத்தினால் துன்புற்றிருக்கும் அவருடைய தாயாருக்
கும், அவருடைய குடும்பத்திற்கும், அவர் சார்ந்திருக்கக்கூடிய இயக்கத்திற்கும்
என் கட்சியின் மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU J. M. MIAKHAN : Hon. Chairman, our Party, the Muslim League associates itself with the condolences expressed by the Hon. the Leader of the House regarding the demise of Thiru Rathina Balagurusamy and Thiru Sanjay Gandhi.

Thiru Sanjay Gandhi was a rising sun of hope for the youngsters and the youth. His untimely demise is certainly a loss not only to his family but to the entire country, may, to the entire world.

We of the Muslim League Party very sincerely associate ourselves with the grief expressed and request that our condolences may be conveyed to the bereaved families.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையிலே
மதிப்பிற்குரிய பெரியவராக, பண்பாளராகப் பணியாற்றிய திரு. இரத்தின
பாலகுருசாமி அவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை. அவர்
மறைந்துவிட்டதற்கு ஆசிரியர்களின் சார்பாக மனமார்ந்த அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இங்கே மேலவையிலே பணியாற்றிய
காலத்திலே அவரோடு நான் பழகியிருக்கிறேன். அவர் என்னுடன் நிறைய
நேரம் பேசியிருக்கிறார். முதலமைச்சரவர்கள்மீது மிகப் பெரும் மரியாதை
வைத்திருந்தார்கள் என்பது மட்டுமல்ல, முதலமைச்சரவர்கள் அவருக்குச்
செய்த உதவிகளை எல்லாம் எடுத்துச் சொல்லுவார்கள். இந்த நேரத்தில்,
அவர் தன்னுடைய குடும்பத்ினரை விட்டுச் சென்றிருக்கக்கூடிய நிலைமை
யைக் கேள்விப்படும்போது, நிச்சயமாக முதலமைச்சரவர்கள் அவருடைய
குடும்பத்தாருக்கு உதவுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவரை
இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூன் 23] [திரு. செ. முத்துசாமி]

அடுத்து, இந்திய அரசியல் வானில் ஒரு மாபெரும் சாணக்கியனாய்
சமீப காலத்தில் உருவெடுத்து, யாரும் எதிர்பாராத வகையிலே இன்று
காலையிலே விமான விபத்திலே உயிர் நீத்த திரு. சஞ்சய் காந்தி அவர்
களுடைய இழப்பு இந்த நாட்டுக்கு ஈடு செய்ய முடியாததாகும். அவர்

(பிற்பகல் 4-30)

இவ்வளவு இளைஞராக இருந்தும், இந்திய நாட்டிலேயே மாபெரும் மாநில
மாக இருக்கக் கூடிய உத்தரப் பிரதேசத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள்
எல்லோரும் அவர் தான் முதலமைச்சராக வர வேண்டுமென்று கோரிக்கை
விடுத்தார்கள். அதிக பாராளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற உறுப்
பினர்களையும் கொண்டிருக்கக் கூடிய அந்த மாநிலத்திற்கு முதலமைச்சராக
திரு. சஞ்சய் காந்தி வர மாட்டார் என்று பாரத பிரதமர் அவர்கள்
சொன்ன பிறகும் கூட, அங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும்
ஏகமனதாக அவர் தான் முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று எடுத்த
முடிவு அவர் அரசியலில் எவ்வளவு திறமையுள்ளவராக இருந்தார், சின்ன
வயதிலேயே எவ்வளவு புகழ்பெற்றிருந்தார் என்பதற்கு நிருபணமாகும்.
கடந்த காலத்தில், நெருக்கடி வந்த காலத்தில், அது அரசியல் நெருக்கடி
யானாலும், மிக சாமர்த்தியமாக பிரச்சினைகளைச் சமாளித்தார். ஒரு
தைரியமுள்ள வீரனாகத் திகழ்ந்தார், வாழ்ந்தும் காட்டினார். இளைஞர்
மத்தியில் புத்துணர்ச்சியை ஏற்படுத்திய ஒரு பட்டாளத்துத் தலைவராகத்
திகழ்ந்த அவர் இந்த உலகத்தை விட்டுச் சென்று விட்டார். இளைஞர்
மத்தியில் ஒரு எழுச்சியுடன் விளங்கிய அவர் இளைஞர் தலைவராகவே
மறைந்து விட்டார். இந்த நாட்டுக்காக மாபெரும் தியாகங்களைச் செய்த
குடும்பத்தில் பிறந்தவர், நேருவின் குடும்பத்தில் பிறந்தவர், நேருவின்
பேரனாகப் பிறந்தவர், இந்திய மக்களுடைய நல்லாதரவைப் பெற்றவர்,
அத்தனை பேர்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இன்றைக்கு மறைந்து
விட்டார். அவர் மறைவு எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்திருக்கிறது.
நாட்டில் தேர்தல் முடிந்து அவருடைய அன்னை பாரத பிரதமர் ஆகிறார்
என்கிற வெற்றிச் செய்திகளை எல்லாம் நாம் பத்திரிகை வாயிலாகப்
படித்துக் கொண்டிருக்கும்போதுதான், அவருக்கு ஒரு வாரிசும் பிறந்தது
என்கிற செய்தி பத்திரிகையில் வந்தது. அவருடைய வாரிசு இன்னும் பச்சைக்
குழந்தையாக இருக்கிறது. "கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்"
என்று சொல்லுவார்கள். கணவனை இழந்து வாடும் அந்த நங்கைக்கும்,
தன்னுடைய மகனை இழந்து வாடும் பாரத பிரதமருக்கும் என்னுடைய
அஞ்சலியைத் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

* THIRUMATHI TARA CHERIAN : Hon. Chairman, I have to commence my maiden speech in this House on a very sad and tragic note.

Though I do not know the former Member of the Legislative Council who has passed away, it is with great sympathy and emotion that I offer my sincere condolences to the members of the bereaved family.

The flash-news about the demise, in an air-crash, of Thiru Sanjay Gandhi, Member of Parliament, who was much loved by many thousands of people and especially by the younger generation came this morning as a great shock to the people of India. It seems unbelievable that the young man, in the prime of his youth, with vigour and drive, who wanted to do his best for the people and especially for the under-privileged should have got up this morning only to be snatched away by Fate. People in their thousands must be milling the residence of the Prime Minister to have a last 'darahan' of their young leader.

Thiru Sanjay Gandhi came out with a huge mandate when he was recently elected to the Lok Sabha. He was also instrumental for the election of many other Members to the Lok Sabha as well as to the Legislative Assemblies of very many States. Comparison, Sir, is always odious ; but it will be acknowledged that Thiru Sanjay Gandhi had tried and succeeded in stooping to conquer. While talking to aristocrats and the elite, he did not, at the same time, lose his touch with the common man, as many of the very poor people and men in the streets would testify. He had a meteoric rise and when he should have made his imprint felt on the welfare schemes, particularly those for the poor people, he was snatched away in a split second. Evidently, he had in him the adventurist spirit of his grandfather, the late Pandit Nehru.

In the last Elections, he won the hearts of people belonging to all classes and communities. Otherwise, he would not have had the following he seemed to have commanded. Great things were expected of him. As a person gets older and becomes more mature, the people get an opportunity to understand him, to communicate with him, to share the burden of his responsibilities and onerous tasks and to have better chances of producing results. In a democracy, it is not the Government alone that does things for the people ; it is for the Government and the people together





to do many things for the prosperity of the people. Such heartening co-operation has spelt success in the past and will ensure progress in the future also.

Everyday when I open the newspaper, it is only to find reports about miseries all round—hatred, violence, unnatural deaths including murders and suicides, unrest among the people, especially among the educated and uneducated youth of our country, among the enlightened and the unenlightened people, over something really wanted by the younger generation. It is true that, in a democracy, the youth may allow fissiparous tendencies to get the better part. I thought that Thiru Sanjay Gandhi who was coming up in his new post with many great responsibilities would be able to help the youth get over their misdirected feelings and to guide them in building a better and proper future for themselves as well as for India. Alas, it is not to be so.

Many admirers of Thiru Sanjay Gandhi would say that he had done his very best in his short life. As a Member of this Council and on behalf of the women of Tamil Nadu, I would like to say that our hearts go to Thirumathi Indira Gandhi at this hour of tragedy. My mother used to say that one of the greatest tragedies in a mother's life is to see her son or daughter passing away before her eyes. That has happened now. The Biblical span of life is three-score-and-ten and Thiru Sanjay Gandhi did not go through even half of it. These words come to my mind:

" They shall not grow old as we that are left grow, old age shall not weary them in words; not years condemn

From the going down of the sun we shall remember them ".

Our sincere heart-felt sympathies go to Thirumathi Indira Gandhi, to Thiru Sanjay Gandhi's young wife, to his relations and to the Late Pilot's family who was along with Thiru Sanjay Gandhi when this tragedy happened.

May God rest their souls

* டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள் இயற்கையெய்தியது குறித்து இரங்கற் தீர்மானத்தை முன்மொழிந்து பேசி யிருக்கிறார்கள். அவர் ஒரு பெரிய தியாகி. நாட்டுக்காக பல தியாகங் களைச் செய்திருக்கிறார். திரு. சஞ்சய் காந்தியின் மரணம் பற்றி இந்தியா மட்டுமல்ல, உலகத்திலுள்ள இளைஞர் சமுதாயம் அனைத்தும் அதிர்ச்சி

யடைந்திருக்கிறது. இளைஞர் சமுதாயத்திற்கு அவர் ஒரு தலைவராக இருந்தவர். இன்னும் 40 அல்லது 50 வருடங்கள் வாழ்ந்து, இந்த நாட்டிற்கு எவ்வளவோ சேவை செய்ய வேண்டியவர். இந்த நாட்டின் வளர்ச்சிக்கு இன்னும் பல வருடங்கள் வாழ்ந்து துணையாக இருப்பார் என்று நம்பியிருந்தோம். அவர் இழப்பால் இப்போது ஏமாற்றமடைந்துள்ளோம். அவர் குடும்பத்திற்குச் செலுத்தும் அஞ்சலியில் நானும் கலந்து கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவரவர்களே, மறைந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்கள்பற்றி எனக்கு முன்னால் பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தார்கள். கடந்த 3 ஆண்டுக் காலமாக அவர் நம்முடன் உறுப்பினராக இருந்தார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னது மாதிரி, அவர் ஓரளவு வயதானவராக இருந்தாலும், நீண்ட அனுபவமுடையவராக இருந்தாலும், மற்றவர்களிடையே பழகும்போது ரொம்ப மரியாதையாகப் பழகக் கூடியவராகத் திகழ்ந்தார் என்பதை என்னுடைய அனுபவத்தில் நான் பார்த்திருக்கிறேன். இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களிலே பல பேர் பலவிதமாகப் பேசுவது உண்டு. சிலர் ஒவ்வொரு நாளும் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். சிலர் மனதில் பட்டால் தான் பேசுவார்கள். இருவிதமான உறுப்பினர்கள் உண்டு. ஆனால் திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களைப் பொறுத்தவரை, 3 ஆண்டுகள் உறுப்பினராக இருந்த காலத்திலே மிகக் குறைந்த நாட்கள் தான் பேசியிருக்கிறார். கிட்டத்தட்ட 4 அல்லது 5 முறை தான் இந்த அவையில் அவர் பேசியிருக்கிறார். அதுவும் ரொம்ப நேரம் பேச மாட்டார். சிலர் எப்போதாவது தான் பேசுவார்கள். ஆனால் பேசும்போது இப்போது தானே பேசுகிறோம் என்று நிறைய நேரம் எடுத்துப் பேசுவார்கள். ஆனால் அவரைப் பொறுத்தவரை, எப்போதாவது தான் பேசுவார். பேசுவதையும் சுருக்கி மிகச் சுருக்கமாகப் பேசுவார்.

(பிற்பகல் 4-40)

சுருக்கமாகப் பேசுகின்றபோதுகூட அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெளிவாகக் கூறுவதோடு யாரையும் தாக்காமல், தம்முடைய கருத்துக்களைச் சொல்பவர்களாக இருந்தார்கள். பல விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றபோது, தனிப்பட்ட முறையில் உறுப்பினர்களைப் பார்த்து விஷயங்களை அவர்கள் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள். பலமுறை என்னிடத்திலே வந்து பல பிரச்சினை





களைப்பற்றி அவர்கள் நிறைய பேசியிருக்கிறார்கள். நான் இங்கு ஒரு விஷயத்தைக் கவனித்தேன். இங்கே அவரைப்பற்றி முன்னர் பேசியவர்கள் கடந்த மூன்றாண்டுகளாக அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள், அவரைப்பற்றி நிறைய ஒன்றும் தெரியாது என்ற அளவிலேதான்—மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களைத் தவிர—சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமானால், அவருடைய சொந்த வாழ்க்கை எப்படிப்பட்டது, அவர் எப்படிப்பட்டவர், அவர் என்ன செய்தார், அவருடைய நிலைமை என்ன என்று தெரிந்துகொள்ளும் அளவுக்கு இங்கு வாய்ப்புகள் குறைவாக இருப்பதே அதற்குக் காரணம். சட்டமன்றத்திற்கு வருவதும், கூட்டம் முடிந்ததும் போவதுமாக இருப்பதால், ஒருவரையொருவர் —ஒரே கட்சிக்காரர்களாக இருந்தாலும் கூட—புரிந்துகொள்ளக்கூடிய —வாய்ப்புகள் சட்டமன்றத்திலே இல்லை. பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், அங்கே இந்த வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஒரு உறுப்பினரைப்பற்றி அவருடன் பழகி இன்னொரு உறுப்பினர் தெரிந்து கொள்ளக்கூடிய, புரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்புகள், அங்கே நிறைய இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுமாதிரி நிலைமைகள் ஏற்பட்டால், அவர்கள் இங்கே பேசுவது மட்டுமல்லாமல் அவருடைய உள்ளக் கிடக்கை, வாழ்க்கை அனுபவம் எல்லாம் மற்றவர்களுக்கும் பயன்படும் என்பதைச் சொல்லி, திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களின் மறைவிற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சஞ்சய் காந்தி அவர்களைப் பொறுத்தவரையில், எனக்கு முன் பேசிய எல்லோரும் விஷயங்களைச் சொல்லிவிட்டார்கள். ஒரேயொரு விஷயம் மட்டும் என்னுடைய மனதிலே கேள்வியாக எழுந்திருக்கிறது. இந்தச் செய்தியை தொலைபேசி மூலம் என்னிடம் தெரிவித்தபோது, என்னுள் எழுந்த ஒரே கேள்வி 'இந்திய நாட்டின் எதிர்காலம் என்னவாகும்?' என்பது தான். அதே கேள்வி திரும்பத் திரும்ப இன்றையதினம் மாலை வரையில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. காரணம் என்னவென்று சொன்னால், திரு. சஞ்சய் காந்தி அவர்கள் இன்றைய தினம் ஒரு கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் இளைஞர்களின் தலைவராக இருந்தார் என்பதுதான் அவர்கள் இந்திய நாட்டினுடைய பிரதமரின் மைந்தராக மட்டுமல்ல, அபிமானத்திற்குரிய ஒருவராகவும், நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் பிரதமர் அவர்களுக்கு ஆட்சி புரிய உறுதுணையாக நின்றார் தற்போது நம்முடைய நாட்டிலே இருக்கிற குழப்பங்கள், சங்கடங்கள், பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள் இவைகள் எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கின்றபோது, அகில இந்தியாவிலும் இந்தியாவுக்கு 'ஒரு சரியான

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1980 ஜூன் 23

பிரதமர் வேண்டும்' என்ற எண்ணமும், திருமதி இந்திரா காந்தி அவர்களை தான் உறுதியாகவும், பிரச்சினைகளைச் சமாளிக்கக்கூடியவராகவும் இருக்கிறார் என்ற நிலைமையும் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறது. அப்பேர்ப்பட்ட பிரதமர் அவர்களுக்கு நம்பிக்கைக்கு உரியவராகவும், உறுதுணையாகவும் திரு. சஞ்சய் காந்தி அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இந்த சமயத்தில் மறைந்தது அந்த அம்மையார் அவர்களுடைய மனதை பாதிக்கக்கூடிய விதமாக அமைந்துவிடுவதால், அவர்கள் இன்னும் 4 அல்லது 5 ஆண்டுக் காலத்திற்கு ஆர்வத்தோடு, உறுதியோடு இந்த நாட்டிலே பிரதமராக ஆட்சி செய்ய முடியுமா என்ற அளவுக்கு இந்தத் துயரம் அவருடைய மனதைப் பாதித்துவிடக் கூடாது என்ற கவலை நமக்கு இருக்கிறது. நாட்டிலே இருக்கிற சங்கடங்களைப் பார்க்கிறபோது, நம்முடைய நாட்டிலே எதிர்காலத்திலே ஏற்படக்கூடிய குழப்பங்களையும், சங்கடங்களையும், பிரச்சினைகளையும் தவிர்க்க வேண்டும் என்று சொன்னால், திருமதி இந்திரா காந்தி அவர்கள் மன உறுதியோடு தன்னுடைய துக்கத்தை மிக விரைவிலேயே மறக்க வேண்டும். அதற்கு உதவியாக நம்மைப் போன்றவர்களுடைய அனுதாபம் இருக்கும் என்பதால், என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தையொட்டி, முதல்வர் என்ற முறையிலும், ஆட்சிக் கட்சியின் சார்பாகவும் என்னுடைய கருத்துக்களை இங்கே வெளியிட விரும்புகிறேன். மரணம் என்பது இயற்கையின் தீர்ப்பு என்றாலும், ஏற்பட்டிருக்கின்ற மரணத்தினுடைய நேரம், வயது, சூழ்நிலை இவைகளைப் பொறுத்து அதனுடைய தாக்குதல் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை நாம் ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ந்துகொண்டிருக்கிறோம். ஒரு தாய் தன்னுடைய குழந்தையை பெற்றவுடனேயே இழக்கும் நிலை ஏற்பட்டால், அப்போது ஏற்படுகின்ற துக்கம் எப்படி இருக்கும் என்பதையும், பள்ளிக்குச் செல்லுகின்ற ஒரு பாலகனாக இருக்கும்போது இழக்கும் நிலைமை ஏற்பட்டால் அந்த இழப்பு எப்பேர்ப்பட்டதாக இருக்கும் என்பதையும், வாலிபனாக வளர்ந்து தன்னுடைய கடமையைச் செய்யத் தொடங்குகின்றபோது இழக்கும் நிலை ஏற்பட்டால் அந்த இழப்பு எவ்வளவு வேதனை தரத்தக்கதாக இருக்கும் என்பதையும் அதிலும் தனக்குப் பிறகு இந்த நாட்டிற்கு மிகப் பெரிய நன்மை செய்யக்கூடிய ஒருவராக வளர்ந்து எல்லோருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாகக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற ஒரு தலைவனாக, இளைஞனாக, ஆர்வம் மிக்க தொண்டனாக இருக்கும்போது அவரை இழக்கும் நிலை



1980 ஜூன் 23] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஏற்பட்டால் அந்த இழப்பு எத்தகைய துன்பம் விளைவிக்கக்கூடியது என்பதையும் பார்த்தால் பிரதமர் அவர்களுக்கும் இந்த நாட்டிற்கும் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் துன்பம் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு வேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை நம்மால் உணர முடியும். சஞ்சய் காந்தி என்றால் துணிவு என்று பொருள்படலாம். சஞ்சய் காந்தி என்றால் தொண்டன் என்ற பெயருக்குச் சொந்தமாகக் கொள்ளலாம். சஞ்சய் காந்தி என்றால் இளைஞர்களின் தலைவன் என்று கொள்ளலாம். சஞ்சய் காந்தி என்றால் உழைக்கின்ற உழைப்புக்கு மதிப்பு தந்து, மரியாதை தரக்கூடிய தொழிலாளர் உள்ளம் படைத்த ஒருவர் என்று கொள்ளலாம். சஞ்சய் காந்தி என்றால் ஒரு நாட்டின் தலைவிதியை மாற்றியமைக்கக்கூடிய திறன் மிக்க ஒரு தலைவனாக வரக்கூடிய ஒரு ஒட்டுமொத்தமான உருவம் என்று பொருள் கொள்ளலாம் என்கின்ற அளவுக்கு வளர்ந்துகொண்டிருந்த ஒருவர் அவர். தன்னால் தன்னுடைய கட்சிக்கும், தன்னுடைய தாய்க்கும் எத்தகைய ஒரு மாபெரும் மாற்றத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் ஏற்படுத்திக் காட்ட முடியும் என்பதைச் செய்து காட்டிய ஒரு மாபெரும் வீரர். அவர் இன்றைய தினம் மறைந்திருக்கிறார் என்பதை எண்ணும்போது உண்மையிலேயே நாம் ஏமாற்றத்தின் எல்லைக்கே சென்றுகொண்டிருக்கிறோம். இன்றைக்கு வந்திருக்கிற இந்தச் செய்தியை, ஏற்பட்டிருக்கின்ற இந்த இழப்பை, இந்தச் சோதனையை இந்தியத் துணைக் கண்டத்தால் தாங்கிக்கொள்ள முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. ஒரு கருத்தைச் சொல்லும்போது, கருத்து வேறுபாடு ஏற்படலாம். ஆனால் எந்தக் கருத்தையும் வெளியிடும்போது சொல்பவர் துணிவு மிக்கவராக இருக்க வேண்டும். தான் சொன்ன கருத்தில் நம்பிக்கை உள்ளவராக இருந்து சொன்னால்தான், நாட்டிற்கு நல்ல பயனை அந்தக் கருத்து தரும் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, கோழையாக இருந்து அந்தக் கருத்தைச் சொல்பவர் தலைவராக வந்தால், இந்த நாடு நிச்சயமாக வளர முடியாது, வளம் பெற முடியாது. ஆகவே, எதையும் தாங்கிக்கொண்டு துணிவோடு முன்னேறி, அதே நேரத்தில் தான் கொண்ட கொள்கையை விட்டுக் கொடுக்காமல் நிறைவேற்றக்கூடிய ஆர்வம் மிக்க ஒரு இளைஞரை, தொழிலாளர் உள்ளம் படைத்த ஒருவரை, இளைஞர்களுக்கே தலைவராக இருந்த ஒருவரை இழந்திருக்கும்போது, நம் அனைவருடைய இரங்கல்களையும் ஒன்று சேர்த்து அவருடைய தாய்க்குச் சொல்வதன் மூலம், அவருடைய துக்கத்தைத் தாங்கிக் கொள்வதன் மூலம், ஓரளவுக்கு அந்தத் தாய் உள்ளத்திற்கு நாம் ஆதரவு சொல்ல முடியும். அந்தத் தாய்க்கு—பிரதமருக்கு—ஓரளவுக்கு இந்த இழப்பினால் ஏற்படுகின்ற துக்கத்தைத் தீர்ப்பதற்கு நம்மால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்ய நாம் கடப்பாடு உள்ளவர்களாக நம்மை ஆக்கிக்கொள்வோம் என்பதைச் சொல்லி,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜூன் 23

இந்த நேரத்தில் பிரதமருக்கும், திரு. சஞ்சய் காந்தி அவர்களுடைய வாழ்க்கைத் துணைவியருக்கும், மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த அவையின் உறுப்பினராக இருந்து மறைந்த திரு. இரத்தின பாலகுருசாமி அவர்களைப்பற்றி ஏற்கெனவே என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டுவிட்டேன். இருந்தாலும், அவர் இந்த அவையில் இருந்து பணியாற்றியபோது அவர் அமர்ந்திருந்த இடமும், அவையில் பேசுவதற்காக அவர் என்னுடைய அனுமதியைக் கேட்க மிக அமைதியான முறையில் எழுந்து ஒரு விரலை இப்படி காட்டி (சைகை காட்டுகிறார்) அமர்கிற காட்சியும் என் கவனத்திற்கு வருகின்றன.

பல நேரங்களில் நான் அவரைப் பேச அனுமதிக்க முடியாத நிலை இருந்தாலும், அவர் அதற்காக என்மீது வருத்தப்பட்டுக் கொண்டதே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இங்கே சொல்லியதைப்போல், எப்போதோ ஒருமுறைதான் அவையில் பேசுகிறார் என்றாலும் கூட, அந்த நேரத்திலும் அதற்கான அனுமதி கிடைக்காதபோதுகூட, அவர் வருத்தப்பட்டுக் கொண்டதே இல்லை. அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு மீண்டும் ஒருமுறை நான் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சஞ்சய் காந்தியின் மறைவைப்பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அதை ஒரு சம்பவம் என்பதா, விபத்து என்பதா என்றே தெரியவில்லை. அதனுடைய விளைவு ஈடு செய்ய முடியாத இழப்பு என்பதா, அவருக்கு ஏற்பட்டதை திடீர் மரணம் என்பதா, அகால மரணம் என்று சொல்வதா என்றும் புரியவில்லை. வார்த்தைகளையெல்லாம் சொல்லிச் சொல்லி, பொருள் இழந்துபோய்விட்ட நிலையில் அவருடைய மரணத்தை எந்த வார்த்தையைப் போட்டும் அளக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நமக்கு அவருடைய மரணச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்த நாட்டில் தந்தையின் புகழுக்கு மகன் வாரிசாக வருவது என்பது இல்லை என்பது பொதுவான பழக்கமாக இருக்கிறது. ஆனால் அவருடைய குடும்பம் அதற்கு ஒரு விதிவிலக்காக அமைந்தது. மோதிலால் புகழுக்கு தனயன் பண்டித ஜவகர்லால் நேரு வாரிசாக வந்தார். தந்தை நேருவின் புகழுக்கு திருமதி இந்திரா காந்தி வாரிசாக வரக்கூடிய நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்ல, அந்தக் குடும்பத்தின் விளக்குப் போன்



1980 ஜூன் 23] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

கூட அந்தப் புகழுக்கு வாரிசாக வரமுடியும் என்று எடுத்துக் காட்டியது திரு. சஞ்சய் காந்தியின் வளர்ச்சி. உலகத்தில் ஒரு குடும்பம்கூட எட்ட முடியாத அளவுக்கு இந்தக் குடும்பம் வளர்ந்தது. இந்தியாவின் வருங்காலம் அவருடையதாக இருக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்த நேரத்தில் அவர் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்.

தாய்க்கு மகனாக இருந்த காரணத்தால்தான் அவர் அந்த அளவுக்கு வளர்ந்தார், தாய்க்கு மகனாக இருந்த காரணத்தால்தான் அவருக்கு அனைத்துச் சலுகைகளும் கிடைத்தன என்று சாமானியமான ஒரு எண்ணம் மக்களிடையே உண்டு. ஆனால் அவர் தாய்க்கு மகனாக இருந்த காரணத்தால்தான், உத்தரப் பிரதேசத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் ஒருமனதாக திரு. சஞ்சய் மாநிலத்தை ஆளும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிய போதும், அவர் அந்த மாநிலத்தின் முதல்வர் பதவியை ஏற்க முடியாமல் போனது. அதைப் போலவே காங்கிரஸ் கட்சியின் தலைவராக திரு. சஞ்சய் வரவேண்டும் என்று காங்கிரஸ் மகா சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பிய போதும், அவர் தாய்க்கு மகனாக இருந்த காரணத்தால்தான், அதற்கும் வழி வகுக்க முடியாமற் போயிற்று.

அவருடைய எதிர்காலம் மிகவும் ஒளியுடையதாக இருக்கும் என்று நாமெல்லாம் நம்பிக் கொண்டிருந்தோம். எதிர்பாராத அவருடைய மறைவின் காரணமாக இன்று மனைவி கணவனை இழந்திருக்கிறார், தாய் மகனை இழந்திருக்கிறார், மகன் தந்தையை இழந்திருக்கிறான், இந்த நாடு வருங்கால தலைவனை இழந்துவிட்டது. இந்தக் கொடுமையை எல்லாம் நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

என்னுடைய இலக்கிய உள்ளம் அவருக்கு ஒரு சான்று சொல்ல இலக்கியத்தைத்தான் தேடுகிறது. மகா பாரதத்தில் சுபத்திரையின் மைந்தன் அபிமன்யுவைப் போல், அவனோடு ஒப்பிடத் தக்க முறையில் மிகுந்த வீரமும், எத்தகைய எதிர்ப்பையும் துணிச்சலோடு நீந்துகிற ஆற்றலையும் பெற்றிருந்தவர் திரு. சஞ்சய் காந்தி.

சகுந்தலையின் மைந்தனைப்போல் இந்த பாரதத்தின் தலைமை அவருக்காகக் காத்திருந்தது. இந்த நிலையில் அவர் நம்மை விட்டு மறைந்து விட்டார்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1980 ஜீன் 23

மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், அவருடைய மறைவைக் காட்டிலும் நம்மையெல்லாம் அதிகமாகத் துன்புறுத்துவது அவருக்கு ஏற்பட்ட கோர மரணமானதாகும். அந்தத் தாய் இதை எப்படித்தான் சகித்துக் கொள்ளப் போகிறாரோ என்ற எண்ணம்தான் இந்தச் செய்தியைக் கேட்ட ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளத்திலும் இருக்கக்கூடியதாகும். ஆனால் ஏற்கெனவே உறுதியான துணிவு படைத்த அந்த வீராங்கனை இந்தத் தாக்குதலையும் தாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். மேலும் இதைத் தாங்கும் ஆற்றலை இறைவன் அவருக்கு அருள வேண்டும் என்று இந்த நேரத்தில் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

திரு. சஞ்சயை இழந்து வருந்தும் அவருடைய குடும்பத்திற்கும் அவரைப் பொதுச் செயலாளராகக் கொண்டிருந்த கட்சிக்கும் இந்த அவையின் சார்பிலும் என்னுடைய சார்பிலும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய ஆன்மா அமைதி பெற அவருக்கு நம்முடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளும் வகையிலும், மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் எழுந்து நின்று மௌனமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி தெரிவித்துக் கொண்டனர்.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மறைந்தவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்த அவை இதோடு ஒத்தி வைக்கப்படுகிறது. நாளை அவைக் கூட்டம் இல்லை. அவை மீண்டும் 25—6—1980 புதன்கிழமை, மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4.55)

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

---

### புதன் கிழமை, 1980 ஜூன் 25.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 11-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### இரங்கற் தீர்மானம்.

இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் ஜூன் திங்கள் 24 ஆம் நாள் காலை இயற்கையெய்தினார் என்பதை இந்த அவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மேலவை முன்னவர் அவர்கள் இரங்கற் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவரும், விடுதலைப் போராட்ட வீரரும், தொழிற் சங்க இயக்கத்தின் முன்னோடியும், முது பெரும் அரசியல் வாதியுமாக விளங்கிய திரு. வி. வி. கிரி அவர்கள், 1980 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 24 ஆம் நாளன்று இயற்கை எய்தியது குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அவர் தம் வாழ்நாளில் பல முக்கியமான பதவிகளையும், பொறுப்புகளையும் திறனுடனும், சிறப்புடனும் ஆற்றி சிறந்த குறிக்கோள்களையும் மரபுகளையும் நிலைநாட்டியுள்ளார். அவரது மறைவால், ஒரு பெரும் தலைவரையும் தேசிய வாதியையும் இந்நாடு இழந்துவிட்டது. துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு இவ்வவை தனது ஆழ்ந்த இரங்கலையும் பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது" என்ற தீர்மானத்தை நான் உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்.

[திரு. கா. இராசா முகமது] [1980 ஜூன் 25

இந்தச் சந்தர்ப்பத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் உயர்திரு கிரி அவர்களைப்பற்றி, அவருடைய சிறந்த குணநலன்கள், அவர் இந்த நாட்டிற்கு ஆற்றிய சேவை, அதையொட்டி அவர் மக்கள் உள்ளத்திலே ஏற்படுத்திய நிலையான உணர்ச்சி ஆகியவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

சில பேர் பொறுப்புகளுக்கு வந்ததற்குப் பிறகு மக்களுக்கு அறிமுகமாகி அதற்குப் பிறகு அவர்கள் வருகின்ற பதவிக்கும், அவருக்கும் ஒரு மரியாதையை ஏற்படுத்திக்கொள்ளுகிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஆனால் சில பேர் தங்களுடைய தியாகத்தால், சிறந்த பண்பாட்டின் காரணத்தால், உழைப்பின் காரணத்தால், மக்களுக்கு அறிமுகமாகி பிறகு சில பொறுப்புகளுக்கு வருகிறார்கள். அப்படி வருகிறபோது அந்தப் பொறுப்பு மேலும் சிறப்புப் பெறுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். அந்த வகையில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், ஒவ்வொரு கட்டத்திலும் உழைப்பை முதன்மையாக வைத்து அதன் அடிப்படையிலே அவர் வளர்ந்து மக்களுடைய உள்ளத்திலே நிரந்தரமான இடத்தைப் பெற்றதற்குப் பிறகு குடியரசுத் தலைவராக அவர் பொறுப்பேற்றிருக்கிறார் என்பதை வரலாற்று ரீதியாக நாம் பார்க்கிறோம். அதுவும் ஒரு நெருக்கடியான நிலையில், இந்திய அரசியலிலே ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கிய ஒரு கால கட்டத்திலே அவர் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை நாம் நினைத்துப் பார்க்கிறோம். இதிலே மிக முக்கியமாக நான் ஒன்றை நினைவுகூர விரும்புகிறேன். படிப்படியாக உழைப்பின் காரணமாக முன்னேறி வந்தவர்கள் இறுதி வரை மரண பயமே இல்லாமல் கடைசி வரை உழைக்கின்ற உணர்வோடு வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் என்பது ஒவ்வொரு பெரியவருடைய வரலாற்றைப் படிக்கிறபோது நம்முடைய நினைவுக்கு வருகிறது.

தந்தை பெரியார் அவர்களாக இருக்கட்டும், மூதறிஞர் இராஜாஜி அவர்களாக இருக்கட்டும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களாக இருக்கட்டும், பேரறிஞர் அண்ணா அவர்களாக இருக்கட்டும், அவர்கள் அனைவருமே முடிந்த அளவுக்கு, கடைசி காலம் வரை மக்களுக்காக உழைக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் வாழ்ந்திருக்கிறார்கள். அதே போல திரு. கிரி அவர்களும் குடியரசுத் தலைவர் பொறுப்பிலிருந்து விடுதலை பெற்று என்று கூட சொல்லலாம்—வந்ததற்குப் பிறகு தமிழகத்தின் தலைநகரம் சென்னையில் தன்னுடைய பணியைத் துவங்கிய காலத்திலிருந்து கடைசி வரை " இந்த மாநகரத்தின் அழகைப் பாதுகாக்க வேண்டும். சுற்றுப்புறத் தூய்மை ஒன்று



1980 ஜூன் 25] [திரு. கா. இராசா முகமது]

தான் மக்களுக்கு நல்ல வாழ்க்கையை அளிக்கக் கூடியது" என்று எடுத்துச் சொல்லி, அதற்காக "சிட்டி கிளீனிங் காம்பெய்ன்" என்ற அமைப்பை ஆரம்பித்து, நாள் ஒன்றுக்கு 2 மணி நேரம், 3 மணி நேரம் என்று தெருத் தெருவாகச் சென்று அந்தந்தப் பகுதிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் "Keep the Vicinity Clean" என்ற புதிய முழக்கத்தை வெளியிட்டு, மக்களுடைய உணர்வோடு கலந்து, அவர்களோடு ஒத்துழைக்கக் கூடிய அளவிற்குத் தன்னுடைய செயலை அமைத்திருந்தார் என்பதை நாம் நினைத்துப் பார்க்கிறோம். அவரால் நடந்து வர முடியுமா என்று நாம் சந்தேகப்பட்ட இடங்களுக்கெல்லாம் அவர் நடந்தே வந்தார். நாம் நுழைந்து பார்க்கத் தயக்கம் காட்டும் பகுதிகளுக்கெல்லாம் கூடச் சென்று அந்தப் பகுதி மக்களைச் சந்தித்து அந்தப் பகுதியைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அவர் தன்னுடைய கடைசிக் காலத்திலே ஆற்றிய பணி மிகவும் முக்கியமானது.

தனிப்பட்ட முறையிலே தொழிலாளர் கட்சியை தன்னுடைய கடைசிக் காலத்திலே ஆரம்பித்தாலும், தொழிலாளர்களின் நன்மைக்காக, தொழிற் சங்கத்தின் சுயேச்சைக்காக அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் தேசிய கண்ணோட்டம் கொண்டு செயல்பட வேண்டுமென்ற புதிய கொள்கையை வைத்திருந்தார். நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டுமென்ற தேசிய கண்ணோட்டத்தோடு அவர் தொழிற் சங்கங்களை நடத்தி வந்தார். இப்படி ஆரம்ப காலம் முதல் கடைசி வரை நாட்டுக்காகப் பாடுபட்டிருக்கிறார்.

கடைசியாக, பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இந்தியாவின் குடியாட்சி அமைப்பு எந்தவித மான ஆபத்திற்கும் உள்ளாகாமல் சுயாட்சி அமைப்பாக இருக்க வேண்டும் என்ற கருத்தையும், அரசியல் மாற்றங்களை எப்படிச் செய்ய வேண்டுமென்ற கருத்தையும், தன்னுடைய கடந்த கால அனுபவங்களைக் கொண்டு, பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டதையும் நாம் எண்ணிப் பார்க்கிறோம்.

சொல் ஒன்று, செயல் ஒன்றாக இல்லாமல், சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இன்றி உழைக்கும் வர்க்கத்திற்காக, தொழிலாளர் நலன்களுக்காக, அதே நோக்கில் "கொள்கைகளுக்காக பொறுப்புக்களுக்கு வருகிறோம்; கொள்கைகளுக்காக ஆட்சியில் இருக்கிறோம்" என்பதை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்றவர்களுக்கு உணர்த்தி வாழ்ந்த பெரிய வழிகாட்டியாக அவர் இருந்திருக்கிறார். எனவே அவருடைய மறைவு பலவிதமான உணர்வுகளை

[திரு. கா. இராசா முகமது] [1980 ஜூன் 25

நமக்கு ஏற்படுத்தினாலும், அவருடைய அனுபவத்தையும் அவர் ஆற்றிய பணிகளையும் நினைத்துப் பார்க்கிறபோது, இன்றும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற உணர்வு நமக்கெல்லாம் ஏற்படுகிறது. அப்படி மக்களுடைய உணர்வோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தவருடைய மறைவு நம்முடைய நாட்டிற்கு உள்ளபடியே பேரிழப்பு என்று கூறி அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முன்னாள் குடியரசுத் தலைவர் மேன்மைமிக்க திரு. வி. வி. கிரி அவர்கள் மறைந்த செய்தி நமக்கெல்லாம் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தது என்றே சொல்லலாம் அவர் நிறைவாழ்வு வாழ்ந்திருந்தாலும்கூட, 86 வயது வரை வாழ்ந்தார் என்றாலும் கூட, அதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னால் மறைந்த திரு. சஞ்சய் காந்திக்கு அஞ்சலி செலுத்துகிற வகையில் அவருடைய கணீரென்ற ஒலியைக் கேட்டவர்களுக்கு மறுநாள் இந்தச் செய்தியைக் கேட்டபோது நம்ப முடியாத ஒன்றாகத்தான் இருந்தது.

திரு. வி. வி. கிரி அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி நாம் விவரித்துச் சொல்லத் தேவையில்லை. அது எல்லோரும் அறிந்த ஒன்று. மாணவனாக இருந்தபோதே அவர் இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இருந்திருக்கிறார். இங்கிலாந்திலும், அயர்லாந்திலும் கூட படிக்கிற காலத்திலே அந்த நாட்டினுடைய விடுதலை உணர்ச்சியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இருந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கிறோம். " அயல் நாட்டில் இருக்கிறோம். இங்கு வந்தது படிப்பதற்காகத்தான். இந்த நாட்டின் பிரச்சினையில் நமக்கு என்ன கவலை ?" என்று இல்லாமல் தான் இருக்கிற இடத்தில் இருக்கிற மக்கள் சுதந்திர உணர்வோடு வாழ வேண்டும் என்ற வகையில் அந்தப் பகுதியினுடைய பிரச்சினைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட அரிய நிலையை இந்த நாட்டினுடைய இளைஞர் சமுதாயம் கண்டுகொண்டு பணியாற்ற வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

டிவேலரா அவர்களுடைய புரட்சிக் கொள்கையில் நம்பிக்கை பெற்று, ஆயுதம் தாங்கி அந்நியரை அகற்ற வேண்டுமென்ற கொள்கையில் அழுத்தம் பெற்றிருந்தாலும், மீண்டும் இந்தியாவிற்கு 1916 ஆம் ஆண்டு வந்த பிறகு காந்தியடிகளுடைய கொள்கையிலே நம்பிக்கை வைத்து, அந்த முறையில் சுதந்திரம் பெற வேண்டுமென்று கருதி, அதில் தன்னை ஒரு தொண்டனாக இணைத்துக் கொண்டு, இந்தியாவின் விடுதலைக்காக அவர் ஆற்றிய தொண்டினை மறக்க முடியாது.



1980 ஜூன் 25] [திரு. ம.. சங்கரலிங்கம்]

[பிற்பகல் 11-40]

இந்தியா விடுதலை பெற்ற பிறகு, அவர் பல்வேறு பொறுப்புகளை ஏற்றிருந்தாலும்கூட, ஒரு விடுதலை வீரன் என்ற நிலையிலும் இந்த நாட்டினுடைய விடுதலைக்காகத் தொண்டாற்றியவன் என்ற நிலையிலும், இந்த நாடு வீறு பெற்றிருக்க வேண்டும் என்று அவர் எண்ணம் கொண்டிருந்தார். அந்தக் கனவைக் கண்டு கொண்டிருந்தார். அந்தக் கனவை நிலைநாட்டுவதற்கான வழிமுறைகளை அவர் வகுத்துக்கொண்டிருந்தார். அவர் தான் ஏற்றுக் கொண்டிருந்த பொறுப்புகளைச் சீரிய முறையில், சிறப்பான முறையில் நிறைவேற்றி, தான் கொண்ட கொள்கைகளிலிருந்து வழுவாமல் இருந்தார். இதற்கு பல்வேறு சூழ்நிலைகளை நான் சுட்டிக்காட்ட முடியும். அவர்கள் இந்த மாநிலத்தில் அமைச்சராக இருந்தார்கள். நான்கு மாநிலங்கள் ஒன்று சேர்ந்திருந்தபோது அமைச்சராக இருந்தவர்கள். பின்னர் மத்தியில், பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும் இருந்தார்கள். மத்திய அரசிலும் அவர் ஒரு அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்கள் எந்த நிலையிலும் தன்னுடைய கொள்கைகளிலிருந்து சற்றும் விட்டுக்கொடுக்காமல் இருந்தார்கள். அரசு அவர் கொள்கையிலிருந்து மாறுபடும்போது, தம்முடைய பதவியையே உதறி விடுவார்கள். கொள்கைக்காகவே வாழ்ந்த ஒரு பெரியவராக அவர் நமக்குக் காட்சியளிப்பதை நாம் பார்க்கிறோம். அந்தப் பெரியவருடைய வாழ்க்கைப் பாதை வருங்கால சந்ததியினருக்குப் பாடமாக இருப்பதுமல்லாமல் ஒரு பாதையாக அமையும். அவருடைய வழிமுறைகளை நாம் பின்பற்றவேண்டும். அவைகளை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

அவர்கள் இந்திய நாட்டினுடைய குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்கள். உத்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களில் ஆளுநராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் கேரளத்தில் ஆளுநராக இருந்தபோது, நான் அவரோடு தொடர்பு கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டபோது பார்த்திருக்கிறேன். அவர்கள் ஆளுநராகப் பொறுப்பில் இருக்கின்ற நேரத்தில் தவிர மற்ற நேரத்தில் ஒரு சாதாரண பிரஜையாக இருந்தார்கள். சாதாரண பிரஜைகளுக்கு இருக்கக்கூடிய இன்னல்களைக் களைவதில்தான் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். அதில் தான் ஒரு போர் வீரன் என்று தன்னைக் கருதிக்கொண்டு செயல்பட்டார்கள். அதைப்பற்றி நான் விரிவாகச் சொல்லத் தேவையில்லை. அவர்கள் தொழிலாளர்கள் இயக்கத்தைத் தோற்றுவிக்கத் துணையாக இருந்தார்கள். அந்தச் சீரிய நிலையை உருவாக்குவதில் அவர்கள் பொறுப்பேற்றிருந்தார்கள். அவர்கள் இந்தியாவின் தலைவராக இருந்தபோதும், தொழிலாளர்கள் நலனிலேயே அக்கறை கொண்டவராக இருந்தார்கள்.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1980 ஜூன் 25

குடியரசுத் தலைவர் பொறுப்பை விட்டு சென்னை நகர வாசியாக வந்து இருந்தபோதும், நாட்டிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, சுற்றுப்புற சூழ்நிலைகளைச் சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். டப்ளின் போய்வந்த பிறகு, சுற்றுப்புற சூழ்நிலைகளைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். சுற்றுப்புற சூழ்நிலைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தினார். தானும் சுத்தமாக வைத்துக்கொண்டு, தன்னுடைய நாட்டையும், நாட்டு மக்களையும் சுத்தமாகக் கொண்டு செல்ல வேண்டுமென்று நினைத்து செயல்பட்டார்கள். அவர்கள் தம்முடைய 86 வருட அனுபவத்தில் இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர், மற்றும் இதர பொறுப்புக்களை வகித்துப் பெற்ற அனுபவத்தின் முதிர்ச்சியில் கடைசியாக பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இந்தியாவினுடைய எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும், அதை எப்படி உருவாக்க வேண்டும், அதை உருவாக்கிடவேண்டிய வழி என்ன என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இது அவர்கள் இந்த நாட்டிற்குக் கடைசியாகத் தந்த 'சிந்தனைச் செல்வம்' என்று நாம் கருதி, நாமும் அதைப்பற்றி மேலும் சிந்தனை செய்து, அவருடைய கனவு நிறைவேறுவதற்காக நாம் நம்மை அர்ப்பணித்துக்கொள்வதுதான் நாம் அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலி என்று கருத வேண்டும். அன்னாரை இழந்து தவிக்கின்ற, அன்னாருடைய குடும்பத்தினருக்கு என்னைச் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பரிவுணர்ச்சியைத் தெரிவித்து, அவர்கள் உறுகின்ற துயரத்தோடு எங்களையும் ஈடுபடுத்தி அமைகிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆங்கிலத்திலே "Calamities never come singly" என்று சொல்வார்கள். "துக்க நிகழ்ச்சிகள் தனியாக, ஒன்றாக மாத்திரம் வருவதில்லை. அவைகள் ஒன்றை ஒன்று தொடர்ந்து பல தொடர்ந்து பல நிகழ்ச்சிகளாகத்தான் வரும்" என்று சொல்வார்கள். அந்த உண்மை இன்று நமக்குமுன் நிற்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் பாரதத்தின் இளைய சமுதாயத்தின் இணையற்ற தலைவர் என்ற வகையில் வாழ்ந்து வந்த திரு. சஞ்சய் காந்தி அவர்கள் ஒரு கோர விமான விபத்தில் கொடூரமான முறையில் மறைந்த செய்தியைக் கேட்டு அதற்காக வருத்தம் தெரிவித்து இங்கே நமது அனுதாபத்தையும், அஞ்சலியையும் செலுத்தினோம். அதற்கு மறு நாளே நம்முடைய நாட்டின் மூத்த அரசியல் மேதைகளில் ஒருவரும், நாட்டில் மிகப் பெரிய சேவைகளைச் செய்தவர்களில் ஒருவருமான திரு. கிரி அவர்கள்



1980 ஜூன் 25] [திரு. த. சந்தோஷம்]

தன்னுடைய 86 வது வயதிலே மிக அமைதியான முறையிலே சிறந்த மரணத்தை அடைந்தார் என்பதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். அதனால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பையும், நஷ்டத்தையும் நாம் நினைவு கொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறோம்.

அவர் ஆந்திரப் பிரதேசத்திலே தன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு இங்கிலாந்திற்குச் சென்று அங்கே மேற்படிப்புப் படித்தார்கள். அந்த நேரத்திலே இங்கிலாந்து சென்று மேற்படிப்பு படித்து வந்தவர்கள் அனைவருக்கும் இந்தியாவிலே மிகச்சிறந்த பதவிகள் காத்துக்கொண்டிருந்தன. அவர் விரும்பியிருந்தால், அவருக்குப் பல பெரிய பதவிகள் கிட்டியிருக்கும். அவருக்கு உல்லாச வாழ்க்கை கிடைத்திருக்கும். பல வசதிகள், பெருமைகள் எல்லாம் கிடைத்திருக்கும். இருந்தபோதிலும், அதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, தொழிலாளர்களுக்குத் தொண்டுசெய்யும் கடினமான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, ஒரு தொழிற் சங்கத் தலைவராக இருந்தார்கள். நான் அறிந்த மட்டில், எனது ஞாபகம், 1926 ஆம் ஆண்டிலே இந்தியாவிலே நடந்த மிகப் பெரிய ரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கி நடத்தினார்கள் அவர்கள். தொழிற் சங்க இயக்கத்திலே போராட்டம் நடத்தும்போது ஒரு மிகப் பெரிய புதிய கருத்தை உருவாக்கினார். மார்க்சியத்தை நன்றாகப் படித்தவர். அதை ஏற்றுக்கொண்டவர். அவர் அதே சமயத்திலே நம்முடைய நாட்டிற்கு வந்து மகாத்மா காந்தியடிகள் தலைமையையும் ஏற்று அதற்குப் பிறகு, மார்க்சீயமும் காந்தீயமும் இரண்டும் இணைந்த ஒரு புதிய லட்சியத்தை, பாதையை அவர் வகுத்தார். அது உண்மையிலே நம் நாட்டிற்குப் பயன்படத்தக்க ஒரு லட்சியமாக, பாதையாக இருந்தது. அவர் அந்தப் பாதையை வகுத்துக் கொடுத்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்குப் பிறகு மகாத்மா காந்தியடிகளின் உப்பு சத்தியாக்கிரகம், மற்ற தனிப்பட்ட சத்தியாக்கிரகங்கள் போன்றவற்றில் பங்குகொண்டு பலமுறைகள் சிறை சென்றார் என்று பத்திரிகையிலே பார்த்திருக்கிறேன்.

1933-35 ஆம் ஆண்டு நான் சட்டக் கல்லூரியிலே படித்துக்கொண்டிருந்த போதுதான் அந்த சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குப் பிறகு, முதன்முறையாகத் தேர்தல் நடந்தது. சட்டசபைக்குத் தேர்தல் நடந்தது. திரு. கிரி பலமுறைகள் பேசிக் கேட்டிருக்கிறேன். காலஞ்சென்ற திரு. சத்தியமூர்த்தி, திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. பிரகாசம் இவர்கள் எல்லாம் உணர்ச்சிவசப் பட்டுப் பேசுவார்கள். திரு. கிரி, அவர்களைப் போன்று உணர்ச்சி வசப் பட்டு, ஆவேசமாகப் பேசமாட்டார். மிகவும் நிதானமாக, அமைதியாக, ஆனால் தெளிவான கருத்துக்களை, அதற்குத் தகுந்த ஆதாரங்களோடும், புள்ளிவிவரங்களோடும் எடுத்துச் சொல்வார். அவருடைய பேச்சுக்களுக்கு

நல்ல மதிப்பும் மரியாதையும் கொடுக்கக்கூடிய நிலை இருந்தது. அந்த அளவுக்கு அவருடைய பேச்சுக்கள் அமைந்திருக்கும். அவர் பல பதவிகள் வகித்திருக்கிறார். மாநில அமைச்சராக இருந்திருக்கிறார். மூன்று மாநிலங்களில் ஆளுநராகப் பதவி வகித்திருக்கிறார். உதவி ஜனாதிபதி பதவி வகித்திருக்கிறார். ஜனாதிபதி பதவி வகித்திருக்கிறார். இந்த எல்லாப் பதவிகளிலும் அவர் கடமையுணர்ச்சியுடன் செயலாற்றியிருக்கிறார். அவர் அந்தப் பதவிகளின் மூலம்தான் பெருமை பெற்றார் என்பதைக் காட்டிலும், அவர் சேவைகளின் மூலம் அந்தப் பதவிகளுக்குப் பெருமையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையாகவே இந்த நாட்டு மக்களுக்கு பலவிதத்திலே அவர் நன்மை செய்துவந்தார்.

ஒரே ஒரு நிகழ்ச்சியை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். என்னை ஈடுபடுத்திய ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவர் ஜனாதிபதியாக வந்த பிறகு, மதுரைக்கு ஒரு முறை வந்திருந்தார்கள். அப்போது மத்திய அரசு ஊழியர்கள் தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு (Co-ordinating Committee of Central Government Employees' Unions என்ற அமைப்புக்கு நான் தலைவராக இருந்தேன். அப்போது அந்தக் கமிட்டியின் சார்பாக அவரை நான் பேட்டி காண வேண்டுமென்று வேண்டுகோள் அனுப்பியிருந்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டு எங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கிக்கொடுத்தார். எவ்வளவோ முக்கிய அலுவல்கள் இருந்தபோதிலும். தொழிலாளர்கள் பிரதிநிதிகள் வருகின்றோம் என்று சொன்னவுடனேயே, அவர் 15 நிமிடங்கள் ஒதுக்கிக் கொடுத்து, எங்களுடன் உரையாடி, எங்களுடன் புகைப் படமும் எடுத்துக் கொண்டு, எங்களுடைய கோரிக்கைகளை, மனுக்களையெல்லாம் பெற்றுக் கொண்டு, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அவைகளை அனுப்பி தக்க நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியும் கொடுத்தார். இப்படி அவர் சாதாரண மக்கள், பாமர மக்கள், தொழிலாளர்கள், சாமான்ய மக்கள் இவர்களோடு எல்லாம் தொடர்பு கொண்டு பணி செய்து வந்தார்கள்.

"If you can walk with kings and not lose the common touch.
If all men come with you, but none too much.
Then yours is victory and you will be a man, my son!".

(முற்பகல் 11-50)

என்று சொல்லுவார்கள். அவர் அரசர்களோடு பழகுவார். அப்போது அவர்களுக்குச் சமமாகப் பழகுவார். தாழ்ந்த நிலையில் உள்ள ஏழை எளியவர்களோடு பழகுவார். அந்த நேரத்திலும் அவர்களுக்குச் சமமாகப் பழகு-



வார். அவருடைய வாழ்க்கை ஒரு ஒளி விளக்காக அமைந்திருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி தாரா செரியன் அவர்கள் மனிதனுடைய வாழ்க்கை 70 வயதுதான் என்று பைபிளில் சொல்லியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் திரு. வி. வி. கிரி அவர்கள் அதற்கும் மேலாகப் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள். மனிதனுடைய வாழ்க்கை 70 ஆண்டுகள்தான். அதற்கு மிஞ்சி வாழ்ந்தால் அவனுடைய வாழ்க்கை வருத்தம், சஞ்சலம் உள்ளதாக இருக்கும், வியாதிகள் ஏற்படும், தொல்லைகள் ஏற்படும் என்று பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவரைப் பொறுத்தவரையில், வியாதியால் கஷ்டப்படவில்லை. அவர் மற்றவர்களுக்குப் பாரமாக இருந்ததில்லை. 85 ஆண்டுகள் முழுமையாக வாழ்ந்து, அதுவும் வெற்றிகரமாக வாழ்ந்து, அமைதியான முறையில் மரணம் அடைந்திருக்கிறார்கள். அவருடைய வாழ்க்கையைப் பாராட்டுகிறோம். அவர் மறைந்தார் என்பதில் துக்கம் இருந்தாலும், அவருடைய வெற்றிகரமான வாழ்க்கை, நல்ல வழி வகுத்துக் கொடுக்கும் வாழ்க்கை என்பதை நினைவூட்டி, அவருடைய மறைவிற்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நாடு மிகப் பெரிய எழுச்சி மிக்க தலைவனை, புதிய நம்பிக்கைக்குரிய நட்சத்திரமாக விளங்கிய தலைவனை—சஞ்சய் காந்தியை—இழந்த இழப்பிலிருந்து மீளுவதற்கு முன்பு, அந்தத் துயரத்திலிருந்து தன்னைத் தணித்துக்கொள்ளுவதற்கு முன்ப இன்னொரு துயரப் பேரிடியாக இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவருடைய மறைவுச் செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. கிரி அவர்கள், அவர்கள் வாழ்ந்த நாட்களினுடைய நிலைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்கள். சுதந்திரப் போராட்ட வீரராக விளங்கினார்கள். அந்த நாட்களின் சமுதாய எதிர்பார்ப்புகளுக்கு இணங்க பல்வேறு துறைகளில் நின்று, பணியாற்றி, சமுதாயத்தினுடைய எதிரொலியாக விளங்கினார். சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்ட அவர் பல்வேறு சிரமங்களை ஏற்றுக்கொண்டார். காந்தி அடிகளுடைய அகிம்சாப் போராட்டத்தில் கலந்துகொண்டு அவரோடு விவாதிக்க வேண்டிய நிலைக்கு அவர் உயர்ந்திருந்தார். அன்றைய தினம் சுதந்திரப் போராட்டத்தினுடைய இன்னொரு அங்கமாக தொழிற் சங்க இயக்கத்தைக் காங்கிரஸ் பெரும் இயக்கம் வளர்க்கும் நிலையில், தொழிற் சங்கத்தை வளர்க்கும் பொறுப்பினை ஏற்ற மிகச் சிலரிலே ஒருவராக திரு. வி. வி. கிரி அவர்கள் விளங்கினார்கள். இந்திய இரயில்வே தொழிலாளர்களுக்கான இரயில்வே தொழிற் சங்கத்தை நிறுவிய பெருமை அவருக்கு உண்டு. தொடர்ந்து அதை-

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூன் 25

அரசியல் கோணத்திலே நின்று பார்க்காமல் அந்த நிலையிலே வழி நடத்திச் செல்லாமல் நாட்டு நலன் கருதி வழி நடத்திய பெருமை அவருக்கு உண்டு. அவரே சில நாட்களுக்கு முன்பு இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விடுதலைப் போராட்டத்தின்போது ஒத்துழையாமை இயக்கம் நடந்தது. அந்தப் போராட்டத்திற்கு காந்தியடிகள் குரல் கொடுத்தபோது, அதிலே இரயில்வே தொழிற் சங்கமும் சேர வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டபோது, காந்தியடிகளோடு விவாதித்தார். மற்ற எல்லாவற்றிலும் அகிம்சைப் போராட்டத்தைக் கையாள முடியும், ஆனால் இந்திய நாடு முழுவதும் பரவியிருக்கின்ற இரயில்வே தொழிற் சங்கத்தை இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுகின்ற நிலையை உருவாக்குவது இந்தியா முழுவதும் அமைதியை இழக்கும் நிலையை ஏற்படுத்துமென்று காந்தியடிகளோடு விவாதித்து, அதற்கு காந்தியடிகளையும் ஒப்புக்கொள்ளச் செய்தேன் என்பதைச் சில நாட்களுக்கு முன்பாக ஓர் உரையாடலில் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு தன்னை முழுமையாகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடுத்திக்கொண்டிருந்தும், தொழிற்சங்க நோக்கம் எந்த விதத்திலும் பழுதடையக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக விளங்கினார்.

ஒரு தொழிற்கூடத்திற்கு ஒரே தொழிற் சங்கம் என்ற கொள்கையை இன்னமும் வலியுறுத்துகிறேன், அதன் மூலம் நல்ல விளைவைக் காண முடியுமென்பதை சில நாட்களுக்கு முன்பாக தொழிற் சங்க இயக்கத்திற்கான செய்தியாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். தமிழகம் உள்ளிட்ட சென்னை ராஜதானிக்கு தொழிலாளர் நல அமைச்சராக ஒரு முறையல்ல, இரு முறை இருந்திருக்கிறார். ராஜாஜி அவர்களது தலைமையிலான அமைச்சரவையில் பணியாற்றியபோது, ஒரு போராட்டத்தின் விளைவாக, அமைச்சரவைக் கூட்டத்திலே கடுமையான கருத்துக்களைச் சொல்லும் அவசியம் வந்தபோது, தயங்காமல் கருத்துக்களைச் சொல்லி, நியாயத்தை நிலைநாட்டியதைக் காண்கிறோம். அதற்குப் பிறகு அகில இந்திய அளவிலே ஆசிய ஜோதி, பண்டித நேரு அவர்கள் தலைமையில் பணியாற்றியபோது, மீண்டும் தொழிலாளர் நலத் துறையை ஏற்று பணியாற்றினார். தான் ஏற்றிருந்த துறையினுடைய தலைவர் என்ற முறையிலே கொள்கை ரீதியாக நின்று, வாதிட்டு, விவாதித்து, போராடுகின்ற நிலைமை வந்தபோது, தன்னுடைய அமைச்சர் பொறுப்பை விட்டு விலகி வந்தார் என்பதையும் காணும்போது, எந்த அளவிற்கு அந்தப் பணியைப் புனிதமாகக் கருதினார் என்பதையும், அதைப் போலவே தன்னுடைய கொள்கையில் எந்த அளவிற்கு உண்மையாக இருந்தார் என்பதையும்



1980 ஜூன் 25] [திரு க. இராமமூர்த்தி]

அறிய முடிகிறது. பண்டித நேரு அவர்கள், தன்னுடைய அமைச்சரவையி லிருந்து அவர் விலகினார் என்றாலும், வேறு பல துறைகளிலே அவரைப் பயன்படுத்திக்கொண்டு, அவருக்கு உரிய மரியாதையைக் காட்டினார் என்பது மறைந்த தலைவர் திரு. கிரி அவர்களின் உயர்வினைக் காட்டுகிறது.

அவருடைய பல்வேறு நடவடிக்கைகள் நமக்கு எடுத்துக் காட்டாக விளங்கு கின்றன. இந்த நாடு இன்றைக்கு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற பல்வேறு சிக்கல்களிலேயிருந்து மீளுவதற்கு அவர்கள் நடந்துகொண்ட முறையும் துணையாக நிற்கும். எனவே அவர் வாழ்க்கையைப் படிப்பினையாக ஏற்க வேண்டுமென்று சொல்லி, அவருடைய இழப்பினாலே துயரத்திலே ஆழ்ந்திருக் கிற அவருடைய குடும்பத்தினருக்கு காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12)

THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, a nation which is already plunged in grief has been rendered even more sorrowful by the passing away of one of the great personalities of our Nation.

Sir, ex-President Thiru V. V. Giri has had a most colourful political career; but I, for my part, consider the early phase of his career to be one of the most epoch-making events of his long struggle in the Indian national life. As a young student, when he was in Dublin for his education, he was associated with a great revolutionary leader of troubled Ireland, Yemon De Valera. His association with De Valera shaped his great interest in the welfare of the working classes. When he returned to India to serve under the leadership of Mahatma Gandhiji, ex-President Thiru V. V. Giri was able to compromise the revolutionary character of De Valera's teaching with Mahatma Gandhiji's non-violent philosophy. In the early stages of the growth of the Congress Party, Thiru V. V. Giri was one of the few leaders who devoted himself to the trade union movement and who became one of the leaders of the trade union movement in the Congress Party.

Sir, he occupied many important positions in life and it is well-known to the Members of this House. He was a legislator, he was a Minister in the old Madras Presidency when all the four Provinces were part of this Presidency and he was a Member of the Lok Sabha. He was a member of the Union Cabinet and here again the man's personality was evident. In 1954 he had the

conscience, which many politicians do not have at present. When he differed with Pandit Jawaharlal Nehru, one of the foremost leaders, the leader of Asia as the hon. Member Thiru Ramamoorthy mentioned, he had the courage of his conviction to resign from the Union Cabinet and he was prepared to go into political oblivion, if necessary, in furtherance of that conviction. Fortunately for us, Panditji realised his great integrity, sincerity and determination and Thiru Giri was not left in the political wilderness but was allowed to show his talents in many fields—as High Commissioner to Sri Lanka, as Governor of three States and later on as Vice-President of India. And by his last act in 1969, he gave an entirely new twist to India's political affairs when he contested for the Presidentship of the Indian Republic resulting in many changes in the political sphere, the end of which we have still not seen today.

It was a great good fortune of Madras that we have had many ex-Presidents who settled down in Madras. Probably, the atmosphere in Madras is peaceful, calm and enables them to retire and to continue their active work in other fields. Ex-President Thiru Radhakrishnan retired in Madras and we were very happy when Thiru Giri, after his retirement from the Presidentship of the Indian Republic, came down and settled in Madras. Even at the age of 80—I have met him on a few occasions after his settling down in Madras—his was a bubbling personality which would not keep still. Old age can be very lonely and the loneliness of old age can be realised only by those who step into their 70's and 80's and find their old values and traditions set aside by modern generations. Thiru Giri was an activist even at the age of 85, just as he was an activist at the age of 20. The way in which he interested himself in civic affairs in Madras was a great tribute and testimony to his dedication to public service. Even till the last, Sir, he was not afraid of controversy. I can think of very few personalities in the Indian political scene who would think of starting a political party at the age of 85 and that is what Thiru Giri tried to do. He did not succeed but that does not matter. It is the spirit which requires to be admired. He had that undaunted spirit to say, even at the age of 85, "I will try to fight for my convictions and try to educate the people to think on the lines on which the nation should progress".

Sir, in his demise, the nation has lost a great patriot, a great activist and one who did not hesitate to express his opinions although he knew that they can be temporarily unpopular. He died at the



ripe old age of 86. But, nonetheless, we miss such personalities on the national scene. We have very few persons of his contemporary age who remain with us and there are only two or three. We are sorry that the younger generation, which is today searching for leadership in the political field, has lost a good old man who was honest, sincere, dedicated and who had the integrity to stand by his convictions. May I express, Sir, on behalf of the young people who had tremendous admiration for his qualities, our deep sense of sorrow and regret at his passing away? May I also take this opportunity of conveying to Thiru Shankar Giri and the members of Thiru Giri's family our heartfelt condolences and how we share in the grief of the family at the present moment?

THIRU J. M. MIAKHAN. Hon. Chairman, on behalf of the Indian Union Muslim League, I also associate myself with the feelings expressed in this House and request that our heartfelt condolences may be conveyed to the bereaved family of Thiru V. V. Giri.

Thiru Giri was an outstanding personality and his was a many-faceted personality. He filled very many positions with distinction. As a matter of fact, he brought fame and distinction to the positions he held and he adorned the posts he occupied. He had been a labour leader all his life and he stood by his conviction. When he differed with the others, he never hesitated to stand by his conviction, resign if necessary and go his own way. He was a labour leader of great distinction. Now, we have lost a great personality who could lead us. Very recently, we were immersed and submerged in gloom by the demise of the young leader, Thiru Sanjay Gandhi. Again, another misfortune has visited us. God alone should protect us and our country from such calamities.

Once again, on behalf of our Party, I associate myself with the feelings expressed in this House. I request that our heartfelt condolences may be conveyed to the bereaved family.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்—தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்குக்கு ஏற்ப இலக்கணமாகத் திகழ்ந்த நம்முடைய நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டில் புகழோடு வாழ்ந்து, பல்வேறு பதவிகளை வகித்து, இந்திய நாட்டு மக்களுக்காக பெரும் சேவை ஆற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு மறைந்திருக்கக் கூடிய அந்தப்

பெரியவர் தொழிற் சங்க வாதியாக தொழிலாளர்களுக்காக வாழ்நாள் பூராவும் உழைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்திய மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்து கடைசியில் அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கடைசி வரை துடிப்போடு செயலாற்றியிருக்கிறார்கள். வாழ்நாள் பூராவும் இந்திய மக்களுக்காக துடிப்போடு செயலாற்றி நம்மை விட்டு உயிர் நீத்த அந்தப் பெரியவருக்கு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, Sir, may I join in the chorus of tributes that are being paid today to our departed leader, Bharat Ratna Thiru V. V. Giri?

Sir, as a young member of the Presidency College Union, I had the occasion to see Thiru Giri for the first time in 1938 when he was in the Rajaji Cabinet. One of the things which impressed me was this. The Union meeting was at 4 o' clock and Thiru Giri was there five minutes before time which I request Members of the Treasury Bench to copy for their guidance that they should be before time, meet the people who had invited them and get acquainted with them. This quality, I think, he kept till the last except on one occasion which I shall tell presently. Thiru Giri came there at five minutes to four. He had an engagement at 5-15 p.m. elsewhere. He spoke for 40 minutes to the students of the Union. Thereafter, at fifteen minutes to five, he told me—I was the President of the Union—" Mr. President, you can take five minutes over your concluding remarks, five minutes will go to the Secretary for his thanks-giving and thereafter I must be left off at 5 p.m. I kept to the schedule. He left at 5 o' clock and he went to the Perambur Railway Workshop for a meeting. He kept his time and he was there at 5-15 p.m. This punctuality, I commend to the Members of the Treasury Bench who have very often kept their audience waiting and sometimes meetings have been over before their expected arrival.

Sir, there are other things spoken to by the hon. Members Thiruvalargal Santosham, Ramamoorthy and Damodaran. About Thiru Giri's courage of conviction, two things come to my memory. One relates to the period when Thiru Erskine was presiding over the Rajaji Cabinet. In those days, the Governor had to preside over the Cabinet meetings. A European official was transferred from a very hot spot where there were a labour dispute, a stay-in-strike and also a shooting incident, and he was posted to Uthagamandalam. Thiru Giri stood, firm and said that that officer should be dealt with by him as Labour Minister. He told



Thiru Erskine, " You have no right to transfer him ". Then, Thiru Giri should be followed by us. I should also commend the Cabinet meeting, " It was the work of your Prime Minister. " Rajaji was then called the Prime Minister. Under the 1935 Act, all the Provincial Governments had Prime Ministers. When Thiru Erskine said, " Your Prime Minister was responsible for it ", Thiru Giri said, " I call my Prime Minister to order " and he was about to tender his resignation. Then, one of the Advisers to the Governor came to Thiru Giri with a message that he might meet the Governor on a Sunday. Thiru Giri said, ' I do not see anyone on a Sunday '. Then, the Governor gave him time as any time in the succeeding week and Thiru Giri went and met the Governor on the succeeding Tuesday, I believe. The Governor apologised to him for his conduct and told him, " You can post this official to any part of the State as you wish ". Then, Thiru Giri had his say and he had the official posted out of Uthagamandalam to a place where he would not have liked to go. This is one of the instances, besides the Bank Award incident which was mentioned by the hon. Members Thiruvalargal Damodaran and Ramamoorthy, wherein he showed courage of conviction and differed in views from his Chief. Today, we find Ministers differing from the Chief Minister only at the fag end of their term and showing their mettle by crossing floors just before a dissolution of Parliament or Assembly. This should not be followed. If any Member of the Treasury Bench feels in his heart of hearts that he should differ from his leader, he must come out as early as possible. I request the Members of the Treasury Benches to copy this spirit of Thiru Giri and also follow it. If the Chief Minister is to blame and where he goes wrong, let them—I may respectfully use the words—call him to order, if it is necessary. This spirit must be there if the Cabinet is to work together and it is also necessary that every one of the Members of the Cabinet should communicate to the leader at the proper time their dissent. I would request that this very good quality of Thiru Giri should be followed by us. I should also commend the large-heartedness of Pandit Jawaharlal Nehru which persuaded him to recall Thiru Giri and lead him into other walks of life which eventually led him to the office of the President of India. I wish that this greatness should also be copied by others and that they should try to forget what had happened when they felt very sorry over what had happened. They should understand what was the real nature of the differences and try to build up a situation where there is more understanding and where there is more humility in the

நான் பதவியில் இருக்க விரும்பவில்லை' என்று சொல்லி, தன் அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தாரே அந்த நிகழ்ச்சியைச் சொல்லலாம். நம்மிலே பலருக்கு அது ஒரு கசப்பான எடுத்துக்காட்டாக அமையும் எனக் கருதுகிறேன்.

இறுதியாக அவர் தம் வாழ்நாளில் கடைசி நேரத்தில் நமக்குத் தந்திருக்கிற வேண்டுகோள் இருக்கிறதே அதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலும் ஒரு கசப்பான உண்மையைச் சொல்லியிருக்கிறார். இந்த நாட்டில் ஒரு பதவியைப் பெற வேண்டும் என்றால், பணத்தை வாரி இறைத்து, லஞ்சம் கொடுத்து அதன் மூலமாக ஓட்டுக்களைப் பெற்று அந்தப் பதவியைப் பெற்றுவிடலாம் என்ற நிலை இருக்கிறது. அப்போதுதான் சட்ட மன்றத்திற்கும், அல்லது மேலவைக்கும் அல்லது வேறு பொறுப்பிற்கும் வர முடியும் என்ற நிலை இருக்குமானால், அந்த நிலையை நாம் அழித்தொழிக்க வேண்டும், அதற்காக இந்த நாட்டு அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும்; அதற்கு வாய்ப்பாக புதிய அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்த வேண்டும் என்று கடைசியாக அவர் முழங்கியிருக்கிற முழக்கமிருக்கிறதே அது நாமெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கசப்பான உண்மையாகும். இப்படிப்பட்ட நல்ல எடுத்துக் காட்டுகளையெல்லாம் நமக்குத் தந்து, நல்ல கருத்துக்களையெல்லாம் இந்த நாட்டுக்குத் தந்து, தன் வாழ்வின் இறுதி வரை, வாழ்வாங்கு வாழ்ந்து இயற்கையாக, அவர் தூங்கிக் கொண்டிருக்கிறபோது அவர் உயிர் பிரிகிற வகையில் ஒரு இயற்கையான மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறார். அத்தகைய பெரியாருக்கு, அத்தகைய மாமேதைக்கு நான் சார்ந்திருக்கிற ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில், என்னை இங்கே அனுப்பி வைத்துள்ள தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் இரங்கலையும் மரியாதையையும் தெரிவித்து அவர் குடும்பத்திற்கு எங்கள் இரங்கலையும் தெரிவித்து அமைகிறேன், வணக்கம்.

* THIRUMATHI **TARA CHERIAN**: Hon. Chairman, I thank you for giving me the opportunity to join the former speakers and the speakers to follow to acknowledge publicily what this great eminent labour leader, veteran social worker, a man who reached the highest office in India as the President of our country and who was awarded the highest award, namely, Bharat Ratna, meant not only to the people of this country but also to the Cherian family. I am referring to our Respected Shri V. V. Giri whose illustrious life has came to an end. I have known him for the past nearly 40 years and my husband, late Dr. Cherian, must have known him much longer. I do not think there are any members of the Giri family who have not been acquainted with my husband professionally and otherwise.





Sir, I feel that this meeting of the Legislative Council should not be just a meeting to pass a condolence resolution to mourn the passing away of the respected leader, Thiru Giri. The resolution should be coupled with an act of thanks-giving for all that the life and achievements of Thiru Giri had meant not only to the States that he served, not only to countries like Sri Lanka in which he represented India, not only to the poor people of Ireland whose cause he took up when he went there to study and from where he was deported to India for what was in those days called a kind of interference in the affairs of a foreign country, not only to the people in Madras, Mysore or Andhra but what he had meant for the whole nation. Such should be the purpose of this meeting—this Assembly.

When one opened the newspapers this morning, one saw that the papers had published information about so many good things done by Thiru Giri. But, I think that the papers have missed one little link in the chain of his life history which I would like to emphasise. In spite of the burdens of public life and cares of his office, he was essentially a lover of his family. In these days we see disintegration of families everywhere. It happens not only in the sophisticated countries and highly developed countries but also in many parts of India itself. I have always seen a clear indication of a peaceful family life with the Girls. He adored his life partner and his children and the care and affection which he showered on his family was well-known. I have moved with that family and, therefore, I would like to pay a tribute to Thirumathi Giri also who had been able to allow her husband to involve himself in public affairs and to do so much for the nation. She was a source of encouragement to him in all that he did for the country. Thiru Giri and Thirumathi Giri had long, rich and full lives and Thiru Giri had a very peaceful end which is not the case with many people. Therefore, having known their family, and his great statesmanship and geneality I would like to pay my respects and homage to the memory of Thiru Giri. However old a person may be, to those who have been very close to him, the loss will be an irreparable loss. Our heartfelt sympathies go to all the members of the bereaved family. People will always remember him with affection and regard. Here, I would like to quote these words from the scripture:

> "Well done, thou good and faithful servant; enter thou into the rest which I have prepared for you."

Thank you, once again, Sir, for having given me this opportunity to speak about one I revere and respect.

பெரியவர் தொழிற் சங்க வாதியாக தொழிலாளர்களுக்காக வாழ்நாள் பூராவும் உழைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்திய மக்களுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்து கடைசியில் அவர்கள் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் கடைசி வரை துடிப்போடு செயலாற்றியிருக்கிறார்கள். வாழ்நாள் பூராவும் இந்திய மக்களுக்காக துடிப்போடு செயலாற்றி நம்மை விட்டு உயிர் நீத்த அந்தப் பெரியவருக்கு ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, may I join in the chorus of tributes that are being paid today to our departed leader, Bharat Ratna Thiru V. V. Giri ?

Sir, as a young member of the Presidency College Union, I had the occasion to see Thiru Giri for the first time in 1938 when he was in the Rajaji Cabinet. One of the things which impressed me was this. The Union meeting was at 4 o' clock and Thiru Giri was there five minutes before time which I request Members of the Treasury Bench to copy for their guidance that they should be before time, meet the people who had invited them and get acquainted with them. This quality, I think, he kept till the last except on one occasion which I shall tell presently. Thiru Giri came there at five minutes to four. He had an engagement at 5-15 p.m. elsewhere. He spoke for 40 minutes to the students of the Union. Thereafter, at fifteen minutes to five, he told me—I was the President of the Union—" Mr. President, you can take five minutes over your concluding remarks, five minutes will go to the Secretary for his thanks-giving and thereafter I must be left off at 5 p.m. I kept to the schedule. He left at 5 o' clock and he went to the Perambur Railway Workshop for a meeting. He kept his time and he was there at 5-15 p.m. This punctuality, I commend to the Members of the Treasury Bench who have very often kept their audience waiting and sometimes meetings have been over before their expected arrival.

Sir, there are other things spoken to by the hon. Members Thiruvalargal Santosham, Ramamoorthy and Damodaran. About Thiru Giri's courage of conviction, two things come to my memory. One relates to the period when Thiru Erskine was presiding over the Rajaji Cabinet. In those days, the Governor had to preside over the Cabinet meetings. A European official was transferred from a very hot spot where there were a labour dispute, a stay-in-strike and also a shooting incident, and he was posted to Uthagamandalam. Thiru Giri stood, firm and said that that officer should be dealt with by him as Labour Minister. He told



Thiru Erskine, " You have no right to transfer him ". Then, Thiru Giri should be followed by us. I should also commend the Cabinet meeting, " It was the work of your Prime Minister. " Rajaji was then called the Prime Minister. Under the 1935 Act, all the Provincial Governments had Prime Ministers. When Thiru Erskine said, " Your Prime Minister was responsible for it ", Thiru Giri said, " I call my Prime Minister to order " and he was about to tender his resignation. Then, one of the Advisers to the Governor came to Thiru Giri with a message that he might meet the Governor on a Sunday. Thiru Giri said, ' I do not see anyone on a Sunday '. Then, the Governor gave him time as any time in the succeeding week and Thiru Giri went and met the Governor on the succeeding Tuesday, I believe. The Governor apologised to him for his conduct and told him, " You can post this official to any part of the State as you wish ". Then, Thiru Giri had his say and he had the official posted out of Uthagamandalam to a place where he would not have liked to go. This is one of the instances, besides the Bank Award incident which was mentioned by the hon. Members Thiruvalargal Damodaran and Ramamoorthy, wherein he showed courage of conviction and differed in views from his Chief. Today, we find Ministers differing from the Chief Minister only at the fag end of their term and showing their mettle by crossing floors just before a dissolution of Parliament or Assembly. This should not be followed. If any Member of the Treasury Bench feels in his heart of hearts that he should differ from his leader, he must come out as early as possible. I request the Members of the Treasury Benches to copy this spirit of Thiru Giri and also follow it. If the Chief Minister is to blame and where he goes wrong, let them—I may respectfully use the words—call him to order, if it is necessary. This spirit must be there if the Cabinet is to work together and it is also necessary that every one of the Members of the Cabinet should communicate to the leader at the proper time their dissent. I would request that this very good quality of Thiru Giri should be followed by us. I should also commend the large-heartedness of Pandit Jawaharlal Nehru which persuaded him to recall Thiru Giri and lead him into other walks of life which eventually led him to the office of the President of India. I wish that this greatness should also be copied by others and that they should try to forget what had happened when they felt very sorry over what had happened. They should understand what was the real nature of the differences and try to build up a situation where there is more understanding and where there is more humility in the

[1980 ஜூன் 25

* டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மறைந்த டாக்டர் கிரி அவர்களையும் அவருடைய தந்தையாரையும், அவருடைய குடும்பத்தில் எல்லோரையும் நான் நன்கு அறிவேன். டாக்டர் கிரி அவர்கள் ரொம்பவும் உயரமாக இருப்பார். பெரிய வழக்கறிஞராக இருந்தார். சில்வர் ஸ்பூனோடு பிறந்து வாழ்ந்தவர். அவர் அமைச்சராக இருந்த நாள் முதல் கடைசியில் குடியரசுத் தலைவராக இருந்த காலம் வரையில் அவர் செய்த தொண்டுகளைப்பற்றியெல்லாம் அவையில் உள்ள தலைவர்களும், உறுப்பினர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே அவைகளைப் பற்றி நான் சொல்ல வேண்டும் என்பதில்லை. இருந்தாலும் ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அவர் கவர்னராகவும் இருந்திருக்கிறார். அவர் இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்ததைப்பற்றியும் இங்கே எல்லோரும் சொன்னார்கள். அதெல்லாம் அந்தக் காலத்தில் ரொம்பவும் பெருமையாக இருந்த பதவிகள். அவருடன் எனக்கு நீண்ட நாட்களாகவே பழக்கம். அவரைக் காட்டிலும் அவருடைய தந்தையாரை எனக்கு நன்கு தெரியும். வருஷா வருஷம் வருவார்கள். அவர் சென்னை மாநிலத்தைப் பிரிப்பது என்பதற்கு இஷ்டப்படவில்லை. என்றாலும் திரு. பிரகாசத்திற்குப் பயந்து அப்போது சும்மா இருந்தார். அவரைப் பொறுத்த வரையில் சென்னை மாகாணத்தைப் பிரிப்பதில் அவருக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. இதெல்லாம் இங்கே தலைவராக இருக்கிற திரு. ம. பொ. சி. அவர்களுக்குச் சொல்லச் தேவையில்லை. எல்லோருக்குமே தெரியும். இருந்தாலும் அவர் குடியரசுத் தலைவராக இருந்தபோது நடந்த ஒரு முக்கியமான சம்பவத்தை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அவர் குடியரசுத் தலைவர் பதவிக்கு நின்று ஜெயித்தபோது காங்கிரசிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டு பிறகு நின்று ஜெயித்தார். அவரை அம்மையார் நிறுத்தவில்லை. அவராக நின்றார். அதைத் தொடர்ந்து ஒரு வழக்கு வந்தபோது அவர் சாட்சி சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கவர்னராக இருப்பவர்கள், வைசிராயாக இருப்பவர்கள் எல்லாம் வழக்கில் கோர்ட்டுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. ஒரு கமிஷன் மூலம் அவர்களை விசாரிக்கலாம். ஆனால் கமிஷன் மூலம் என்னை விசாரிப்பதற்கு டாக்டர் கிரி அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. நானே கோர்ட்டுக்குப் போய் சாட்சி சொல்லுகிறேன் என்று கோர்ட்டுக்குப் போனார்கள்.

அப்போது 'சுப்ரிம் கோர்ட்டில் 5 நீதிபதிகள் வழக்கை விசாரித்தார்கள். இவர் கோர்ட்டுக்கு வந்ததும் அவர்களுக்குச் சமமாக தான் உட்கார முடியாது என்று சொல்லி விட்டார். அதனால் ஒரு ஓரமாக இருக்கிறேன் என்று



1980 ஜூன் 25] [டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்]

சொல்லிவிட்டு பக்கத்திலே லேடிஸ்கூட இருக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டார். சாட்சியத்தை எழுந்து சொல்ல ஆரம்பித்தார். ஆனால் வயதாகிவிட்ட காரணத்தால் முடியாது என்று நாற்காலி போட்டுக் கொண்டு, பிறகு உட்கார்ந்து கொண்டே சாட்சியம் சொல்ல ஆரம்பித்தார். காரணம் சரீரம் பெரியதாக இருந்தது. அதைப் போன்ற ஒரு வரலாறு இந்த நாட்டில் மட்டுமல்ல,'வேறு எந்த நாட்டினுடைய வரலாற்றிலும் கிடையாது. ஒரு நாட்டின் குடியரசுத் தலைவரே கோர்ட்டுக்குப் போய் சாட்சி சொன்னதற்கு அடையாளமாக இருந்தவர் டாக்டர் கிரி அவர்கள். அவ்வளவு தைரியம் உள்ளவர்.

எங்களுக்கெல்லாம் மிகவும் வேண்டியவர் அவர். அப்போதைய மைசூரில் கவர்னராக இருந்தபோது, அவர் பேத்தி டேன்ஸ் பண்ணியபோது, திரு. நிஜலிங்கப்பா அவர்கள் முதலமைச்சராக இருந்தார். 1936 முதல் கொண்டு மிக நன்றாக அவர்கள் குடும்பத்தில் எல்லோரையும் எனக்குத் தெரியும். இன்று காலைகூட அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தேன். எல்லோரையும் பார்த்தேன். அவர் குடும்பத்தின் வேலைகளையும் கவனிப்பார், பொது வேலைகளையும் பார்ப்பார். 1932 ஆம் வருஷம் பெரம்பூர் ஒர்க்ஷாப்பில் வேலை நிறுத்தம் நடந்தது. அநேகமாக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். பெரம்பூர் ஒர்க்ஷாப்பில் ஸ்டிரைக் நடந்தது. ரெயில்வே ஸ்டிரைக் அல்ல. அப்போது நான் மேயராக இருந்தேன். நானே சோல் ஆர்பிட்ரேட்டர். இரண்டு அசெசர்கள். ஒன்று டி. எஸ். ராமசாமி ஐயர், மற்றவர் பி. தாமஸ். அந்த ஸ்டிரைக் வேகமாக நடந்தது. கடைசியில் தகராறு செய்து ஒப்புக்கொள்ள வைத்தார்கள். கையெழுத்துப் போட்டார். அப்போது பல கேள்விகளைக்

(பிற்பகல் 12-30)

கேட்டார்கள். 5 மணி நேரம் இருந்து பொறுமையாகக் கேள்விகளுக்குப் பதில் சொன்னார். தொழிலாளர்களிடம் ரொம்பவும் பிரியமாக இருந்தார். தொழிலாளர்களுக்கு நன்மை செய்வார். ஆனால் தொழிலாளர்கள் தேவையில்லாமல் ஸ்டிரைக் பண்ணக்கூடாது, அமைதியாக இருக்க வேண்டுமென்று தைரியமாகச் சொன்னார். தொழிலாளர்களுக்காக ஒரு விஷயத்தை முடிக்க வேண்டுமென்றால், முடித்துவிட வேண்டுமென்ற கொள்கையை வைத்துச் செயல்படுவார். அவர் ஒரு பெரிய அரசியல்வாதி. குடியரசுத் தலைவராக இருந்து 86 வயது வரை நாட்டுக்குச் சேவை செய்தார். அவர் ஒரு பெரிய தேசியவாதி. ரொம்ப பணக்காரர். அவருடைய தகப்பனார் ஒரு பெரிய வழக்கறிஞர். அப்போதே ஏழாயிரம் ரூபாய், ஐந்தாயிரம் ரூபாய் வரும்படி அவருக்கு வரும். அப்படியென்றால் எவ்வளவு பெரிய லாயராக இருந்திருக்கக் கூடும், அப்

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [1980 ஜூன் 25

படிப்பட்ட பணக்காரராக இருந்தும் இவர் தொழிலாளர்களுக்காகப் பாடு பட்டார். அவரை இழந்து தவிக்கும் அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. அருணாசலம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாடு துன்பத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் இன்னுமொரு துன்பம் நமக்கு வந்து சேர்ந்திருக்கிறது. திரு. வி. வி. கிரி அவர்கள், சாதாரண மனிதர்களைப் போல் அல்லாமல், தனக்கென்று கொள்கையை வைத்துக்கொண்டு வாழ்வாங்கு வாழ்ந்த பெரியவர். பொதுவாக " Power corrupts ; absolute power corrupts absolutly " என்று சொல்லுவார்கள். எத்தனையோ பதவிகளில் இருந்தபோதிலும் கூட நாணயமாகத் தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய பெரியவர் அவர். தன்னுடைய கொள்கைகளை மாற்ற வேண்டிய சமயத்தில் மாற்றிக் கொண்டவர். நாடு போகிற போக்கினையும் உலகம் போகிற போக்கினையும் தெரிந்து கொண்டு, பலாத்கார வழி இனி செல்லாது, அதிலிருந்து புதிய வழி ஒன்றை வகுத்துக் காட்டிய காந்தியடிகளின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று நினைத்து அதில் தீவிரமாகச் செயல்பட்ட பெரியவர் அவர். தனி நலன் பொது நலத்திலேயே அடங்கி இருக்கிறது என்பதை நினைத்து பதவியை வகித்து வாழ்ந்த பெரியவர் அவர். எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். பொதுவாக இத்தனை பதவிகளில் இருந்து வசதியோடு வாழ்ந்த அவர் பெரிய படாடோபமாக இருந்திருக்க முடியும். ஆனால் பெங்களூரிலும், சென்னையிலும் இருந்த காலத்திலும், மாளிகையில் இருந்த காலத்திலும் கூட மிக எளிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய பெரியவர் அவர். " எளிய வாழ்க்கையை வாழ்ந்தால் சில சமயம் உயரிய சிந்தனை வராது. அதற்காக உயரிய வாழ்க்கையை வாழ வேண்டும் " என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் அவர் எளிய வாழ்க்கையில் உயரிய முறையில் சிந்தித்து வாழ்ந்தவர்.

அவர் பதவியிலிருந்து, ஓய்வுபெற்ற பிறகும் கூட நாட்டின் நலனில் அக்கறையாக இருந்து, இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க வேலை செய்தார். வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க வேண்டும் எனக் கருதி " ஜாப்ஸ் ஃபார் தி மில்லியன் " என்ற திட்டத்தை அறிவித்தார். பொதுவாக இப்போதெல்லாம், எந்தத் தொழிலை ஆரம்பித்தால் மக்களுக்கு வேலையைக் கொடுக்க முடியும் என்று நினைத்துப் பார்க்கிறார்கள். இதை அவர் முன்பே கூறினார். உலகத்தையும் உலகத்தின் சுற்றுப்புறத்தையும் அறிந்த அவர் நமது நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பினார் குடிசைத் தொழில், கிராமத் தொழில், கதர்-கிராமத் தொழில் வளர வேண்டும் என்று சொல்லி, அதே சமயத்தில் என்னைப் போன்றவர்களைக் கூப்பிட்டு இந்தத் தொழில்



1980 ஜூன் 25] [திரு. கே. அருணாசலம்]

களை விரிவாகச் செய்யுங்கள் என்று சொல்லி உற்சாகப்படுத்தினார். அரசாங்கத்தால் மட்டும் செய்யக்கூடிய வேலையல்ல இது, பொது மக்களும், கிராம மக்களும் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை என்று கருதி பணக்காரர்களைக் கூப்பிட்டு, " நீங்கள் மட்டும் சௌகரியமாக இருந்தால் போதாது, நீங்களும் உங்களால் இயன்ற வேலையைச் செய்து அவர்களுக்கு ஆதரவு கொடுத்து நல்வாழ்வை ஏற்படுத்தித்தர வேண்டும் " என்று சொல்லி ஊக்குவித்தார். தள்ளாத வயதிலும்கூட எங்கு கூப்பிட்டாலும் வருகிறேன், கிராமங்களுக்குக் கூப்பிட்டாலும் வருகிறேன் என்று சொல்லி தைரியமாக வந்து யோசனைகளைச் சொல்லி வழி வகுத்துக்காட்டிய பெரியவர் அவர். எளிய வாழ்க்கையும், உயரிய சிந்தனையும் ஒருங்கே பெற்றவர் அவர். ஆறிலும் சாவு ; நூறிலும் சாவு என்று நம்மை நாமே தேற்றிக் கொண்டாலும்—அவருடைய இழப்பு பேரிழப்பு என்றே நான் கருதுகிறேன். அவர் மேலும் இருபது, முப்பது ஆண்டுகள் இருந்து வழிகாட்டியிருந்தால், இன்னும் உறுதுணையாக இருந்திருக்கும். அவர் அமரத்துவம் பெற்றிருக்கிறார் என்றாலும், அவருடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அவருடைய வழியில் நாம் நடப்போம். துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், அவையினர் அனைவருடனும் சேர்ந்து என்னுடைய அஞ்சலியையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இரங்கல் தீர்மானத்தையொட்டி ஆளும் கட்சியின் சார்பாகவும், அமைச்சரவையின் சார்பாகவும் என்னுடைய இரங்கலையும் தெரிவிப்பதற்கு வாய்ப்புத் தந்துள்ளீர்கள்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களுடைய பெயருக்குத் தகுந்தாற் போல் அறிவிலும், ஆற்றலிலும், உழைப்பிலும், மலை என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஓர் உயர்ந்த நிலையில் இருந்தார் என்பதை நாம் பெருமையோடு சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

படித்தவர்களும், பட்டம் பெற்றவர்களும் எப்படிப் பதவிக்கு வர முடியும் என்பதையும், வெறும் படிப்பினால் மட்டும் பதவிக்கு வந்துவிட முடியாது என்று இருந்தாலும்கூட, உழைப்பினால் வர முடியும் என்பதை இந்த நாடு பல்வேறு நேரங்களில் கண்டிருக்கின்றது.

ஆனால் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள் தொழிலாளர் தலைவராக இருந்ததோடு மட்டுமல்லாமல், ஏழைகளோடு ஏழையாக வாழக் கற்றுக்கொண்ட தொண்டனாக இருந்தார் என்பதோடு மட்டுமல்லாமல், அவர் முதன் முதலாக சட்டமன்றத் தேர்தலில் பங்கு கொண்டு போட்டியிட்டது பொப்பிலி நாட்டு அரசரை எதிர்த்து என்பதையும் இங்கே நான்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜூன் 25

நினைவுகூற விரும்புகிறேன். அவருடைய சமஸ்தானத்திலேயே அவரை எதிர்த்து நின்று அவரோடு போட்டியிட்டு பொப்பிலி ராஜா அவர்களைத் தோல்வி அடையச் செய்து, தன்னுடைய தொகுதிக்கேகூட சரியாகப் போக முடியாத நிலையில் வெற்றி பெறவும், அவர் அமைச்சராக அமரவும் இந்த நாடு இடம் கொடுத்தது, மக்கள் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொறுப்புள்ளவர்கள், சிந்தித்துப் பேசுகின்ற ஆக்கம் பெற்றவர்கள் இந்த நாட்டுக்கு மிக மிகத் தேவை என்பதை எடுத்துக் காட்டியவர் திரு. கிரி அவர்கள். எதைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் ஆராய்ந்து, சிந்தித்துப் பார்த்து, உண்மை என்னவென்பதைத் தெரிந்து அதற்குப் பிறகு பேசுகின்ற தனித் திறமையையும், தகுதியையும் பெற்றவராக இருந்திருக்கிறார்கள். எடுத்தோம், கவிழ்த்தோம் என்று அவர் எப்போதும் பேசியது இடையாது, செயல்பட்டது கிடையாது. தன்னுடைய கொள்கையை எடுத்து வைக்கும்போது, ஆதாரத்தோடு எடுத்து வைத்து விவாதிப்பார் அவர். மற்றவர்களுடைய கருத்தை எதிர்த்து வாதிடும்போது, நியாயமான உண்மையின் அடிப்படையிலே காரணத்தை எடுத்து வைத்து விவாதித்து வெற்றி பெறுகின்ற வாய்ப்பைப் பெற்றவர். அப்படிப்பட்ட திரு. கிரி அவர்களுடைய மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கின்ற ஒரு பொறுப்பினை இந்த மேலவை இப்போது ஏற்றுக்கொண்டு அந்தப் பணியை நடத்திக் கொண்டிருக்கிறது. இங்கே அவரைப் போற்றிப் பேசிய நல்லோர்கள் என்னென்ன கருத்தை நாட்டுக்குச் சொல்ல வேண்டுமோ அதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதைப் போலவே மாண்புமிகு

(பிற்பகல் 12-40)

அங்கத்தினர் திரு. வசந்த பை அவர்கள் "படித்த, பட்டம் பெற்ற பட்டதாரிகள் தொகுதியினால் தேர்ந்தெடுக்கப்பெற்ற நான் அவர்கள் சார்பாகப் பேசுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு பேசினார்கள். பட்டம் பெற்றவர், விவரம் தெரிந்தவர், சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர், எதையும் நன்று சிந்தித்து ஆற அமர அமர்ந்து யோசித்துப் பேசக்கூடியவர். அப்படிப்பட்ட புகழைப் பெறக்கூடியவராக இருப்பவர், அப்படிப்பட்டவர் பேசுவதை மிகவும் கவனமாக, உன்னிப்பாக கவனித்துக் கேட்டு அதிலே அக்கறை காட்ட வேண்டும், படித்தவர்கள் சொல்கின்ற நல்லவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஆசையாகும். ஆனால் யானைக்கும் அடி சறுக்கும் என்பார்களே அது போல, அவரும் அப்படிப் பேசுகிறார் என் [illegible] அவசரக்காரருக்கு புத்தி மட்டு என்று சொல்லும் [illegible] என்று சொல்லக் கூடிய வார்த்தையை நான் [illegible]



1980 ஜூன் [illegible]] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சொல்லக்[illegible] என்றாலும், அவர் ஏற்கெனவே சொல்லிவிட்ட குற்றச்சாட்டுக்கு நான் [illegible]தைப் பதிலுக்குச் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்[illegible] என்பதை நான் மிக்க வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

நாங்கள் டெல்லிக்குச் சென்றிருந்தோம். நாங்கள் போகும்போது மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல் நலத்தோடுதான் இருந்தார்கள். இங்கிருந்து புறப்பட்ட விமானம் 6½ மணிக்குப் புறப்பட்டது. அதற்குப் பிறகுதான் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரியினுடைய மறைவும் நமக்குத் தெரிவிக்கப்பட்டது. நேற்று மாலை, யாருடைய மரணத்திற்காக 2 நாட்களுக்கு முன்பு நாம் கண்ணீர் விட்டோமோ, நெஞ்சுருகினோமோ, அவருடைய அடக்கத்தை அந்த இறுதி நிகழ்ச்சியைக் கண்டு மரியாதையைச் செலுத்திவிட்டு திரும்பும்போது மணி இரண்டாகிவிட்டது. அதற்குப் பிறகு நாங்கள் வருவதற்கு விமானம் இல்லை. இன்று காலையிலே 6 மணிக்குப் புறப்பட வேண்டிய விமானம், 8 மணிக்குத்தான் புறப்பட்டது. நாங்கள் இங்கே 10½ மணிக்காவது வந்துவிடுவோம் என்றுதான் நினைத்தோம். முன்னாலே உட்கார்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களும், எங்களுடன்தான் வந்தார்கள். அசெம்பிளியிலே, சட்டசபையிலே எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற கலைஞர் கருணாநிதி அவர்களும் எங்களுடன்தான் வந்தார்கள். நாங்கள் சட்டமன்றத்திலே இரங்கல் கூட்டத்திலே கலந்துகொள்ள முடியவில்லை. அப்படியிருந்தும் நாங்கள் நேராக விமானக் கூடத்திலிருந்து இங்குதான் வந்தோமே தவிர வேறு எங்கும் நாங்கள் போகவில்லை.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of personal explanation. I think that the Hon. the Chief Minister has misunderstood me. What I said about punctuality was about meetings where Ministers were invited and not about the Hon. the Chief Minister's arrival at Delhi yesterday or here today. I only said that, generally, Ministers do not come punctually for meetings to which they are invited and that Thiru Giri came five minutes before time. The Hon. the Chief Minister seems to have misunderstood me as referring to yesterday's incident. I have not even read today's papers to know whether he was here or there yesterday.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மேதகு மேலவைத் தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, இடையிலே வருவதும் போவதும் என்பதெல்லாம் மரியாதைக்குரியது அல்ல, சரியல்ல என்ற வார்த்தையைச் சொல்லி எச்சரித்திருக்கிறார்கள். தயவுசெய்து அவர்கள் பேச்சை

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜூன் 25

ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். எங்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன்பாக, எங்கிருந்தாலும் சரி, எப்படியிருந்தாலும் சரி, இந்த நேரத்திலே, இரங்கல் தெரிவிக்கின்ற நேரத்தில், நாங்கள் இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால், இங்கே நாங்கள் தாமதமாக வந்ததை அவருடைய பேச்சு சேர்த்துக் குறிக்கின்றது என்பது எப்படி வழக்கறிஞராகப் பணியாற்றுகின்ற அவருக்கு அது தெரியாமல் போய்விட்டது என்பதை என்னால் சிந்தித்துக்கூட பார்க்க முடியவில்லை. இனிமேலாவது பட்டதாரிகளுடைய தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பட்டம் பெற்றவர் என்று சொல்லப்படுகின்ற பட்டதாரியாகிய அவர் கொஞ்சம் எச்சரிக்கையோடு பேசுவார் என்று நம்புகிறேன். எங்களைப் போன்றவர்களுக்குத் தெரியும்படியாகவாவது பேசுவார் என்று நம்புகிறேன்.

இந்த நேரத்தில் இவ்வளவு கோபப்பட்டுப் பேசவேண்டிய அவசியமே இல்லை. நாங்கள் கண்ணீர் வடிக்கின்ற நேரத்தில் ஆத்திரப் படுவதற்கு எங்கே இடமிருக்கிறது என்பதை என்னால் சிந்திக்கவேகூட முடியவில்லை. முன்னாள் குடியரசுத் தலைவர் என்னென்ன நல்ல காரியங்களைச் செய்தார்கள், எப்படியெல்லாம் இந்த நாட்டிற்காக உழைத்தார்கள் என்பதையெல்லாம் நாம் எடுத்துப் பேசி, நம்முடைய துக்கத்தைப் பகிர்ந்துகொள்வதற்காக என்று இந்த நேரத்தை எடுத்துக் கொள்ளும்போது, கண்டனத்தைக் கொண்டு வந்து சேர்த்துக்கொள்வது என்பது மேலவைக்குத் தேவைதானா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதிலேயும் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பட்டதாரி உறுப்பினருக்குத் தேவைதானா என்பதை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் மற்ற கூட்டங்களுக்கு எப்படிப் போகின்றோம், எப்படி வருகின்றோம் என்பது அல்ல பிரச்சினை. இது இரங்கல் கூட்டம். மற்ற கூட்டங்களுக்கு எப்படி வருகின்றோம் என்பதைப் பற்றிச் சொல்வதற்கு அவருக்கு இன்னும் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. அவர் மிக நல்ல இளைஞர். இன்னும் பல ஆண்டுகள் இருக்கப்போகின்றவர். அவர் எனக்கு மிகவும்

(குறுக்கீடு)

இளைஞராகத்தான் தோன்றுகிறார். அவர் இன்னும் பல ஆண்டு காலம் இந்த மேலவையிலும், மற்ற இடங்களிலும் இருந்து கொண்டு எங்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவி புரிய நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. இன்னும் நிறைய கூட்டங்கள் நடைபெறப்போகின்றன. இன்னும் தொடர்ந்து மேலவைக் கூட்டங்களும் நடக்கப்போகின்றன. அந்தக் கூட்டங்களிலே எடுத்துச் சொல்லலாம். இனிமேலும் சொல்லலாம். ஆனால் இந்த நேரத்திலே, இரங்கல் கூட்டத்திலே, நாங்கள் தாமதமாக வந்ததைப்பற்றிச் சொன்னால்,

1980 ஜூன் 25] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அது பத்திரிகைகளிலே எப்படி வெளிவரும் என்பதை படித்தவராக இருக்கின்ற அவர் தெரிந்திருக்கமாட்டார் என்று என்னால் எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை. நான் ஒன்று சொல்கிறேன். அது அப்படியே போகட்டும். இனிமேலாவது மற்றவர்களைப் போல அவரும் கொஞ்சம் ஆத்திரப்படாமல் பேச வேண்டும். ஏதோ தொழிலில் பேசிப்பேசிப் பழகிப்போன காரணத்தினாலே அப்படிப் பேசியிருக்கலாம் என்று நினைக்கிறேன். இருந்தாலும் இனிமேலாவது எங்களுக்கு நல்லதைச் சொல்லட்டும், நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். தவறுகளை எடுத்துச் சொல்லட்டும், திருத்திக்கொள்கிறோம். அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள், நாங்கள் எல்லாம் தெரியாதவர்கள் என்று நான் சொல்லிக்கொள்ளத் தேவையில்லை என்றாலும், இப்படிப்பட்ட நேரத்தில் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இங்கே ஊடாடுவது பொருத்தமில்லை என்பதையும், அதிலேயும் மறைந்தவருக்கு நாம் மரியாதை செலுத்துகின்ற நேரத்தில், வேறு எங்கோ போய், அதற்கு முக்கியத்துவம் இல்லாது போய் விட்டால், பத்திரிகைகளிலே அது வெளிவருமானால், நிச்சயமாக அது எவ்வளவு பெரிய சங்கடத்தை, சஞ்சலத்தை ஏற்படுத்தும், மக்களுடைய, மற்றவர்களுடைய மனத்தை எல்லாம் இழுத்துச்செல்லும் என்பதையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். திரு. வி. வி. கிரி அவர்கள் இங்கே அமைச்சராக இருக்கும்போது, இதே மேலவையில் அவருடைய தந்தை அவர்களும் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் அறிந்தேன். அதையும் இங்கே குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். ஆக பரம்பரையாக அவர்கள் பல பதவிகளுக்குச் சொந்தக்காரராக இருந்து வந்திருக்கிறார்கள். அது அவர் அறிவின்பாலும், தியாகத்தின்பாலும் ஏற்பட்டது. இறுதி வரையில் அவர் தியாகம் செய்தே வாழ்ந்து காட்டினார். அதிலேயும் தன்னால் இயன்ற அளவுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவ்வளவையும் செய்தார். எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். இரண்டொரு நாட்களுக்கு முன்புதான் நம் அமைச்சர்களிலே ஒருவரை அவரைப் போய்ப் பார்க்கச் சொன்னபோது, ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னபோது, "நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன், நான் பேசுவேன்" என்று சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவருடைய மறைவு உண்மையிலே இந்த அரசுக்கு மிகப் பெரிய இழப்பாகும் என்று நான் கருதுகிறேன். பெரியவர்களைப் பொறுத்து, என்னைப் பொறுத்தவரையிலே, நான் எப்போதும் சொல்வது, அவர்கள் ஒரு அகராதியைப் போன்று பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்பதுதான். என்ன சந்தேகங்கள் தோன்றினாலும், பெரியவர்களிடம் போய் கலந்துரையாடி விவரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவர்களுடைய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜூன் 25

அனுபவத்தின் மூலமாகத் தரப்படுகின்ற விளக்கங்கள் எங்களைப் போன்ற புதியவர்கள், மற்ற இளைஞர்களுக்கெல்லாம் மிகமிக உதவியாக இருக்கும் என்பதை எண்ணும்போது, இப்படிப்பட்ட பெரியவர்கள் எத்தனை ஆண்டுகள் அதிகமாக வாழ்கின்றார்களோ அவ்வளவு இந்த நாட்டிற்கு நல்லது என்பதை எண்ணிப் பார்த்து, இருக்கின்ற பெரியவர்களைப் பாதுகாக்கின்ற அளவுக்கு அவர்கள் மன அமைதியோடு வாழ்ந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் எல்லாம் ஒன்று சேர்ந்து நம்முடைய கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டுமென்று வேண்டுகோளை விடுத்து, முன்னாள் குடியரசுத் தலைவர் செய்த தியாகங்களுக்கு வணக்கம் செலுத்தி, அவர்களுடைய மறைவுக்கு என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், அரசின் சார்பாகவும், ஆளுங்கட்சியின் சார்பாகவும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் எங்களுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலுள்ள உணர்ச்சியோடு எனது உணர்ச்சியையும் சேர்த்து, அவையினராகிய உங்களைப் போலவே நானும் மறைந்த பெரியார், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறேன். அவர் வயதில் என்னை விட பத்து வயது மூத்தவர் என்றாலும், அவருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு 45 ஆண்டுக்கால பழமை உடையது. நான் ஒரு சாமானிய அச்சுத் தொழிலாளியாக இருந்தபோது, அவர் ஒரு தொழிற் சங்கத் தலைவராக இருந்தார். அந்த நேரத்திலே பல மேடைகளிலே அவரோடு சேர்ந்து பழகுகின்ற பேற்றையும், பெருமையையும் நான் பெற்றிருந்தேன்.

பெரம்பூர் இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தமும், திருவொற்றியூர் விம்கோ தொழிலாளர் வேலை நிறுத்தமும் பயங்கரமாக நடந்த காலத்திலே நாங்கள் தினந்தோறும் வேலை நிறுத்தம் செய்கின்ற தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசினோம். அந்த நேரத்திலே போலீசாருடைய வாரண்டையும், கைதையும் எதிர்பார்த்து, தொண்டாற்றிய காலங்கள் எல்லாம் எனக்கு நினைவு வருகிறது. அவர் தொழிற்சங்கத் தலைவராக இருந்த காலத்திலும் சரி, பின்னர் பதவிப் பொறுப்புகளில் இருந்த காலத்திலும் சரி, கவர்னர், ஜனாதிபதியாக இருந்த காலம் தவிர, மற்ற நேரங்களில் வீட்டில் இருந்த நாட்கள் மிகக் குறைவு. நாட்டைச் சுற்றிய காலம்தான் அதிகம்.



1980 ஜூன் 25] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

மிகப் பெரிய குடும்பத் தலைவராக அவர் இருந்திருக்கிறார். பிள்ளைகளும், பேரப் பிள்ளைகளும் மிக மிக அதிகம். இருந்தாலும் குடும்ப இன்பத்தைத் துய்க்க வீட்டில் இருந்த நாட்கள் மிக மிகக் குறைவு. அந்த அளவிற்கு தேசத்தோடு தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். இந்தியன் என்ற நினைப்பிற்குக் கீழே, எந்த உணர்ச்சியோடும் அவர் தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டதே இல்லை. முழு இந்தியனாக இருந்தார். கொண்ட கொள்கை காரணமாக, அதற்கு மேலே உலகத்தோடும் அவர் தொடர்பு கொண்டார். சென்னை பற்றிய பிரச்சினை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் மிகப் பெரிய அறைகூவலாக, பயங்கரப் பிரச்சினையாக இருந்த காலத்திலே, அதிலே ஈடுபடாமல் இருந்த ஒரே ஆந்திரத் தலைவர் திரு. வி. வி. கிரிதான் என்பதை வேறு யாரையும்விட நான் நன்றாக நினைவில் வைத்திருக்கிறேன். அந்த அளவிற்கு இந்திய தேசியத்திலே இரண்டறக் கலந்திருந்த பெருமை அவருக்குண்டு. ஒரு தொழிலாளியாக இருந்து நான் அவரோடு தொடர்பு கொண்டிருந்தாலும்கூட, எல்லோரும் சொன்னது போன்று, சாமானியர்களை மதிப்பதிலே அவருக்கு இருந்த பண்பாடும், பழக்கமும் என்னுடைய அனுபவத்தின்மூலமே நான் அறிந்தவன்.

திருவொற்றியூர் விம்கோ தீப்பெட்டித் தொழிலாளர் வேலை நிறுத்தம் அல்லது அங்கே தொழிற்சங்கக் கூட்டம் நடக்கும்போதெல்லாம் அவர் போகிற வழியில், தண்டையார்பேட்டையில் எனது இல்லத்திற்கு வந்து, என்னையும் அழைத்துக்கொண்டு போவார். அந்தக் கூட்டங்களுக்கு நாங்கள் சேர்ந்து சென்றிருக்கிறோம். அவர் ஜனாதிபதியாகிய பிறகு, ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று சந்தித்திருக்கிறேன். அவர் கவர்னராக இருந்தபோது, அவராலேயே அழைக்கப்பட்டு பங்களூர், திருவனந்தபுரம் ஆகிய ஊர்களில், அவருடைய விருந்தினராக ராஜ் பவனத்தில் இருந்திருக்கிறேன். இலங்கையில் அவர் தூதுவராக இருந்தபோது, அவரால் அழைக்கப்பட்டு, அவருடைய தூதுவர் இல்லத்தில் விருந்தினராக இருந்திருக்கிறேன். அந்த நாட்களில் எல்லாம் அவர் தொழிலாளர் தலைவராக இருந்தபோது எந்த உணர்ச்சியோடு என்னிடம் பழகினாரோ எந்த அளவில் அன்பு காட்டினாரோ, அதே உணர்ச்சியை, அன்பைக் காட்டியதை நான் மறக்க முடியாது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சுட்டிக் காட்டியதுபோல, பொப்பிலி ராஜா தொகுதியில் அவரைத் தவிர ஒருவரும் நிற்க முடியாது என்று இருந்த நிலையில், திரு. கிரி அவர்களை நிறுத்தினார்கள். அவர் பெற்ற வாக்குகள் 'ஆறாகப்' பெருக்கெடுத்து ஓடின. ஆறு, ஆறு, ஆறு, ஆறாக '6666' வாக்குகள்—இன்னமும் பசுமையாக அது நெஞ்சில் இருக்

கின்றது. அந்த எண்ணிக்கையைச் சொல்லியே அவரை வாழ்த்தி, வாழ்த்தி என்னைப் போன்ற பேச்சாளர்களின் நாக்கு தழும்பேறிய காலமது.

அவர் இல்லாத பெரும் பதவிகள் இல்லை. அவர் எல்லாப் பதவிகளையும், ஜனாதிபதி பதவி ஒன்றைத் தவிர, காங்கிரஸ் கட்சியின் சார்பில் தான் பெற்றார். கட்சிப் பதவிகளில் அவர் இருந்ததில்லை. தானாக வந்தாலும்கூட அவர் அதை ஏற்றுக் கொண்டதில்லை. அதனால் கட்சிப் பூசல்களிலே தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ளாத நிலையில், பரந்த ஒரு தேசபக்தராக, தேசிய வாதியாகத் திகழ்கின்ற வகையில் அவருக்குப் புனிதமான வாழ்க்கை கிடைத்தது. எப்போதும் சொல்லுவார்கள், மரணம்தான் ஒருவருடைய அதிருஷ்டத்திற்கு சரியான அடையாளம் என்று. அத்தகைய நிலையில், அப்போதுதான் எழுந்து குளிப்பதற்காக வெந்நீரைப் போடச் சொல்லிவிட்டு, சிறிது அயர்ந்து படுத்தார். அப்படியே உறங்கினார். எழுப்பினால் உயிரில்லை என்ற நிலையைப் பார்க்கும்போது திருப்போரூர் சன்னதிமுறையிலே உள்ள ஒரு பாடல் நினைவிற்கு வருகிறது.

“நோயுற்று தளராமல்
நொந்து மனம் வாடாமல்
பாயில் கிடவாமல்
பாவியேன் காயத்தை
ஓர் நொடியுள் நீக்கி திருப்போரூர் ஐயா
உன் சீரடிக் கீழ் வைப்பாய்’ ’

என்ற பாடல் அது. அதை சிதம்பரம் சுவாமிகள் பாடியிருக்கிறார். அப்படி மகா ஞானிகள் விரும்பிய மரணத்தை இவர் அடைந்திருக்கிறார். அந்த பெரியவருக்கு எல்லோருடனும் சேர்ந்து என்னுடைய அஞ்சலியையும் சேர்த்து, இணைத்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்குமாறு வேண்டுகிறேன்.

அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.

தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மறைந்த முன்னாள் குடியரசுத் [illegible] அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவையை [illegible] மீண்டும் நாளை மாலை 4 மணிக்கு அவை கூடும்.

[illegible]

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

வியாழக்கிழமை, 1980 ஜூன் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. புதிய அமைச்சரவைக்கு வரவேற்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, சட்ட மன்றப் பேரவை கலைக்கப்பட்டதினால் நம்முடைய மேலவை நடவடிக்கைகள் இடையிலே சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதன் பிறகு தொடர்ந்து இரண்டு நாட்கள் அனுதாபத் தீர்மானங்களால் அவையின் நடவடிக்கை தள்ளி வைக்கப்பட்டது. இன்று மாமூலாக அவையின் நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்ற நேரத்தில் புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கின்ற அமைச்சரவையை வரவேற்கிறேன். சம்பிரதாயப்படி புதிய அமைச்சரவை என்று சொன்னாலும், பழைய முதலமைச்சரும், பழைய கட்சியும், பழைய சகாக்களும்தான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சி வரிசையில், நம் அவையைப் பொறுத்தவரை, மாறுதல் இல்லை. வலிமை மிக்க, திறமை மிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய சக அமைச்சர்களோடு மீண்டும் ஆட்சி நடத்த வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களையும் வாழ்த்துகிறேன். புதிய அமைச்சரவை என்று சம்பிரதாயத்திற்காகச் சொன்னாலும், பழைய அமைச்சராக இருந்த டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார்கள். இது எனக்கு மிக மகிழ்ச்சியளிக்கிறது. அவரையும் வரவேற்கிறேன்.

மேலவையிலுள்ள 6 பேர் முன்பு அமைச்சர்களாக இருந்தார்கள். அது இப்பொழுது நான்காகச் சுருங்கியிருக்கிறது. மேலவையைப் பொறுத்த வரை, 4 கூட குறைந்ததல்ல என்பதால், அதற்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [26 ஜூன் 1980

புதிய உறுப்பினர்கள் பட்டதாரி தொகுதிகளிலிருந்தும், ஆசிரியர் தொகுதி களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்களையும் வரவேற்கிறேன். மாநிலச் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். சம்பிரதாயத்திற்காக அவர்கள் அவைக்கு வரவில்லை என்றாலும், அவர்களையும் வரவேற்கிறேன்.

எப்போதுமே மேலவைக்கு என்று ஒரு மரபு உண்டு. ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்தாலும், நாம் எப்போதுமே அந்த மரபுப் படி அவையை நடத்தி வந்திருக்கிறோம். இந்த மன்றத்திற்கு அந்த மரபு மீண்டும் தொடரும் என்று நம்பி மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

## 2. மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்கு 75 வது பிறந்த நாள் பாராட்டுரை

* **மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு மேலவைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தங்க ளுடைய 75 வது பிறந்த நாள். தங்களுடைய பிறந்த நாளான இன்றைக்கு இந்த அவை கூடியிருக்கிறது. அதிலும் தாங்களே அவைக்குத் தலைமை தாங்கி அவை நடவடிக்கைகளை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு நல்ல மகிழ்ச்சி தரக்கூடிய நாளாக, தங்களுடைய பிறந்த நாளாக இருக்கிற காரணத்தால், ஆட்சிக் கட்சியின் சார்பில், இந்த அரசின் சார்பில், உங்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டிய கடமை இருக்கிறது. புதிதாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசை நீங்கள் வாழ்த்தி இன்றைக்குப் பாராட்டியிருக் கிறீர்கள். அதேபோல் உங்களுடைய பிறந்த நாளினையொட்டி நாங்களும் எங்களுடைய வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்ற காரணத்தால், உங்களுடைய அனுமதியோடு ஒன்றிரண்டு வார்த்தைகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக சட்டமன்றப் பேரவையோ அல்லது மேலவையோ நடக்கின்ற போது அவைத் தலைவருடைய பிறந்த நாள் வந்தால் சம்பிரதாயப்படி வாழ்த்துக்களைத் தெரிவிப்பது மரபாக இருந்து வந்திருக்கிறது. சென்ற முறை நம்முடைய போன்பிற்குப் பாத்திரமாக விளங்கிய மரியாதைக்குரிய மறைந்த சிந்தனை சிற்பி அவர்கள் மேலவைத் தலைவராக இருந்தபோது,



26 ஜூன் 1980] [திரு. கா. இராசா முகமது]

அவருடைய பிறந்த நாள் அன்றே இந்த மன்றம் கூடியிருந்தது. எல்லோ ருமே வாழ்த்துத் தெரிவித்திருந்தார்கள். அதேபோல இன்றைக்கு உங்க ளுடைய பிறந்த நாளன்று இந்த அவை கூடியிருக்கிறது. எங்களை வாழ்த்தும் உங்களுக்கு நாங்களும் இந்த நேரத்தில் எங்களுடைய வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த சந்தர்ப்பத்திலே ஒன்று நினைவுக்கு வருகிறது. உங்களுடைய பிறந்த நாளையொட்டி இப்படிப்பட்ட நல்ல நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெறுகின்றன. அந்த வகையில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கிறது. தமிழ்ச் சின்னமாக, தமிழ் கலாச்சாரத்தின் சின்னமாக, தமிழ் இனத்தின் எழுச்சியாக தாங்கள் வாழ்ந்து வருகின்றீர்கள். நேரத்தை நல்ல முறையில் செலவிட்டு அமைதியாக ஆக்க வழிக்கு சிந்தனை செய்துள்ளீர்கள். பல்கலைக் கழகம் சென்று படித்து பட்டம் பெற்று, ஆராய்ச்சி செய்து மேதைகளாக விளங்குபவர்களை விட அங்கு செல்லாமலேயே பல்கலைக் கழகம் அங்கீகரிக்கத்தக்க அளவுக்கு, டாக்டர் பட்டம் தரத்தக்க அளவுக்கு உங்களுடைய பணி சீரிய முறையில் அமைந்திருக்கிறது. உங்களுடைய சீரிய பணிக்காக உங்களைப் பாராட்டுவது எங்களுக்கு நன்மை பயக்கும் என்கிற சுய நல நோக்கோடு உங்களைப் பாராட்டுகிறோம். உங்களைப் பாராட்டுவதன் மூலம் கோடைக்கால நீரூற்று போல் உண்மையான பாங்கினை நாங்கள் பெறுகின்றோம். கோடைக்காலத் திலேயே நீரூற்று வற்றாமல் இருக்குமானால் மற்ற காலங்களிலே எப்படி இருக்கும் என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கிறோம். இந்த வயதிலே கூட எந்த ஒரு பொருள் பற்றிக் கேட்டாலும் கேட்கக் கூடியவர்கள் மெய் மறந்து போகத்தக்க அளவுக்கு உங்கள் திறமை அமைந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய மூத்த தலைவர்களிலே உங்களுக்கு இருக்கக்கூடிய திறமை வேறு யாருக்காவது இருக்கிறதா என்றால் சந்தேகமே. அந்த அளவுக்கு பலவிதத்தில் ஆற்றல் பெற்றிருக்கிற உங்களை நாங்கள் வாழ்த்து வதன்மூலம் நாங்கள் பெருமைப்படுகிறோம். உங்களை வாழ்த்துவதன் மூலம் உங்கள் ஆற்றலில் எங்களுக்கு ஒரு பகுதி கிடைக்காதகா—கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் திறமை மேலும் வளர வேண்டுமென்றும் தாங்கள் தமிழ் போல் என்றும் இளமை குன்றாமல் நீடிய நாள் வாழ வேண்டுமென்றும் மீண்டும் ஒரு முறை வாழ்த்துகிறோம்.

* **திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நாளிலே உங்களை வாழ்த்துவதிலே இந்த மன்றத்திலே அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களோடு இந்தத் தரப்பிலேயிருந்து எங்களையும் இணைத்துக் கொள்வதிலே மிகுந்த பெருமையடைகின்றோம். தமிழால் ஆருமா

என்ற கேள்விக்குறியை தமிழில் ஆகாதது உண்டா என்று முற்றுப் புள்ளியாக்கி இன்றைக்கு தமிழ் இனத்திற்கும், தமிழிற்கும் பெருமை செய்திருக்கின்ற தங்களை வாழ்த்துவதிலே பெருமைப்படுகிறோம். தாங்கள் பல்வேறு துறைகளிலே உயர்ந்து நிற்கின்றீர்கள். எந்தத் துறையில் இருந்தாலும், தாங்கள் அதற்குப் பெருமை சேர்த்தவர்கள். இந்த மேலவையினுடைய தலைவராக தாங்கள் பொறுப்பேற்று இருப்பதும் மிகுந்த உரிமையோடும் கண்ணியத்தோடும் அவையை நடத்தும் பாங்கும் மிகப் பெருமைக்குரிய ஒன்றாகும். தங்களுடைய வாழ்க்கையே தமிழகத்தினுடைய வாழ்க்கையாக, தங்களுடைய வாழ்க்கையே சுதந்திரப் போராட்டத்தினுடைய பெரும் பகுதியாக, தமிழர்களுடைய உணர்வுக்கு, தமிழ் இனத்தின் எழுச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அவையின் தலைவர் பொறுப்பை தாங்கள் ஏற்று திறம்பட நடத்திச் செல்லுகின்ற பாங்கு, அதன் மூலமாக எந்த அளவுக்கு தாங்கள் பொறுப்புகளை சிறப்பாக, செம்மையாக நடத்திச் செல்ல முடியும், நிறைவேற்ற முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறீர்கள். தங்களுக்கு 75 வயது என்பதை நாங்கள் ஆச்சரியத்தோடு மட்டுமல்லாமல் பெருமையோடும் எண்ணிப் பார்க்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நம்ப முடியவில்லையா ?

**திரு. க. இராமமூர்த்தி :** அப்படித்தான். இன்றைக்குக் கூட தங்களுடைய வயது பற்றி காலையில் விவாதித்துக்கொண்டிருந்தபோது

(பிற்பகல் 4-10)

"அவருக்கு 75 வயதா ?" என்று கேட்டார்கள். அந்த அளவுக்கு தங்களுடைய பேச்சிலே இருக்கின்ற இளமையாலே, கருத்திலே இருக்கின்ற இளமையாலே, தங்களுடைய செயல் திறமை மிக்க இளமையால் வயதை வென்றிருக்கிறீர்கள் என்பது மட்டுமல்ல, எங்களோடு ஒத்தவராகவும் இருக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறோம். எவ்வளவுதான் கோபப்பட்டாலும் கூட, அடுத்த நிமிடமே அதை மறந்துவிட்டு எங்களோடு அன்பாகப் பழகுகின்ற தன்மையும், உறுப்பினர்களை அரவணைப்பதும் மிகச் சிறந்த பண்புகளாகும். தங்களை வாழ்த்துவதைப் பெருமையாகக் கருதுகிறோம்.

புதிய அரசு பொறுப்பேற்று இன்றைக்குத்தான் நடவடிக்கைகள் முறையாக இந்த அவையிலே துவங்குகின்றன. எங்கள் பக்கத்தைப் பொறுத்தவரையில், தாங்கள் குறிப்பிட்டதைப்போல, புதிய அரசு என்றாலும் கூட



2½ ஆண்டு காலம் இருந்து ஆட்சிபுரிந்த அரசின் தொடர்ச்சி என்ற வகையிலே இந்த அரசையும் நான் பாராட்டுகிறேன். இங்கே அமைச்சர் பெருமக்களைப் பார்க்கிறோம். புதிய அமைச்சர்களையும் பார்க்கிறோம். அரசியலிலே கருத்து மாறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் இருக்கவேண்டிய ஒன்று, தவிர்க்க முடியாத ஒன்று. இருந்தாலும் கூட பெருமையோடு மிகப் பெரிய வெற்றியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பெற்று இங்கே வந்து அமர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். அவர்களை ஜனநாயக ரீதியாக மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். பல்வேறு குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டும்போது நாங்கள் குறைகள் சொல்ல வேண்டும் என்று சொல்கிறோம் என்று எடுத்துக்கொள்வதைவிட, மேலும் நல்லமுறையிலே இந்த அரசு நடைபோட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தான் சொல்கிறோம் என்றும், இந்த அரசு நல்லமுறையிலே நடைபோட நாங்கள் துணையாக இருக்க வேண்டுமென்ற உணர்வோடும், உரிமையோடும் தான் சொல்கிறோம் என்ற அளவிலேதான் அவைகள் அமைகின்றன என்றும் சொல்லிக்கொள்கிறேன். புதிய அமைச்சரவையிலே மாண்புமிகு நாவலர் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். வேறு புதிய அமைச்சர் பெருமக்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து, மேலும் தொடர்ந்து ஐந்தாண்டு காலம் பணியாற்ற வேண்டும் என்றும் வாழ்த்துதல்களைத் தெரிவித்து, அதற்கு இந்தப் பக்கம் ஒத்துழைக்கும் என்பதையும் சொல்லி வாழ்த்தி அமைகிறேன்.

* **திரு. நீலநாராயணன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் தங்களுடைய 75-வது பிறந்த நாள் விழாவன்று, இந்த மன்றத்தில் கூடி தங்களை வாழ்த்தவும், பாராட்டவும் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகிறேன். நாட்டிலே ஏற்பட்ட சில பெரும் தலைவர்களுடைய இழப்பின் காரணமாக, தங்களைப் பாராட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூட, இந்த தினத்திலே தங்களைப் பாராட்டுவது சாலப் பொருத்தமானதாகும் என்று நான் கருதுகிறேன். தமிழால் எதுவும் முடியும், ஆங்கிலம் இருந்து ஆட்சி செய்த இடத்திலே, தமிழ் இருந்து ஆட்சி செலுத்த முடியும் என்பதை நிதர்சனமாக எடுத்துக்காட்டுகின்ற தன்மையிலே கடந்த காலத்திலே தங்களுடைய பாராளுமன்ற முறைகள் இங்கு நடைபெற்று வந்திருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். அதற்கு தாங்கள் பெரும்பணி ஆற்றியிருப்பதை நாங்கள் உணர்கிறோம். அந்த முறையிலே, நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தங்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். உழைப்பால் உயர்ந்த ஒரு தமிழன், கல்லூரி காணாத

[திரு. நீலநாராயணன்] [26 ஜூன் 1980

ஒரு தமிழன், பட்டப் படிப்புக்குச் செல்லாத ஒரு தமிழன் இன்றையதினம் இந்த மேலவையை மிக நல்லமுறையில் நடத்தி வருகின்ற அந்தத் தன்மையும், தெம்பும், திராணியும் தமிழுக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒரு உதாரணமாக இன்றைய தினம் தாங்கள் விளங்குகிறீர்கள். அப்படிப்பட்ட தங்களுடைய தலைமையிலே நடைபெறுகின்ற இந்தக் கவுன்ஸில் ஆளும் கட்சியையும், எதிர்க் கட்சியையும் துலாக்கோல்போல் ஒன்றாக நினைத்து நீங்கள் நடத்தும் அந்த சிலாக்கியத்தை நினைத்து நாங்கள் பாராட்டுகிறோம். எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, உறுப்பினர்களுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கிஞ்சித்தும் தவறாமல் கொடுத்து வந்திருக்கின்ற தங்களுடைய பெரும் தலைமையை எண்ணி மகிழ்ந்து தாங்கள் நீடூழி வாழ்க என்று வாழ்த்தி பாராட்டுகிறேன்.

இந்தப் புதிய சட்டசபையை 7-வது சட்டசபையை இன்றையதினம் அமைச்சராக பொறுப்பேற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களை வரவேற்கிறேன். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் அமைச்சர்களையும் உறுப்பினர்களையும் வரவேற்கிற அதே நேரத்தில் அவர்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம், நாங்கள் இங்கே எதிர்க் கட்சியாக இருந்து பணியாற்றுகின்றோம், எங்களை எதிர்க்கட்சியாகக் கருதி ஆளுங் கட்சியினர் நடந்து கொள்ள வேண்டுமே தவிர, எதிரிக் கட்சியாக எங்களை எண்ணக்கூடாது. எதிரிக் கட்சியாக நாங்கள் பணியாற்றவில்லை என்பதையும் நான் இந்த சபைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

(டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்களும் திரு. பி. ஆர். தாமஸ் அவர்களும் ஒரே சமயத்தில் பேசுவதற்கு எழுந்தனர்.)

**திரு. பி. ஆர். தாமஸ் :** இத்தகைய ஒரு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர்களின் பெயர்களைச் சொல்லி நான் பேச அழைக்கமாட்டேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** இத்தகைய ஒரு இனிமையான நாளிலே தங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து கூறக்கூடிய ஒரு பெரும் பேறு பெற்றதற்காக மகிழ்ச்சியடைகிறேன். தங்களை 75 years young என்றுதான் கூற வேண்டுமே தவிர 75 years old என்று கூறக்கூடாது. அவர்களைப் பொறுத்தவரையில் . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழில் சொன்னால் old வராது.

26 ஜூன் 1980]

**திரு. பி. ஆர். தாமஸ் :** 75 வயது இளைஞனாக இருக்கிறீர்கள், இருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. தேசிய நீரோட்டத்திலே கலந்து, நாட்டிலே நடைபெற்ற பல போராட்டங்களிலே கலந்துகொண்டு, நாட்டில் ஏற்பட்ட பல வளர்ச்சிகளிலே, மாறுபாடுகளிலே ஈடுபட்டு, தாங்கள் செய்திருக்கின்ற பணிகளையும், தியாகங்களையும் இந்தச் சமுதாயம் மறக்க முடியாது. 'தமிழே அரியாசனத்தில் வீற்றிருக்கிறது' என்று தாங்கள் பொறுப்பேற்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர்கள், பட்டதாரிகள், முற்போக்கு முன்னணியினர் சார்பிலே தங்களை உளமார வாழ்த்தி, பாராட்டி, தாங்கள் எல்லா நலனும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மாபெரும் வெற்றிபெற்று, மீண்டும் அமைச்சரவை அமைத்து நாட்டை ஆளக் கூடிய ஆணையை மக்களிடமிருந்து பெற்றிருக்கிறார்கள். அவர்களை மனமார வாழ்த்துகிறேன். அவரோடு சேர்ந்து அமைச்சர் பொறுப்பிலே வீற்றிருக்கின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களையும் வாழ்த்தி அமைகிறேன். நன்றி.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** இன்று தங்களுடைய 76-வது பிறந்த நாள் விழா கொண்டாடுவதில் . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 75-வது பிறந்த நாள் விழா.

**டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** 75 வயது முடிந்து, 76-வது வயது ஆரம்பம். அதனால் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இல்லை. 74 வயது முடிந்து 75-வது வயது ஆரம்பமாகிறது.

* **டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார் :** தங்களுக்கு பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், நானும், மற்றும் எல்லோரும் பங்கெடுத்துக்கொள்வதாக இருந்தது. அது தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இந்த நன்னாளில் இந்த அவை கூடுவது இந்த அவையின் அதிருஷ்டம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களுக்கு அவர்களுடைய மரியாதையைச் சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் நீடூழி வாழ்ந்து மேலும் மேலும் இந்த அவைக்கு சேவை செய்வதோடல்லாமல் தமிழ் நாட்டுக்கும் சேவை செய்ய

[டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார்] [26 ஜூன் 1980

எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் நல்ல முறையில் இந்த நாட்டிற்குச் சேவை செய்ய தங்களுடைய தலைமையில் சந்தர்ப்பம் இருக்கிறது. அத்தகைய நிலைமை உருவானதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். இறுதியாகத் தங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்து, தாங்கள் இந்த நாட்டிற்கு நல்ல சேவை செய்யும் நிலைமையை இறைவன் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தித்து முடிக்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே இன்றைதினம் தங்களின் 75-வது பிறந்த தினமாகிய நன்னாளை நினைத்து, அவையிலுள்ள அனைத்துத் தரப்பினரும் தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தங்களை வாழ்த்துவது என்பது, தமிழை வாழ்த்துவது என்று பொருள் படும். தங்களை வணங்குவது என்பது தமிழை வணங்குவது என்று பொருள் படும். தமிழ்த் தாய்க்கு நாங்கள் செய்ய வேண்டிய கடன் எங்களுடைய மேலவைத் தலைவராகிய தங்களை வாழ்த்துகிற வாழ்த்தாக அமையும் என்று கருதுகிறேன். அந்த வகையில் நாங்கள் தங்களை வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

எனக்கு முன்னே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் தாங்கள் கல் லூரிக்குச் சென்று படித்துப் பட்டம் பெறாதவர் என்று குறிப்பிட்டார்கள். இந்த அவையில் நானேகூட ஒருமுறை பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்ட தாக எனக்கு நினைவு. நான் அறிந்த வரையில், எங்கள் தலைவராகிய தாங்கள் 3-வது வகுப்பு வரைதான் படித்திருக்கிறீர்கள். அந்த அளவுக்குத் தொடக்கக் கல்வியைக்கூட பூர்த்தி செய்து கொள்ள வாய்ப்புத் தர இயலாது இருந்த தங்களின் குடும்பச் சூழ்நிலையை நான் எண்ணிப் பார்க்கிறபோது

"தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சி தன்
மெய்வருந்தக் கூலி தரும்"

என்று வள்ளுவர் கூறியதைப்போல் தாங்கள் தங்களுடைய முழு முயற்சியால் ஆர்வத்தால், தொண்டால், இடைவிடாத சுறுசுறுப்புத் தன்மையால் இந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறீர்கள். இதை நாங்கள் எண்ணிப் பார்க்கிற போதெல் லாம் நாமும் அவரைப் போல் ஏன் உயரக்கூடாது என்ற ஊக்கம் பெறும் வாய்ப்பாக அது அமைகிறது.



26 ஜூன் 1980] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

தங்களுடைய பேச்சில் அடிக்கடி ஒன்றைத் தாங்கள் சொல்லுவது வழக்கம். தமிழ் மொழியை வளர்ப்பதற்கு, தமிழ்நாட்டில் தமிழ் மேலும் சிறப்பதற்கு தமிழில் ஒரு பல்கலைக் கழகம் தேவை என்று தாங்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பது எனக்கு நினைவுக்கு வருகிறது. இன்றையதினம் நமது அரசே தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்க ஒரு முயற் சியை மேற்கொண்டிருப்பதாக மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலேகூட தெளிவுபடுத்தியிருக்கிறது. அப்படி அமைய இருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தங்களின் காலத்திலேயே தங்களின் முயற்சியால் அமைய இருக்கிறது என்ற காரணத்திற்காக நான் தங்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. நேற்று அவையில் தாங்கள் பேசுகிறபோது—புகழ் மாலை யாக விளங்கிய மறைந்த திரு. வி. வி. கிரி அவர்களைப்பற்றிப் பேசுகிறபோது —நினைத்த மாத்திரத்தில்—இங்கே நமது அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல்—நினைத்த பொருள்பற்றி கடல் மடை திறந்தாற் போல் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகிற ஆற்றல் புலப்பட்டது. தங்களின் பேச்சின் இறுதியில் ஒரு பாடலைச் சுட்டிக் காட்டினீர்கள். "சிலம்பு இங்கே ஒலிக்கிறது, சிலம்பு கலகலக்கிறது, 75-வது வயதிலும் அது கலகலக்கிறது" என்று அப்போது நான் எண்ணிக்கொண்டேன். தாங்கள் இன்றையதினம் தமிழ்ச் சமுதாயத்தின் சீரிய செல்வராக, சிலம்புச் செல்வராக, 75 வயது செல்வராகக் காட்சியளிக்கிறீர்கள் என்று எண்ணிப் பார்த்து எங்களாலே மகிழ முடிகிறது. இப்போதுகூட இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்கள் தங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, ஆங்கிலத்தில் '75 இயர்ஸ் ஓல்ட்" என்று சொல்லியபோது தாங்கள் குறுக் கிட்டு ஒரு அரிய கருத்தைச் சொன்னீர்கள். "ஓல்ட்" என்று ஆங்கிலத்தில் சொன்னால் தான் 'பழைய' என்ற பொருள் தருகிறது. முதியவர் என்று தமிழ் மொழியில் சொல்லிவிட்டால் அந்தப் பொருள் இருக்காது என்பதை "தமிழில் கூறுங்கள் சரியாகிவிடும்" என்று மிக அழகாகக் குறிப்பிட்டீர்கள். 'ஓல்ட்' என்றால் அது பழையது. ஆனால் முதுமை என்ற பொருள் அதற்கு நேரிடையாக வராது. தமிழில்தான் தனித்தனி சொற்கள் உண்டு. தமிழுக்கு உள்ள சிறப்பு அத்தகையது என்று தேன் துளி சிந்தியதைப்போல் தாங்கள் குறிப்பிட்டதை எங்களாலே உணர முடிகிறது.

வேறொரு வகையிலும் நான் தங்களைப் பாராட்டவும் வாழ்த்தவும் கடமைப் பட்டிருக்கிறேன். அண்மையில் ஆசிரியர்கள் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு தாங்கள் ஒரு கருத்தைச் சொன்னதாகப் படித்தேன். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மேலவைத் தேர்தலில் வாக்களிக்க உரிமை இல்லாதிருப்பதை

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [26 ஜூன் 1980

அறிந்து நான் அதிர்ச்சியடைகிறேன் என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று தாங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது எங்களுடைய குரலாக ஒலித்தது. ஆசிரியர் சமுதாயத்தில் நீங்காத பற்றுள்ள மிகப் பெரியவரான தாங்கள் எங்களுக்காக இந்தக் குரலை எழுப்பியதைப் பார்த்தேன். அப்படிப்பட்ட தாங்கள் இன்றையதினம் எங்கள் மேலவையின் தலைவராக இருக்கிறீர்கள். அதிலே நாங்கள் எல்லாம் அங்கம் வகிக்கிறோம் என்று எண்ணுகிறபோது, மேலும் மகிழ்ச்சியடைகிறேன். ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் பாராட்டையும், மகிழ்ச்சியையும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் உரித்தாக்கி அமைகிறேன். வணக்கம்.

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: Hon. Chairman, it gives me great pleasure to wish you many, many happy returns of the day. You are entering the Diamond Jubilee year and like a diamond you have many facets of quality. I would like to assure you that it is a great honour for us to have you as Chairman of this Council, and I wish that you will be ever presiding over the deliberations of this Council. I take this occasion to congratulate our Hon. the Chief Minister on his resounding victory and I welcome him and all his Colleagues back to their position. We are quite confident that all that they had expressed about the welfare activities for the welfare of our State will be translated during the period of their rule.

I take this opportunity also to welcome our new nominated Members Dr. Muthiah Chettiar, Thirumathi Tara Cherian and Thiru Arunachalam. I specially welcome Thirumathi Tara Cherian who will make herself a very colourful and graceful personality here. I know her for quite a long time, and as Members of the State Social Welfare Board, we have worked together and I know how sincere and hard-working she is. With these words, I once again offer you my very best wishes. Thank you.

(பிற்பகல் 4-30)

* THIRUMATHI TARA CHERIAN: Sir, may I wish you a very, very happy birthday and many, many happier returns of the same?

Sir, you have known my parents, my elder brother and my husband for many years. I have seen you in many positions. I have seen you in the Municipal Corporation and appreciated your services.



26 ஜூன் 1980] [Thirumathi Tara Cherian]

கடவுள் உங்களுக்கு நல்ல சுகத்தையும், பலத்தையும், நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டும். நீங்கள் என்றென்றும் சிரஞ்சீவியாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இதுதான் வாழ்த்து.

**திருமதி தாரா செரியன்:** நீங்கள் மேல் சபைத் தலைவராக இருந்து எங்களைப் போன்றவர்களுக்கு நல்ல சேவைகள் செய்து உங்கள் தமிழை எங்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தாங்கள் கல்லூரிக்குப் போனதில்லை என்று சொன்னார். நான் கல்லூரிக்குப் போய்ப் படித்தபோது, தமிழ் பாடத்தை எடுத்தேன். நான் நூற்றுக்கு நூறு தமிழ் இனத்தைச் சேர்ந்தவள். என் கணவர் நூற்றுக்கு நூறு கேரளத்தைச் சேர்ந்தவர். இரண்டாவது ஜீவிதம் இருந்தால் நான் அவரைத்தான் கட்டிக் கொள்வேன். சந்தர்ப்பவசத்தால் நான் பேசும் தமிழ் மோசமாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அதற்காகத்தான் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்.

**திருமதி தாரா செரியன்:** நீங்கள் தலைவராக இருக்கும்போது நல்ல தமிழ் நான் ஏன் படிக்கக்கூடாது? உங்களிடம் மாணவியாக இருந்து படிக்க வேண்டியவை அநேகம் இருக்கின்றன. திருமதி மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னைப்பற்றி நல்லவிதமாகச் சொன்னார்கள். அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

I am very happy to know that the Hon. the Chief Minister and his Colleagues have been returned with a very big majority, a steamroller majority and that they have obtained a big mandate. This shows that the Hon. the Chief Minister and his Colleagues are capable of carrying on the various welfare schemes they are interested in and promised to carry out. People have reposed their confidence in them. If we give any little constructive criticism, I am sure that the Hon. the Chief Minister, with his experience, and that of his Colleagues will take it for what it is. I would like to assure the Hon. the Chief Minister and you, Mr. Chairman, that in whatever capacity we can help, we will be of help in the progress of the country and in the implementation of the welfare schemes.

[திரு. செ. முத்துசாமி] [1980 ஜூன் 26

இங்கே அமர்ந்திருக்கக் கூடிய அமைச்சர்களிலே முன் வரிசையில் இருக்கக் கூடிய டாக்டர் ஹண்டே அவர்கள் டாக்டர்களை நிர்வகிக்கக் கூடிய துறையின் அமைச்சராக ஆக்கப்பட்டிருக்கிறார். அவரையும் வாழ்த்துகிறேன்.

அடுத்து, இளைய அமைச்சர்களுள் ஒருவராகப் பொறுப்பேற்றிருக்கிற சகோதரி அவர்கள் ஆசிரியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அவர்களுக்கும் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்ளுகிறேன். மற்ற இரு இளைய அமைச்சர்களையும் மனதார வாழ்த்துகிறேன். இந்த அமைச்சரவை நல்ல முறையிலே செயலாற்றி மக்களுக்கு நலன்களைச் செய்து இன்னும் பல பேறுகளைப் பெற வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு தலைவர் அவர்கள் பல்லாண்டு வாழ்க வாழ்க என்று வேண்டி விடை பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய 75-வது பிறந்த நாள் விழாவில் இந்த மேலவை கூடுவதும், அதிலே நாங்கள் பொறுப்பேற்று அமர்ந்து ஆன்றோர்களுடைய கருத்துக்களைக் கேட்பதும், உங்களுடைய நல்ல தீர்ப்புகள் எங்களுக்கு நல்ல துணையாக அமைவதும் ஆகிய இப்படிப்பட்ட சூழ்நிலைகள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியையும், எங்களுக்குப் பெருமையையும் எதிர்கால நம்பிக்கையையும் உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை நான் எங்கள் அமைச்சரவையின் சார்பாக மனநிறைவோடு கூறிக்கொள்கிறேன்.

உங்களைப் பாராட்டுகிற நேரத்தில் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகள் எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிழலாடும் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தமிழ்நாட்டிற்கு, "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்ற போராட்டத்தில் நீங்களும் பங்கு கொண்டிருந்தீர்கள் என்பதையும், அதை அமரர் அண்ணா அவர்கள் நிறைவேற்றியபோது உங்கள் மனம் எவ்வளவு குளிர்ந்தது என்பதையும் நாங்கள் அறிவோம்.

அதைப் போலவே தமிழில்தான் ஆட்சி செயல்படுத்தப்பட வேண்டுமென்கிற எண்ணத்தில் அமரர் அண்ணா அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார்களோ அவ்வளவு அக்கறையைக் கொண்டு நீங்கள் போராடியதும், பேசியதும் ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலும் இன்னும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறந்துவிட முடியாது.



1980 ஜூன் 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அது போலவே தமிழ்நாட்டிற்கு எல்லைக் கோட்டை வகுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது, குமரியிலிருந்து வேங்கடம் வரையில் வேண்டும் என்கிற கோரிக்கையை நீங்கள் வைத்துப் போராடிய நேரத்தில் தென் முனையைப் பெற்று, வட முனையைப் பெறவில்லை யென்றாலும், ஒன்றை நான் இங்கே குறிப்பிட வேண்டும். என்றாவது ஒரு நாள், ய ாரிடம் இருக்கிறதோ அவர்களே, அதை தமிழக மக்களுக்கு மனமுவந்து தரும் நிலை ஏற்படுமென்று நினைக்கிறேன். இதைச் சொல்வதிலே அரசியல் இருக்கிறது என்றாலும், அதிலே கொஞ்சம் நியாயத்தோடு பேச வேண்டுமென்ற உணர்வோடும், யாரையும் புண்படுத்தக் கூடாது என்ற நிலையிலும் என் கருத்தை, உங்கள் கருத்தை, தமிழக மக்கள் கருத்தை, இந்திய வரலாற்று அடிப்படை உண்மையை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகிறேன். யாரிடம் இருந்தாலும், யாருக்குச் சொந்தம் என்று தெரிந்த பிறகு, அதைக் கொடுத்துவிடுவதுதான் நியாயம் என்று உணர்வு ஏற்படுவதற்காக அறிவைப் பயன்படுத்துகிற காலம் இது. வன்முறையால், வெறும் உயிர்க் கொலைகளை ஏற்படுத்துவதன் மூலம் மட்டும் எதையும் சாதித்துவிட முடியாது என்ற நல்ல உணர்வுக்குச் சொந்தமாக வாழ்கிற மக்களைப் பெற்றிருக்கிற காலம் இது. அப்படிப்பட்ட தலைமுறையின் கீழ் பணியாற்றுகிற நாட்கள் இது.

(பிற்பகல் 4-40)

இந்த நேரத்தில் உங்களுக்கு 75 வயது என்பது, கால கட்டத்தில் சொன்னால், ஒருவேளை மற்றவர்கள் சொன்னதுபோல, தங்களுக்கு 75 வயதா என்று கேட்டாலும், என்னைப் பொறுத்த வரையில், நான் சொல்வேன். இது சாதாரண வயது என்று தான் சொல்வேன். உங்களைப் பொறுத்த வரையில், தாங்கள் இன்னும் 75 ஆண்டுக் காலம் வாழ்வதற்கான அளவுக்கு உங்கள் உடலிலே வலுவும், அறிவாற்றலும் உண்டு. அவைகள் தங்களுக்குத் துணை நிற்கும் என்று கூறி தெளிவுபடுத்த விழைகின்றேன். நீங்கள் இங்கே மேலவைத் தலைவராக இருக்கின்ற நேரத்தில், எதிர்பாராத சூழ்நிலை எங்களுக்கு ஏற்பட்டு பதவியிலிருந்து விலக்கப்பட்டாலும், தமிழக மக்கள் தமிழ் உணர்ச்சியுடன் தமிழகத்திற்கு யார் வரலாம் என்ற எண்ணத்தை நன்றாக உள்ளத்திலே பதிவு செய்து, ஒரு நல்ல தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். நீங்கள் தொடர்ந்து மேலவைத் தலைவராகப் பணியாற்ற வழி செய்திருக்கிறார்கள். இங்கே உங்களுக்கும் எனக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள். இங்கு நாவலரைப் பார்க்கும்போது, சிலருக்குத் திகைப்பும் ஏற்படுகிறது. அவர்களும் வந்திருக்கிறார்களா என்று சொல்கிறார்கள். வரவேண்டியவர்கள்தான் வந்திருக்கிறார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1980 ஜுன் 26

இன்னமும் பலர் வருவார்கள். அமைச்சரவை இன்னும் கொஞ்சம் விரிவாக்கப்
படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உங்க
ளுடைய ஆசி அவர்களுக்கும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு அந்தச்
செய்தியை இங்கே சொல்வதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இளை
ஞர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நண்பர்கள் இங்கே குறிப்பிட்டிருக்
கிறார்கள். அதுபற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இளைஞர்களுக்கு
இப்போது பழக்கம் தந்தால்தான், வாய்ப்புத் தந்தால்தான், எங்களைப்
போன்று பதவிகளுக்கு வரும்போது, இந்த நாட்டை நடத்துவதற்குரிய
திறமை இருக்கும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் நாங்கள். இன்னும் சிலர்
வருவார்கள். அவர்கள் பழக்கப் படுத்தப்படுவார்கள் என்பதையும் நான்
மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் நாங்கள் எதிர்க்
கட்சியாகத் தான் இருப்போம், எதிரிக் கட்சி அல்ல என்று சொன்னார்கள்.
அது முடிந்துவிட்ட ஒன்று. எதிரிக் கட்சியாக இல்லாமல், எதிர்க் கட்சியாக
இருந்து எதாவது மாற்றுக் கருத்துக்களை சொல்பவர்களாகத்தான் இருப்
பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். என்னுடைய அந்த நம்பிக்
கையைக் காப்பாற்றுவார்கள் என்பதிலே எனக்குச் சந்தேகமே கிடையாது.

இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இங்கே நண்பர்கள்
பேசும்போது சொன்னதைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறேன். நல்ல நோக்கத்
துடன்தான் திரு. இராமமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். நேற்றைய
தினம், மாண்புமிகு திரு. வசந்த பை அவர்கள் சொன்னது போல, நான் 10
நிமிடத்திற்கு முன்னதாகவே வந்துவிட்டேன். இதிலிருந்து அங்கத்தினர்
களை எந்த அளவுக்கு மதிக்கிறேன் என்பதையும், எங்களால் முடிந்த அள
வுக்குச் செய்கிறோம், மற்ற அங்கத்தினர்கள் இங்கே சொல்வதையெல்லாம்
கேட்டுத் திருத்திக்கொள்வது, தயார்படுத்திக்கொள்வது என்பதில் நாங்கள்
எப்போதுமே பின்னால் போகின்றவர்கள் அல்ல என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். இயற்கையாகவே நாங்கள் வர இயலாத நேரத்தில்தான் அப்படி
நிகழலாமே தவிர, நாங்களாக அப்படி ஏற்படுத்திக்கொள்ள மாட்டோம் என்
பதை அங்கத்தினர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

மேலவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தமிழுக்காக வாழ்ந்தீர்கள். தமிழர்
கள் உங்களை வளர்த்திருக்கிறார்கள். தமிழ் உங்களை வளர்த்தது. தமிழுக்கு
வயதே கிடையாது. அது போல உங்கள் வயதிற்கும் எல்லையே கிடையாது.



1980 ஜுன் 26] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நீங்கள் தொடர்ந்து பல பல ஆண்டுகளுக்கு மேலவைத் தலைவராக
இருந்து பணியாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே பெற்ற தாய்க்
கான வணக்கத்தோடு சமர்ப்பித்துக்கொள்கிறேன். அண்ணாவினுடைய
கொள்கையை நிறைவேற்றுகின்ற பாரம்பரியத்தைச் சேர்ந்த எங்களுடைய
பரம்பரை தொடர்ந்து ஆட்சி செய்கின்ற வாய்ப்பும் தமிழக மக்களால்
தரப்படும் என்ற எதிர்பார்ப்புகளையும், வாழ்த்துக்களையும் மாலையாக,
தங்களுக்குக் காணிக்கையாக கழுத்தில் அல்ல, தங்கள் காலடியிலே சமர்ப்
பிக்கிறோம். தாங்கள் பல்லாண்டு பல்லாண்டு தமிழ் போல், தமிழுக்காக,
தமிழ் மக்களுக்காகத் தமிழனாக வாழ்கின்றீர்கள். அதற்கு எந்தக் குறைவும்
ஏற்படாது என்று சந்தேகம் இல்லாது வாழ்த்துச் சொல்ல உரிமை இருக்கிறது
என்ற அளவில் சொல்கிறேன். நீங்கள் தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ்
நாட்டிற்காக திடமுள்ளவராக, நல்ல உள்ளத் துடிப்போடு, உண்மை உணர்
வோடு நல்ல நினைப்போடு தமிழராக வாழுங்கள், எங்களுக்கெல்லாம் நல்ல
வழி காட்டுங்கள் என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர்
அவர்கள், நான் கொஞ்சம்கூட எதிர்பாராத நிலையில், என்னை வாழ்த்து
கின்ற ஒரு கருத்தரங்கை இங்கே தொடங்கி வைத்தார்கள். ஒவ்வொரு
கட்சியினரும் அதிலே கலந்துகொண்டு இறுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்
களும் பங்கு பெற்று என்னை வாழ்த்தியிருக்கிறார்கள். இன்று மாலை
அப்படி ஒரு வாழ்த்துக்கூட்டம் பேரவைத் தலைவர் தலைமையில் முதல்வர்
அவர்களும் கலந்து கொள்கின்ற நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டது. நாட்
டில் ஏற்பட்ட துக்கத்திற்கு நான் விலக்கானவனல்ல, இந்த ஆட்சியும் விதி
விலக்கானது அல்ல, முதல்வர் அவர்களும் விதிவிலக்கானவர்கள் அல்ல.
ஆதலால் அந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அதில் குறை
பாடுகள் கண்டு பல இளைஞர்கள், பல தமிழர்கள் ஆறுதல் அடையாமல் இருந்
தார்கள். அவர்களெல்லாம் இந்த நிகழ்ச்சியைப் பத்திரிகையில் படித்தபின்
ஆறுதலடைவார்கள். அதே முதல்வர் அவர்கள் தான் இங்கே பேசியிருக்
கிறார்கள். அந்த விழாக் குழுவின் தலைவர் செட்டி நாட்டு அரசர்தான்
இங்கேயும் வாழ்த்தியிருக்கிறார்கள். அங்கு வாழ்த்துவதற்கு வாய்ப்புப்
பெறாத பலர் இங்கு வாழ்த்தியிருக்கிறார்கள். ஆக அந்தக் கூட்டமே
இங்கு நடந்துவிட்ட ஒரு நிலையை நான் பார்க்கிறேன். அந்தக்
கூட்டத்தைவிட பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்த அவையானது கொடுத்த
வாழ்த்து உண்மையிலேயே, நீங்கள் எல்லாம் சொன்னதுபோன்று, ஒரு
நூற்றாண்டுக்கு மேலும் நான் வாழ வழிசெய்யும்.

### (3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 23—6—1980 அன்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்தபடி, இன்றும் நாளையும் ஆளுநர் உரைமீது விவாதம் நடைபெறும். மேற்கொண்டு மற்றைய நிகழ்ச்சிகள் குறித்து அலுவல் ஆய்வுக் குழு மீண்டும் கூடி முடிவெடுக்கும்.

### (4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் 25ஆம் தேதி மாலை 5 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. திருத்தங்களைக் கொடுக்கும் நேரத்தை 27 ஆம் தேதி மாலை 5 மணி வரை நீட்டிக்கிறேன்.

### (5) அவைக் கொறடா நியமனம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களை இந்த அவையின் கொறடாவாக அரசு நியமித்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (6) பிரதான எதிர்க் கட்சி அங்கீகாரம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்ற மேலவையில் பிரதான எதிர்க் கட்சியாக இருக்கத் தேவையான உறுப்பினர்கள் எண்ணிக்கை எந்தக் கட்சிக்கும் இல்லையாதலால், மேலவையில் பிரதான எதிர்க் கட்சியாக எந்தக் கட்சியையும் தற்போது நான் அங்கீகரிக்கவில்லை.

## 4. மாற்றுத் தலைவர் பட்டியல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவை ?திகளின் 6-வது விதியின்கீழ் மேலவையின் 58-வது கூட்டத் தொடருக்கு 'ழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பறுமாறு நான் நியமித்துள்ளேன் :—

1. புலவர் புலமைப்பித்தன்
2. திரு. சோ. ஆறுமுகம்
3. திரு. பா. ரா. தாமஸ்
4. திருமதி தாரா செரியன்



## 5. ஆளுநர் உரையின் மீது விவாதம்.

* **திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை மிக்க மகிழ்ச்சியோடு நான் முன்மொழிகிறேன்—

"1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை @ நிகழ்த்தியதற்காக தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றனர்."

**திரு. சி. இராமலிங்கம் :** மேலவைத் தலைவரவர்களே, நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்டத் தீர்மானம்—

"1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற நல்ல தீர்மானத்தை முன்மொழியவும், அதன்மீது விவாதத்தைத் தொடங்கி வைக்கவும் நல்ல வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அந்த நல்ல வாய்ப்பினை நல்கியதற்கு நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'இந்த நல்ல நேரத்திலே, ஜனநாயகப் பரிசோதனையிலே தங்களை ஈடுபடுத்தி, தங்களுடைய அரசியல் நுண்ணறிவையும், பண்பாட்டையும் திறம்பட வெளிப்படுத்தி, நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டளித்திருக்கின்ற காரணம் வேறு, சட்டமன்றத் தேர்தலில் ஓட்டளித்திருக்கின்ற காரணம் வேறு என்பதை மிகத் தெளிவுபடுத்தி, அதற்கும் இதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்று தெரிவித்து, வாக்காளப் பெருமக்கள் ஒரு நல்ல தீர்ப்பினை வழங்கி, ஒரு நல்ல அரசு அமைய வழி வகுத்து, நல்லவர் ஒருவரை அரியணையில் ஏற்றியதற்கு வாக்காளப் பெருமக்களுக்கு முதலில் என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 136—136 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

அதேபோல தேர்தல் என்ற வேள்வித் தியிலே தள்ளப்பட்டு, அதிலே வெற்றி வாகை சூடி, புடம் போட்ட தங்கமாக, மாசற்ற மாணிக்கமாக, மக்களின் இதயக் கனியாக வெளி வந்து, மக்களுக்காக நல்லாட்சி நடத்து கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்ற மாண்புமிகு முதல்வரவர்களுக்கும் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்ச ரவர்களுடைய நம்பிக்கைக்கு ஏற்றபடி உள்ள சக அமைச்சர்களுக்கும் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் இங்கே புதிதாக மேலவைக்கு வந்துள்ள உறுப்பினர்களுக்கும் பாராட்டுதல் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்குத் தெரியும், இந்த அவையிலே பேசுவதற்கு மிகக் குறைவாக நேரம் எடுத்துக்கொள்கின்ற மிக்க குறைவான பேர்களில் நானும் ஒருவன். நீதித் துறையிலே பல ஆண்டுகள் பணி புரிந்த காரணத்தால், நான், அதிகம் பேசாமல் மற்றவர்கள் அதிகம் பேசுவதைக் கேட்டு . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் கொஞ்ச நாள் நான் இங்கே இருந்தால், நானும் பேச முடியாது போல் இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** அதிலுள்ள நல்லதைப் புரிந்து, தெரிந்து பயனடைய நான் பயிற்சி பெற்றவன். அதனாலே முதலிலே சொல்லிக் கொள்கிறேன், நான் அதிக நேரம் பேசாமல், சீக்கிரமே என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் கோடிட்டுக் காட்டும் குறிப்பாகும். அது சாதாரணமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கருத்துக்களையும், அமைச்சரவையின் எண்ணங் களையும் பிரதிபலிக்கும் ஓர் உரையாக இருக்கும் என்பது ஜனநாயக மாபு அறிந்த எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அந்த முறையில் அரசு ஆற்றக் கூடிய பணிகளைக் குறித்தும், இனி செய்யக்கூடிய காரியங்கள் குறித்தும் கொடுக்கப்படுகின்ற ஒரு நல்ல குறிப்பாகும் அது.

சிறந்த அம்சங்கள் நிறைந்த ஆளுநர் உரையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அறிவும் ஆற்றலும், புரிந்து கொள்ளும் சக்தியும் மிகுந்த உங்களுக்கும், இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்கும் அந்த நல்ல அம்சங்களைப்பற்றித் தனித் தனியே அதிகமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். வேண்டாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று சொல்லுவார்கள். சிலர் ஆளும் கட்சியை வேண்டாத மனைவியாகக் கருதி, அது தப்பு, இது தப்பு, [illegible]





சொல்லலாம். உண்மையிலே மனதிலே கை வைத்து, மனச்சாட்சிப்படி நடந்து கொண்டால், நிச்சயமாகச் சொல்ல முடியும், ஆளுநர் உரை பல சிறந்த அம்சங் கள் உள்ள உரை என்று. அதை அவர்களுக்கே விட்டு விடுகிறேன்.

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலின்போது, கட்சி ஆட்சிக்கு வந்தால் இன்னின்ன காரியங்கள் செய்வோமென்று கட்சியின் சார்பிலே வாக்குறுதி தந்தது. நீதி, நேர்மை, நாணயத்திற்குத் தலை வணங்கி மக்கள் நலன் ஒன்றையே மனதில் கொண்டு சீரிய முறையில் அரசை நல்வழியில் நடத்திச் செல்லும், மக்கள் உள்ளத்தில் மங்காத இடம் பெற்றுள்ள மாண்பு மிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார். சொல் ஒன்று, செயல் ஒன்று என்று நடப்பவர் அல்ல அவர். சொன்னதைச் செய்வார், நினைத்ததை முடிப்பார்.

முன் ஆட்சி நடத்தியபோது கூட நம்முடைய முதலமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆவன செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் அவரைச் செய்யவிடாமல் தடுத்து விட்டார்கள். அப்படி இருந்தும் அவர் அதையெல்லாம் நிவர்த்தித்து, நல்ல முறையிலே பணி யாற்றி, நல்ல காரியங்களைச் செய்ய முன் வந்தார்கள். இன்னும் செய்ய விட்டால் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்று விடுவார்களென்று எந்தவிதக் காரணமும் இல்லாமல் பதவியை விட்டு நீக்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால் இப்போது மகோன்னத வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இப்போதும் அவர் சிறந்த அரசைக் கொடுப்பார். அவர் உண்மையிலேயே அதில் அக்கறை கொண்டிருக்கிறார், சட்டப்படியும், சம்பிரதாயப்படியும் அமைச்சரவை பதவிப் பிரமாணம் எடுத்ததும், முதல் வேலையாக மக்கள் முன் ஆஜராகி, தன் அரசின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், திட்டங்களையும் கோடிட்டு, முதல்வர் உறுதி கொடுத்து, இதற்கு முன் எவரும் செய்யாததைச் செய்து, சரித்திரம் படைத்தார். முதல்வரவர்கள் அன்று திட்டவட்டமாக, சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொன்னார்கள். "தேர்தலின்போது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். வறுமைக் கோட்டின் கீழே உள்ள மக்கள் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும், அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர முன்னுரிமை கொடுக்கப்படும்; தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோரின் நலன்களைக் காப்பாற்றி அவர்களை மேம்படுத்தப் பாடுபடும்; சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளும், நலன் களும் எல்லா வகைகளிலும் காப்பாற்றப்படும்; விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மீனவர்கள், தொழிலாளிகள், பாட்டாளிகள், ஆசிரியர்கள்,

அரசு அலுவலர்கள், காவலர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கம் ஆகியோரின் உரிமைகளும், நலன்களும் பேணப்படும்; அறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையான தமிழ் மொழியாக்கம், தமிழர் உயர்வு, தமிழ் நாட்டின் மேம்பாடு, மாநில உரிமைகள், ஏழை எளிய மக்கள் ஏற்றம், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கை, சாதி மத வேறுபாடற்ற முறையில் அனைவருக்கும் வாழ்வு அளிக்கத் தொடர்ந்து பாடுபடப்படும்; அனைத்து அரசியல் கட்சிகளையும் விருப்பு வெறுப்பின்றி நல்லுணர்வோடு அரவணைத்து, அன்புடன் பாதுகாப்பு கொடுக்கப்படும்; அமரர் அண்ணாவின் சமுதாயப் பொருளாதாரக் கொள்கையை அமைக்கப் பாடுபடப்படும்.'' அண்ணா சிலைக்கு முன் மேற்கூறியவாறு வாக்குறுதி கொடுத்தபின், தொடர்ந்து வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற வகையிலும் மாண்புமிகு முதல்வரின் கருத்துக்கள் நன்கு பிரதிபலிக்கின்ற வகையிலும் ஆளுநர் உரை அமைந்திருப்பது நன்கு புலப்படும்.

(பிற்பகல் 5-00)

ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அவரது நம்பிக்கைக்குரிய அமைச்சர்களும், தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளையும், அண்ணா சிலைமுன் வெற்றி வீரனாக, மக்கள் திலகமாக நின்று மக்களுக்கு அளித்த உறுதிமொழியையும் செவ்வனே நிறைவேற்றுவதில் ஆர்வத்துடனும் துரிதமாகவும் செயல்படுவது கண்கூடாகத் தெரிகிறது. காவலர்களும் அவர்கள் குடும்பங்களும் மனங்குளிர, காவலர்களில் தவறான பாதையில் சென்றவர்களின் நடவடிக்கைகளை மறந்து மன்னித்து அவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க உத்தரவு போடப்பட்டுள்ளது. கிராம அதிகாரிகளுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள் மனமகிழ்வு அடையுமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் நலனுக்காக நல்ல பல திட்டங்களை இந்த அரசு வகுத்துள்ளது. மாண்புமிகு முதல்வரின் சுறுசுறுப்பான செயல்களும், நடவடிக்கைகளும் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளன. எல்லாப் பிரிவினரும் ஒளிமயமான எதிர்காலம், மகிழ்ச்சிகரமான பொற்காலம் தங்களுக்குக் கிடைத்து விட்டதாக உணர்ந்து இன்பத்தில் திளைத்திருப்பதைக் காண்கின்றோம். இந்த நிலையிலே ஆளுநர் உரையிலுள்ள நல்ல அம்சங்கள் அனைத்தும் வெகு விரைவில் நிறைவேற்றப்பட்டு மக்கள் மன நிறைவு பெற்று மகிழ்ச்சியில் திளைப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆளுநர் உரையில் முக்கிய அம்சங்கள் (1) வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவும் திட்டம், (2) விவசாயிகள் குழு, (3) விவசாயிகள் கடன் சுமை குறைப்பு, (4) ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் சீரமைப்பு, (5) கூட்டுறவு



நிறுவனங்கள் சீரமைப்பு, (6) மின்சாரம்-அலுமினியம் பண்டமாற்று, (7) கைத்தறித் துறை மேம்பாடு, (8) மத்திய அரசு முதலீடு, (9) பல்கலைக் கழகங்கள் அமைப்பு, (10) தொழில் பயிற்சிக்கு ஊக்கம், (11) ஆசிரியர்கள் அந்தஸ்தை உயர்த்துதல், (12) நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் தேர்தல், (13) தாழ்த்தப்பட்டோர் நலன், (14) தொழிலாளர் நலன் ஆகியவற்றைப் பற்றியதாகும். இதிலே பட்டதாரிகளுக்கான உதவித் திட்டம் சொல்லப் பட்டிருக்கிறது. இது போன்ற புரட்சிகரமான திட்டம் ஏற்கெனவே இருந்தது. நிச்சயமாக இதையும் விரைவிலே நிறைவேற்றி விடுவார்கள். அடுத்தபடியாக, புதிதாக பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, மாண்புமிகு தலைவரவர்களே, தங்களைப் போன்றவர்கள் எல்லாம் "தமிழ் பல்கலைக் கழகம்" அமைவதை மிகவும் மகிழ்ச்சிகரமாக வரவேற்பீர்கள் என்று கருதுகிறேன். நீங்கள் மட்டுமல்ல, நாட்டிலுள்ள எல்லாப் பிரிவினரும் இதை வரவேற்பார்கள்.

அடுத்து, மின்சாரத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழக அரசு, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி கேரளா தமிழ் நாட்டிலிருந்து அலுமினியத்தைப் பெற்றுக் கொண்டு, தமிழ்நாட்டுக்கு மின்சாரத்தை வழங்கும் நல்லதொரு பண்டமாற்று முறையை நல்லபடி செயல்படுத்தி வந்தது. அந்தப் பண்டமாற்று முறைக்கு இப்போது மத்திய அரசு தடை விதித்துள்ளது. இதனால் தமிழ்நாடு தேவைப்படும் மின்சாரத்தைப் பெற முடியாமல் போகிறது. மின்சார வெட்டு காரணமாக தொழிற்சாலைகள் பாதிக்கப் பட்டுள்ளன. சில தொழிற்சாலைகள் ஒன்று கூடி அனல் மின்நிலையம் அமைத்துக்கொள்வதற்கு மத்திய அரசு ஆதரவும் அனுமதியும் தர வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கு, கப்பல் மூலம் நிலக்கரியை எடுத்துச் செல்ல மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் அனல் மின் உற்பத்தி நிலையங்களை, நலிந்த உற்பத்தி நிலையங்களை எடுத்துக்கொள்வது என்ற பெயரில், எடுத்துக்கொள்ள முயற்சி செய்வதாகத் தெரிகிறது. இது மாநில அரசின் உரிமைகளைப் பறிப்பதாகும். மத்திய அரசு இந்த முயற்சியைக் கைவிட வேண்டும். மாநில அரசுக்கு வேண்டிய உதவி செய்ய வேண்டும். மாநில அரசு நலிந்த உற்பத்தி நிலையங்களை திறமையாகச் செயல்படுத்த, மத்திய அரசு உதவ முடியும். 110 மற்றும் 120 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட மின் நிலையங்கள் வேலை செய்யும் நிலைபற்றி ஆராய நிபுணர் குழு ஒன்றை மத்திய அரசு அமைக்க வேண்டும். ஆக்க ரீதியில் மத்திய அரசு இந்த விஷயத்தில் உதவ முன்வர வேண்டும். மத்திய அரசின் கீழ் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மீது, மாநில அரசுக்குக்

பதவி ஏற்ற நேரத்தில், பதவிப் பிரமாணம் எடுக்கும்போது, எதிர்க் கட்சியினர் குறிப்பாக பிரதான எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் யாருமே விழாவில் கலந்துகொள்ளவில்லை. உண்மையிலேயே அவர்கள் ஒத்துழைப்புக் கொடுப்பதாக இருந்தால், அவர்களுக்கு மனக் கசப்பு இல்லையென்றால், நிச்சயம் வந்திருக்க வேண்டும். ஏன் வரவில்லை என்று தங்களையே அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும். இனிமேலாவது அந்தமாதிரி கசப்பு உணர்ச்சியை அவர்கள் விட்டுவிட்டு அரசுக்கு அவர்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டும். இன்னொன்றையும் நான் இந்த சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சியினருக்குச் சொல்வேன். எதிர்க் கட்சிகள் நீதிபதிகளைப் போல் நடந்துகொள்ள வேண்டும். ஒரு பொறுப்பான எதிர்க் கட்சியாக இருந்து, நல்லது செய்யும் போது, அதைப் பாராட்ட வேண்டும். அதுபோல் தவறுகளைச் செய்யும்போது, சுட்டிக்காட்டி தவறுகளை அரசு தவிர்க்க உதவி செய்ய வேண்டும். நீதிபதி வக்கீலிடம் கோபித்துக் கொண்டு ஒரு கேசைத் தள்ளிவிட்டால் . . .

(பிற்பகல் 5-10)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படியும் நடக்குமா ?

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** நீதிபதி அப்படிச் செய்யமாட்டார், செய்யக் கூடாது. அப்படித் தள்ளிவிட்டால், வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்தான் கஷ்டப்படுவார்கள். அதுபோல, நீங்கள் எதிரிக் கட்சியாக நினைத்துக் கொண்டு, ‘ நீங்கள் தானே கொண்டுவந்திருக்கிறீர்கள், நாங்கள் எதிர்ப்போம் ’ என்று நினைத்து எதிர்த்தால், மக்கள்தான் அதனால் கஷ்டப்படுவார்கள். ஆகவே, உங்களுடைய ஒத்துழைப்பை இந்த அரசுக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் கடைசி பாராவிலே இருந்து ஒருசில வரிகளைப் படித்துக்காட்டி முடித்துக்கொள்கிறேன்.

“ கசப்பான நிகழ்ச்சிகள் ஏதேனும் இருந்திருக்குமாயின் மறந்திடுங்கள்! வாள் போன்ற கூர்மையான வார்த்தைகளைவிட வைரம் போன்ற ஒளிவீசும் வாதங்களே சிறந்தவையாகும்! மக்களாட்சி முறைக்கு அரண்களாக உங்கள் வாதங்கள் இருக்கட்டும்! உங்கள் திறமை நாட்டின் வறுமையை விரட்ட உதவட்டும்! உங்களை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு ஒளிவிளக்காக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்ற என் தணியாத ஆவலைத் தெரிவித்துக்கொண்டு ”

உங்கள் அனைவருக்கும் நன்றியைச் சொல்லி இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



* **THIRU A. R. DAMODARAN :** Hon. Chairman, Sir, before I venture to offer my remarks on the Governor's Address, may I, Sir, convey my personal felicitations to you on your birthday and wish you many many years of happy and useful existence? The reason why I hesitated initially was that I had requested Thiru Ramamoorthy to speak on behalf of all of us and I did not wish to interrupt at a later stage when others had got up to speak. I was also hesitant whether you would like birthday felicitations to be conveyed in English. But, after finding that you tolerated it from two gentle-ladies who are Members of this Council, I also have the courage to refer now to it. May I, on my own behalf and on behalf of the constituency that I represent, wish you many more years of useful existence?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ரொம்ப நன்றி.

* **THIRU A. R. DAMODARAN :** Coming to the Governor's Address, this is one of those unique sessions when we have two Governor's Addresses in succession. On February 15th, I remember the Hon. the Minister for Finance replied to the discussion on the Governor's Address when we met last. On February 16th, we had the solar eclipse. On February 17th, we had the eclipse of nine State Governments in India. That was in February. Although the Elections have come about and the results have come about in this fashion, I would still like to reiterate that the dissolution of the Legislative Assembly in Tamil Nadu—I do not wish to refer to the Legislative Assemblies of other States because I do not know the position that existed in those States—was an act of grave Constitutional impropriety. I am glad that the people of Tamil Nadu have replied in a very effective manner in voting back a Government which did not deserve to be dismissed on the grounds on which it was dismissed. We may find fault with the previous Government for its sins of omission and commission. In fact, some of us on this side had not hesitated to bring to the notice of the Hon. Ministers on the Treasury Benches, when we felt that they were delaying decisions, the possible ill-effects on the people of our State. But, nonetheless, I am glad that the Elections have been conducted in 3½ months and the results announced and that all of us have accepted the results with good grace. My only other requiest is " Whenever State Assemblies are dissolved, at least let them be dissolved in odd years and not in even years because in even years we do not have the opportunity of bidding farewell to one-

third of the Council Members who retire every even year". Many of the Members have left. We have not bid them farewell. Well, Sir, a chance has gone and now I would like to say that we welcome the new Government and I would like particularly to welcome the Hon. the Chief Minister's assurance the taking into account the criticisms that have been levelled in the past,

(மாற்றுத் லைவர் புலவர் புலமைப்பித்தன் தலைமை).

this Government will take necessary steps to see that decisions are taken as quickly as possible so that there may be no complaint of a delayed decision. One such decision that is urgently required is the decision about farmeds' debts and farmers' demands regarding a remunerative price for their produce. I would like to take this opportunity to make an appeal—because I have seen a report in the newspaper to-day of an announcement by the leader of a prominent farmers' organization that an agitation is to be launched on the 5th of July to achieve the demands of the farmers—to this gentleman to realise that the Ministry has been formed and has been in existence hardly for fifteen days and this is a matter that would require a great deal of consideration before anything urgent could be done regarding the debt relief that the farmers want. Considering the importance of this question, I would also request the Government to produce during the course of the ensuing Budget session a White Paper on the demands of the farmers because many of us do not know what exactly the demands are, what the financial implications are likely to be and in what form relief is requested by the farmers, The request made by the State Government to the Central Government regarding re-scheduling of debts and writing off of interest and a variety of other demands and solutions should be embodied in the White Paper so that Members of the Legislature may have an oppor-tunity to discuss these in detail during the Budget session. On one matter, however, I think the farmers are justified in feeling aggrieved and that is that in spite of an increase in the price of fertiliser from Rs. 1,450 per tonne to Rs. 2,000 per tonne and in spite of an increase in the price of diesel from 159 paise per litre to 226 paise per litre or thereabout, an immediate announcement has not been made by the Agricultural Prices Commission or the Government of India regarding an enhancement in the procure-ment price of agricultural produce in Tamil Nadu. I wish to state that farmers cannot plunge into ploughing and farming operations during the coming agricultural season if they are not definitely assured of a remunerative price for paddy. In this





regard I would like to state what I have stated often in the past. I wonder why when agriculture and agricultural pricing is a State subject as laid down in Schedule VII to our Constitution, we have accepted an authority like the Agricultural Prices Commission to fix the price of agricultural produce throughout India. It is one of those unfortunate developments in the early sixties for which

(பிற்பகல் 5-20)

we are paying very heavily at the present moment because the farmers have a justifiable case for an immediate increase in the procurement price paid, by at least Rs. 20 per quintal on account of the rise in the price of fertilisers and the rise in the price of diesel alone. Sir, nobody bothers about the economics of a farming operation. I remember that in 1974, in the Budget documents of the previous Government, a specific mention was made that a Committee would be appointed by the Government to go into the cost of production of various agricultural commodi-ties in our State. We waited for one year, we waited for two years and we are waiting for seven years now. But, no such Committee was appointed because it was felt that if this Committee was appointed and if it went into the problems of the farmers in so far as the production-cost of agricultural produce was concerned, an immediate increase in the procurement price would have to be given, resulting in more Dearness Allowance payable to Government employees and in extra expenditure to the Exchequer. I would like to make an appeal to the Government to appoint a Committee which would go into the cost of production. I am not, for a moment, saying that this Committee should be appointed and then the increase in procurement price should be given. A Committee is usually a device to delay a decision. In this case, I would request that an increase in the procurement price of paddy and other commercial crops be given immediately and a Committee also be appointed to go into the current cost of produc-tion of agricultural commodities in our State. Sir, nobody realises that farming is an industry. It is a cottage industry. If a man has two to three acres of land, it is a cottage industry. But we do not calculate the cost of inputs like fertiliser, seeds, labour costs, etc. and what is far more important, the input made by the farmer hmself in his ffarm. Generally, they leave this out of calculation with the result that, today, there is no doubt that the agricultural sector is still a very much neglected sector. I would only like to end my remarks on this subject by requesting Thiru

Narayanaswami Naidu not to precipitate an agitation in the month of July. I am also a farmer in a small way. I understand the problems of farmers because I have conducted agricultural operations. It is not fair to expect a Government, within 25 days of its assumption of office, to reach a decision about the write off of agricultural loans to the tune of Rs. 450 crores. Still we have not been able to understand what is the amount of write-off which is being demanded. Do they want short-term loans to be written off? Do they want medium-term loans to be written off? Do they want long-term loans to be written of? Do they want loans to be written off for small farmers, medium farmers and large farmers without any distinction being made? Do they want loans given for tractors amounting to Rs. 50,000 or Rs. 60,000 in each case to be written off? Do they want loans given for big borewells each of which might have cost Rs. 30,000 or Rs. 40,000 tto be written off? Is there any Government on earth which can write off such loans? I am stating an unpopular view and I may not be supported by even my hon. Friends on this side of the House. But, can any one of us, with a responsible knowledge of public finance come forward with a proposal to Government and say, "Please write off Rs. 450 crores"? I do not know the exact figure and the Government have not elucidated how many crores are involved. But the hon. the Mover of the resolution has himself expressed that the co-operative institutions have come to a standstill in our State. Excepting for three districts in our State, to my lmited knowledge, the co-operative banks in all the other districts are folding up and are unable to give new loans because they are not able to get refinancing from the Reserve Bank. I would make an honest plea to the farmers' organisation to realise this. We were told that during the recent Elections, the leaders of the farmers' organisation were met by all political parties and so they have goodwill of the political parties. Therefore, I think that nothing will be lost if we give time, at least till the Budget session is over, for the Government to solve this ticklish problem.

Sir, another point which I would like to refer to is the inter-State problem about the utilisation of inter-Sate waters. Regarding the Cavery Water dispute, the Governor's Address reads but "this Government would endeavour to seek a solution which will not be detrimental to the interests of Tamlil Nadu". I do not know who wrote this paragraph, whether it was written in Tamil and then translated into English or *vice versa*.



But they have chosen to take a negative stance in saying that the Government would endeavour to seek a solution which will not be detrimental to the interests of Tamil Nadu. There is a great deal of difference between one saying that he will endeavour to achieve something which will be of benefit and saying that he will try to obtain a solution which will not be detrimental to the interests of the farmers. I have a feeling that from 1972 or earlier still if I remember correctly, we have been living on hopes. In 1972 we were living on hopes and we were hopeful of solving the Cauvery water dispute, which was two years before 1974 when the agreement was supposed to come to an end. In 1973, 1974, 1975, 1976, 1977, 1978 and 1979 also we were continuing to be hopeful of solving the dispute. May I point out that there is a grim urgency required in solving the problem of Cauvery Water Dispute? The reason is that during a good monsoon we will have no problems simple and there will be enough of water in K.R. Sagar and Mettur Dam to give water to many areas in Cauvery Delta. The trouble will come when there is a failure of the monsoon and when the Mettur Dam will not fill up even till August and then 3 1/2 lakh acres of land in Thanjavur Delta area will be left high and dry and the granary of Tamil Nadu producing 25 per cent of the total paddy in our State will be left high and dry. I would like to make an earnest appeal to the Government. While I appreciate the principle and spirit behind the statement in the paragraph that the Government would try to solve this by having discussions with their counterparts in Karnataka, I would only say that we have tried this in the past and we have not succeeded. I would request the Government to think of other alternative measures because we should not rely on hopes alone on this particular matter.

The other matter which is referred to in paragraph 12 is something which is most appropriate. It is about the quantum of Central investment in Tamil Nadu which has been quoted in the document. My hon. Friend Thiru Ramamurthy may feel that it is a matter of confrontation with the Centre, but I do not think it is so. It is an accepted fact that the Central investment in Central sector undertakings in Tamil Nadu has come down in terms of percentage. We have the Bokaro Steel Plant in which a sum of Rs. 1,200 crores has been invested and another investment of Rs. 800 crores is indicated in the Budget for 1980-81. I appreciate the views of Tamil Nadu Government in this respect. The Finance Minister has mentioned that Tamil Nadu is ideally suited for establishing Defence Industries and that it s an ideal location

from the security point of view for expansion of Defence Industries. I hope the Government of Tamil Nadu will be able to persuade the Government of India to step up the quantum of Central investment because this undoubtedly will give a fillip to secondary and tertiary industries in our State.

(பிற்பகல் 5-30)

May I also mention in this regard that, while I appreciate the view of the Tamil Nadu Government regarding what may be termed the discriminatory investment in our State there is a feeling that many private sector industries which have applied for expansion, modernisation and for the establishment of new industries have not received the required encouragement from the Government of Tamil Nadu in pushing the schemes through in Delhi ? Nowadays, in Delhi, if you send an application for a licence for an industry and if you hope, hopefully, that some result will come out of it without the active help and encouragement of the local Government, you are sadly mistaken. We must realise that we are now having State Governments in almost all the States which are of the same complexion as the Government at the Centre. Therefore, we in Kerala. West Bengal and Tamil Nadu have to be a little more careful in canvassing the cases of licences even for private sector industries in our State. I would appeal to the new Minister for Industries—I do not know the exact person who is in charge—to find out and sale his Secretariat how many licences are pending sanction from the Government of India for the private sector industrialists in our State. Everyone is aware that a licence is required only if the investment exceeds Rs. 3 crores or if it is in the priority sector. If the Minister and the Government could clear this backlog, we would have immediately 125 industries in Tamil Nadu ranging in investment between Rs. 3 crores and Rs. 10 crores in each industry which would give rich employment opportunities to the youth of our State.

Regarding cottage industries and small-scale industries, this Government has always evinced keen interest in the District Industries Centres which were a major innovation of the Janata Government. It should not be discouraged by the Government of India purely because it was a Janata experiment. I know from experience that the District Industries Centres have been doing good work. They deserve encouragement because rural industrialisation can



only come about with the development of these District Industries Centres. I hope that the Government of Tamil Nadu, which has taken to the District Industries Centres Scheme very seriously will give further encouragement and further resources to these District Industrial Centres so that they develop and speed up industrialisation in the rural sector.

Sir, I was very happy to read that new Universities had been sanctioned by the University Grants Commission. On February 15th, we did not know whether they had been sanctioned by the University Grants Commission. But, obviously, between February 17 and June 15, something has happened and the sanctions have been received. If the sanctions have been received, we are extremely happy. Possibly, this is one of the few advantages of having President's Rule even though for a brief period. I am glad that Coimbatore and Tiruchirappalli will have Universities. I am also glad that Karaikudi will have a University of Technology. In this connection, I would only like to make one appeal and this is a proper occasion for that because nobody is likely to feel embarressed. I would like to make an appeal that these Universities be named after the towns in which they are situated. I have made this plea before and I do not wish to enter into a controversy. But I would much rather prefer that they were known as Coimbatore University, Tiruchirappalli University and Karaikudi Institute of Technology rather than naming them after personalities and inviting controversy. This is only a small request, and I leave it to the Government to decide. My request is from the point of view of the students studying in those institutions and from the point of view of their getting recognition abroad. This is one request that I make and I hope I will not be misunderstood by the Members of this House.

Sir, an announcement has been made that a Tamil University is going to be created. Sir, I do not know what is a Tamil University. It has not been explained in the Governor's Address and my hon. Friend, Thiru Venkatesan has also not taken the pains to explain to us what a Tamil University is. Does it mean that this University will be purely devoted to the study of the Tamil language and for the conduct of research for the development of Tamil literature and Tamil language and that no other subject will be covered by the University? I am unable to comprehend this. If that is the case, then it is better to call it an

Institute of Tamil Studies and Research. In that case it would be very proper. But a University cannot be complete unless there are various disciplines attached to that University. If must have subjects like science, arts, humanities, etc. In fact, the modern trend in Universities is to have a multi-disciplinary approach and no single subject can thrive in isolation. Therefore, I would like the Government to clearly explain what they mean by the establishment of a Tamil University. If it is an Institute for Tamil Research and Tamil Language, it is perfectly all right. But if it is meant that in this Tamil University, they are not going to teach any other language either of Indian origin or of foreign origin, then they are likely to have difficulties in that they may have a University but they will not have any students. Therefore, Sir, I would like the Government to give us a clear exposition on what exactly they have in mind so that we may be able to offer our suggestions in the matter. I have myself stated at times that in view of the prejudice that is developing against the English language, in spite of the fact that students want to study English, sufficient facilities are not provided for them. I would, therefore, rather wish the establishment of a Tamil University where everything could be taught in Tamil, even there can be an Engineering College in Tamil, a Medical College in Tamil and a Commerce College in Tamil. All the exponents of Tamil can work for the development of Tamil and see if they can succeed at least in 20 years' time in getting on without English language in any of the Colleges in our State. There is also another aspect in establishing a Tamil University in our State. The Government should take care to see that the 185 and odd departments of Tamil in our various colleges do not suffer because all the students there might go and enter the Tamil University. I am only mentioning this as a practical difficulty and I have no animus against Tamil. In fact, I am a person in favour of having an Institute for language study in our State, where we can study Russian, Chinese, Japanese, Spanish, Italian and French and all the fourteen Indian languages mentioned in the Constitution. We have not developed an Institute of Languages and my impression is that it was only because of our prejudice against languages other than Tamil. I hope that the Government will consider my suggestion and let us know exactly what they have in mind.



The proposal to take the Panchayat Union Teachers into the Government sector is very welcome. We have seen only a very bald statement in the Governor's Address without any details. I would like to take this opportunity of reminding the Hon. the Minister for Education—we are well aware of the same—of the problems that we had in 1966 when an announcement was made that District Board Schools would thereafter be considered Government Schools. It took 16 years for this problem to be solved and the credit goes to the Hon. the Minister for Education who achieved the integration of the 'A' and 'B' Wings. The Government are now touching the Primary Schools and we will have different types of teachers and institutions—private aided schools, schools run by Panchayats and Municipalities and Panchayat Unions, Backward Classes Department and Harijan Welfare Department. There are so many castes in the educational institutions. I would, therefore, request the Hon. the Minister for Education to exercise due caution because it is a sensitive issue affecting 1,25,000 teachers and if there is going to be a problem, it will mount into a huge cascade of agitation. It is advisable to consult the representatives of the various schools and teachers for the purpose of thrashing out all the problems involved. I have a special request to make to the Government in this connection. I am afraid all our local bodies are dying now because of the lack of representatives elected by the people. Is there any person here who can state that the lack of elected representatives and the appointment of Government Officers has improved the local administration in any one of the panchayats or municipalities in any one matter?

(பிற்பகல் 5·40)

I have not found any improvement. It is true that in politics we quarrel and, in Municipalities we will probably quarrel about whom to give a Civic Address to. But, regarding the essential amenities that are required in local bodies, it requires a Municipal Councillor or a Panchayat Union Chairman to give drive, initiative and push to local administration. It cannot be achieved by having a dead wooden bureaucracy. I think that a very radical proposal has been enunciated and that the voting age is going to be reduced to 18. The Hon. the Chief Minister has embarked on an adventure which will be considered and debated upon for many years in the future. Pandit Jawaharlal Nehru accepted the proposal for giving adult franchise and we gave adult franchise to all over the age of 21. Now, for 30 years, we

have had the experience of adult franchise and we are still trying to think of how we can reform the electoral system so that elections can be run without booth-capture, murder, kidnapping, arson and looting. I know that no political party will support me in my view because they will not get the votes. I am confidently saying this because I am not a candidate for any local body election. I feel that this was an idea that could have been considered with greater care and deliberation. I say this because I have a fear. Today our colleges are not able to run because we have elections to students' unions and some of our students behave as if they are the big political leaders of the present and not of the future. If they reduce the voting age from 21 to 18 and if the boys in all the 1,200 and odd Higher Secondary Schools run by the Hon. the Minister for Education come out into the streets canvassing for candidates for Panchayat Elections and Municipal Elections, well, I leave it to the imagination of the House to realise what it will be. I feel that we should not be precipitate in such matters. We have 60 per cent illiteracy in our country. It is not to say that illiterate persons do not know how to vote. I would not, for a moment, say that. But there is a time when students will have to study and we are interested in seeing that our students become skilled in various vocations. To drive them out of the schools into the Municipal streets and drains, canvassing for candidates for various political parties is not, in my view, how the younger generation is to be trained as citizens of the future. Of course, I know that I would make no impact on any political party but I would like to say that this is my honest personal opinion. Perhaps, 25 years later, a Member of this Council may appreciate this and say, "Here was a man who warned the Government but it did not listen to".

Sir, we are all expecting the Budget and I think we are now having a very good occasion when we would like to convey to the Government that we expect a lot of reliefs in this Budget. I mentioned earlier that this Government was unjustly dismissed in February. Now, I invite the attention of the Members of this House to the fact that a man like Thiru Venkataraman, Finance Minister of the Government of India, had to say that the Tamil Nadu Budget which was presented in Parliament and which was virtually the Budget which our Government would have presented, was the best Budget that any State Government could have presented in India in 1979-80. Due to the kindness of the Legislature Secretariat some of us were able to get copies of those Budget



documents. Even though none of the other Members of the Assembly got those documents, about 20 or 30 of us were favoured with copies of those Budget documents that were presented in Parliament. Against an anticipated revenue of Rs. 849 crores, the revenue went up to Rs. 924 crores. A sum of Rs. 75 crores more was got by the Government of Tamil Nadu and there was hardly any deficit. In fact, it was one of the very good Budgets that could have been presented by any State Government purely from the financial point of view. Perhaps, some Members may say that sufficient money was not spent on formation of roads, welfare programmes, etc. But that is entirely a different matter. It was not a bankrupt Government and it was a Government which acted wisely and well in so far as financial matters were concerned. It did not indulge in reckless expenditure. Had they wanted, they might have announced more concessions in February, like concessions to the unemployed graduates. It would have made only a difference of Rs. 4 crores or Rs. 5 crores which the Budget could have well withstood and there would have been no risk at all. But, how could they be accused of financial indiscipline ? I have a reason for mentioning this. The Governor's Address has been a very generous Address and I was surprised in some respects. If it had been any other Government like the West Bengal Government, they would have ten paragraphs criticising the dissolution of the Assembly. The Hon. the Chief Minister, evidently, decided as a matter of policy that it was not necessary to go into the past and that we should look to the future. It is a very good approach and one which is extremely laudable in the present circumstances when all of us are anxious that we should go ahead with nation-building activities like better industrialisation, more employment opportunities for our youth, etc. In this endeavour, we extend our whole-hearted support. We may criticise the Central Government and rightly so. It is a right of the Opposition to criticise. I have done so consistenty for fourteen years and I am not going to change my attitude even if they have 500 members belonging to the Congress out of the 532 Members in Parliament. It is my right, as a Member of the State Legislature, to point out to the Central Government that where the State Government is being neglected, it should be its endeavour to help the State Government in promoting its activities. I would like to assure the Hon. the Chief Minister and his Colleagues that in their endeavour to secure more resources for

முதலமைச்சர் அவர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். சந்தர்ப்பத்தை விட்டுவிடக் கூடாது. அவர்கள் நல்ல உடையவர்கள். அவர்கள் நன்றாகச் செய்வார்கள். செய்யக்கூடிய ஆர்வம் எதிர்பார்ப்பார்கள். நாம் எல்லாம் எதிர்பார்ப்போம். நிச்சயமாக மக்கள் அதை வாழ்த்தையும், நம்பிக்கையையும், பிரார்த்தனையையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு நம்முடைய

இப்போது மாண்புமிகு திரு. வெங்கட்ராமன் அவர்களால் டெல்லியில் பட்ஜெட் வாசித்தளிக்கப்பட்டது. இங்கே இவர்கள் தயாரித்து அனுப்பியது அது. சட்டசபை கலைப்பதற்கு முன்னால் தயாரித்த பட்ஜெட் என்பது தெரிந்ததுதான். செக்ரட்டரி அவர்கள் அனுப்பியதுதான். நானும் சுமாராகப் பார்த்தேன். விவரமாகப் பார்க்கவில்லை. 8, 9 கோடி என்றெல்லாம் பார்த்தேன். அந்த பட்ஜெட் 'ஃபைனஸ்ட் பட்ஜெட்' என்று அவர்கள் சொன்னதைப் பத்திரிகையில் படித்தேன். அதுவே போதுமானது. அது 'ஃபைனஸ்ட் பட்ஜெட்' என்றாலும், இன்னும் போதாது என்றுதான் என்னைப் பொறுத்தவரையில் சொல்வேன். சென்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து வாங்கவேண்டிய பணம் இன்னும் இருக்கிறது. மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அங்கே நிதி அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போது வாங்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அவரைக் கேட்க வேண்டும்.

அன்எம்ப்ளாய்மெண்ட் என்று சொல்கிறார்கள். அன்எம்ப்ளாய்ட் கிராஜுவேட்ஸ், அன்எம்ப்ளாய்ட் பர்சென்ஸ் இருப்பதாகச் சொல்கிறார்கள். அன்எம்ப்ளாய்மெண்டைக் குறைப்பதற்கு இன்டஸ்ட்ரீஸ் வர வேண்டும் அப்படி வந்தால்தான் நல்லது. 'டிபென்ஸ் இன்டஸ்ட்ரீஸ்' எல்லாம் வர வேண்டும் என்று நானும் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் காலத்திலிருந்தே திருச்சிராப்பள்ளி பி.எச்.எல்., ஆர்ம்ஸ் பாக்டரி, பாடியில் ஹெவி வெஹிகிள்ஸ் பாக்டரி போன்று இருக்கின்றன. அவைகளை டபுள் பண்ணப்போவதாக பேப்பரில் படிக்கிறோம்.

இன்ட்டெக்ரல் கோச் பாக்டரி என்று சொல்கிறோம். அங்கு செய்கின்ற வண்டிகள் எல்லாம் உலகத்திலேயே 'பெஸ்ட்' என்று சொல்கிறார்கள். முக்கியமாக ஏர் கண்டிஷன்ட் கோச் Best in the world என்று சொல்கிறார்கள். உலகமெல்லாம் சுற்றுகிறது என்று சொல்கிறார்கள். அந்த இன்டெக்ரல் கோச் பேக்டரியை எக்ஸ்டெண்ட் பண்ணிக்கொண்டே போகலாம். அப்படிச் செய்தால், ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை கிடைக்கும்



என்பதில் சந்தேகம் இல்லை. இதற்கெல்லாம் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இன்வெஸ்ட்மெண்ட் போதாது என்று நிச்சயமாகச் சொல்லலாம். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் இன்வெஸ்ட்மெண்ட் என்றால், அமைச்சர்களே போய் அதைப்பற்றிச் சொல்ல வேண்டும். டெல்லியிலிருந்து தமிழ் நாட்டிற்கு வரவேண்டிய உதவிக்கு நல்ல ஏற்பாட்டை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருந்தார்கள். ஒரு பிரதிநிதியையே அங்கே அனுப்பியிருந்தார்கள். மந்திரி ஸ்தானத்தில் இருப்பவரை, திரு. ராசாராம் அவர்களை அனுப்பியிருந்தார்கள். இப்போதும் மந்திரி ஸ்தானத்தில் இருப்பவரையே அனுப்பலாம். சட்டத்திலே இடமிருந்தால் அப்படிச் செய்யலாம். அப்படி இல்லையென்றால், 'ரெப்ரசன்டேடிவ்' என்று அனுப்பலாம். இடம் இருந்தால் மினிஸ்டர் அந்தஸ்தில் ஒரு ரெப்ரசன்டேடிவ் வைக்கலாம். அங்கேயே இதற்கென்று ஒரு செக்ரட்டேரியேட் இருக்க வேண்டும். அந்த செக்ரடேரியேட்டில் தமிழ் நாட்டிலேயிருந்து போகின்ற பார்லிமெண்ட் மெம்பர்கள், லோக் சபை, ராஜ்ய சபை மெம்பர்கள் எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். 34 வருடமாக இந்த சபையிலேகூட சொல்லியிருக்கிறேன். அங்கே இருப்பவர்களுக்குத் தகவல் தெரியாமல் போய்விடுகிறது. நான் சொல்வது, டெல்லிக்குப் போவதற்கு முன்பாக, சென்னையிலே உள்ள மந்திரிகளைப் பார்த்துவிட்டு அவர்கள் போக வேண்டும். அதற்கு அவர்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்களே ஒரு தேதியைக் குறிப்பிட வேண்டும். அப்படி இல்லாவிடில், அவரவர்கள் சௌகரியப்படி போய்விடுவார்கள். அவரவர்கள் இஷ்டம்போல் போய் விடுவார்கள். சுமார் 10, 15 நாட்கள் முன்னதாக செஷன்ஸ் ஆரம்பிப்பதற்கு முன்னால் பார்த்துப் பேச வேண்டும். ஒவ்வொரு செஷன் 5, 6 மாதங்கள் நடக்கின்றது. அந்தரங்கமான விஷயங்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம். முக்கியமான விஷயங்கள், பிரச்சினைகள், பெரிய பெரிய திட்டங்கள் இவைகளைப்பற்றியெல்லாம் சொல்லி, அவைபற்றி லோக் சபையிலே, ராஜ்ய சபையிலே பேச வேண்டும் என்று சொல்லி அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால், அவர்களுக்கு அது உதவியாக இருக்கும். அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் இருக்கின்றவர்களுடைய ஒப்புதலோடு அவர்கள் அங்கே பேசலாம். அங்கே அவர்கள் 'கம்பேர்' பண்ணிப் பேசலாம். உத்தரப்பிரதேசத்தில் இவ்வளவு, இந்த மாநிலத்தில் இவ்வளவு என்று 'கம்பேர்' பண்ணிச் சொல்லலாம். அது மந்திரி சபையை அவமதித்தது ஆகாது. நாட்டினுடைய தேவையை எடுத்துச் சொல்லலாம். ஒரு தாலுக்காவையோ, மாவட்டத்தையோ பற்றி மட்டும் பேசினால், வேண்டுமானால் தவறு என்று சொல்லலாம். லோக் சபை மெம்பர் பொதுவாக தமிழ் நாட்டிற்கு இது இது வேண்டுமென்று சொல்வது பற்றி ஒன்றும் தவறு

சொல்ல முடியாது. அமைச்சரவை 30 கோடி, 40 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். காவேரி வாட்டர் பற்றியெல்லாம்கூட சொன்னார்கள். அந்தக் காலத்தில் சர் சி. பி. ராமசாமி

(பிற்பகல் 5-50)

ஐயர் எழுதினார். ராஜமந்திரிக்குக் கீழே கோதாவரி, கிருஷ்ணா தண்ணீர் வந்தால் போதுமென்று நாம் சொல்ல வேண்டும். நம் மாநிலத்தில் தண்ணீர் இல்லை. சிறு சிறு பாசன வசதிகள் இருக்கலாம். சிறு சிறு அணைகள் கட்டலாம். அந்தக் காலத்திலேயே சென்னை நகரத்துக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு ஸ்கீம் போட்டு, ஏற்பாடுகள் செய்தோம். அதற்கு மத்திய அரசு உதவியளிக்க மறுத்துவிட்டது. இப்போது 200 கோடி ரூபாய் ஆகிறது. டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் ஒரு விஷயம் சொல்லியிருக்கிறார்கள். காவிரி வாட்டர் டிஸ்பியூட் எப்படி இருந்தாலும் சரி, சென்னை நகருக்கு—கிரேட்டர் மெட்ராஸ் சிட்டிக்கு—400 சதுர மைல் பரப்புள்ள சென்னை நகருக்கு மட்டும் எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதை உடனடியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு 200 கோடி ரூபாய் வேண்டும். ஆனால் 90 கோடி ரூபாய் அளவிற்குத் தான் எஸ்டிமேட் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். அது போதாது. ரிசர்வ் பாங்கில் நிறைய பணம் இருக்கிறது. எல்.ஐ.சி., யூனிட் டிரஸ்ட் ஆகியவற்றில் கேட்டாலும் தருவார்கள். வாங்கிக்கொண்டு வட்டி கொடுக்கலாம். அதிக வட்டி இராது. இன்டஸ்டிரீஸ் மினிஸ்டர் கேட்டாலும் தருவார்கள். அதன்மூலம் நிறைய இன்டஸ்டிரிகளை ஏற்படுத்தலாம், ஐ.டி.எஃப்.சி., ஐ.டி.எஃப்.சி., ஆகியவற்றிடமிருந்தும் கடன் வாங்கலாம். சென்னையில் 'டிக்' நிறுவனம் இருக்கிறது. டாக்டர் ஷண்முகம் செட்டியார் அதன் தலைவராக இருந்தார்கள். இப்போது முதலமைச்சரவர்கள், அவருடைய செக்ரட்டரியையே அதற்குத் தலைவராகப் போட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சென்னை நகருக்குக் குடி தண்ணீர் திட்டத்திற்காகத் தேவைப்படும் 200 கோடி ரூபாயை கடனாக வாங்கிக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினையை அப்படியே விட்டுவிடக் கூடாது. துங்கபத்திரா, கோதாவரி, கிருஷ்ணா தண்ணீர் வந்தால், அது தமிழ் நாடு பூராவும் கிடைக்கும்.

நான் பொதுவாக பாசனம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுரைக்கு வலப்பக்கம் 50 மைல் தொலைவில் மலைகள் இருக்கின்றன. அங்கே பெய்யும் மழைத் தண்ணீரானது சமுத்திரத்தில் போய்ச் சேருகிறது. முன்பு திரு. காமராசர் முதலமைச்சராக இருக்கும்போது, ஓர் ஏற்பாடு செய்தார்கள். எல்லாச் செலவும் செய்கிறேன், 200 கோடி ரூபாயாகும், அதற்கான வட்டியும்



தருகிறேன், வரும் மின்சாரத்தில் பாதியைப் ஃப்ரீயாகக் கொடுக்கிறேன் என்று கேரள அரசிடம் சொன்னார்கள். அதில் மொத்தம் 23 ஸ்கீம்கள் இருக்கின்றன. அதில் 6, 7 தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அங்கேயுள்ள ஆற்றின் பெயர் மறந்துவிட்டது. ஜி.ஆர். பிராஜக்ட் என்று நினைக்கிறேன். அது செயல்பட்டால் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் பூராவும் ஜி.எம்.எஃப். கேனால் மூலமாகத் தண்ணீர் வரும் நிலைமை ஏற்படும். அதற்கு 500 கோடி ரூபாய் தேவைப்படும். ஐந்து ஆண்டுகளில் பாதித் திட்டம் நிறைவேறினால் பெரிய காரியம். ஸ்கீம் போடவே இரண்டு வருடங்களாகும். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் ஸ்கீம் இருக்கிறதென்று சொல்லிவிட்டு, கோயம்புத்தூர் ஆளியார் பிராஜக்டை முடித்தார்கள். இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணமானாலும் ஆட்சேபணையில்லை. எந்தப் பகுதியானாலும் பரவாயில்லை. ஜி.ஆர். பிராஜக்டை எடுத்துச் செய்தால் நல்லது. ஐந்து வருடங்கள் இல்லாமல், இன்னும் 5 வருடங்களில் அந்தத் திட்டத்தை முடித்தால் பெருமையாக இருக்கும். அதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது.

அடுத்து 'அன்எம்பிளாய்மென்ட்' பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இப்போது எல்லோரும் பொறியியல் கல்லூரி என்று சொல்லுகிறார்கள். மொத்தம் ஆயிரம் சீட்டுகள்கூட இல்லை. ஆனால் பிள்ளைகள் நிறைய இருக் கிறார்கள். பாலிடெக்னிக் என்று இருக்கிறது. தமிழில் அதை பொறியியல் பள்ளிக்கூடம் என்றுதான் சொல்ல வேண்டும் ஆனால் எல்லோரும் பாலி டெக்னிக் என்று எழுதுகிறார்கள். அதன் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். என்னுடைய அபிப்பிராயத்தை முன்னாலேயே சொல்லியிருக்கி றேன். ஒரு தாலுகாவிற்கு ஒரு பாலிடெக்னிக், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஜூனியர் பாலிடெக்னிக் ஏற்படுத்த வேண்டும் இது புதிது இல்லை என்ற விவாதத்தை சீப் மினிஸ்டர், எஜுகேஷன் மினிஸ்டர், இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர், பைனான்ஸ் மினிஸ்டர் ஆகியோருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 25 ஆண்டுகளுக்கு முன்பு 'போர்த்து, ஃபிப்த், சிக்ஸ்த் பார்ம்'-ல் படிப்பதை ஜூனியர் பாலிடெக்னிக் என்று வைத்திருந்தோம். 10 ரூபாய் மேனேஜ் மென்ட் கொடுக்க வேண்டும் 10 ரூபாய் கவர்ண்மென்ட் கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு வேறு பீஸ் கிடையாது. 20 ரூபாய் இருந்தால் போதும். எனவே, ஒவ்வொரு தாலுகா, ஒன்றியத்தில் இதை ஏற்படுத்திவிட்டால், மாணவர்கள் படிக்க வசதியாக இருக்கும். IV, V, VI படித்து, கவர்மென்ட் பரிட்சையில் தேர்ச்சியுற்ற பிறகு, மாணவர்களுக்கு பாலிடெக் னிக்கில் இடம் கிடைக்கவேண்டும். ஒரு வருஷம் ஒரு ஸ்கூலில் படித்த

மாணவனை அடுத்த வருஷம் அங்கேயே சேர்த்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். IV படிக்கிறான். ஆனால் V -ல் சேர முடியவில்லை. ஒரு கான்ஸ்டபிள் தன் பையனை எங்கே படிக்க வைக்க முடியும், திருவல்லிக்கேணியில் அவர் இருந்தால், திருவொற்றியூரில் படிக்க வைக்க முடியாது. ஜூனியர் பாலிடெக்னிக்குகள் முன்பு 5 வருடங்கள் நடந்து பின் நின்று போய்விட்டன. அதற்கும் காரணம் கவர்ண்மென்ட் இல்லை. பிள்ளைகளும், தாய் தந்தையர்களும்தான் காரணம். அண்ணாமலை பாலிடெக்னிக்கில் முதல் வருடம் 57 பேர்கள் இருந்தார்கள். அடுத்த வருஷம் 47; அடுத்த வருஷம் 37; அடுத்த வருடம் 17; கடைசியில் 1 என்று ஆகியது. கவர்ன்மெண்ட் ஒரு லட்சம் ரூபாய் தந்தது. கட்டிடம் கட்டாமல் அந்தத் தொகையைத் திருப்பியனுப்பினார்கள். 20 வருடமாகிறது. செங்கல்வராயன் பாலிடெக்னிக் வெட்டர்னி ஆஸ்பத்திரி பின்னால் இருக்கிறது. அந்த ஸ்தாபனம் 80 ஆண்டுகளாக நடந்து வருகிறது. ஆனால் கவர்ன்மெண்ட் பாலிடெக்னிக்குகள் 40 ஆண்டுகளாகத்தான் இருக்கின்றன. அதற்கு முன்னாலிருந்து செங்கல்வராயன் பாலிடெக்னிக் இருக்கிறது. அது ஒரு பெரிய டிரஸ்ட். வன்னிய சமூகத்தைச் சேர்ந்தது. அவர் பெரிய தர்மஸ்தர். அந்தப் பாலிடெக்னிக்கில் 6 கிளாஸ் உண்டு. IV, V, VI க்குப் பதிலாக மூன்று வருஷங்கள் படிக்க வேண்டும். Smithy including foundry carpentry, printing, mechanical electrical என்று 6 classes. மொத்தம் 1,800 மாணவர்கள். இது தவிர பாலிடெக்னிக்கில் 300 பேர்கள் சேருவார்கள். இவர்களைத் தவிர ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள். டீ பார்ட்டி என்றால் 3,800 பேர்கள் இருப்பார்கள், அதற்கு ஆசிரியர்களிடமிருந்து மாத்திரம் 1 ரூபாய் வாங்குவார்கள். பையன்களிடம் வாங்குவதில்லை. அந்த அளவிற்குப் பிள்ளைகள் அங்கே படிக்கிறார்கள். ஆனால், 6 வருடங்களாக அது நின்று விட்டது. அம்பேத்கார் அவர்கள் வந்து பார்த்து 10 இலட்சம் ரூபாய் கொடுத்

(பிற்பகல் 6-00)

தார்கள். விழா ஒன்றும் நடத்தவில்லை. அவரைக் கூட்டிக் கொண்டு போய் காட்டினோம். அதை வைத்து கட்டிடம் எல்லாம் கட்டினோம். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு பாலிடெக்னிக்கும், ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ஒரு ஜூனியர் பாலிடெக்னிக்கும் ஆரம்பிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அதிகம் பேர் கல்லூரிக்குப் போய் வீணாக மாட்டார்கள். 'பிளஸ் 2' படித்து காரியம் ஒன்றும் ஆவதில்லை. ஆட்சி நடத்துவது மக்களுடைய தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது. இப்பொழுது ஓட்டுப் போடுகிற விஷயம் எல்லாம் மக்களுக்கு



நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஓட்டுப் போட படித்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஓட்டு விஷயம் வேறு. பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் என்பது வேண்டாம். அந்தக் காலத்திலே ஜூனியர் பாலிடெக்னிக் பாஸ் பண்ணினால், 30 ரூபாய் சம்பளம். இப்பொழுது பாலிடெக்னிக் பாஸ் பண்ணினால் 600 ரூபாயும், ஜூனியர் பாலிடெக்னிக் பாஸ் பண்ணினால் 400 ரூபாயும் கொடுக்கிறார்கள். டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்களும், திரு. மாசிலாமணி அவர்களும் சேர்ந்து எல்.எம்.இ., எல்.சி.இ., எல்.இ.இ., எல்லாம் அந்தக் காலத்திலே கொண்டு வந்தார்கள். இப்பொழுது அதை டி.எம்.இ. டி. சி. இ. என்று ஆக்கியிருக்கிறோம். கிராஜுவேட்களுக்கு அன்எம்பிளாய்மென்ட் ஏற்பட்டால் தான் அரசாங்கத்திடம் 'கிரீவான்ஸ்' எல்லாம் வைப்பார்கள். ஆகவே நாடு பூரா பாலிடெக்னிக், ஜூனியர் பாலிடெக்னிக் போன்றவைகளை ஏற்படுத்தினால், பட்டதாரிகள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேச்சுக்கே இடமிருக்காது. நாடு பூராவும் 'இண்டஸ்ட்ரீஸ்' நிறைய ஏற்படுத்த வேண்டும். 3 வருடம் படித்து தேர்வு எழுதிவிட்டால் 'பாஸ்' பண்ணி பட்டம் பெற்றுவிடலாம். நாட்டுக்கு 'எஜுகேடட் அன்எம்பிளாய்மென்ட்' தான் ஆபத்து. அன்எஜுகேட்டினால் நாட்டுக்கு ஆபத்தில்லை. அந்தக் காலத்தைப் போல் அல்ல இந்தக் காலம். இந்தக் காலத்திலே படிக்காதவர்களுக்கும், யாருக்கு ஓட்டுப் போட வேண்டுமென்று யோசித்துப் போடத் தெரிகிறது. நாட்டில் 'எஜுகேடட் அன்எம்பிளாய்மென்ட்' என்கிற பிரச்சினை ஏற்படாமல் இருப்பதற்கு ஓரே மாற்று வழி நிறைய பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்துவதுதான். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவசியம் செய்ய வேண்டும். முன்பெல்லாம் பாலிடெக்னிக்கில் ஒரு செக்ஷனில் 100 பேரைச் சேர்த்தார்கள். இப்பொழுது 60 பேரைத் தான் சேர்க்கிறார்கள். பொதுவாக கல்லூரிகளிலே 5 செக்ஷன்கள் இருக்கும். ஹைஸ்கூல்களில் 6 செக்ஷன்கள் இருக்கும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 60 என்று இப்பொழுது இருப்பதை மாற்றி பழையபடி 100 என்று ஆக்க வேண்டும். இது சிரமமான காரியம் அல்ல. நாளையே 'ஆர்டர்' போடலாம். அப்ளிகேஷன் போட இந்த மாதம் 22 ஆம் தேதி கடைசி நாள் என்று சொன்னார்கள். இந்தத் துறைக்கு திரு. வையாபுரி அவர்கள் இயக்குநராக இருக்கிறார். இன்னும் பிளஸ் டு ரிசல்ட் வரவில்லை. ஒரு பள்ளிக்கு 8 அல்லது 9 சீட்டு தான் வரும். ஆனால் ஒரு பள்ளியிலிருந்து சராசரி 150 அப்ளிகேஷனுக்கு மேல் வரும். இதை [illegible]படி சமாளிப்பது என்கிற பிரச்சினை வேறு. 2 ஆம் தேதி மனுப் பெற கடைசி தேதி என்று மாற்றினால் கூட பிள்ளைகள் அப்ளிகேஷன் போட முடியாது. ஆகவே இந்தக் கடைசி தேதியை அவசியம் 15 ஆம் தேதி என்று ஆக்க வேண்டும்.

இப்பொழுது இருக்கின்ற இடங்களையும் 50 பெர்சன்ட் கூட்ட வேண்டும். அப்படிச் செய்தால் இன்னும் 4 ஆயிரம் அல்லது 5 ஆயிரம் பேர்கள் அதிகமாகப் படிக்க வாய்ப்பு உண்டு. அடுத்து, எல்லா இடங்களிலும் நான் சொல்லியபடி ஒன்றியங்கள் தோறும், தாலூகா தோறும் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க வேண்டும். டெக்ஸ்டைல் மில்களுக்கு பக்கத்திலே பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்தலாம். அப்படிச் செய்தால்தான், எஜுகேடட் அன் எம்பிளாய்ட் இருக்க மாட்டார்கள்.

அடுத்து, எலக்ட்ரிசிடியைப் பொறுத்தவரை, நான் பலமுறை கூறியதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஹைட்ரோ-எலக்ட்ரிசிடியைப் பொறுத்தவரை, அத்தகைய புரோஜெக்ட் எல்லாம் இனிமேல் வர சந்தர்ப்பம் இல்லை. காவிரி வாட்டரை நாம் கேட்கும்போது, நாம் கேட்கிற அளவு அவர்கள் தருவதில்லை. அதற்கான தடையை திரு. குண்டு ராவ் போடவில்லை. திரு. அர்ஸ் தான் போட்டார். சென்ட்ரல் கவர்ன்மென்டின் அனுமதிகூட இல்லாமல் போட்டு விட்டார். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுருக்கமாக அதுபற்றி இரண்டு வரி எழுதியிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, இப்பொழுது உள்ள சூழ்நிலையில் ஹைட்ரோ-எலெக்ட்ரிசிடி, திட்டம் அவ்வளவு ஏற்றதல்ல. அந்தக் காலத்திலே டாக்டர் இராமசாமி ஐயர் அவர்கள் எலெக்டிரிசிடி முன்னால் வரும், இன்டஸ்ட்ரீஸ் பின்னால் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நாம் ஏராளமாக தெர்மல் ஸ்டேஷன்கள் அமைக்க வேண்டும். அதன் மூலம் தான் நாம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஏனென்றால் ஹைட்ரோ-எலெக்ட்ரிசிடியைப் பொறுத்தவரை, அயல் நாடுகளிலிருந்து நாம் அதற்கான இயந்திரங்களை வரவழைக்க வேண்டும். ஆனால் தெர்மல் ஸ்டேஷன்களைப் பொறுத்தவரை, அதற்கான இயந்திரங்கள் அயல் நாடுகளிலிருந்து வர வேண்டிய அவசியமில்லை. இங்கேயே அதற்கான எல்லா வசதிகளும் இருக்கின்றன. தெர்மல் ஸ்டேஷன்களை ஒவ்வொரு டவுனிலும், ஒவ்வொரு தாலூகாவிலும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அமைக்க வேண்டும். அந்த விதத்தில் ஏற்பாடு செய்தால், மக்களுக்கு மிகவும் நன்றாக இருக்கும். அதோடு மட்டுமல்லாமல் ஸ்மால்-ஸ்கேல் இன்டஸ்ட்ரீசுக்கும் உதவிகரமாக இருக்கும். அப்படிச் செய்தால் 'லே ஆஃப்' செய்ய வேண்டி வராது. 'லே ஆப்' செய்தால் எவ்வளவு நஷ்டம் வரும்? வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும் 'லே ஆஃப்' இன்னும் சிரமம். இண்டஸ்ட்ரீசுக்கு அரசாங்கமும் பணம் போடுகிறது. நஷ்டம் வரக்கூடாது. நாடு பூராவும் தெர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தப்பட்டால், சிரமம் குறையும், கிராமந்தோறும் 'இன்டஸ்ட்ரீஸ்' வந்து விடும்.



ஒவ்வொரு ஒன்றியத்திலும் 5 அல்லது 6 'பேக்டரீஸ்' வந்து விடும். ஆகவே நாம் இன்னும் ஹைட்ரோ ஸ்டேஷன்களை நம்பிக்கொண்டிருக்காமல் தெர்மல் ஸ்டேஷன்களை நாடு பூராவும் ஏற்படுத்த வேண்டும். இதைத்தான் டாக்டர் இராமசாமி ஐயர் அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள்.

அடுத்து, லைசன்ஸ் பற்றிச் சொன்னார்கள். 25 ஆயிரம் ஸ்பின்டில் வரை, தபாலில் எழுதிப் போட்டால் போதுமாம், பெர்மிஷன் வந்து விடுமாம். இது சமீபத்திலே நான் கேள்விப்பட்டது இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கிறது என்று சரி பார்த்துக்கொள்ள வேண்டும். நான் சொல்வதில் தவறு இருந்தால் திருத்திக்கொள்ளலாம். ஹெவி இன்டஸ்ட்ரீசைப் பொறுத்தவரை, 4 கோடி ரூபாய், 5 கோடி ரூபாய் அளவில் இன்வெஸ்ட் பண்ணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அமைச்சர் பொறுப்பில் இருக்கிறவர்கள் தான் இதைச் செய்ய வேண்டும். ஆதலால் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வந்தேன். இதோடு என்னுடைய அபிப்பிராயங்கள் அனைத்தையும் சொல்லிவிட்டேன்.

மொத்தத்தில் இந்த அமைச்சரவையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது இந்த அரசு விமரிசையாக நடைபெறும். அதில் சந்தேகமே கிடையாது. மக்கள் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். மக்களே திரும்பவும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களும் மறுபடியும் பெரும் வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார்கள். வாக்குறுதிகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் சொன்னதை எல்லாம் நிச்சயமாகச் செய்வார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கை இந்த அவையிலுள்ள உறுப்பினர்களுக்கும் இருக்கிறது, இந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்குத் தேவையான அனைத்து நல்வாழ்வுத் திட்டங்களையும் நிறைவேற்றத் தேவையான நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. அருணாசலம்:** மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்த வாய்ப்பினை எனக்குத் தந்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் அவர்கள் தமிழ் மக்களைப் பாராட்டியுள்ளார்கள் தமிழ் மக்கள் நேர்மையிலும், தர்மத்திலும், தாராளமாக தங்களுடைய கருத்துக்களை

குழப்பமில்லாமல் தெரிவிப்பதிலும் உயர்ந்தவர்கள் என்று சொல்லி தமிழ் மக்களைப் பாராட்டியுள்ளார்கள். அதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த அரசு செய்ய

(பிற்பகல் 6-10)

வேண்டிய காரியங்களையும், அரசின் கொள்கைகளையும் விரிவாகச் சொல்லி வருகிறார்கள். பொதுவாக விவசாய மக்களைப் பற்றி, அவர்களின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டியுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளார்கள். விவசாயிகளுடைய கடன் பளுவைத் தீர்ப்பதற்காக அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். விவசாய மக்கள் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இந்த நாடு சுதந்திரமடைந்தபோது ஆண்டு ஒன்றுக்கு 9 ஆயிரம் கோடி ரூபாய் தேசிய வருமானமாக இருந்தது. அது இப்போது 69 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஏறக்குறைய 8 மடங்கு உயர்ந்துள்ளபோது, இந்த உயர்வுக்கு ஏற்ப எந்த அளவுக்கு அதிகமான பணத்தை தொழில் துறைகளிலே செலவழிக்கிறோமோ, அதிலிருந்து வரும் வருமானத்தைவிட, குறைந்த அளவு பணம் செலவு செய்தாலும் விவசாயத்திலிருந்து அதிக அளவு வருமானம் வருகிறது. இந்த வருமானம் விவசாயிகளுடைய உழைப்பிலேயிருந்து வந்து கொண்டிருக்கிறது. இந்தப் பெருமையினை உணர்ந்த தமிழக அரசு அவர்களுடைய சிரமங்களைக் குறைக்க முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. விவசாயிகளின் கடன் சுமையை இந்த அரசு உண்மையிலேயே குறைக்க வேண்டுமென்று விரும்புகிறது. கடன் சுமையை எப்படிக் குறைப்பது என்று சிந்திக்கும்போது, விவசாயிகள் கடன் வாங்காமலேயே வாழ வழிவகைகள் செய்ய வேண்டும். அதற்கான வழி என்னவென்று சிந்திக்க வேண்டும். இன்றைய தினம், எவ்வளவுதான் விஞ்ஞான ரீதியான அறிவு வளர்ச்சி ஏற்பட்டு வந்திருந்தபோதும், கட்டை வண்டியும், மாடும் மிகவும் தேவை என்ற நிலைமை இருக்கிறது. இவைகள் இல்லாமல் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது. மேலும், நாம் இந்த நாடு பண்புடைய நாடாக, பண்பின் பிரதிநிதியாக, நாகரிகத்தில் சிறந்த நாடாக இருக்க வேண்டும் என்றும், அதற்கு விவசாயம்தான் உதவியாக இருக்கும் என்றும் நம்புகிறோம். இன்றைய தினம் 80 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலே வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் தங்களது வாழ்க்கைக்கு விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள். நாட்டில் விவசாயம் செழித்தோங்க அவர்கள் உதவியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலையில்லாமல் போகும்போது, அவர்கள் நகரங்களை நோக்கி





வருகிறார்கள். நகரங்களுக்கு வந்து பிரச்சினைகளை அதிகமாக்குகிறார்கள். இன்றைய தினம், நகரங்கள் எவ்வாறு சீர்கெட்டுக்கொண்டு வருகின்றன என்பதை ரோம்புரியில் உள்ள அறிஞன் ஒருவன் சொல்லி, எவ்வளவு சீக்கிரமாக இந்த நகரங்கள் அழிந்து போகும் என்பதை எடுத்துக்காட்டும்போது மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஆகவே, நாம் இப்போது விழித்துக் கொள்ள வேண்டும். விவசாயத்திலும், விவசாயிகளின் நலனிலும் நாம் அக்கறை காட்ட வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளுக்குக்கூட நம்முடைய பண்பாட்டை எடுத்துக்காட்ட, அவர்கள் இதை வழிகாட்டியாகக் கொள்ள நம்மால் முடியும். நாகரிகமான வாழ்க்கை என்று எதைச் சொல்கிறோமோ அத்தகைய வாழ்க்கையை விவசாயத்தை வளர்ப்பதனாலேயே நாம் வாழ முடியும். தொழிலுக்கு எவ்வளவு அதிகமான இடுபொருட்கள் கொடுக்கிறோமோ அதுபோல விவசாயத்துக்கும் இடுபொருள் கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுகிறது. டிராக்டர்கள் வாங்கி அவர்கள் விவசாயம் செய்ய கடன் கொடுக்கிறார்கள். ஆனால், கிராமத்திலே போய்ப் பார்த்தால், பழுதுபட்ட டிராக்டர்களைச் சரியான முறையிலே பழுது பார்க்க முடியாமல் வைத்திருக்கிறார்கள். வாங்கிய டிராக்டர்கள் அப்படி அப்படியே கிடக்கின்றன. மாடுகளைத்தான் நம்பி விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, நாம் மாடுகளை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். இப்போது அண்டை மாநிலங்களுக்கு நம்முடைய மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன. பசுக்களையும் நாம் பாதுகாத்தேயாக வேண்டும். ஏனென்றால், காளை மாடுகள் வேண்டுமென்றால், பசுக்கள் வேண்டும். அவைகளின் விலையும் இன்றையதினம் ஏறிக்கொண்டே போகிறது. 500, 600 ரூபாய்க்கு வாங்கிய காளை மாடுகளை இன்றைய தினம் 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நாள்தோறும் அண்டை மாநிலங்களுக்கு இவைகள் போய்க்கொண்டிருக்கின்றன. சாரி சாரியாகப் போய்க்கொண்டிருக்கின்றன. அப்படிக் கொண்டு போகப்படும் மாடுகள் எல்லாம் கிழட்டு மாடுகள் என்று ஒரு காலத்திலே சொன்னார்கள். தேவைக்கு மேல் உபயோகம் இல்லாமல் இருக்கும் மாடுகளைத்தான் வாங்குகிறோம், அவைகளைத்தான் கொண்டு செல்கிறோம், அதிலே மகிழ்ச்சியடையலாம் என்று சொன்னார்கள். இப்போது நிலைமையைப் பார்த்தால் நல்ல நல்ல மாடுகள் எல்லாம் போய்க் கொண்டிருக்கின்றன. நல்ல முறையில் இதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அது சட்டமாவதற்கு முன்னாலேயே சட்டசபை கலைக்கப்பட்டதால், அப்போது சட்டமாக்க இயலவில்லை. அதை மீண்டும் கொண்டு வர வேண்டும். சட்டமாகக் கொண்டு வந்துதான் அமுல்படுத்த வேண்டும் என்று காத்திராமல், அரசாணை மூலமாகத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக்

[திரு. கே. அருணாசலம்]          [1980 ஜுன் 26

சீராக விநியோகம் செய்ய முடியாமல் இருப்பதைவிட நாடு முழுவதும் சிறு
சிறு தொழில்களை ஏற்படுத்தி அனைத்து மக்களுக்கும் சீரான செல்வ
வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று செயல்படுவதுதான் சிறந்ததாகும். அந்த
வகையில் கதர் கிராமக் கைத்தொழில்களை நாடு முழுவதும் நாம் வளர்த்தால்
நாடெங்கும் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கா
னோருக்கு வேலை கிடைக்கும். அது மட்டுமல்ல அவர்களெல்லாம் பிறர்
உதவி இன்றி, தன்மானத்தோடு பொருள் சம்பாதித்து வாழ முடியும். பிறர்
தருகிறார்கள். அதன் காரணமாக நான் வாழ்கிறேன் என்றில்லாமல் நான்
வேலை செய்கிறேன், மற்றவர்களும் வேலை செய்ய வாய்ப்பு உண்டாக்கு
கிறேன் என்று அவர்களெல்லாம் தன்மானத்தோடு வாழ்கிற நிலைமையை உரு
வாக்கலாம். அதைத் தமிழக அரசு ஆராயும் என்று நம்புகிறேன்.

அடுத்து, அண்மையில் தமிழ் நாட்டில் தேர்தல் வரப்போகிறது என்று
சொல்லப்பட்டது. அது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாகும். ஜனநாயகத்
தில் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஆட்சிப் பொறுப்பில் அக்கறையோடு
ஈடுபட வேண்டும் என்பது நாமெல்லாம் அறிந்த உண்மையாகும். ஆனால்
நாட்டு மக்கள் தேர்தலில் மட்டும் ஈடுபடுவதைவிட நாட்டில் தன்னாட்சிப்
பொறுப்புகளிலும் ஈடுபடுவதற்கு நாம் வழிவகை செய்ய வேண்டும்.

அண்டை மாநிலத்தில் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்டிரேஷன் பில் என்று
ஒன்றைக் கொண்டு வந்து சட்டமன்றத்தின் அனுமதி பெற்று இன்றைய தினம்
அதை அங்கே செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசிடமிருந்து
மாநில அரசுக்கு அதிகமான அதிகாரம் வாங்க வேண்டும் என்று விரும்பு
கிறோம். அதில் மிகுந்த உற்சாகத்தைக் காட்டுகிறோம். அது மிகவும்
அவசியம்தான். ஆனால் ஒரே இடத்தில் அதிகாரம் குவிந்திருப்பதைவிட
நாடு முழுவதும் அதிகாரம் என்பது பரவலாக்கப்பட வேண்டும் என்பதைத்
தான் நாம் வரவேற்க வேண்டும்.

நமது மாநிலத்திற்கு மட்டும் அதிகாரத்தைக் கேட்பதோடு நிற்காமல்
அதிகாரத்தைப் பரவலாக்கி மாவட்டங்களிலும் ஒன்றியங்களிலும் அந்த
அதிகாரங்களைக் கொடுத்து. அங்கே இருப்பவர்களையும் அதில் ஈடுபடச்
செய்தால், அவர்கள் இன்னும் மிகுந்த உற்சாகத்தோடு ஈடுபட்டு, தங்களின்
பங்கினை ஆற்றுவதற்கு உதவியாக இருக்க முடியும். எனவே, அரசு இதை
யும் யோசிக்க வேண்டும். வெறும் தேர்தல்களில் மக்களை ஈடுபடுத்துவது
என்பதோடு மட்டும் நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. அதற்குப்



1980 ஜுன் 26]          [திரு. கே. அருணாசலம்]

பின்னாலே வேலை செய்யும் அதிகாரத்தையும் அவர்களுக்குப் பரவலாக விநி
யோகித்து அவர்களை அதில் ஈடுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

கல்வியைப் பொறுத்தும் ஒரு கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே
பேசிய பல உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்யும் ஆரம்பப்
பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்க இருப்பதைப்
பற்றி விளக்கமாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது இருப்பதைப்
போல் அவர்களுக்குள்ளே 'ஜாதி வித்தியாசம்' இல்லாமல் இருந்தால், அதை
என் போன்றவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்போம். ஆனால் துரதிருஷ்ட
வசமாக இன்றைய தினம் அதிலேயெல்லாம்கூட ஜாதி வித்தியாசம் இருக்
கிறது. இதையெல்லாம் மாற்றி எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான
சலுகை கிடைக்கும் நிலையைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்ய
வேண்டும். இதை உருவாக்குவதற்குப் பதிலாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்
களை அரசாங்க லிஸ்ட்டில் சேர்த்துவிட்டால், எல்லாம் சரியாகப் போய்விடும்
என்று எண்ணுவது தவறு. பிறகு அவர்கள் அதோடு நிற்க மாட்டார்கள்.
எங்களை மத்திய லிஸ்ட்டில்—நேஷனலைஸ் செய்யுங்கள்—சேர்த்துவிடுங்கள்
என்பார்கள். அதாவது ஐ. ஏ. எஸ்., ஐ. பி எஸ் மாதிரி எங்களைச் செய்து
விடுங்கள் என்பார்கள். எனவே இதிலெல்லாம் அரசு யோசித்துச் செயல்
படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், அவை நமது தமிழகத்தில்
பெருக வேண்டும் என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால்
எப்படிப்பட்ட பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டும் என்பதைத்தான் நாம்
எண்ணிப் பார்த்துச் செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது 'போஸ்ட்
இண்டஸ்டிரியல் சொசைடி'க்குத் தகுந்தாற்போல் பல்கலைக் கழகங்களைக்
கொண்டுவர வேண்டும். ஒரு காலத்தில் சாப்பாடு நிறைய கிடைத்துக் கொண்
டிருந்தது. அப்போது சிலர் 'ஐவரி டவரில்' உட்கார்ந்துகொண்டு ஆராய்ச்சி
செய்தார்கள். அதைப்போன்ற நினைப்புக்கு இப்போது இடமேயில்லை.
அந்த எண்ணங்கள் காரணமாக இப்போது 'அன் எம்ப்ளாயபிள்ஸ்' தான்
அதிகமாவார்கள். அதன் காரணமாகப் புதிய புதிய பிரச்சினைகள் உரு
வாகும். ஜாதி மத பேதமற்ற, நிற பேதமற்ற, நோய் நொடியற்ற சமுதாயம்,
புதிய சமுதாயம் உருவாக வேண்டுமென்று நினைத்தால், நாம் அண்டை
அயலாரைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்
போல் பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டும்.

பல்கலைக் கழகத்திற்குப் போனால், அங்கே கெமிஸ்ட்டிரியைப் படிக்க வேண்டும். ஆனால் அப்படிப் படிக்கின்ற மாணவர்களுக்கு அண்டை அயலில் உள்ள கிராமங்களைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நாட்டைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்குவதற்குப் பல்கலைக் கழகங்கள் உண்டாவதைவிட இல்லாமல் இருப்பதே மேல். புதிய பல்கலைக் கழகங்கள் அமையும்போது, புதிய கருத்துக்களின் அடிப்படையில், மக்களைச் சரியான வழியில் செலுத்தக்கூடிய வகையில் அமைந்தால்தான், அது நாட்டிற்கு நல்லதாக இருக்கும். மக்களுக்கும் மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக அது இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, ஆளுநர் உரையில் உள்ள ஒரு கருத்து 'நெகட்டிவ்' அப்ரோச்சில் இருப்பதாகச் சொல்லி, வீணாகக் கடலில் போய்க் கலக்கும் பக்கத்து மாநிலத்தின் தண்ணீரை நாம் நமது மாநிலத்தின் விவசாயிகளுக்கு வாங்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதைப்போல், நமக்குப் பாதகமில்லாத முறையில் தீர்வு காணப்படும் என்பதுதான் சரியான வழிமுறையாகப் படுகிறது. காரணம் அப்போதுதான் நாம் இந்திய மக்களில் ஒருவர் என்ற மனப்பான்மை நமக்கு இருக்கிறது என்று பொருள்படும். எப்படியாவது நான் நன்றாக வாழ வேண்டும், மற்றவர்கள் எப்படிப் போனாலும் அதைப்பற்றிக் கவலையில்லை என்று இல்லாமல், எப்படியாவது நமக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று எண்ணாமல், நமக்கு பாதகமில்லாமல் நியாயமான முறையில் நமக்குத் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்படும் என்று சொல்வதுதான் சரி. அப்போதுதான் அண்டை அயலில் உள்ளவர்களும் அதைப் படித்துப் பார்த்து 'பாவாயில்லை, இவர்கள் நியாயமாகத்தான் நடந்து கொள்கிறார்கள்' என்று எண்ணுவார்கள். நம்மைப் பற்றியும் சந்தேகிக்க மாட்டார்கள். எப்படியாவது தண்ணீரைக் கொண்டுவா விரும்புவது சரியல்ல. ஆகவே இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து செயல் படவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக்கொண்டு, எது நியாயமோ அதைச் செய்வதில் அக்கறை காட்டக்கூடிய தமிழக அரசைப் பாராட்டுவதுடன், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. நீலநாராயணன் :** மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின்



சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அதை வெகுவாகப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அதே சமயத்தில் எதிர்க் கட்சி என்ற முறையில் என்னுடைய கருத்தையும் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். எதிர்க் கட்சி என்று நான் குறிப்பிடுகிறபோது, நம்முடைய மேலவைத் தலைவர் அவர்களின் பிறந்த நாளையொட்டிப் பேசப்பட்ட பாராட்டுரையின்போது, நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். 'புதிய அமைச்சரவையை வரவேற்கிறேன், அதே சமயத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எதிர்க் கட்சியை வரவேற்று அதைச் சரியாக நடத்த வேண்டும் ; எதிர்க் கட்சியை எதிரிக் கட்சியாகக் கருதக்கூடாது' என்ற என்னுடைய பணிவான வேண்டுகோளையும் அந்தச் சமயத்தில் என்னுடைய கட்சியின் சார்பில் தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் பேசும்போது, எதிர்க் கட்சி என்பதும், எதிரிக் கட்சி என்பதும் அவரவர்கள் நடந்து கொள்ளுகிற முறையைப் பொறுத்தது. எதிர்க் கட்சி எதிரிக் கட்சியாக நடந்துகொள்ளக்கூடாது என்று கூறினார்கள். நான் இதை ஒரு பிரச்சினையாக ஆக்க விரும்பவில்லை என்றாலும், நாங்கள் ஜனநாயகக் கடமையைச் சரிவர புரிய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் ஒன்றை மட்டும் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். வெற்றி பெற்று வந்திருக்கிற புதிய அமைச்சரவையை நான் வரவேற்கிறேன். அதிலே சந்தேகமில்லை. ஆனால் பெற்றிருக்கிற அந்த வெற்றி நல்ல வெற்றியாக அமைய வேண்டுமென்று கருதுகிறோமே தவிர வெற்றி வெறியாக மாறி விடக்கூடாது. இதில் உண்மையிலேயே ஜனநாயகத்தில் அக்கறை கொண்டவர்களுக்கு வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. அந்தத் தன்மையை

(பிற்பகல் 6-30)

வைத்துக்கொண்டுதான் எதிரிக் கட்சியாக எங்களைப் பாவிக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டேன். இந்த வெற்றிக்குப் பின்னால் தமிழகத்தினுடைய பல் வேறு தொகுதிகளில் நடைபெற்ற நிலைமைகள் என்னவென்பதை ஆளும் கட்சியினர் உணராமல் இருக்கமாட்டார்கள். அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்றாலும், இந்த அவையின் மூலமாக சர்க்காருக்கு நான் சுட்டிக்காட்ட ஆசைப் படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த தோழர்கள், அவர்களுடைய படிப்பகங்கள், மன்றங்கள் பல ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களால் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் குண்டர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். பல பேர் ஆஸ்பத்திரியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆஸ்பத்திரியிலே சிகிச்சை அளிப்பதற்குக் கூட போதிய உதவி கிடைக்காத நிலைமையிலே நிராதரவான நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளை மனதிலே கொண்டு தான் எங்களை எதிர்க் கட்சியாகக் கருத வேண்டுமே தவிர, எதிரிக் கட்சியாகக் கருதக் கூடாது என்று என்னுடைய உரையில் குறிப்பிட்டேனே தவிர, வேறு அல்ல என்பதை இந்தச் சபையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று இரண்டல்ல. சென்னை நகரிலே அண்ணா நகர் தொகுதியிலேயிருந்து சென்னை நகரின் கடைசியில் இருக்கின்ற இராதா கிருஷ்ணா நகர் தொகுதி வரையில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தோழர்கள் எந்தெந்த இடங்களில் தாக்கப்பட்டுள்ளார்கள் என்ற பட்டியல் அவ்வப்போது வந்தவண்ணமாக இருக்கின்றன. தலைமைக் கழகத்திற்கு நாள்தோறும் வந்து கொண்டிருக்கின்ற கடிதங்களைப் பார்க்கிறபோது, இன்னின்னார் குத்தப்பட்டார், இன்னின்னார் அடிக்கப்பட்டார், இன்னின்னார் ஆஸ்பத்திரியிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்திகள் தெரிகின்றன.

ஒரு விசித்திரமான, வேதனைப்படத்தக்க நிகழ்ச்சி ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிளைச் செயலாளர், ஒருவர் உதயசூரியன் சின்னத்திற்காக வேலை செய்துகொண்டிருந்தார் என்பதற்காகக் குத்தப்பட்டார். ரோடிலே விழுந்து விட்ட அவரை இறந்துவிட்டதாகக் கருதிக்கொண்டு குத்தியவர்கள் ஓடிவிட்டார்கள். குத்தப்பட்ட அவர் பாதையோரத்திலேயே விழுந்து விட்டார். அந்தப் பக்கம் நடந்து வந்தவர்கள் அவரை ஆஸ்பத்திரியிலே கொண்டு போய் சேர்த்திருக்கிறார்கள். குத்தப்பட்டவர் சாகவில்லை. ஆஸ்பத்திரியிலே அவருக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்ற செய்தியை அறிந்தவுடனே, "அந்தப் படுபாவி இன்னும் சாகவில்லையா? ஒரு கை பார்க்க இப்போதே புறப்படுகிறேன்" என்று மீண்டும் ஆஸ்பத்திரியின் உள்ளே சென்று அவரைக் கொன்றுவிட முயற்சி செய்திருக்கிறார்கள். அதைத் தடுத்த டாக்டர்களை அடித்து வீழ்த்தியிருக்கிறார்கள். அந்த நோயாளி படுக்கையிலிருந்து எழுந்து ஓட வேறு ஒரு அறையில் புகுந்து ஒளிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு உயிருக்குப் பாதுகாப்பற்ற தன்மை வெற்றி விழா என்ற பெயராலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று சொன்னால், தமிழகத்திலே ஜனநாயகம் ஆரோக்கியமாக இருக்கிறது என்று பெயரா? இதற்காகத்தான் எங்களை எதிர்க் கட்சிகளாக



நடத்துங்கள் என்று கோருகிறோம். தயவு செய்து எதிரிக் கட்சியாக எங்களை எண்ண வேண்டாம். நாங்கள் என்றைக்கும் இடித்துக்காட்டுகிற தன்மையைப் பெற்றவர்கள். ஆளும் கட்சி செய்கின்ற தவறைச் சுட்டிக் காட்டத்தான் நாங்கள் இருக்கிறோமே தவிர வேறொன்றுமல்ல. அப்படிச் சுட்டிக்காட்டுவதன் மூலமாக நல்லதொரு நிலைமை நாட்டிலே ஏற்பட வேண்டுமென்று பாடுபடுகிறோமே தவிர, இப்படிப்பட்ட அராஜகங்களுக்கு ஆதரவாக நாங்கள் இருந்ததில்லை. அப்படி இருக்கவும் கூடாது. நாகரீகமான நல்லதொரு அரசியல் இந்த நாட்டிலே வளர வேண்டுமென்பதற்காகத் தான் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி நாங்கள் பாடுபட்டுக்கொண்டு வருகிறோம். "வெற்றி பெற்றவர்கள் அடக்கத்தோடு நடந்துகொள்ள வேண்டும்" என்பதை அண்ணா அவர்கள் நமக்குப் போதித்திருக்கிறார்கள். "கனி குலுங்கும் மரக்கிளை கொஞ்சம் தாழ்ந்து இருக்கும். அதைப்போலவே வெற்றி பெற்றவர்கள் பணிவோடு, அடக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும்" என்பதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்குக் கற்றுத் தந்த பாடம். அந்த அடிப்படையில்தான் இன்றைய தினம் ஆளும் கட்சியைப் பார்த்து, மாண்புமிகு அமைச்சர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். 'நீங்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறீர்கள், பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். அதே சமயத்திலே எங்களை எதிரிக் கட்சிகளாகக் கருதாதீர்கள், எதிர்க் கட்சியாகக் கருதி ஆரோக்கியமான அரசியல் நிலைமையை உருவாக்குவதற்கு முன் வாருங்கள், முன் வாருங்கள்' என்று மீண்டும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளுநருடைய அறிக்கை வரவிருப்பதற்கு முன்னதாகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. தேர்தலிலே போட்டியிட்ட அரசியல் கட்சிகள் என்னென்ன வாக்குறுதிகளை அளித்திருக்கிறார்களோ அந்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்த வாக்குறுதிகளை எதிர்பார்த்துதான் அவர்கள் வாக்களித்தார்கள் என்றால் அது மிகையாகாது. அப்படி தேர்தல் காலத்திலே அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதை ஜாடை மாடையாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்களா என்றால், இல்லையென்ற பதில்தான் வந்துகொண்டிருக்கின்றது. பஸ்களிலும், ரோடிலும் அவர்கள் தந்த பல வாக்குறுதிகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாக அளிப்போம் என்று ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தது. ஆனால் ஆளுநர் உரையிலே அதைப்பற்றிய குறிப்பே காணோம்.

அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்களா ? இனிமேலாவது கொண்டு வருவார்களா ? மக்கள் இதையெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். " இதைச் செய்வோம், அதைச் செய்வோம் " என்று சொன்ன வார்த்தைகளை நம்பி மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வீணடித்து விட்டால், ஆளும் கட்சியினுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா ? மக்களுக்குச் சொன்ன வார்த்தைகளைக் காப்பாற்ற வேண்டாமா , தேர்தல் அறிக்கையிலே என்னென்ன சொன்னார்களோ அவைகள் எல்லாம் ஆளுநர் அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை, நிச்சயமாக இல்லை.

வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்பவர்களுக்குத் தினசரி ஒரு ரூபாய் ஈட்டுத் தொகையாகக் கொடுப்போம் என்று வாக்குறுதியளித்தார்கள். ஆனால் ஆளுநர் அறிக்கையிலே அதைப்பற்றிய விவரத்தையே காணோம். ஆனால் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அதிகமான முதலீடு உள்ள தொழிற்சாலைகளை தமிழகத்திலே ஆரம்பிக்காத காரணத்தால்தான், வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிற மக்கள் தொகை பெருகியிருக்கிறது என்று சுட்டிகாட்டியிருக்கிறார்களே தவிர, ஒரு ரூபாய் தினசரி கொடுக்கப்படும் என்று சொன்னார்களே, அது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அப்படிக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா, இல்லையா ? இதைப்பற்றிய கேள்விக்குப் பதிலைக் காணோம். ஆனால் மத்திய சர்க்காரை மட்டும் குறை கூறியிருக்கிறார்கள். மத்திய சர்க்காருக்கு வக்காலத்து வாங்க வேண்டுமென்பதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டவில்லை. மத்திய சர்க்காரின் முதலீட்டிலே அமைய வேண்டிய பெரிய தொழிற்சாலைகள் நம் நாட்டில் அமையவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்குக் காரணம் யார் ? மத்திய சர்க்கார் மட்டும்தானா ? பெரிய தொழிற்சாலைகள் இங்கிருந்து திருப்பதிக்கும், கல்கத்தாவுக்கும் மாற்றப்பட்டிருக்கின்றனவே அதற்குக் காரணம் யார் ? மத்திய சர்க்காரா ? நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அன்றைய தினம் இருந்த தொழில் அமைச்சர் அவர்களும் போதிய அக்கறை காட்டாத காரணத்தாலேதான், பெரம்பூரில் 12 கோடி ரூபாய்க்கும் மேலே மூலதனத்தைக் கொண்டிருந்த பெரிய தொழிற்சாலை திருப்பதிக்குக் கொண்டு சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அக்கறை காட்டவில்லை என்ற குற்றச் சாட்டை அன்றைய தினம் இதே சபையில் எழுப்பி திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, எந்தக் கட்சியையும் சேராத நம்முடைய நண்பர் திரு. சந்தோஷம் அவர்கள்கூட சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். முதலமைச்சரைப் பார்ப்பதற்குக் கூட ஒரு தொழிலதிபருக்கு நேரம் கிடைக்காத காரணத்





பெருந் தொழில் தமிழகத்தை விட்டு வேறிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு அன்றைய தினம் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அதையெல்லாம் எண்ணிப் பார்த்தால், யார் பெயரிலே உண்மையான குற்றம் இருக்கிறது என்பதை நம்மாலே புரிந்துகொள்ள முடியும்.

அது மட்டுமல்ல, மற்றொன்றையும் தேர்தல் அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். விவசாயக் கடன்கள் அத்தனையையும் ரத்து செய்துவிடுவோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பெருமைக்குரிய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலே இதைப்பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-40)

அந்த சந்தர்ப்பத்திலே தற்போதைய ஆளும் கட்சியினர் என்ன சொன்னார்கள் ? " கொள்கைகளை வரையறுத்து திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். விவசாயிகளுக்கு என்ன நன்மை செய்யப்போகிறீர்கள் ? " என்று அன்றையதினம் மார் தட்டிக் கேட்டார்கள். இன்றையதினம் ஆளும் கட்சியாக வந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அன்றைக்கு விவசாயப் பெருமக்களுடைய அத்தனை கடன்களையும் ரத்து செய்துவிடுவோம் என்று சொன்ன காரணத்தினாலேதான் அவர்களுக்கு விவசாயிகள் வாக்குகளை அளித்தார்கள். அதனால்தான் இன்றைய தினம் அவர்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களாகவும் வீற்றிருக்கிறார்கள். அவர்கள் கடன்களை ரத்து செய்கின்ற சூழ்நிலை இந்த அறிக்கையைப் பார்க்கின்ற போது எப்படி இருக்கிறது? " நாங்கள் மத்திய சர்க்காரைக் கேட்கிறோம். விவசாயிகளுடைய கடனைத் தீர்ப்பதற்கு எங்களுக்கு மான்யம் கொடுங்கள். இல்லையென்றால் கடனாகக் கொடுங்கள் " என்ற முறையிலே மத்திய சர்க்காரிடம் உதவி கோரியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் மறுத்திருக்கிறார்கள். இப்போது ஆளும் கட்சியினர் என்ன செய்யப்போகிறார்கள் ? திட்டவட்டமாகச் செய்வோம் என்று அன்றைய தினம் சொன்னார்களே ? அதை இந்த ஏழை விவசாயிகள் நம்பினார்களே. நம்பி வாக்குகளை போட்டிருக்கிறார்களே ! இப்போது என்ன செய்யப்போகிறார்கள் ?

மலை தூக்கிய மனிதனைப் பற்றிய கதையொன்று சொல்வார்கள். ஒரு ஊரிலே ஒரு போக்கிரியிருந்தான். அவன் புத்திசாலியும் கூட. அவன் பட்டினியும் பசியும் கொண்டிருந்தான். அவனுக்கு நல்ல வாழ்வு வேண்டுமென்பதற்கு ஒன்றைச் சொன்னான். அந்த ஊரில் இருக்கிற மலையைத்

[திரு. நீலநாராயணன்] [1980 ஜூன் 26

தூக்கப்போகிறேன் என்றான். "ஆஹா, ஆஹா, அப்படியா தூக்குவீர்களா? முடியுமா?" என்றெல்லாம் பொதுமக்கள் கேட்டார்கள். அதற்கு அவன் 'நிச்சயமாக முடியும்' என்றான். "எனக்குத் தயார் தீனி கொடுங்கள்" என்றான். "என்னென்ன உணவுகள், ஊட்டச்சத்துள்ள உணவுகள் உண்டோ அவைகளையெல்லாம் எனக்குக் கொடுங்கள், நான் அந்த மலையைத் தூக்கிக் காட்டுகிறேன். ஒரு மாதத்திலே தூக்குகிறேன்" என்று சொன்னான். எல்லோரும் சேர்ந்து அவனுக்குத் தயார் தீனி கொடுத்தார்கள். ஆள் வாட்டசாட்டமாக ஆனான். நல்ல பலசாலியானான். அந்த மலையைத் தூக்குவதற்கு ஒரு நாள் குறிப்பிட்டுவிட்டு, அன்று மக்கள் அங்கே கூடினார்கள். அப்போது அவன் "இந்த மலையைத் தூக்கி என் தலைமீது வையுங்கள். நான் தூக்குகிறேன்" என்று சொன்னானாம். அதுபோலவே மத்திய சர்க்காரை நம்பி, அவர்களிடம் கடன் கேட்டோம், அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள் என்று கைவிரிக்கின்ற காட்சியை இன்றையதினம் இந்த நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

மற்றொன்றையும் நான் அறிக்கையிலே பார்க்கிறேன். 18 வயதிற்கு வந்தவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமென்று ஒரு புதிய சட்டத்தை பஞ்சாயத்துக்களுக்கும் ஒன்றியங்களுக்கும் நடைபெறுகின்ற தேர்தல்களுக்குக் கொண்டு வருகிறார்கள். அதன்படி வாக்காளர்களைப் பதிவு செய்ய இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நான் எண்ணிப்பார்க்கிறேன். இப்போது நடைபெற்றிருக்கின்ற தேர்தல் எந்த அடிப்படையிலே நடைபெற்றிருக்கிறது? 21 வயது அடைந்தவர்கள் என்ற அடிப்படையிலேதான் வாக்காளர்களைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் வாக்குப் போட்டவர்களைப் பார்க்கிறேன். வாக்குப் பதிவேட்டில் இருக்கின்ற பதிவுகளையும் பார்க்கிறேன். இந்தத் தேர்தலில் குறைவான வயதுடையவர்கள்கூட வாக்களிக்கின்ற அளவுக்கு நிலைமைகள் இருப்பதைப் பார்த்தேன். இந்தச் சட்டம் சின்னாபின்னம் ஆகிவிட்டது என்பதைப் பார்க்கிறபோது, மிகவும் வருத்தமாக இருக்கிறது. இந்தத் தடவை வாக்களித்தவர்களில் ஏறத்தாழ 10 சதவிகிதத்திற்கு மேல், 18, 20 வயதிற்கும் உட்பட்டவர்கள்கூட வாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் 21 வயதானவர்கள் வாக்காளர் பட்டியலிலே இணைக்கப்பட்டிருக்கிறார்கள். இதை என்னாலே நிரூபித்துக் காட்ட முடியும். பொன்னேரி பகுதியிலே அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. சைதை தொகுதியிலே என் பகுதியிலே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன.



1980 ஜூன் 26] [திரு. நீலநாராயணன்]

இந்நிலையில் 18 வயதில் வாக்களிக்கும் உரிமை அளித்தால் பஞ்சாயத்துக்களின் கதி என்னவாகும்? "சிறுவர்கள் செய்த வேளாண்மை—விளைத்தாலும் வீடு வந்து சேராது" என்பது பழமொழி—அனுபவ மொழி. 21 வயதிற்கு முன், 18 வயதில் பொறுப்புகள் கொடுக்க முடியாது. அந்த வயது காலத்தில், வேளாண்மை வளர்ந்தாலும், வளர்ந்தது வீடு வந்து சேராது என்பது பழமொழி, அனுபவமொழி. இங்கே ஓட்டுரிமையை அவர்களுடைய கரத்திலே கொடுக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், சட்ட அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் புனராலோசனை செய்ய வேண்டும். இப்போது இது தேவைதானா என்று பார்க்கவேண்டும். எண்ணிப்பார்த்து ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நடைபெற்றிருக்கின்ற தேர்தலை வைத்துப் பார்க்கிறபோது 18 வயது என்று போட்டாலும், 15, 16 வயதுள்ளவர்கள்கூட தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டு வருகின்ற சூழ்நிலை உருவாவதற்கு இடம் ஏற்பட்டு விடுகிறது. ஆகவேதான், அத்தகைய சட்டம் தேவைதானா என்பதை எண்ணிப் பாருங்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசைப்பற்றிக் கூறும்போது, நாணயத்திற்கும், நேர்மைக்கும் சிறப்பான பேர் பெற்ற அரசு என்று இந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே அதை நான் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட ஒரு பெயர் இந்த அரசாங்கத்துக்கு வரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு இந்த அமைச்சர்கள் முன்வர வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முந்திய சட்டமன்றப் பேரவையிலே இந்த அரசைப்பற்றிப் பேசுகிறபோது, கப்பல் பேர ஊழலைப்பற்றி எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடுக்கடுக்காக ஆதாரங்களை எடுத்து வைத்துப் பேசினார்கள். அப்போது அந்த வாதத்ினுடைய முடிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் இந்தப் பிரச்சினையை நீதி விசாரணைக்கு உட்படுத்துகிறேன், சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணைக்கு அதை அனுப்பத் தயாராக இருக்கிறேன் என்று அன்றைய தினம் சொன்னார்கள். 'சபாஷ்' என்று நான்கூட பாராட்டினேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படக்கூடாதா என்றுகூட அன்றையதினம்

எண்ணினோம். ஆனால் நாட்கள் சென்றன. நீதி விசாரணை வரவில்லை. நீதி விசாரணை இல்லையே என்பதற்குக் காரணம் கேட்டால், சுப்ரீம் கோர்ட்டில் நீதிபதி அனுப்புவதற்கு வசதியில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்ற பதிலைத்தான் அன்றையதினம் கூறினார்கள், ஆனால் அவப்பெயர் இன்னும் நின்று கொண்டிருக்கிறது. அது உண்மையா, பொய்யா ? இன்னும் அந்த சந்தேகம் இருந்துகொண்டுதானிருக்கிறது. அதற்கு என்ன பதில் அளிக்கப்போகிறார்கள் ? இன்றைக்கிருக்கின்ற மத்திய சர்க்காரை அணுகி, பிரதமரை அணுகி, சுப்ரீம் கோர்ட்டைக் கேட்டு. ஒரு நீதி விசாரணையை வைக்க மாட்டார்களா ? இப்போது நாணயமான, நேர்மையான, சிறப்பான அரசு என்று போட்டிருக்கின்றதே. அந்தப் பெயருக்கு கந்த ஒரு நிலைமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிகாரபூர்வமாக நிலைநாட்டிக்கொள்ள வேண்டாமா, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பிரதமர் அவர்களிடம் கேட்கட்டும். இன்றையதினம் நம்முடைய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருக்கிறார்கள். "இப்போது இப்படிப்பட்ட கறை படிந்த வாசகங்கள் தென்னகத்திலே, தமிழகத்திலே என்னைப்பற்றி நடமாடிக்கொண்டிருக்கின்றன. அதை மாற்றுவதற்கு இன்று உங்களுடைய உச்ச நீதி மன்ற நீதிபதியை அனுப்புங்கள். அவர்கள் மூலமாக அந்தக் களங்கம் தீர்க்கப்பட வேண்டும்" என்று கேட்டு அதை மாற்றி அமைப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி இதற்கு முன்னாலே குறிப்பிட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில் ? இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள்கூட கேட்டிருக்கிறார்கள். அவைகளைப்பற்றியெல்லாம் இங்கே மீண்டும் கிளப்பிக்கொண்டிருக்க விரும்பவில்லை. இங்கே குறிக்கப் பெற்றிருக்கின்ற அளவுக்கு, நியாயமான, நேர்மையான, நாணயமான அரசு என்று சுட்டிக் காட்டப்பட்டிருப்பது உண்மையிலேயே பொருந்துகிற பெயராக அமைய வேண்டுமென்று சொன்னல், இங்கே சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளைக் களைவதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டும், காணவேண்டும் என்று நான் அரசைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





(பிற்பகல் 6-50)

அதுமட்டுமல்ல, நடந்து முடிந்த தேர்தலைப் பற்றியும், அரசு கலைக்கப்பட்டதைப்பற்றியும் இந்தச் சபையிலே கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. எதற்காகக் கலைக்கப்பட்டது என்பது பற்றிய பிரச்சினைக்கு இப்போது நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்குத் தவறிவிட்டீர்கள், ஆகவே நீங்கள் சென்று மீண்டும் மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்று வாருங்கள் என்ற அடிப்படையிலே இந்தத் தேர்தல் நடைபெற்றதாக இங்கே குறிப்புகள் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட முறையிலே இல்லை. பல ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு அரசு காரணமாக இருந்தது. அந்த ஊழல் குற்றச் சாட்டுகளைப் பட்டியல் போட்டு, பலமுறை பிரதம அமைச்சரவர்களுக்கும், கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்ட காரணத்தாலே, அதன் அடிப்படையிலே அப்படிப்பட்ட நிலைமை உருவாகியிருக்கலாம். அதுதான் உண்மையென்று நான் சொல்லமாட்டேன். அப்படிப்பட்ட நிலைமை அதனாலும் உருவாகியிருக்கலாம். அந்த அவப் பெயரைப் போக்க வழிவகைகளைக் காண வேண்டுமே தவிர, பாராளுமன்றத் தேர்தலிலே தோற்றுவிட்ட காரணத்தாலே, பேரவையைக் கலைத்துவிட்டார்கள் என்ற பொருள்படும்படியாகக் கூறியிருப்பது தவறு. மக்கள் கூறிவிட்டார்கள், எங்களுக்கு அபரிமிதமான வாக்குகளை அளித்து விட்டார்கள் என்று கூறுவது சப்பைக் கட்டுவதாக இருக்குமே தவிர, உண்மையான அரசியலாக இருக்க முடியாது. ஆகவே ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நாட்டு மக்களுக்கு அரசுமீது சந்தேகம் இல்லாமல் இருக்க, அவர்கள் புடம் போட்ட தங்கமென்று எடுத்துக்காட்ட, நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. இப்போது இருக்கும் மத்திய அரசு இந்த அரசு கேட்கும் உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறது. அதன்மூலம் தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே மின்சாரத்தைப்பற்றிச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். பண்டம் மாற்று முறையிலே, அலுமினியம் கொடுத்து மின்சாரம் கேட்டோம். ஆனால் மத்திய அரசு தடுத்து நிறுத்திவிட்டது என்று குறை

பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில சுயாட்சி என்று சொல்லப்படும் கருத்து, அரசினுடைய எண்ணப்படி அது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்று இருந்தாலும் சரி, மாநில சுயாட்சி என்று இருந்தாலும் சரி, எந்தச் சந்தர்ப்பத்திலும், நாங்கள் அதைவிட்டுக் கொடுத்தவர்களல்ல. உங்களைப்போல் ஆளும் கட்சியாய் இருந்தால் மாநில சுயாட்சியை ஆதரிப்பது. எதிர்க் கட்சியாய் இருந்தால் எதிர்ப்பது என்றநிலை இல்லாமல் அந்தப் பக்கத்தில் நிற்கக்கூடியவர்கள் ஆளும் கட்சிக்காரர்களாக இருந்தாலும், நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கின்ற கட்சியென்ற தன்மையில்லாமல், நியாயமாக மத்திய அரசு தமிழக அரசுக்குக் கொடுக்க வேண்டிய ஏதாவதொரு சூழ்நிலையை மறுக்குமென்றால், அதற்காக அரசு உண்மையாகப் போராடுகின்ற சூழ்நிலையைப் பெறுமென்றால் அரசுக்குக் கை கொடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஒத்துழைக்குமென்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*மாற்றுத் தலைவர் (புலவர் புலமைப்பித்தன்)*: இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை, மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-55)

### 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders.*

1. Notification issued with G.O. Ms. No. 1244, Commercial Taxes and Religious Endowments, dated the 13th August 1979 in regard to amendments to the Functioning of the Board of Trustees Rules, 1960. [Laid on the table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 (Tamil Nadu Act 22 of 1959).]



2. Notification issued with G.O. Ms. No. 13, Co-operation, dated the 14th January 1980 in regard to amendments to the Tamil Nadu Pawnbrokers Rules, 1944. [Laid on the table of the House under section 22(4) of the Tamil Nadu Pawnbrokers Act, 1943 (Tamil Nadu Act XXIII of 1943).]

3. Notification issued with G.O. Ms. No. 1464, Public Works (Electricity), dated the 14th August 1979 making the Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Rules, 1979. [Laid on the table of the House under section 7(3) of the Tamil Nadu Electricity Board (Recovery of Dues) Act, 1978 (Tamil Nadu Act 29 of 1978).]

4. Notifications issued with G.O. Ms. No. 2249, Agriculture, dated the 13th December 1979 in regard to declaring banana as an agricultural produce for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

5. Notifications issued with G.O. Ms. No. 2292, Agriculture, dated the 19th December 1979 in regard to inclusion of certain crops in Uthangarai and Palacode Markets under section 5(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

6. Notification issued with G.O. Ms. No. 2304, Agriculture, dated the 21st December 1979 relating to the declaration of notified market area for Salem, Athur, Namakkal, Tiruchengode, Rasipuram, Konganapuram and Kolathur markets under section 5(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

7. Notification issued with G.O. Ms. No. 285, Home, dated the 4th February 1980 in regard to amendment to Rule 381-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

8. Notification issued with G.O. Ms. No. 888, Home, dated the 24th March 1980 in regard to an amendment to Rule 48-A(4) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940, [Laid on the table of the House under section 133(3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

9. Notification issued with G.O. Ms. No. 3066, Home, dated the 13th December 1979 in regard to amendments to Rule 365 (a) of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

10. Sixth Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited for the year 1977–78. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

11. Seventh Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited for the year 1978–79. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956) ]

12. Notification issued with G.O. Ms. No. 2024, Home (P and E. IV), dated the 13th August 1979 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937) ]



13. Notification issued with G.O. Ms. No. 2745, Home (P and E-IV), dated the 3rd November 1979 in regard to an amendment to Rule 32(4) of the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

14. Notification issued with G.O. Ms. No. 2253, Home (P and E-IV), dated the 7th September 1979 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1950. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

15. Notification issued with G.O. Ms. No. 2815, Home, dated the 13th November 1979 in regard to amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act I of 1939).]

16. Notification issued with G.O. Ps. No. 273, Commercial Taxes and Religious Endowments, dated the 24th March 1980 in regard to an amendment to Rule 51 of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

17. Notification issued with Government Letter No. 83780/AMII/79-7, Agriculture, dated the 4th January 1980 in regard to an amendment to the Agriculture Department notification 11—1 No 633 of 1970, dated the 3rd December 1969 published at the pages 184-189 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 11th February 1979 [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

18. Notification issued with G.O. Ms. No. 514 Home (Transport 1), dated the 23rd February 1980 in regard to amendments to the Home Department Notification No. II(2)/HO/3883/79, dated the 14th June 1979, published at pages 356 to 358 of Part II–Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 4th July 1979. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

19. Notification issued with G.O. Ms. No. 790, Home (Transport–I), dated the 14th March 1980 in regard to additional surcharge on the tax at sixty–six per cent in respect of stage carriages kept or used by fleet operators on the 1st April 1979 and ending with the 31st March 1980. [Laid on the table of the House under section 25(2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

20. Notification issued with G.O. Ms. No. 2676, Revenue, dated the 5th December 1979 in regard to an amendment to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules, 1978. [Laid on the table of the House under section 47(3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978)].

21. Notification issued with G.O. Ms. No. 1303, Personnel and Administrative Reforms (Personnel–M), dated the 30th November 1979 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 in Volume I of the Tamil Nadu Services Manual, 1977. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

22. Notification issued with G.O. Ms. No. 563, Personnel and Administrative Reforms (Personnel–M), dated the 9th May 1979 in regard to exclusion of the post of Special Assistants to Collectors (Information and Public Relations) from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

23. Notification issued with G.O. Ms. No. 1168, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 15th October 1979 in regard to inclusion of the post of Assistant Statistical In-



vestigator in Fisheries Department under Tamil Nadu General Subordinate Service within the Commission's purview. [Laid on the table of the House under Article 320(5) of the Constitution of India).]

*B. Reports, Notifications and Other Papers.*

* 1. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 3 of-1980).

@ 2. The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 4 of 1980).

£ 3. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowment (Amendment and Special Provisions) Amendment Ordinance, 1980) (Tamil Nadu Ordinance No. 5 of 1980).

£ 4. The Madras City Municipal Corporation (Amendment) Ordinance, 1980 (Tamil Nadu Ordinance No. 6 of 1980).

& 5. The Interim Report of the Inquiry Commission of Justice Thiru W. S. Krishnaswami Naidu, B.A., B.L., Retired Madras High Court Judge, regarding the excesses committed during the period of three and half years from 1st January 1972 to 31st May 1975, prior to the Emergency (Part IV) (Tamil)

& 6. Report of Justice Thiru C.J.R. Paul, Judge of the Madras High Court appointed to inquire into the allegation of assault of an advocate by a Police Official at Tiruparankundram Police Station, Madurai district on 24th February 1979 and the counter-allegation of assault by the advocate on the Police Official (Tamil).

% 7. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 21st June 1980 (English and Tamil).

---

* Sent by post to all M.L.Cs. on 18-3-1980.
@ Sent by post to all M.L.Cs. on 22-4-1980.
£ Sent by post to all M.L.Cs. on 4-6-1980.
% Laid on the Table of the House on 21-6-1980.
& Laid on the Table of the House on 23-6-1980.

இணைப்பு.

(75ஆம் பக்கத்தில் இனம்-5க் கான அடிகுறிப்பைக் காண்க)

Address by Thiru Prabhu Das Patwari, Governor of Tamil Nadu to the Members of the Tamil Nadu Legislative Assembly and the Tamil Nadu Legislative Council, assembled together at the Assembly Chamber, Fort St. George at 4-00 p.m. on Saturday, the 21st June 1980.

Honourable Members of the Legislature,

I have immense pleasure in welcoming the Members, who have been returned victorious in the historic General Election, winning the confidence and support of the people.

2. In this test of democracy, the people of Tamil Nadu have given a clear verdict without confusion or fear. I admire their clarity of thought and their demonstration of the understanding of their duties. I express my appreciation for free and peaceful election. This Seventh Assembly of Tamil Nadu is the gift by the people of Tamil Nadu for truth, justice and honesty offered to the whole of India. I am proud to see you all, who have been returned with new vigour, winning the confidence of the people after the Sixth Assembly was dissolved within two and a half year as a repurcussion of the Parliamentary elections.

3. In electing you, the people have discharged their duties; I have no doubt you will discharge your duties properly. People have placed immense trust in you. I am sure you recognise this fact just as I do.

4. My Government is enthusiastic in implementing the policies of Anna. Everyone can rest assured that my Government, well known for its integrity, will always ensure purity in public life and administration. This Government will continue to follow the two language policy, enunciated by Anna, which has been adopted by this House. Tamil Nadu which has demonstrated its originality in several spheres, has unshakable faith in the Unity of the country.

5. This Government is firmly resolved to take every possible step to brighten the life of all the people below the poverty line. 'Food for Work Programme' started with the intention of reducing the ever enlarging unemployment problem will be continued.



Many schemes announced by this Government could not be implemented in the interim period. One such scheme, giving relief to the unemployed graduates, will be implemented soon.

6. The food position in the State continues to be satisfactory, largely because of the various measures taken by this Government. The Civil Supplies Corporation has been procuring paddy from the ryots at the rate of Rs. 105 per quintal which is higher than the price fixed by the Government of India. It is proposed to constitute an Agriculturists Welfare Committee at the State level under the presidentship of the Minister for Agriculture. This Committee will include representatives of the agriculturists and experts. This Committee would bring to the notice of the Government, the various problems of the agriculturists and would also offer constructive solutions for the speedy redressal of these problems. Similar Welfare Committees will also be set up at the District level.

7. My Government is deeply concerned about the debt burden of the farmers, that too of the small farmers. Government is aware of the problems faced by the farmers like rising cost of cultivation and need for fixing reasonable prices for the produce. This Government, in consultation with Union Government, will strive hard to find early solutions to these problems. Government is examining vigorously measures to give relief to small farmers. It is the endeavour of this Government to evolve suitable credit policy which will eliminate the emergence of similar crisis in future, in addition to rendering relief presently. State Government can implement these measures, involving large financial outlays only with assistance from Centre. I hope Government of India will come forward to sympathetically consider the reasonable requests made by the State Government.

8. The Government has drawn up a scheme to enlarge the activities and strengthen the Regulated markets in order to ensure a fair price for the agricultural produces. This scheme has been forwarded to the Government of India to obtain World Bank aid. It is also necessary to streamline the regulated market committees to enable them to function effectively. Suitable legislation for this purpose would be brought before the House during the current session. Elections would be conducted for the Regulated Markets on the basis of the new legislation.

9. As Honourable Members are aware, a draft legislation to reorganise and streamline the Co-operative Societies was introduced in the last session of the previous Assembly. When this was under the consideration of the Joint Select Committee, the Assembly was dissolved. This Government proposes to re-introduce this legislation during the current session. Elections to the Co-operative Societies would be conducted very soon, on the basis of the new Act.

10. This Government has always believed in friendly negotiations with neighbouring States to solve the various inter-State problems. The Government is hopeful of finding solutions through cordial discussions on the matters like utilisation of surplus electricity or of inter-State waters. This Government will soon take steps to resolve the pending inter-State river water issues, and in particular, the one relating to the Cauvery waters. This Government would endeavour to seek a solution which will not be detrimental to the interests of Tamil Nadu. At this juncture, I make an appeal to Government of India to allow this Government to implement the Electricity–Aluminium barter accord reached with Kerala.

11. The House is aware of the various measures taken by the Government for the development of the Handloom industry which in importance is next only to Agriculture in providing employment. The Government has invested Rs. 5.77 crores in the share capital of the Co-optex in the last three years. The turnover of the Co-optext, which was only Rs. 17 crores in 1975–76, is estimated at Rs. 36 crores during 1979–80. This Government has decided to advance a sum of Rs. 5 crores to the Co-optex to enable it to purchase the stocks accumulated with the primary societies. The Co-operative Spinning Mills in the State had a total spindlage of 2.07 lakhs in 1975 and produced 4,000 bales of yarn per month. As a result of the various measures taken by this Government, the spindlage of these Mills has increased to 3.14 lakhs by the end of 1979 and the monthly production has reached 7,000 bales which meets the yarn requirements of the Co-operative weavers' societies. This Government would continue to take all possible steps to ensure that the weavers get their yarn requirements promptly and at a fair price.



12. Investments in Tamil Nadu by Government of India stood at Rs. 262 crores by the end of 1969 out of the total investment of Rs. 3,463 crores made throughout the country, forming 8 per cent of the total investment. As against this, the investment by Government of India in Tamil Nadu up to 1979 was Rs. 616 crores, working out to only 4 per cent of the total investment of Rs. 15,668 crores made throughout the country. This sharp decline in share of Central investment in Tamil Nadu is perhaps one of the important reasons for the high percentage of people below the poverty line in Tamil Nadu. The large volume of unemployed in Tamil Nadu can also be attributed to the failure of the Government of India to set up major industries in Tamil Nadu and to the delays in clearing the setting up of major industries by the private sector. While the Government of Tamil Nadu is doing its utmost to create employment opportunities in fields coming under its purview like Agriculture Small -Scale industry, I would request Government of India to increase its investment in Tamil Nadu in order to supplement the measures taken by State Government and also to assist the growth of Small-Scale industries. I hope steps will be taken by Government of India to redress the imbalance in investments quickly.

13. Members may be aware of the steps taken by this Government to set up new universities at Coimbatore and Tiruchy. The University Grants Commission has conveyed its consent for setting up these universities. Suitable legislation for this purpose will be brought before the House and speedy steps will be taken to establish them. I am sure by these steps, there will be upgradation in the standard of higher education and acceleration in various research efforts. A Bill will also be brought before this House to reorganise the administration of universities of Annamalai, Madras and Madurai Kamaraj. The Government will take steps to set up a University covering all the educational institutions at Karaikudi. I am confident that the Members of this House will welcome the decision of this Government to set up a Tamil University.

14. Government proposes to set up a Centre for Appropriate Technology to develop employment opportunities. This Centre utilising the scientific knowledge available in India and abroad will suggest measures to improve the existing industries, to start new industries and to promote research and adaptation of technology.

This Centre will include scientists and technologists. With the aid of this Institution, Government hopes to open new vistas of Industrial development in the State.

15. Government has decided to convert the teachers of panchayat unions as Government servants. Necessary steps are being taken to implement this policy decision of the Government.

16. In this Session, a Bill will be brought before the House to reduce the age for voting to 18 in local body elections as mentioned in my last address. On this basis new list of voters will be prepared and elections to all panchayats, municipalities and the corporation will be held within six months.

17. Members may be aware of the various steps that have been taken by the Government to promote the welfare of scheduled castes and scheduled tribes. Government will prepare and implement a special Five-year Plan for the welfare of the Harijans.

18. In this Joint Session, many legislative measures will be brought before the House for the benefit of the workers in the organised sector. A legislation to provide for many benefits to thousands of workers in the unorganised sector also will be placed for the approval of the House. I am sure the House will extend its utmost co-operation and stand by the Government in these efforts.

19. I have briefly touched a few of the policies of my Government I am confident that the Honourable Members and the Government which is dynamic in the service of ever vigilant public will strive hard to alleviate the distress of the poor and raise the level of living of the downtrodden. This House has established glorious traditions in its own unique way. I am confident you will embellish them further.

20. This is the first session after the elections; let bitter incidents, if any, be forgotten. Let there be more light than heat in your arguments. Let your debates safeguard and sustain Democracy; Let your ability help eradicate poverty; It is my fervent wish that you all must function as beacons of light in the service of the public who have placed immense trust in you. I wish you all success in your endeavours;

*Vanakkam.*





திரு. பிரபுதாஸ் பட்வாரி, தமிழக ஆளுநர் அவர்கள் செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சட்டப் பேரவை மண்டபத்தில் ஒருங்கே குழுமியிருந்த தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு 1980 ஜூன் 31 ஆம் நாள், சனிக்கிழமை ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

மேன்மை பொருந்திய சட்டப் பேரவை, மேலவை உறுப்பினர்களே,

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடைப் பொதுத் தேர்தலில் மக்களின் பெரு மதிப்பையும், பேராதரவையும் பெற்று வெற்றி வாகை சூடி வந்துள்ள பேரவை உறுப்பினர்களை, வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2. ஜனநாயகப் பரிசோதனையில் மீண்டும் தமிழக வாக்காளப் பெரு மக்கள், குழப்பம் எதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல், தைரியத்தோடு இம் மாநிலப் பேரவைக்குத் தெளிவான தீர்ப்பை வழங்கியதிலிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று எண்ணி வியக் கிறேன். நேர்மையான முறையில் அமைதியான வகையில் தேர்தல் நடை பெற்றதற்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மைக்கும், தர்மத்திற்கும், நேர்மைக்கும் தமிழக மக்கள், இந்திய துணைக் கண்டத்திற்கே அளித்துள்ள பரிசுதான் இந்த ஏழாவது தமிழகச் சட்டப் பேரவையாகும். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் எதிரொலி யாக, இரண்டரை ஆண்டு காலத்திலேயே ஆறாவது சட்டப் பேரவையைக் கலைத்து, மக்களின் நம்பிக்கையைப் பெற்று வாருங்கள் என்றதை ஏற்று, புதிய பொலிவோடு வீற்றுள்ள நண்பர்களைக் காணப் பெருமைப்படுகிறேன்.

3. உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்து முடித்து விட்டார்கள். இனி உங்கள் கடமைகளைச் செவ் வனே செய்து முடிப்பீர்கள் என்று நம்புகிறேன். மக்கள் அசைக்க முடி யாத நம்பிக்கை உங்கள்பால் வைத்துள்ளார்கள். இதை நான் உணர்வது போல் நீங்களும் உணர்வீர்கள் என்று கருதுகிறேன்.

4. அமைந்துள்ள என் அரசு, அமரர் அண்ணா அவர்களின் கொள்கை களை நிறைவேற்ற ஆர்வம் பூண்டுள்ளது. நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்றுள்ள என் அரசு, அதை உறுதிப்படுத்தும் வகையில் தூய்மையை பொது வாழ்விலும் நிர்வாகத்திலும் என்றும் நிலைநாட்டும் என்று அனைவரும் திடமாக நம்பலாம். அண்ணா அவர்களால் வகுக்கப் பட்டு, இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இருமொழிக் கொள்கை யைத் தொடர்ந்து இந்த அரசு உறுதியுடன் கடைப்பிடிக்கும். தனித்

தன்மையை எல்லாத் துறையிலும் தன் முத்திரையாகக் காட்டிவரும் தமிழகம், பாரதத்தின் ஒற்றுமையில் அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

5. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்றி வைக்க, தன்னாலான எல்லாவற்றையும் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட "வேலைக்கு உணவுத்" திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஏற்கனவே இருந்த இதே அரசு அறிவித்த பல திட்டங்கள் இடைக்காலத்தில் அமுலாக்கப்படவில்லை. அவைகளுள் ஒன்றான வேலையற்ற பட்டதாரிகளுக்கான உதவித் தொகைத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

6. தமிழ் நாட்டில் அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக உணவுத் தட்டுப்பாடு எதுமின்றி உணவு நிலைமை சரியாக இருந்து வருகிறது. மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட உயர்ந்த விலையில் குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய் கொடுத்து, அரசு சார்பில் நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல்லை நேரடிக் கொள்முதல் நடத்தி வந்துள்ளது. விவசாயிகளின் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு வருவதற்கும், அவற்றை உடனடியாகத் தீர்ப்பதற்கும் வகை செய்யும் முறையில் விவசாய அமைச்சர் தலைமையில், விவசாயிகளது பிரதிநிதிகள், வல்லுநர்கள் கொண்ட விவசாயிகள் நலக் குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனையொட்டி மாவட்டங்களிலும் இத்தகைய விவசாயிகள் நலக் குழுக்கள் அமைக்கப்படும்.

7. விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி, அதிலும் குறிப்பாக சிறு விவசாயிகளின் கடன் சுமையைப் பற்றி எனது அரசு பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. உயர்ந்து வரும் உற்பத்திச் செலவுகள், விளைபொருள்களுக்கான நியாயமான விலைகள் நிர்ணயித்தல் போன்ற விவசாயிகளின் பிரச்னைகளைப்பற்றி அரசு நன்கு அறிந்துள்ளது; மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களது பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காணுவதில் எனது அரசு முழு முயற்சியுடன் ஈடுபடும். சிறு விவசாயிகள் கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறுவதற்கான முறைகளை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது. அத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டு, வருங்காலத்தில் அவர்களுக்கு இத்தகைய சிக்கல்கள் மீண்டும் ஏற்படா வண்ணம் நிதி வழங்கும் முறைகள், தக்கவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள்; நிதித் தேவை மிகுந்துள்ள இதனை, மாநில அரசு



செயல்படுத்த மத்திய அரசின் உதவி இன்றியமையாததாகும். மாநில அரசு இது பற்றி விடுத்துள்ள நியாயமான வேண்டுகோளுக்கு மத்திய அரசு முழுப் பரிவுடன் உதவி செய்ய முன்வரும் என்று நம்புகிறேன்.

8. வேளாண்மை விளைபொருட்களை விற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விரிவுபடுத்தும் திட்டமொன்றையும் அரசு தீட்டியுள்ளது; உலக வங்கி உதவி பெறுவதற்காக அரசு அதனை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இத்தகைய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிர்வகிக்கும் மாவட்ட விற்பனைக் குழுக்களைச் சீரமைப்பதற்கான சட்ட வரைவு இந்தக் கூட்டத் தொடரில் அவை முன் கொண்டுவரப்படும். திருத்தப்பட்ட சட்ட அடிப்படையில், விரைவில் இந்த அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தப்படும்.

9. கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைப்பதற்கான சட்டத் திருத்தங்கள் செய்வதற்கு, அரசு, சட்ட வரைவு ஒன்றை சென்ற சட்ட மன்றத் கூட்டத் தொடரில் மன்றத்தின் முன் வைத்தது. அது கூட்டுக் குழுவின் ஆய்வில் இருந்தபொழுது சட்டமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. அரசு மீண்டும் அந்தச் சட்ட வரைவினை சட்ட மன்றத்தில் கொணர்ந்து அதனைச் சட்டமாக்குவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல்கள் விரைவில் நடத்த முடிவு செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

10. அண்டை மாநிலங்களுடன் சுமுகமான முறையில் கலந்து பேசி பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதில் இந்த அரசு என்றுமே நம்பிக்கை கொண்டு செயலாற்றி வருகின்றது. உபரியாகவுள்ள மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்வதிலும் ஆற்று நீரைப் பயன்படுத்திக்கொள்வதிலும் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி, இணக்கமான முடிவுகளைக் காண முடியுமென்று நம்புகின்றது. இருந்து வரும் நதி நீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ளுமென்று குறிப்பிட விரும்புகின்றேன். காவிரி நீர் பங்கீடு பற்றிய பேச்சு வார்த்தைகள் மீண்டும் துவங்கப்படும். தமிழகத்துக்கும் பாதகம் இல்லாமல் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்த அரசும் கேரள அரசும் செய்து கொண்டுள்ள "மின்சாரம்—அலுமினியம்" எனும் பண்டமாற்று ஒப்பந்தத்தை நிறைவேற்ற மைய அரசு உதவிட வேண்டுமென்று கோருகிறேன்.

11. வேலை வாய்ப்புகளைத் தருவதில் வேளாண்மைக்கு அடுத்த முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள கைத்தறித் துறை மேம்பாட்டிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு மூலதனமாகச் சென்ற மூன்று ஆண்டுகளில் 5.77 கோடி ரூபாய் அரசு அளித்துள்ளது 1975-76 ஆம் ஆண்டில் 17 கோடி ரூபாயாக இருந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை அளவு, 1979-80 ஆம் ஆண்டில் 36 கோடி ரூபாயாக கணக்கிடப்பட்டுள்ளது. பல்வேறு கூட்டுறவு கைத்தறிச் சங்கங்களில் தற்போது தேங்கி இருக்கின்ற துணிகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வாங்குவதற்காக வழிவகை முன்பணமாக 5 கோடி ரூபாய் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகள் 1975 ஆம் ஆண்டு இறுதியில் 2.07 இலட்சம் கதிர்களுடன் இயங்கி, மாதம் ஒன்றுக்கு 4,000 பேல் நூல் உற்பத்தி செய்து வந்தன. அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, 1979 ஆம் ஆண்டு இறுதியில் 3.14 இலட்சம் கதிர்களுடன் 7,000 பேல் உற்பத்தி செய்யும் திறனை அடைந்து எல்லாக் கூட்டுறவு அமைப்பின் கீழ் வரும் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் கிடைக்கும் அளவிற்கு இவை மூலம் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நெசவாளர்களுக்கு நியாய விலையில் உரிய நேரத்தில் நூல் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், அரசு தொடர்ந்து மேலும் முனைப்பாக மேற்கொள்ளும்.

12. 1969 ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த முதலீடான 3,463 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 262 கோடி ரூபாயாக, அதாவது சுமார் 8 சவவீதமாக இருந்தது. 1979 ஆம் நிதி ஆண்டு முடிவு வரையிலான மொத்த முதலீடான 15,668 கோடி ரூபாயில் தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 616 கோடி ரூபாயாக அதாவது 4 சதவீதமாகக் குறைந்துவிட்டது. வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்களின் சதவிகிதம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அதிகமான அளவில் இருந்து வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். மத்திய அரசு இவ்வாறு தமிழ் நாட்டில் பெருந் தொழில்களைத் தொடங்காதன் விளைவாகவும் புதிய பெருந் தொழில்களுக்கு அனுமதி அளிக்கத் தாமதிப்பதன் காரணமாகவும் வேலையற்றோர் எண்ணிக்கையும் தமிழ் நாட்டில் மிக அதிகமான நிலையிலே இருந்து வருகின்றது. இவற்றைத் தீர்ப்பதற்காக மாநில அரசு தனது பொறுப்பிலுள்ள வேளாண்மை, சிறு தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் எடுத்து வரும் பல்வேறு முயற்சிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையிலும், சிறு தொழில்களுக்கு உறுதுணையாக அமையும் முறையிலும், மத்திய அரசு பெரிய தொழில்களை நிறுவுவதன் மூலம் தமிழ் நாட்டில் தனது முதலீடுகளை விரைந்து அதிகப்படுத்த வேண்டு

இருக்கட்டும்! உங்கள் திறமை நாட்டின் வறுமையை விரட்ட உதவட்டும்! உங்களை நம்பியுள்ள நாட்டு மக்களுக்கு ஒளி விளக்காக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்ற என் தணியாத ஆவலைத் தெரிவித்துக் கொண்டு, உங்களனைவரையும் வாழ்த்தி, என் உரையை முடிக்கின்றேன்.

**வணக்கம்.**

---

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

வெள்ளிக்கிழமை, 1980 ஜுன் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. அறிவிப்பு.

### (1) உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருவாளர்கள் ஈ. வெ. அ. வள்ளிமுத்து, காடுவெட்டி கண்ணப்பன் ஆகியோர் என்னுடைய அறையில் இன்று மாலை பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார்கள் என்பதை அறிவிக்கிறேன் (கை தட்டல்).

### (2) ஆளுநர் உரையின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பொது விவாதம் இன்றோடு முடிவடைந்து நாளைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பதிலும் அதற்கு முன்னாலே எதிர்த் தரப்புப் பேச்சும் இருக்கும். தயவுசெய்து எல்லோரும் நல்லபடி ஒத்துழைத்து இன்றே விவாதம் முடிய உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*     *     *     *

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்).

## 2. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** திரு. மீனாட்சிசுந்தரம் கொடுத்துள்ள திருத்தங்களை முன்மொழியுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட மூன்று திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்—

" தீர்மானத்தின் கடைசியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

'(1) அனைத்துப் பள்ளிகளையும் அரசுடைமையாக்குவதன் மூலம் தனியார் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக மாற்றுதல் பற்றிக் குறிப்பிடப்படாதது ;

(2) அரசின் உறுதிமொழிக்கேற்ப ஆசிரியர்கட்கு, அரசு ஊழியர்கட்குத் தரப்பட வேண்டிய நிலுவை அகவிலைப்படி உயர்வு வழங்குவதுபற்றிக்

(3) ஓய்வு பெறும் அரசு ஊழியர், ஆசிரியர்கள் அனைவருக்கும் ஊழியர் சங்கங்கள் வேண்டியுள்ள திட்டப்படி ரூபாய் 10 ஆயிரம் அளித்தல் பற்றி ஏதும் தெரிவிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கது.'

**திரு. செ. முத்துசாமி :** நான் வழிமொழிகின்றேன்.

*** திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆண்டு ஆளுநர் அவர்களுடைய உரையைப் பொறுத்தவரை தெளிவோடு, தேர்தலுக்குப் பிறகு நாட்டு மக்களுடைய எந்தெந்தப் பிரச்னைகளை எல்லாம் இந்த அரசு தீர்க்க வேண்டும் என்று நாமெல்லாம் நினைக்கின்றோமோ அல்லது எதிர்பார்க்கின்றோமோ அந்தப் பிரச்னைகளை எல்லாம் தீர்ப்பதற்கான வழிவகைகளை உரையில் தெரிவித்திருக்கின்ற நிலையை நாம் நன்றாகக் காண முடிகிறது. தேர்தலில் நாட்டு மக்கள் இந்த ஆட்சியின் மீது கடந்த 2½ ஆண்டு ஆட்சிக்குப் பிறகு மீண்டும் நம்பிக்கை வைத்து இவர்களை இங்கே தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். மக்கள் இவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சிக்குக் கொஞ்சமும் குறையாமல் நாங்களும் இவர்களை வரவேற்கக் காத்திருக்கிறோம். ஜனநாயக அடிப்படையிலே இது போன்ற நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஒட்டுமொத்தமாக ஒன்று கூடி சேர்ந்து நாட்டு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க அல்லது அதற்குத் துணை நின்று செயலாற்ற இந்த அவை ஒரு களமாக விளங்குகிறது. நேற்றையதினமும் அதற்கு முந்திய தினமும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசும் போது, அவருக்கே உரிய முறையில் மிக அழகாக, தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். கடந்த காலங்களில் நிலைமை எப்படி இருந்தபோதிலும், வருங்காலங்களில் நிச்சயமாக எங்கெங்கே தவறுகள் நடக்கின்றன என்று சுட்டிக்காட்டினால், உடனடியாக வேகமாக அவைகளைப் பரிசீலிக்கவும் அதே நேரத்தில் ஏற்றுக்கொள்ளவும் கொஞ்சமும் தயங்க மாட்டோம் என்று சொன்னார்கள். அதற்குரிய முறையில் ஒரு முன்னோடியாக முதலில் தன்னைத் திருத்திக் கொண்டதாகவும் ஒன்றைச் சொன்னார்கள். தேர்தல் முடிவுகளைப் பொறுத்தவரை, நான் ஒன்றை எச்சரிக்கையாக என்று சொல்லமாட்டேன், ஆனால் இந்த அரசினுடைய கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். "Nothing succeeds like success" என்று சொல்வார்கள். எதை



எடுத்தாலும் வெற்றி என்கின்ற ஒரு நிலை மனிதனுக்கு வருகின்ற போது, அதற்குக் காரணம் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் காரணம், சொல்லிக்கொண்டேயிருப்பார்கள். அவர்கள் சொல்லுகின்ற காரணங்கள் தவறான காரணங்களாக இருந்தாலும் கூட, வெற்றி பெற்று விட்டதால் இன்ன காரணத்தால்தான் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று சிலர் சொல்லுவதைத் தவிர்க்க முடியாத நிலை வருவதும் உண்டு. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, நாங்கள் ஒன்றும் குற்றச்சாட்டைச் சொல்லத் தயாராக இல்லை. அதே நேரத்திலே அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு அல்லது வழக்கமாக இலவசமாக ஆலோசனைகளைக் கூறுகின்ற பொறுப்பினை ஏற்றிருக்கின்றவர்கள் அல்லது அரசுக்கு அறிவுரைகளைக் கூறுகின்றவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். "ஏன் புரட்சித் தலைவர் அவர்கள் வெற்றி பெற்றார்கள் தெரியுமா? ஏன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றி பெற்றது தெரியுமா? கடந்த ஆட்சிக் காலத்தில் அவர்கள் இப்படி இப்படி எல்லாம் செய்தார்கள், நாங்கள்தான் அவர்களுக்கு வழி காட்டினோம்" என்றெல்லாம் பல பேர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனாலே எல்லாம் இந்த அரசு கொஞ்சம் கூட நிலை தடுமாறக் கூடாது, அதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாது, அப்படிப்பட்டவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள இவர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும் கூட, இப்படிப்பட்டவர்களிடம் இவர்கள் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அப்படிப்பட்ட ஒரு நிலை இப்பொழுது ஆளும் கட்சியினருக்குக் கிடைத்திருக்கும் அபரிமிதமான வெற்றியின் மூலம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தேர்தல் நேரத்தின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. தமிழகத்து மக்கள் இந்த ஆட்சியினுடைய நடைமுறையிலேயிருந்து வேறுபட்டு அல்லது மாறுபட்டு வருகிறார்கள் என்கின்ற கருத்து ஆங்கிலப் பத்திரிகைகளில் வந்து நான் படித்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. "Government of non-performance" என்று வந்தது. ஒரு இயங்காத ஆட்சி என்ற முறையிலே கடந்த காலத்திலே ஆட்சி வேகமாகச் செயல்படவில்லை என்ற ஆதங்கம் நாட்டு மக்களிடம் ஏற்பட்டிருந்தது. ஏன் செயல்படவில்லை என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து தரப்பட்டன. பொதுவான தவறு அல்லது தவறான குற்றச்சாட்டு என்று யாரும் மறுக்க முடியாது

களின் பேராசை என்று நான் சொல்லமாட்டேன்—தள்ளுபடி செய்யும்போது அதனால் நமக்கும் நன்மை கிடைக்குமே என்று எண்ணிக்கொண்டு கடனைத் திரும்பக்கட்டாமல் இருக்கிறார்கள். 2½ ஆண்டுக்காலத்திலே ஏற்பட்ட இந்தக் கடன் சுமை, கடன் பளு, பொருளாதாரச் சுமை நியாயம் தானா, தேவை தானா என்பது ஒருபுறமிருக்க, இதை எப்படித் தீர்க்கப்போகிறோம், இந்தத் தொகைகள் எந்தக் கணக்கிலே வரப்போகின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். சிறிய விவசாயியாக இருக்கட்டும், பெரிய விவசாயியாக இருக்கட்டும், அல்லது கடனாளி விவசாயியாக இருக்கட்டும், கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே நஷ்டம் இல்லாமல், நஷ்டம் என்று சொல்ல வாய்ப்பு இல்லாமல் விவசாயம் நடந்தது. கடன் நிவாரணம் தருவதற்கான நியாயம் இல்லாத நிலையிலே ஏற்பட்ட இந்தச் சுமையை எப்படித் தீர்ப்பது? இப்போது மின்சாரத் துறைக்கு பளு, சுமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பாக்கியை எப்படி வசூலிக்கப்போகிறோம்? இந்த அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தி வைத்துக்கொண்டு, மத்திய அரசு இந்தக் கடன்களையெல்லாம் தீர்ப்பதற்கு எங்களுக்கு உதவவேண்டும் என்று கேட்பது என்ன நியாயம்? இப்படி இந்த அரசு மத்திய அரசோடு மோதுவது விரும்பத்தக்கதல்ல, மாறாக மத்திய அரசோடு இந்த அரசு துணையாக இருந்து செயல்பட வேண்டும். மத்திய அரசு தொடர்பான பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், இந்த அரசுக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. ஆகவே முன்கூட்டியே இந்தக் கடன் பற்றி விவாதங்களை நடத்தி, அதற்குப் பிறகு கருத்துக்களை வெளியிடுவது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். பிரச்சினைக்குரிய கருத்துக்களையெல்லாம் முன்னதாக வெளியிட்டுவிட்டு, நிலைமைகளை பிரச்சினைக்கு உட்படுத்திவிட்டால், பின்னர் நாமும் நம்முடைய மரியாதை என்ற நிலையிலே இருந்து வழுவ முடியாத ஒரு நிலையிலே நிற்போம். மத்திய அரசும் அப்படிப்பட்ட நிலையிலே இருக்கும். அப்போது இரு அரசுக்கும் இடையே கசப்புணர்வு ஏற்பட்டுவிடும். இந்த நிலைமைகள் ஒரு நல்லரசுக்கு ஏற்றதாக இருக்காது. ஆகவே இந்த அரசுக்கு அந்த நிலைமை உருவாக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். இதை கடந்த காலங்களிலே நான் கடுமையான குற்றச்சாட்டாகக் கூட சொன்னதுண்டு. இந்த அரசைப் பொறுத்தவரையில், இப்போது புதிய அமைச்சர்கள் பலர் இடம்பெற்றிருக்கிறார்கள். இந்த அரசும் புதிய அரசுதான். மீண்டும் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று இந்த அரசு அமைந்திருக்கிறது. ஆகவே, நான் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்பவில்லை. இருக்கின்ற நிலைமைகளை இந்த அரசு கருத்திலே கொள்ள கடமைப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த நாட்டிலே சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்ற குற்றச்சாட்டை ஆரம்பத்திலேயே



நான் சுமத்த விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அரசு கொஞ்சம் ஏமாந்தால் கூட, நிலைமைகள் கட்டுக்கடங்காமல் போய்விடும். அந்த அளவுக்கு நாட்டிலே நிலைமைகள் இருக்கின்றன. அது நல்லதல்ல, சென்னை நகரத்திலே 50 பேர்கள், 100 பேர்கள் கூடியிருந்தால், எவ்வளவு பெரிய கலவரத்தையும் விளைவிக்க முடியும். 25 பேர்களைச் சாகடிக்கவும் முடியும் என்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. போலீஸ் எதற்காக இருக்கிறது? நேற்றைய முன்தினம் (Foreshore Estate) ஃபோர்ஷோர் எஸ்டேட்டிலே நடைபெற்ற சண்டை, பால்வழங்குவதில் ஏற்பட்ட சீர்கேட்டால் ஏற்பட்டதல்ல என்று பலபேர் சொல்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தொகுதி கேட்டு, அல்லது ஏரியா கேட்டு பிரித்துக் கொள்கிறார்கள், அப்படிப் பிரித்து ரௌடித்தனம் செய்கிறார்கள், சாராயம் விற்கிறார்கள். இப்படியெல்லாம் ஒவ்வொருவருக்கும் எல்லைக்கோடு வகுத்துக்கொள்கிறார்கள். அதன் விளைவாக இன்றைய தினம் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். போர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் நடக்கக்கூடாது என்பதோடு மட்டுமல்ல, கட்சிகளையும் கடந்து நின்று, அரசியலையும் கடந்து நின்று, நாம் எல்லோரும் ஒருமித்து நின்று இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடக்கா வண்ணம் செயல்பட வேண்டும். இந்தமாதிரி நிகழ்ச்சிகள் சென்னையிலே மட்டுமல்ல, பல்வேறு பகுதிகளிலேயும் பரவிக்கொண்டிருக்கிறது. இந்த 50 பேர் 100 பேர் ரௌடித்தனம் செய்யக்கூடியவர்கள் தாங்கள் எதையும் செய்யலாம் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள், அது கூடாது. நேற்றையதினம் பத்திரிகையிலே இன்னொரு செய்தியையும் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அது எவ்வளவு கொடுமையான செய்தி என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு மனைவிக்கு, அவள் தன்னுடைய கணவனின் அருகிலே இருப்பதைவிட பாதுகாப்பான வேறு இடம் எது இருக்கிறது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். கணவனுடைய கையைப் பிடித்தால் பாதுகாப்பு இருக்கிறது என்று எண்ணுவது தான் நிலை. ஆனால் வீட்டின் கதவைத் தட்டி, கதவைத் திறந்த கணவனைத் தாக்கிவிட்டு கணவனின் பக்கத்திலே இருந்த மனைவியை, வெளியே தூக்கிச் சென்று, ஏழெட்டு பேர் சேர்ந்து கற்பழித்திருக்கிறார்கள் என்ற சம்பவம் சென்னையில் ராயப்பேட்டையிலே நடைபெற்றிருக்கிறது என்ற செய்தி வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்று. இந்த ஆட்சியைக் குறைசொல்ல நான் விரும்பவில்லை. ஆனால் நிலைமைகள் நம்முடைய கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டு மக்களுக்கு நாம் அடிப்படையான பாதுகாப்புகளைத் தந்தாக வேண்டும். இந்த அடிப்படைப் பாதுகாப்பைக்கூட நம்மால்

முடியவில்லையென்றால், என்ன செய்வது? ஆட்சியென்றால், அது அ.தி.மு.க.வுக்கு மட்டும் சொந்தம் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், காங்கிரஸ் கட்சிக்கும், மற்ற அத்தனை கட்சிகளுக்கும் சேர்ந்துதான் ஆட்சி. நாம் அத்தனை பேரும் இந்த நாட்டு மக்களுக்குப் பொறுப்பானவர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு தந்தாக வேண்டும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசின் மூலமாக எடுக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தயவு தாட்சண்யம் இல்லாமல் வேகமாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

அடுத்து, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனே எனது சொந்தத் தொகுதியான திண்டிவனத்தில் ஏற்பட்ட கலவரம்பற்றி எல்லோரும் அறிவோம். அந்த நிகழ்ச்சி தொடர்பாக அங்கே அமைச்சர்கள்கூட வந்திருந்தார்கள். நான் அந்தப் பிரச்சினையின் உள்ளே போக விரும்பவில்லை. காரணம் ஏற்கெனவே பேரவையில்கூட அதைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். ஆனால் எதற்காக அதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அந்தக் கலவரம் தொடர்பாக அமைச்சர்கள் அந்தப் பகுதிக்கு வந்தார்கள். அமைச்சரவை பதவியேற்ற உடனே துர்ப்பாக்கிய வசமாக ஏற்பட்ட சம்பவமானதால், அமைச்சர்கள் அங்கே வருவதை முறையாக அறிவித்துவிட்டு வருவதற்கான அவகாசம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த அளவுக்கு அவர்களின் அலுவலகங்கள் வேகமாக இயங்க முடியாது என்பதையும் நான் அறிவேன். ஆனால் குறைந்தபட்சம், அமைச்சர்கள் அங்கே வந்த பிறகு அங்கே உள்ள சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்குத் தகவல் தந்து அவர்களைச் சந்தித்திருக்கலாம் அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளையாவது முறையாகச் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கலாம். அமைச்சர்கள் இதைக்கூட செய்யவில்லை என்பதைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த இரண்டையும் அமைச்சர்கள் செய்யாதது மட்டுமல்ல, அங்கே வந்து மக்கள் பிரதிநிதிகளைச் சந்திக்காமலேயே அந்தக் கலவரத்தைப்பற்றி "அது ஒரு திட்டமிட்ட சதிச் செயல், இது ஒரு அரசியல் சதி" என்றெல்லாம் சொல்லுவது ஒரு ஆட்சிக்கு அழகா என்றுதான் கேட்க விரும்புகிறேன். அமைச்சர் பெருமக்கள் இதுபோன்ற நிலைமைக்கு ஆட்படுவது நல்லதல்ல. உண்மையிலேயே அவர்கள் பெற்ற வெற்றியின் காரணம் வேண்டுமானால் ஒருவேளை அவ்வாறு சொல்லியிருக்கலாம். ஆனால்



**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் கலவரம் நடைபெற்றது என்று கேள்விப்பட்ட உடனே இங்கேயிருந்து நானும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களும்தான்—இருவருமாக—அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போலவே நானும் கலவரத்தின் உள்ளே போக விரும்பவில்லை. ஆனால் அந்த வன்முறையில் உயிரிழந்தவர் ஒருவர் புதுக்கோட்டையிலிருந்து வந்திருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு தொண்டர். அவர் கலவரத்தின்போது கல்லடிபட்டு அதன் காரணமாக இறந்திருந்தார். எனவே, அந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட உடனே இரவு 9 அல்லது 9-30 மணிக்கு இங்கிருந்து புறப்பட்டு இரவு 12 அல்லது 1 மணி அளவில் திண்டிவனத்திற்குச் சென்றோம். அங்கே மருத்துவ மனைக்குச் சென்று அடிபட்டவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று பாராமல், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அத்தனை பேரையும் நாங்கள் பார்த்து ஆறுதல் சொன்னோம். யார் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று கேட்கவில்லை. கூடியிருந்த மக்களைப் பார்த்து அவர்களிடத்திலே விசாரித்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறை அதிகாரிகளிடம் சொல்லி, பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மற்றவர்களுக்கும் தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு வந்தோம். அதில் அரசியல் ரீதியாக நானோ, என்னோடு வந்திருந்த மற்ற அமைச்சரோ நடந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரவு 12 மணிக்கு மேலாகிவிட்ட காரணத்தால், அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் தகவல் கொடுத்து அவர்களைச் சந்திக்க முடியாத சூழ்நிலை இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்கு மேல் நானும் அந்தக் கலவரம் குறித்து அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை. அப்போது அவர்கள் எப்படிப்பட்ட உணர்வோடு இருந்திருப்பார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் என்னுடைய வேதனையெல்லாம் மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் அதற்குப் பொறுப்பில்லை என்றாலும், அச்சம்பவத்தையொட்டி ஒரு அறிக்கை அமைச்சர் பெயரால் வந்தது. அது அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றதல்ல என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே அதுபற்றிய விவாதத்தில் மேலும் அதிகமாக ஈடுபட விரும்பவில்லை.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய பெயரிலோ, மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களின் பெயரிலோ எந்தவிதமான அறிக்கையும் விட்டதாக எனக்கு நினைவில்லை. பத்திரிகையில் செய்தி வந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாக என்னுடைய பெயரிலோ, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் பெயரிலோ எந்த அறிக்கையும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** தொழில் துறை அமைச்சர் அவர்களின் பெயரில் அறிக்கை வரவில்லை. அவர் அங்கே வந்திருந்தார் என்றாலும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பெயரில் பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளி வந்திருக்கிறது என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு தலைவர் அவர்கள் விரைவில் முடித்துக் கொள்ளும்படி சைகை காட்டினார்.)

விரைவில் முடித்துக்கொள்ளுகிறேன். அடுத்து, இன்னொன்றைப் பற்றியும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையில் மதுவிலக்குப் பிரச்சினையைப்பற்றித் தொடவுமில்லை, பேசவுமில்லை. ரொம்பவும் சரி. ஆனால் இந்த அரசு ஏற்கெனவே எடுத்த முடிவின்படி இன்றையதினம் மிக அதிகமான அளவில் மது வழங்குவதற்கான பெர்மிட்டுகள் தரப்படுகின்றன. அப்படிப் பெர்மிட்டுகள் அதிகமான எண்ணிக்கையில் வழங்கப்படுகிறபோது, அதற்கான மதுவகைப் பொருள்களை எங்கே வாங்குவது என்ற வினா எழுகிறது. அதற்கான கடைகள் எங்கே இருக்கின்றன ? அத்தகைய கடைகளை ஏற்கெனவே அளித்த அனுமதியின்படி 10, 15 பேர்கள்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுடைய ஏகபோகமாகவே இருக்குமா அல்லது இனிமேல் புதிதாகக் கடைகள் திறக்க அனுமதி அளிக்கப்படுமா ? இனிமேல் புதிதாகக் கடைகள் வரும் என்றால், பெர்மிட்டுகள் வழங்கப்பட்ட பிறகு, எத்தனை காலத்திற்கு இந்தக் குறிப்பிட்ட வியாபாரிகளிடமிருந்து அவர்கள் தங்கள் தேவைக்கு மதுவை வாங்குவது ? இப்படி இதற்குத் தேவையான தொடர்புள்ள நடவடிக்கையை உடனடியாக ஏன் எடுக்கவில்லை என்றுதான் கேட்க விரும்புகிறேன். இதை [illegible] அதாவது 'இயங்காத ஆட்சி' என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு திட்டத்தைப் போடுகிறபோது, அது தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆறிய கஞ்சி போல் இதை விட்டுவிடக் கூடாது. ஒரு திட்டத்தை அறிவித்துவிட்டு, அதற்குப் பிறகு பல





மாதங்கள் அல்லது சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் அதற்குத் தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்வது என்பது முறையாக இருக்க முடியாது என்பது மட்டுமல்ல, அது விரும்பத்தகாத விளைவுகளையும் உண்டாக்கிவிடும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கல்வியைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதைச் சொல்வதில் எனக்குக் கொஞ்சம்கூட தயக்கமில்லை. இந்த ஆட்சி, தான் கொண்ட கொள்கையிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு இரு மொழிக் கொள்கையிலே நம்பிக்கையில்லை என்பது மட்டுமல்ல, இந்த நாட்டின் அமைப்புக்கே அது தேவையற்றது. துணை புரியாது என்றுதான் கருதுகிறேன். இன்றைக்கு மாநிலமெங்கும் ஆங்கில போதனா மொழிப் பள்ளிகளில்தான் மாணவர்களைச் சேர்ப்பதில் மிகுந்த போட்டி இருந்துகொண்டிருக்கிறது. நாம் "தமிழ், தமிழ்" என்று எவ்வளவுதான் சொல்லிக்கொண்டிருந்தாலும், இருக்கிற போட்டியெல்லாம் மாணவர்களை ஆங்கிலம் போதிக்கும் பள்ளிகளில் சேர்ப்பதிலேதான் இருக்கிறது. இந்த அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் வீட்டுக் குழந்தைகளைக் கேட்டுப் பார்த்தாலே தெரியும். அவர்கள் எங்கே படிக்கிறார்கள் என்றால், தமிழ் போதனா மொழியாக உள்ள பள்ளிகளில் அல்ல. ஆங்கிலம் போதனா மொழியாக உள்ள பள்ளிகளில் படிக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, எங்கே இந்தியைக் கற்றுக் கொடுக்கிறார்களோ அங்கேதான் பெரும்பாலானவர்கள் வீட்டுக் குழந்தைகள், வசதிபடைத்தவர்களின் வீட்டுக் குழந்தைகள் படிக்கிறார்கள்.

(உறுப்பினர் திரு. ஆற்காடு வீராசாமி தம் இருக்கையில் இருந்தவாறே சைகையால் அதை மறுத்தார்.)

திரு. வீராசாமி அவர்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள். அவர் தன்னைப்பற்றி மட்டும் சொல்லுகிறாரா அல்லது எல்லோரையும் சேர்த்துச் சொல்லுகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இந்த மன்றத்தில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகள் என்று பொதுவாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார். என்னுடைய பிள்ளைகள் இந்தி படிக்கவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, என்னுடைய பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லும் வயதிற்கு வரவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** உறுப்பினர் அவர்கள் பிள்ளைகளைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறாரா அல்லது பேரக் குழந்தைகளையும் குறிப்பிடுகிறாரா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பேரக் குழந்தைகளுக்கு பாட்டனார் பொறுப்பு எடுத்துக்கொள்ள முடியாது. பிள்ளைகளுக்குத்தான் தந்தை பொறுப்பு எடுக்க முடியும்.

**புலவர் புலமைப்பித்தன் :** இதே அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் இருமொழித் திட்டத்தை ஆதரித்துப் பேசி, இந்தியை வன்மையாக எதிர்த்துப் பேசியதாக எனக்கு நினைவு. தற்போது அவர் திருத்திக் கொண்டிருக்கிறாரா அல்லது திருத்தப்பட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த அவையில் அல்ல. சட்டமன்றப் பேரவையில் முன்னாள் முதலமைச்சர் பேறிஞர் அண்ணா அவர்கள் இருமொழித் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, நான் அதை எதிர்க்கவில்லை. அன்றைக்குச் சொன்னதில் இன்றைக்கும் மாறுபாடு இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்றபோது, அதற்கு முன்னாலே பல்வேறு கட்சிகளும் தங்களின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அப்போது எந்தக் கட்சியும் இந்தியை வலியுறுத்தியதாக எனக்கு நினைவில்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** அங்கேதான் கோளாறே வருகிறது. இங்கு நான் மொழிப் பிரச்சினையைப்பற்றிக் குறிப்பிடும்போது, இந்தியை வலியுறுத்துகிறேன், அதற்காக வதாடுகிறேன் என்பதல்ல பொருள். இன்றைக்கிருக்கிற பிரத்தியட்ச நிலையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். நம் வீட்டுப் பிள்ளைகளை இந்தி சொல்லித்தரும் பள்ளிகளில் சேர்ப்பதிலேதான் ஆர்வம் காட்டுகிறோம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேர்தல் நேரத்தில் நாம் வாக்குகளைப் பெறுவதற்காக வாக்குறுதிகளை மக்களிடத்திலே தருகிறோம். அப்படி வாக்குகளைப் பெறுவதற்காக நம்முடைய [illegible]



கொள்கைகளை அடிப்படையாக வைத்து வாக்குறுதிகளைத் தந்து விட்டு, பின்னால் அந்த வாக்குறுதிகளை மறுக்கிற சூழ்நிலை வருகிறபோது, அது மக்களை ஏமாற்றுவதாக அமைகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இருமொழித் திட்டத்தைச் சட்டமாக்கியிருக்கிறோம். இருமொழித் திட்டம்தான் இந்த நாட்டு மக்களுக்கு தேவை என்று சொல்லுகிறோம். ஆனால் நம்வீட்டுப் பிள்ளைகளை மட்டும் இந்தி மொழி சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளுக்குத்தான் அனுப்புகிறோம். இந்தி சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளில் சேர்ப்பதிலேதான் நாம் ஆர்வம் காட்டுகிறோம். இப்படி வசதிபடைத்தவர்கள் வீட்டுக் குழந்தைகளை மட்டும் இந்தி மொழி சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளுக்கு அனுப்புவதை இந்த அரசு தடுப்பதே இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது இந்தி சொல்லித் தருகிற பள்ளியில் படிக்கிற மாணவர்கள் இருமொழி மட்டும் கற்றுத் தரும் பள்ளிகளுக்கு வருகிற நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். கூடிய விரைவில் எல்லாப் பள்ளிகளிலும் அந்த நிலைமை வந்துவிடும்.

**திரு. க. இராமமூர்த்தி :** கல்வியமைச்சர் அவர்களின் ஆசை நிறைவேற வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமேகூட. இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தபோது, இதைவிட மிக அழுத்தமான வாக்குறுதிகள் இந்த அவையிலே தரப்பட்டன. அமைச்சர் அவர்களும் ஏற்கெனவே தந்திருக்கிறார்கள். ஆனால் பிரத்தியட்சமான நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்டில் இருக்கிற நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி மொழி தெரியாமல் இங்கே இருக்கிற மக்கள் வியாபாரத்திலும், தொழிலிலும் எவ்வளவு சங்கடப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி மொழி தெரியாததால், வேலைக்குச் செல்லக்கூடியவர்கள் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். இந்தி மொழி தெரியாததன் காரணமாக பல்வேறு துறைகளில் தமிழர்கள் புக முடியாது இருக்கிறது. இதையெல்லாம் உணர்ந்தவர்கள், வசதி மிக்கவர்கள், தங்கள் பிள்ளைகளை இந்தி சொல்லித் தரும் பள்ளிகளுக்கே அனுப்புகிறார்கள். என்னைப் போன்றுள்ள ஏழை மக்கள், திண்டிவனம் போன்ற பகுதிகளில் இருப்பவர்கள், இந்தி சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பு இல்லாத பகுதிகளில் இருக்கிற மக்கள் தங்கள் பிள்ளைகளை வக்கீல் படிப்பிற்கும் வாத்தியார் படிப்பிற்கும்தான் அனுப்ப முடிகிறது.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இருமொழிக் கொள்கையை வகுத்து அதையாவது நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் வடக்கே பல மாநிலங்களில் ஒரு மொழித் திட்டம்தான் நடந்து கொண்டிருக்கிறது. வட மாநிலத்தவர்கள் 3 மொழிகளுக்குப் பதிலாக ஒரே மொழியைப் படித்துவிட்டு மிகச் சுலபமாகப் பட்டம் பெற்றுவிடுகிறார்கள். தமிழகத்திலே படிக்கின்ற மாணவர்கள் எங்கேயாவது வேலை தேடி அலைய வேண்டுமென்ற கருத்தை வைத்துக் கொண்டு கல்வித் திட்டத்தைத் தீட்டவில்லை. தமிழகத்திலேயே வேலை தர முடியுமென்று கருதுகிறோம். வேலைக்காக கல்வியா, அறிவு வளர்ச்சிக்காக கல்வியா என்பதைப்பற்றி ஆராய வேண்டும். அறிவு வளர்ச்சிக்காக கல்வி என்றாலும், தமிழும், ஆங்கிலமும் போதும் என்பதுதான் நம்முடைய கருத்து.

**திரு. க. இராமமூர்த்தி :** இதனுடைய விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. வேலைக்காக இந்தி என்று நான் சொல்லவில்லை. தொழிலுக்காக, வியாபாரத்திற்காக இந்தி தேவைப்படுகிறது. ஒரு கடிதம் இந்தியிலே வருகிறபோது, இன்னொருவரை வைத்துக்கொண்டுதான் அதைப் படிக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, தொழிலுக்காக, வியாபாரத்திற்காக இந்தி தேவைப்படுகிறது என்பது சரியான வாதமாக எனக்குப்படவில்லை. இன்றைக்கு வேலை தேடி இலட்சக்கணக்கான பேர்கள் அரேபிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆங்கிலம் கூட துணை நிற்கவில்லை. அரேபிய மொழி தெரிந்தால்தான் அங்கே அவர்கள் பணிபுரிய முடியும், வியாபாரத்தை விருத்தி செய்ய முடியும். ஒவ்வொரு பகுதியிலும் வேலை கிடைக்கும் என்பதற்காக நாம் மொழிக் கொள்கையை உருவாக்குவது என்பது நடைமுறையிலே முடியாது.

இன்னொன்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய ஒருமைப்பாட்டில் நாம் காட்டுகிற அக்கறையில் கொஞ்சம் கூட குறையாமல் வடபுலத்தில் உள்ளவர்கள் அக்கறையைக் காட்டினால் நல்லது. முன்பு நம்மைப்பற்றிச் சந்தேகப்பட்டார்கள். ஆனால் இன்றைக்கு வடக்கேயுள்ளவர்கள் ஒரு மொழிக் கொள்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழர்களுக்கு வேலை வாய்ப்



பைக் கொடுப்பதற்கும், தொழில் செய்வதற்கும் உரிய பாதுகாப்பை மத்திய அரசுதான் ஏற்படுத்தித் தர வேண்டும். இதற்கு மொழிக் கொள்கை குறுக்கே நிற்காது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு பேசலாம். இப்போது தீர்கிற பிரச்சினையல்ல இது.

**திரு. க. இராமமூர்த்தி ,** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்திலிருந்து நான் மாறுபடவில்லை. அதிலே உறுதியாக இருக்கிறேன். அந்தக் கொள்கையை இந்த ஆட்சி நிச்சயமாக நம்பினால் தமிழகத்திலே இந்தி சொல்லிக் கொடுக்கமாட்டோம் என்று சொல்லி இந்தியைத் தடைசெய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு வாய்ப்பு உள்ளவர்களுக்குப் படிக்கும் வாய்ப்பைக் கொடுத்துவிட்டு . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்வியைப் பொறுத்தவரையில், கொஞ்சம் நஞ்சம் இருந்த அதிகாரத்தையும் மத்திய சர்க்கார் பெற்றுக் கொண்டுவிட்டது. அந்த அதிகாரத்தை வாங்கித் தந்தால், மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழ் நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் இந்தி இருக்கவேண்டுமென்று விரும்புகிறாரா அல்லது வேண்டாமென்று விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய பிள்ளைகள் இந்தியைப் படிக்க முடியாது. ஆனால் வசதி படைத்தவர்கள், பணம் படைத்தவர்கள் பிள்ளைகள் மட்டும் இந்தியைப் படிக்க முடிகிறது. ஏழைகள் படிக்க முடியாத நிலையில் வசதியுள்ளவர்கள் மட்டும் இந்தியைப் படிப்பது என்பது நியாயமாகுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரை மணி நேரமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** அடுத்து, தொழில் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மத்திய அரசு எந்த அளவிற்கு முதலீட்டைச் செய்ய வேண்டுமென்பதையும், கொடுத்திருக்கிற உதவி போதாது என்பதையும் மிகத் தெளிவாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை நான் வரவேற்கிறேன் என்பதோடு மட்டுமல்லாமல், அதற்காக இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதையும் கேட்க

விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்கும். கூடுதலான தொழிற்கூடங்களைத் தொடங்குவதற்கும் என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கிறதோ அதற்கெல்லாம் நானும், நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் இயக்கமும் துணையாக நிற்போம்.

மத்திய நிதியமைச்சர் அவர்கள், 125 கோடி ரூபாயில் இராணிப்பேட்டையில் ஒரு தொழிற்கூடம் ஏற்படுத்தப்படும் என்பதை நாடாளுமன்றத்தில் கடந்த முறையே தெரிவித்திருந்தார். கடல் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மாநில அரசின் திட்டத்திற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆகவே, மத்திய அரசு தமிழகத்திற்குச் செய்யக் கூடாது என்று பாராமுகமாகவோ, கோபமாகவோ இருக்கிறது என்று சொல்ல முடியாது. "கேளுங்கள் கொடுக்கப்படும்", "தட்டுங்கள் திறக்கப்படும்". அதற்கான என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசினர் எடுத்திருக்கிறார்கள்? எந்தெந்தத் திட்டங்கள் தமிழகம் அளித்த திட்டங்கள் என்பதற்காகத் தள்ளப்பட்டிருக்கின்றன? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்பதற்காக எந்தெந்தத் திட்டங்கள் பாராமுகமாக வைக்கப்பட்டன?

இந்தியா முழுமைக்கும் உற்பத்தியாகின்ற சந்தன மரத்தில் 90 சதவீதம் உற்பத்தி தமிழகத்திலேதான் நடைபெறுகின்றது. ஆனால் அது தொடர்பான தொழிற்கூடங்கள் அனைத்தும் கர்நாடகாவில் இருக்கின்றன. இங்கு இன்னும் ஏன் துவங்கவில்லை? அதற்கான நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக, "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்று சொன்னார்கள். எனவே நானும் ஒன்றைக் குறுக்கிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்று ஆண்ட இரண்டரை ஆண்டுகளில் தமிழக அரசு சார்பிலும் அதே போல தனியார் துறையிலும் ஏறத்தாழ 100 தொழில்களைத் துவங்குவதற்காக அனுமதி கேட்டு மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதியிருக்கிறது. எந்தெந்தத் தொழிற்சாலைகளுக்காக அனுமதி கேட்டிருக்கிறோம் என்ற விரவங்கள் அடங்கிய பட்டியலைத் தரத் தயாராக இருக்கிறோம். கேட்டிருக்கிறோம், தட்டியிருக்கிறோம், கேட்டிருக்கிறோம்—கிடைக்கவில்லை. தட்டியிருக்கிறோம்—திறக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அனுமதியைப் பெற்றுக் கொடுத்தால், தமிழக மக்களின் சார்பாக நன்றியுள்ளவர்களாக இருப்போம்.



**திரு. க. இராமமூர்த்தி :** நிச்சயமாகத் துணை நிற்கத் தயாராக இருக்கிறோம். ஆனாலும் அதைப்பற்றிய அறிக்கையை வைப்பது நல்லது. தமிழகத்திலே, இரண்டரை மூன்று ஆண்டுகளாக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கின்றது. கேட்க வேண்டிய நேரத்தில் கேட்கப்படவில்லை என்ற குறை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குன்றிவிட்டது போல திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்யப்பட்டது. 1976 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டபிறகு இன்றைக்குப் பிரதமராக இருக்கும் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு பெரும் குற்றச்சாட்டைச் சுமத்தினார். "தொழில் துறையில் தமிழகம் மூன்றாவது இடத்திலிருந்து 11 வது இடத்திற்குச் சென்றுவிட்டது. தொழில் முதலீட்டில் பின்தங்கிவிட்டது. தனி நபர் வருமானமும், குறைந்துவிட்டது. இவற்றைப் பெருக்க அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை" என்று குற்றம் சாட்டினார். இருவரும் இணைந்ததன் காரணமாகவும், அரசியல் காரணத்திற்காகவும் அதே குற்றச்சாட்டு மீண்டும் எடுத்து வைக்கப்பட்டது.

தொழில் துவங்க வருகிறவர்கள் பல நோக்கங்களோடு வருகிறார்கள். சில நேரங்களில் ரூ. 15 இலட்சம் ரூபாய் மார்ஜின் என்று வைத்துக்கொண்டு, ஒரு கோடி ரூபாய் மார்ஜின் வைத்துக்கொண்டு, பிறகு போட்ட பணத்தையும் எடுத்துக்கொண்டு, தப்பித்துச் செல்ல தொழிற்சாலை என்ற பெயரால் திட்டங்களைக் கொண்டுவருகிறார்கள். 'லிமிடெட் கம்பெனி' என்பதால் 'லையபிலிட்டியும்' 'லிமிட்டெட்'தான். ஆகவே இதையெல்லாம் ஆராய்ந்து மக்களுடைய வரிப்பணத்தை நியாயமான முறையில் செலவிட அக்கறை கொண்டு இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தைப்பற்றி அதிகமாகப் பேசவேண்டியதில்லை என்று கருதுகிறேன். சந்தன மரத்திலிருந்து, சோப், எண்ணெய் போன்ற பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில். . .

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இரண்டு அமைச்சர்கள் விளக்கம் அளித்ததற்குப் பிறகு, நானும் விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். சந்தனத் தொழிற்சாலை

யைப் பற்றி இருப்பதால், அதைப்பற்றித் தெரிவிப்பது இந்தச் சபைக்கு நல்லது என்று கருதுகிறேன். கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்திற்கு முன்னால் வரை கவனிக்கப்படாமல் இருந்து சந்தன மரத்தைப் பயன்படுத்தித் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவேண்டுமென்று அரசு முயன்றபோது, அன்றைக் கிருந்த மத்திய அரசு சந்தனத் தொழிற்சாலைகள், பெரிய தொழிற்சாலை களாகத் துவங்கக்கூடாது என்று மறுத்துவிட்ட நிலையில், அதற்குப் பிறகு சிறிய தொழில்களாகப் பிரித்து, அதைத் துவக்குவதற்கான முயற்சியை அரசு எடுத்துக்கொண்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-40)

**திரு. க. இராமமூர்த்தி :** வரவேற்கத் தக்க ஒன்று. அன்றைக்கு இருந்த மத்திய அரசுதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பிலே. . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சிறு தொழில்கள் என்று சொன்னார்கள். எந்தெந்த விதமான தொழில்கள் சிறு தொழில்கள் என்று சொல்கிறார்கள். எந்தெந்தப் பொருள்களைத் தயாரிப்பதற்கு சிறு தொழில்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** சந்தனத்தை அடிப்படையாகக் கொண்டு, சந்தன மரத்தை அடிப்படையாகக் கொண்டு எந்தெந்த விதமான தொழில்களைத் தொடங்க முடியுமோ, அந்தத் தொழில்களை எல்லாம் தொடங்கலாம் என்று குறிப்பிடுகிறேன். சந்தன எண்ணெய்த் தொழிற் சாலை தொடங்க திட்டமிடப்பட்ட திருப்பத்தூர் பகுதியில் தொடங்க திட்டம் உள்ளது. 3, 4 பிரிவுகளாக ஆரம்பிக்கலாம் என்று திட்டமிடப் பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சந்தன மரம் பற்றிய விவாதம் இத்தோடு முடிந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** சந்தன மணம் கமழும் பேச்சாக இருக் கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** மின்சாரத் துறைக்குத் தேவையான 'டிரான்ஸ் பார்மர்கள்' பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்தில் பெங்களூரில் டிரான்ஸ்பார்மர்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை நான் பார்த்தேன். அவர்களோடு பேசும்போது கேட்டேன். இந்த டிரான்ஸ்பார் மர்களை எந்த மாநிலம் உங்களிடம் வாங்குகிறது என்று கேட்டேன். உங்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்றும் கேட்டேன். 'எங்களுக்கு தேவை என்பது மிகமிகக் குறைவு. நாங்கள் [illegible]



தமிழகத்திற்கும் மராட்டிய மாநிலத்திற்கும் தான்' என்று அவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நமக்கு அவைகள் தேவைப்படுகின்றன என்று தெரிகிறது. நம்முடைய துறை யினருக்குத் தெரியும். அந்தத் தொழிற்சாலை நமக்கு அமைய வேண்டாமா என்று சொன்னால் எங்களுக்கு முன்னால் செய்தார்களா என்று கேட்கலாம். அது அல்ல பிரச்சினை. இந்த இரண்டரை ஆண்டுக் காலத்திலே என்ன திட்டம் வகுத்தார்கள் ? அதற்குப் பிறகு மக்களைச் சந்தித்து விட்டார்கள். ஆனால் இதுபோன்ற தொழிற்சாலைகளை ஏன் தொடங்கக் கூடாது என்று இந்தப் தரப்பிலேயிருந்து கேட்க எங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதை எடுத்தாலும், மத்திய அரசோடு ஏதோ ஒரு உரசலோடு தொடங் குவது நல்லதா என்று பார்க்க வேண்டும். கொள்கைகளை உருவாக்கியிருப்பது மட்டுமல்ல, மத்திய அரசு அதற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே கூட்டுக்கூட்டத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த அவையிலே தெரிவித்ததன் மூலம் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது வேறு. பல்வேறு நடைமுறைகளிலே அது ஒரு நடை முறையாக இருந்தாலும், ஏற்கெனவே இருந்து வருகின்ற நடைமுறையில், இதை எப்படிச் செய்வது என்று பார்க்க வேண்டும். இது போன்ற சிக்கல் நிறைந்த நெருக்கம் நிறைந்த, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே சங்கம் வரக்கூடிய பிரச்சினைகளை இவ்வளவு வேகமாக வெளியே சொல்வது நல்லதா என்பதை அரசினுடைய ஆலோசனைக்கு விட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அங்கத்தினர் அவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** முடித்துக் கொள்கிறேன், அடுத்து . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கடைசியாக என்று சொல்ல வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** இன்னொன்று, நேற்றையதினம் உரிமையோடு இருக்கின்ற சிரமங்களை எல்லாம் சொன்னார்கள். உள்ளாட்சித் துறை தேர்தல் நடக்கும்போது 18 வயது உடையவர்களுக்கும் வாக்குரிமை உண்டு என்று சொன்னார்கள். திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போது, "இதைப் பற்றி நான் சொல்லும்போது, மற்ற அரசியல் கட்சியினர் ஆதரவு [illegible] பேசலாம்' என்று சொன்னார்கள். அவருடைய கருத்துக்கு நான் ஆதரவு தருகிறேன். 18 வயதினர்களுக்கு வாக்குரிமை என்பதைப்பற்றி

மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது அவசியம்தானா ? கல்லூரிகளில் இருந்தவர்கள் அரசியலுக்கு வந்துவிட்டார்கள். அடுத்து, பள்ளிகளில் இருப்பவர்களை இன்று அரசியலுக்கு இழுப்பது தேவைதானா என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். கல்லூரிகளிலேயிருந்து வந்து கடந்த தேர்தலிலே முற்றுகையிட்டார்கள். அடுத்து, பள்ளியிலிருந்து வருபவர்களை இப்போது பஞ்சாயத்துத் தேர்தல்களில் ஈடுபடச் செய்தால், அது எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் அடிப்படையான ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும்போது, கொஞ்சம் ஜாக்கிரதையோடு அறிவிக்க வேண்டும். இதை அறிவித்த பிறகு, அது ஒரு பிரஸ்டீஜ் (Prestige) என்று வந்துவிடுகிறது. அதை விட்டுக் கொடுப்பது முடியாது என்ற நிலைமையும் வந்துவிடுகிறது. இதை அறிவிப்பதற்கு முன்னாலே மற்ற அரசியல் கட்சிகளையும் கலந்து செய்திருக்கலாம், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எந்த நேரத்திலும் எது நியாயம் என்று பட்டாலும், அதற்குத் தக்கவாறு திருத்திக் கொள்ளத் தயங்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாக்குரிமையை 18 வயது மாணவர்களுக்கு, பள்ளிக்கூடங்களுக்கு எடுத்துச்செல்வது பல்வேறு குழப்பங்களுக்குக் காரணம் ஆகிவிடும். பல குழப்பங்கள் உருவாவதற்கு வழிவகுத்துவிடும். இந்தக் குழப்பங்கள் மாநிலத் தேர்தல் வரையில் இருந்தன. இனி பஞ்சாயத்துத் தேர்தல் வரை செல்வதற்குத் துணை இருக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** இன்னும் சரியாக மூன்று நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலேயும், மக்கள் நலத் துறையிலேயும், உள்ளாட்சித் துறையிலேயும் முழுக்க முழுக்க அதிகாரிகள் நிர்வாகம்தான் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்போதைக்கு வேறு வழி இடையாது. இதிலே மாற்றங்கள் கொண்டு வருவதற்கு தனித்தனியாக கமிட்டிகள் போட்டும், அவைகள் இயங்காத கமிட்டிகளாக இருப்பதாகத்தான் தெரிகிறது. செயல்படவேண்டிய அந்தக் கமிட்டிகள் இன்று செயலாற்ற முடியாமல் இருக்கின்றன. அதைப் பரிசீலிக்க வேண்டும். தயவுசெய்து தாலுக்கா அளவிலே, ரெவின்யு டிவிஷன் அளவிலே மக்கள் நலத் துறை, கூட்டுறவுத் துறை, உள்ளாட்சித்



துறை இவை மூன்றையும் இணைத்து அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பிரதிநிதிகளை, அந்தக் கமிட்டிக்குத் தலைமை ஏற்கச்செய்து, அந்தப் பகுதி அதிகாரிகளையும் சேர்த்த ஒரு கமிட்டியாக அமையச் செய்ய வேண்டும். அந்தக் கமிட்டிக் கூட்டத்தினுடைய குறிப்புகளை அந்தத் துறையினுடைய தலைவருக்கு அனுப்ப வேண்டும். அதன் மீது அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து, அதனைப்பற்றிய குறிப்புகளை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைத்தால் நலமாக இருக்கும்.

உள்ளாட்சித் துறையில் தேர்தல்கள் ஓர் ஆண்டு காலத்திலாவது நடக்கும் என்று நம்புகிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில், பல சங்கடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறை எப்போது இயங்குமோ தெரியவில்லை. விவசாயிகள் கடன்கள் எல்லாம் தீர்ந்த பிறகுதான் அதுவும் இயங்க வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தால்தான் அதுவும் முடியும் என்று சொல்லிக்கொண்டு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படியே அங்கத்தினர் அவர்கள் பேச்சை வளர்த்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தால், எப்போது முடிவது ?

**திரு. க. இராமமூர்த்தி :** நான் மூன்று நிமிடங்களில் முடித்துவிடுவதாகச் சொல்லியிருந்தேன்.

அரிசனங்களுக்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டம் தீட்டியிருக்கிறோம் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். ஐந்தாண்டுத் திட்டம் என்று சொல்வது நம்மைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காகத்தான். இது அரிசனங்களுக்கு சமாதானம் சொல்வதுபோலத் தான் இந்த அவையிலே இருக்கிறதே தவிர, இதனால் அவர்களுக்குப் பலன் ஏற்படாது. இன்றைக்குத் தேவை அரிசனங்களுக்குத் குடிதண்ணீர். அது அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. பல பகுதிகளில் இன்றைக்கும் கிடையாது. தீவிர நடவடிக்கைகள் எடுப்பதாக பேச்சுக்கள், விளம்பரங்கள் மட்டும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. பல அரசுகள் தங்களை அரிசனங்களுடைய மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கின்றன. அப்படி இருந்தும் இன்றைக்கு அவர்களுக்குக் குடிநீர் கிடையாது. பாதை வசதிகள் கிடையாது, வீட்டு மனைகள் கிடையாது, விளக்கு வசதிகள் கிடையாது என்ற நிலைமைகள்தான் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நரகத்திலேதான், அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவற்றைத் தீர்க்க, அதற்கு ஒரு கால கட்டத்தையும் அறிவித்துவிட வேண்டும். ஆறு மாதம் என்று மார்தட்டிக் கணக்கில் சொல்லி விடட்டும். இதையெல்லாம் அரசு நிறைவேற்றி அரிசனங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆளுநர் அவர்களின் உரை

[திரு. க. இராமமூர்த்தி] [1980 ஜூன் 27

வரவேற்கத்தக்கது என்றாலும், இங்கும் அங்குமாக சில இடங்களில் இருக்கின்ற குறைகளையும் அரசு மீண்டும் பரிசீலனை செய்து அவைகளையெல்லாம் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் 8 உறுப்பினர்கள் இன்றைக்குப் பேச இருக்கிறார்கள். எனக்கு உறுப்பினர்கள் நேரம் எடுத்துக்கொள்வதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை, ஆனால் அலுவல் ஆய்வுக்குழு கொடுத்திருக்கிற நேரம் 10 நிமிடங்களிலிருந்து 15 நிமிடங்கள் வரைதான். அதிலே நான் கண்டிப்பாக உறுதியாக இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த ஆண்டிலேயே இரண்டாவது முறையாக ஆளுநர் உரை மீது விவாதிக்கிறோம். பட்ஜெட் வரும்போது பேசிக் கொள்ள முடியும். தயவுசெய்து 10 நிமிடங்கள், 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டு பேசி முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, reading from the Governor's Address, I find this important observation : "**In this test of democracy, the people of Tamil Nadu have** given a clear verdict without confussion or fear. I admire their clarity of thought and their demonstration of the understanding of **their duties** "

Sir, I wish to congratulate the Governor on this statement that he has made in his Address. What has happened in Tamil Nadu must be an eye-opener to the Union Government as well as to all the other Governments who have followed the 1977 example which, I should say, the Janata Government introduced without any rhyme or reason, by holding Elections in the States when there was a debacle at the Centre. I see that the people of Tamil Nadu, in having elected the present Government back to power, have demonstrated that the federal structure could well subsist in this country and that the federal structure should be respected by the Union Government, even though different from its complexion. It is a matter of great regret that in the year 1980 the Union Government should have repeated the example of the Janata Government and held Elections in different States of this country costing the Exchequer heavy loss. If this experiment is to be carried to its logical conclusion, all the Members of Parliament from Tamil Nadu should have resigned after the electorate had voted the A.I.A.D.M.K. in the Assembly Elections. In such a case, I do not know where the



1980 ஜூன் 27] (Thiru G. Vasantha Pai)

process would have ended. Therefore, I welcome the observation of the Governor that the people of Tamil Nadu have given a clear verdict without confusion or fear.

But, Sir, that is far from saying that the Government which has come in today after the elections could strike attitudes or could afford to be arrogant. When given advice, it should accept it with grace. I am referring to an incident which happened here and for which I was denied an opportunity for personal explanation. Two days ago I offered a suggestion to the Government to follow the example of persons who were no more and who did not belong to any political party. I said that their examples should be emulated. When I said it, I said so dispassionately. When I said it, I was really thinking of the words of the poet Long fellow who said :

"Lives of great men all to remind us
that we can make our lives sublime;
And departing leave behind us
Footprints on the sands of time".

I do not see what use can Obituary References be except to draw inspiration from the ideals set forth by the persons who had passed away. We have to learn, for the future, lessons from their lives. I am glad that the Hon. the Chief Minister has just come to the House and I am glad to be here to answer him. Every alternate Sunday, leaving out one Sunday in a month, I have greatly admired seeing him on the T. V. Programme on films in which Thiru M. G. Ramachandran has acted. I have found in each of these pictures a lot of sermonizing to the public, to persons in authority and to those in high positions also as to how they should behave, how they should act, how they should go about in life and their daily routine. When I advised him on that day, it was in that self-same spirit of good humour which I hope he would understand when I advise him in the future also. Sir, I am not an "Ilaignar". I am running my 60th year of age and I am, therefore, as old as Thiru M. G. Ramachandran or probably older than he. But, whatever it be, I belong to an independent profession and I also represent an enlightened Constituency. My remarks here cannot be just

brushed aside as if they are to be given no regard. On that day, I did not want to intervene in the speech of the venerable Chief Minister. I have great respect and regard for him. At the time of the last Elections, I openly said that the throwing out of the A I A D M K Government was one of the most abominable acts that had been done by the Centre. You may remember that in my speech on the earlier Governor's Address in this House I requested the able Deputy of the Chief Minister to bring in a resolution in this House by which floor-crossing would be prevented. That able Deputy replied saying, "If Vasantha Pai would not cross floors, then everything will be all right". But soon I found that able Deputy also crossing floors. It was not Vasantha Pai who had the necessity to do so because he was an Independent and will always remain an Independent, no matter what parties come and go. Mr. Vasantha Pai never takes bread crumbs from anybody. He has his own way and he will go that way without asking for any favours. I have done that in my life so far and I am going to do it in the short span of time that may be left for me. I would like to tell you that five Ministers from the earlier AIADMK Government have crossed floors. Two of them were sitting behind the Chief Minister and one was sitting to his right. Another gentleman was looking after the welfare of the depressed classes and Harijans. Another Minister was a gentleman who was a Member of the Bar, claimed to be a great follower of Anna became Advocate-General through Anna's grace, and came to the Judiciary through Anna's grace and opted to become Law Minister in the previous AIADMK Government, with the Chief Minister's grace. But shortly after the dissolution of the Assembly, he went over to the DMK. I do not blame them for going over like this. I am only saying that it is not good for our country. The same thing happened at the Centre also. We saw that there was a debacle there and within two years we have had General Elections. An 'Avival', as we know it in Malayalam, composed of different parties and it was hoisted as a Government at the Centre. Then, what happened? Within two years, they started calling each other names and a clown who had stood from Rae Barelli made a mess of the whole affair when he was Secretary of that Party. The result was that our country was plunged into the necessity of spending enormous sums of money on a General Election, again,



THIRU G. SWAMINATHAN : May I know who is the clown that the hon. Member mentions ?

THIRU G. VASANTHA PAI : I do not want to expatiate on his name. I do not want to mention names and I cannot yield to the desire of my hon. Friend. If he does not know who the clown is, let him get inspiration from some other source.

I would like to say, at this juncture, that it is very well for the Government to assure us that they will bring in a resolution in this House by which floor-crossing will be stopped in the future. Let there be parties and let there be national parties and local parties. But let all floor-crossing be stopped. It must be enacted so in the Representation of the People Act. If anybody wants to cross floors, out of regard for their own convictions, let them resign their membership and seek re-election. There should be a resolution by this House to that effect because neither this House nor the Lower House could bring in a Legislation. Let there be a resolution to that effect from this House willingly brought at the instance of the Government and sponsored by the Chief Minister as the Leader of his Party. Let a resolution be moved by the Hon. Thiru Raja Mohamed in this House and by the Hon. Thiru Nedunchezhian in the Assembly by which floor-crossing could once and for all be stopped. Such a situation will add dignity to the political parties and the people will think that those parties have got some ideals to stand by and that they have got something to think of as their programmes and policies which they want the public to accept. It is, therefore, necessary that this should be done at the earliest possible opportunity. I commend this for the acceptance of the Chief Minister and I hope that he will take my advice and not spurn it.

Sir, I now come to the next point. For the voters to ponder, there was a circular issued under the name of the AIADMK, in which it was stated " to urge the Government at the Centre ...........

*மாண்புமிகு மேலவைத் தலைவர் :* அவையிலே ஒன்றைப் படிப்பதற்கு முன்பு தலைவரிடம் காட்டி, அனுமதி வாங்கியிருக்க வேண்டும். அதுதான் மரபு.

THIRU G. VASANTHA PAI : Sir, I am only referring to it.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: எதுவாக இருந்தாலும் முன்பே காட்டியிருக்க வேண்டும்.

Thiru G. VASANTHA PAI: I am referring to the Election Manifesto.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இனிமேலாவது இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

Thiru G. VASANTHA PAI: I am referring to the Election manifesto. You can see that.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இனி மேலாவது இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஜி. வசந்த பை: ஒரே ஒரு காப்பிதான் இருக்கிறது. இரண்டு காப்பி இருந்தால் ஒன்றைக் கொடுத்திருப்பேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: காப்பி கொடுக்க வேண்டியதில்லை. அதைப் படிப்பதற்கு முன்பு தலைவரிடம் காட்டி முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்களுக்கே தெரியவில்லை.

திரு. ஜி. வசந்த பை: நான் காட்டாமல் 'யூஸ்' பண்ண மாட்டேன். அதைத் தாங்களே பாருங்கள்.

(பத்திரிகைக் குறிப்பை தலைவரிடம் கொடுத்தார்.)

I was referring only to the resolve of the AIADMK to urge the Centre to use the river waters as a national asset. I want this principle to be implemented. I advocated this in 1975 when the DMK Ministry was there. It was long before Thiru Gokhale introduced a similar proposal and copied the sentences I spoke in this House. I had sent to him copies of my speech here. Sir, river waters should be considered navigable and should be accepted as a national asset. The linking of the Ganga, with the



Godavari, Krishna and the Cauvery, linking of the Brahmaputra and the Ganga, and the linking of the Indus with the Ganga have all along been engaging the attention of the Government at the Centre. The necessity for this has engaged their attention from time immemorial, even in the 'thirties when Thiru C. P. Ramaswamy Iyer was in the Viceroy's Council. But nothing has been done and we are letting a large quantity of water into the sea, for nobody's purpose and benefit. It is, therefore, necessary that another Resolution must be brought in this Council by which the use of the river waters and their flow should be considered a national asset and by which river waters could be made navigable. Here, if you permit me, I would like to refer to another country to which I had gone recently. Last year, I had been to the basin of the Amazon. The Amazon feeds two and a half million square miles of land and its flat bottom is 650 feet above sea-level. The lands fed by it are full of forests, rubber trees, coffee plantations, etc. The trees grow in the water itself. The Amazon has a vast expanse of water and probably disgorges at its mouth more water into the Atlatic Ocean than any other river would into any other Ocean. One of its tributaries pours out as much water as the Congo. Many of its tributaries together make the mouth of the river as wide as the distance between London and Paris It is a sight for yau to go and see. That river is navigable for 2,300 miles. What are we doing here? We are only Belem to Santarum and then it goes right beyond Manaus for a stretch of 2,300 miles. What are we doing here? We are only increasing the silt in our rivers every year and there are no dredgers worth their name to clear that silt. Of course, the Hon. the Chief Minister will see. . . . .

(பிற்பகல் 5-00)

தம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'கோபத்திலே பேசாதுங்கோ' என்று சொன்னார்கள். நான் கோபத்திலே பேசுவதேயில்லை. எனக்கு எதைப் பேச வேண்டுமென்று தோன்றுகிறதோ அதைத்தான் பேசுகிறேன். ஆகவே நான் பேசுகிறேன் என்றால், தயவுசெய்து கொஞ்ச நேரம் என்ன பேசுகிறேன் என்பதைக் கேட்க வேண்டும். அப்படி நான் பேசுவதைக் கேட்டு முடிந்த பிறகு தான், அதுபற்றி ரிசல்ட் தெரியும். முடிவு

எடுக்க வேண்டும். இரண்டு மூன்று ரெசல்யூசன் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பினால் தான் ஏதோ ஒன்றிரண்டாவது வரும். அப்படி ஒவ்வொரு ஸ்டேட்டிலும் செய்தால் கன்ட்ரிக்கு எவ்வளவோ நன்மை ஏற்படும். அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்ல மனது வைத்துச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** "குழல் இனிது யாழ் இனிது என்ப வசந்த பை—மழலைச்சொல் கேளாதவர்" என்கின்ற மாதிரி நம்முடைய திரு. வசந்த பை அவர்களுடைய தமிழ் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. தமிழிலேயே பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. ஜி. வசந்த பை :** ஏதோ ஸ்பிரிட்டில் தமிழில் பேசிவிட்டேன். பிழையிருந்தால் தலைவரவர்கள் தயவுசெய்து மன்னிக்க வேண்டும்.

Sir I now go back to English. I was only referring to this to say that something must be done. Let not the Hon. the Chief Minister take offence. Let not any of his Colleagues think that I am in any way annoyed over their policies or anything like that. I take what is good and I criticise what I consider to be bad. That is for what I have been elected. I hope that they will take criticism in good humour and sportive spirit. Thank you.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே இந்த ஆட்சியினுடைய பல கொள்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல திட்டங்கள் அடுத்து தொடர்ந்து வரக்கூடிய உரைகளிலே அறிவிக்கப்படுமென்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. செய்யப்பட்டிருக்கும் அறிவிப்புகளிலேயே தமிழுக்கென்று தனியாகப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட இருக்கிறது என்ற செய்தியைக் கேட்டு நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். அது தேன் வந்து பாயுது என்று பாரதி பாடியது போல் இருக்கிறது. அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் எப்படி அமையும், எப்படி அமைய இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டு மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட பிறந்த இடம் சிங்களத்திலே உள்ள கண்டி என்று நான் அறிந்திருக்கிறேன். சிங்களத்திலே யாழ்ப்பாணத்திலே மருத்துவக் கல்வியைக் கூட தமிழிலேயே போதிக்கிறார்கள்.



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒரு திருத்தம். யாழ்ப்பாணத்தை சிங்கள நாடு என்று சொல்லக்கூடாது. இலங்கை என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் பத்திரிகையில் அப்படி வந்தால் சங்கடமாக இருக்கும்.

**திரு. செ. முத்துசாமி :** ஸ்ரீலங்கா என்றே சொல்கிறேன். யாழ்ப்பாணம் தமிழர்கள் அதிகமாக வாழும் இடம். அங்கு மருத்துவக் கல்வியைக் கூட தமிழிலேயே போதிக்கிறார்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இந்தத் தமிழ் நாட்டிலேயுள்ள மருத்துவக் கல்லூரிகளில் தமிழில் கல்வி போதிக்கப்படவில்லை. அமைய இருக்கக்கூடிய தமிழ் பல்கலைக் கழகத்திலே விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம், சட்டம் இவைகள் அனைத்தையும் தமிழிலேயே போதிக்கக் கூடிய ஒரு உன்னத நிலையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தமிழ் மக்களுடைய நீண்டநாள் கனவாக இருக்கிறது. இதை அரசு தயவுசெய்து நிறைவேற்ற வேண்டும். அரசு கொண்டு வந்திருக்கக் கூடிய நோக்கத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஆனால் பல நேரங்களிலே இப்படிப்பட்ட நல்ல நோக்கத்திலே கொண்டு வரப்படும் திட்டங்கள் எல்லாம் திசை திரும்பிப் போய்விடும். அப்படி திசை திரும்பாமல் அரசு இதை மிகச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

கோவையிலே, திருச்சியிலே பல்கலைக் கழகங்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களைப் பொறுத்தவரை, ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப்பற்றியும், நகராட்சிகளிலே பணியாற்றுகிற ஆசிரியர்களைப்பற்றியும் இதிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று தேர்தல் நேரத்தில் சொன்னதை முதன்முதலாக எடுத்த எடுப்பிலேயே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும்போது, இதிலே நகராட்சி ஊழியர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. இதுசம்பந்தமாக இறுதியாக நடவடிக்கை எடுக்கும் நேரத்தில், அவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1980 ஜூன் 27

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களைப்பற்றிச் சொல்லப்படவில்லை. தனியார் பள்ளி ஆசிரியர்களை இதுபோல் சேர்ப்பதிலே சட்டச் சிக்கல் இருக்கிறது. மத்திய அரசு முதற்கொண்டு இதிலே சிக்கல் இருக்கிறது. நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முன்னால், ஒரு முன் நடவடிக்கையாக அரசு ஊழியர்களுக்கு உள்ள எல்லாச் சலுகைகளும் இவர்களுக்கும் உண்டு என்கின்ற அறிவிப்பு வரவேண்டும் என்பதுதான். ஏற்கெனவே தனியார் பள்ளிகள் முறைப்படுத்துதல் சட்ட முன்வடிவு வந்த நேரத்தில், மாண்புமிகு நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த நேரத்தில், சட்டத்தின் 30-வது பிரிவுக்கு நான் திருத்தம் கொண்டு வந்த நேரத்தில், 'அவ்வப்போது தேவைப்படும் திருத்தங்களை நாங்கள் கொண்டு வருகிறோம். ஆகவே திருத்தங்களைத் திரும்பப் பெற வேண்டும்' என்று சொன்னார்கள். ஆகவே இந்தச் சலுகையை தனியார் பள்ளிகளுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, மத்திய அரசு தமிழ் நாட்டில் 1969 ஆம் ஆண்டிலே 8 சதவிகிதம் முதலீடு செய்தது என்றும் 1979 ஆம் ஆண்டிலே அது 4 சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்றும் இருப்பதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. மத்திய அரசு இதை கவனிக்க வேண்டும். முதலீடு குறைகிறது என்றால், மாநில மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். இங்கேயுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இதை அங்கே தெரிவிக்க வேண்டும். இங்கே பேசக் கூடியதையும் மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி போன்றவர்கள் இப்படிப்பட்ட நிலையைப் போக்க உதவ வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மக்களுடைய வாழ்த்துக்களைப் பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நான் என்னுடைய ஒன்றிரண்டு ஆலோசனைகளை மட்டும் சொல்கிறேன். இவன் சொல்வதா என்று முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து எடுத்துக்கொள்ளக்கூடாது. எங்களுடைய முதலமைச்சர் அவர்களுடைய நல்லதுக்காகவும், எங்களுடைய நல்லதுக்காகவும் ஒன்றிரண்டு ஆலோசனைகளைச் சொல்கிறேன். பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்க நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் தினமும் மக்கள் டில்லிக்கு வருகிறார்கள். அப்படி வருகின்றனவர்களைச் சந்திக்க பாரதப் பிரதமர் அவர்கள் தினமும் வீட்டிலே வசதி அளிக்கிறார்கள். அதுபோல் நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்திக்க நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் சென்னைக்கு மக்கள் வருகிறார்கள். அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தினசரி காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில்



1980 ஜூன் 27] [திரு. செ. முத்துசாமி]

வீட்டில் சந்திக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு நாளும் சந்தித்தால், வருகிறவர்களுக்கு திருப்தி ஏற்படும். அதுமட்டுமல்ல, பாரதப் பிரதமர் அவர்கள் அங்கு அவர்களைப் பார்க்க வருகின்றவர்களுடன் நின்று போட்டோ எடுத்துக்கொள்கிறார்கள். இதற்கு அரசாங்கத்தில் ஏற்பாடு செய்கிறார்கள். போட்டோ காப்பி எடுப்பது போன்ற வேலைகளை ஆல் இன்டியா ரேடியோவில் ஒரு பிரிவு எடுத்துச் செய்கிறது. நாங்கள் டில்லிக்குச் சென்று பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து உரையாடி போட்டோ எடுத்து வரும் போது, வீட்டுக்கு வந்த பிறகு அந்த மகிழ்ச்சிகரமான நினைவை மறக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. அதே முறையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நம்முடைய தமிழ் நாட்டில் பின்பற்றுவார்கள் என்கின்ற நிறைந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இது என்னுடைய முதல் ஆலோசனை. இதை அவசியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் பேட்டி கேட்டால், ஒரு 15 நாட்களுக்குள் முதலமைச்சரவர்கள் நேரம் ஒதுக்கித் தந்து உறுப்பினர்களுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைகள் இருக்குமானால், பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், சில நேரங்களில் போராட்டங்கள் தவிர்க்கப் படுவதற்கும் அது நல்ல வாய்ப்பாக இருக்கும். இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுபவத்தின் காரணமாக நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் முதலமைச்சருக்கும் வி.ஐ.பி.-ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பம் தந்தால், தயவுசெய்து பதில் கொடுக்க வேண்டும். அதற்காக எவ்வளவு எஸ்டாபிளிஷ்மென்ட், உத்தியோகஸ்தர்கள் வேண்டுமானாலும் கூடுதலாகப் போட்டுக் கொள்ளலாம். தனக்கு இருக்கின்ற கொஞ்ச நேரத்தில் ஒரு மனிதனுக்கு இருக்கின்ற அல்லது பொதுவாக இருக்கின்ற பிரச்சினையைப் பற்றி விண்ணப்பம் கொடுக்கும்போது, அதை அமைச்சர்கள் தயவுசெய்து கொஞ்சம் ஆழ்ந்து படித்து, பரிசீலித்து அதற்கு பதில் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு முறை இருந்தால், அது மக்கள் பிரதிநிதிகளுக்கும் நல்லது, மக்களுக்கும் பயன்படும். தயவுசெய்து அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அடுத்து, ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி விவாதிக்க பணிக் குழு ஏற்படுத்தப்பட வேண்டும். பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க தனிக் குழு அமைக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த முறை அளிக்கப்பட்ட வாக்குறுதியை இன்னும் நிறைவேற்றவில்லை. அதை உடனே நிறைவேற்ற வேண்டும். அரசு ஊழியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க இப்பொழுது ஜாயின்ட் சிவில் சர்வீஸ் கவுன்சில் இருக்கிறது.

(பிற்பகல் 5-10)

ஆசிரியர் பணிக் குழு (டீச்சர்ஸ் சர்வீஸ் கவுன்சில்) என்று ஒன்றை ஏற்படுத்தி அதிலே ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். முன்பு கல்வி ஆலோசனைக் குழு என்று ஒரு குழு அமைக்கப் பட்டது. இந்த ஆட்சி கலைக்கப்பட்டதால், அந்தக் கமிட்டிக்கு இப்போது உயிர் இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியை விரைவில் மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு இருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்று சில கருத்துக்களைச் சொல்கிறேன். சம்பளம், படிகள், விடுப்பு, ஊதியச் சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தும்படி விதிகள் திருத்தப்பட வேண்டும். இதற்கு முன்னால் டிஸ்ட்டிரிக்ட் போர்ட்-லே ஆசிரியர்களை எக்சிக்யூட்டிவ் உத்தரவுகள் போட்டு மாற்றியபோது, சட்டச் சிக்கல்கள் வந்தன. ஆகவே, இந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்கள் ஆக்கும்போது, தேவையான சட்டம் கொண்டு வந்து, அதைச் சட்டபூர்வமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய அனுபவங்களின் காரணமாகத்தான் நாங்கள் இதைச் சொல்கிறோம். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதிலே அனுபவம் பெற்றவர்கள். அந்தச் சிக்கல்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தவர். 'ஏ'-வின், 'பி'-வின் பிரச்சினை இன்றையதினம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. ஆகவே, இதற்கும் சட்ட வடிவம் கொடுத்து சட்டமாகக் கொண்டுவர வேண்டும். பல நகராண்மைப் பள்ளிகளையும் அரசு ஏற்றிருக்கிறது. ஆனால் இங்கே அந்த ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக ஏற்கிறது. இது முன்னேற்றமான நடவடிக்கை என்று பாராட்டுகின்றேன். எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்க வேண்டும். இதுதான் ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகிய எங்களது கோரிக்கை. நாங்கள் சார்ந்து இருக்கின்ற தலைமையிலே வேறுபாடுகள் இருந்தாலும், ஈடுபட்டிருக்கின்ற சங்கங்களிலே வித்தியாசம் இருந்தாலும், கொண்டிருக்கின்ற கொள்கைகளிலே வேறுபாடு இல்லை. எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்



கொள்கை வேறுபாடு எதுவும் இல்லை. அனைத்துப் பள்ளிகளையும் தேசிய மயமாக்க வேண்டும். குறைந்தது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளையும், நகராட்சிப் பள்ளிகளையும் தேசீயமயமாக்க வேண்டும். அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆக்கப்படும்போது தங்களது பணியின் தன்மைகள் எப்படி அமையும் என்பது பற்றிய பயம் அவர்களுக்கு இருக்கிறது. இதுவரையில் நகராட்சிக்கு உள்ளேதான் அவர்களுக்கு மாறுதல்கள் இருக்கின்றன. எதிர்காலத்திலே மாவட்டம் முழுவதும் இந்த மாறுதல்கள் வந்து விடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். 1962-லேயிருந்து இதுவரையில் ஒரேமாதிரியான சூழ்நிலையில் அந்த ஆசிரியர்கள் இருந்து பழகிவிட்டார்கள். ஆகவே, மாறுதல்கள்பற்றி இப்போது இருக்கும் முறையை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று யாரும் இருக்கக்கூடாது.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். அது எவ்வளவு தூரம் இதற்குப் பொருந்தும் என்று விளக்க நான் தயாராக இல்லை. மீசையும் இருந்து, கூழும் குடிக்கக் கூடிய வசதி இருந்தால் பரவாயில்லையென்று மனிதன் சிந்திப்பது இயற்கை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் சமாளித்துக் குடித்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** உதாரணம் கொஞ்சம் கௌரவமாக இருக்கட்டுமே என்று சொன்னேனே தவிர, வேறல்ல. இருக்கும் உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். வசதியும் வேண்டும். அதே நேரத்தில் கட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்று சொல்லுவது நல்லதல்ல.

**திரு. செ. முத்துசாமி :** ' கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஆனால், அந்தக் கட்டுப்பாடு உரிமைகளைக் கட்டுப்படுத்துவதாக இருக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** கட்டுப்பாடு என்பது கட்டுப் படுத்திக் கொள்வதல்ல. சில சட்டங்களுக்கு உட்படுவது.

**திரு. செ. முத்துசாமி :** அந்தச் சட்டங்களை தயவுசெய்து பரிசீலனை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாநில அளவிலே அந்த ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும்போது, ஒரு 'போர்ட்'-ஆக அமைத்து அதை ஒரு ஆட்டானமஸ் பாடி-யாக ஆக்கவேண்டும். ஆசிரியர்களுக்குக் கட்டுப்பாடு

வேண்டும். கட்டுப்பாடற்ற முறை ஒரு ஜனநாயகத்திலே இருக்கக்கூடாது. அதை நான் வரவேற்கிறேன். அந்தக் கட்டுப்பாடுகள் கல்வியின் வளர்ச்சிக்காக இருக்க வேண்டும். மனிதன் என்றால், எந்தக் கட்டுப்பாட்டையும் ஜீரணித்துக் கொள்ள வேண்டும். அந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில், ஆசிரியர்கள் கட்டுப்பாடாக இருந்து கல்வியைப் பயிற்றுவிப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபடுவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதிலே கருத்து வேறுபாடு எதுவும் இல்லை.

பதினேழு நகராட்சிப் பள்ளிகளை அரசு பள்ளிகளாக்கியும் அங்கு பணியாற்றும் ஊழியர்கள்பற்றி எந்தவிதமான முடிவும் இன்னும் திட்டவட்டமாக எடுக்கப்படாமல் இருக்கின்றது. அவர்களின் பிரச்சினை நிலுவையாக உள்ளது. அதை சீக்கிரம் தீர்க்க வேண்டும்.

இப்போது 1980 ஆம் ஆண்டுக்கான சென்சஸ் எடுக்கச் சொல்கிறார்கள். எப்போது எந்தக் கணக்கெடுப்பு வந்தாலும், மக்கள் தொகை கணக்கெடுப்பிலிருந்து, கைத்தறிகளின் எண்ணிக்கையிலிருந்து, வளர்ப்புப் பிராணிகள் கணக்கெடுப்பு வரை ஆசிரியர்கள் அந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப் படுகிறார்கள். அது தவறு என்று சொல்லவில்லை. ஒரு காலத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபோது அமுல்படுத்தப் பட்டதுதான் இந்த முறை. இப்போது படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாது இருப்பவர்களுக்கு மாதம் ரூ. 50 சலுகை அளிக்கப்போவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை இப்போது சட்டமாகக் கொண்டுவரவிருக்கிறார்கள். அப்படி வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகளை இந்தப் பணிக்குப் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் ஏன் இந்தப் பணியைச் செய்ய மறுக்கிறார்கள் ? அவர்கள் மறுப்பதிலே உண்மை இருக்கிறது. வாக்காளர் பட்டியல் தயாரித்தால், 10 ரூபாய் தருகிறார்கள். சென்சஸ் எடுத்தால் 20 ரூபாய் தருகிறார்கள். இந்தப் பணி 20 நாட்கள் செய்ய வேண்டும். காலையிலே 1 மணி நேரமும், மாலையிலே 1 மணி நேரமும் வேலை செய்ய வேண்டும். ஆனால் எலெக்ஷன் டியூட்டிக்குச் சென்றால், ஒரு நாளைக்கு 25 ரூபாய் அல்லது 50 ரூபாய் வழங்குகிறார்கள். ஆசிரியர்கள் சென்சஸ் எடுப்பதற்கும், வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறார்களே தவிர, எலெக்ஷன் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படவில்லை. அதனால்தான் அவர்கள் மனம் புழுங்குகிறார்கள். இந்த டியூட்டியை ஏன் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலே எலெக்ஷன் டியூட்டியையும் ஆசிரியர்களுக்குத் தர வேண்டும் என்ற அறிவிப்புச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர்



அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால், மனநிறைவோடு அவர்கள் சென்சஸ் கணக்கு எடுக்க அது வழி வகுக்கும். சென்சஸ் எடுக்கும் பணிக்கு வழங்கப்படும் ஆனரேரியத்தையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

அடுத்தபடியாக, ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு வரையிலும் இலவசக் கல்வி அளிக்க வகைசெய்ய வேண்டும். ஒரு ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றால், அந்தப் பதவியை அவருடைய குழந்தைக்கு அளிக்க வேண்டும். வங்கிகளில் பெற்றோர்கள் வேலைசெய்து ஓய்வு பெற்றால், அந்தப் பணியை அவர்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்கள். தொழிற்சாலைகளில் அவ்வாறு கொடுக்கிறார்கள். ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளை ஆசிரியர் தொழில் தவிர வேறு எதுவும் படிக்கவைக்க முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** உறுப்பினர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், உறுப்பினர் அவர்கள் குலக் கல்வித் திட்டத்தை மீண்டும் வரவேற்கிறார்களா ?

**திரு. செ. முத்துசாமி :** குலத்தைப்பற்றியும், கல்வியைப்பற்றியும் கவலையில்லை. எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைத்து அவர்கள் அடுத்தவர்களிடத்திலே கைநீட்டாமல் இந்த நாட்டிலே வாழ வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட ஒரு சமுதாயம் இப்போது அமைகிறதாக என் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆகையால்தான் அந்த உத்தியோகத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நல்ல தேவையான விவாதம் அவையில் நடக்கிறது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், அந்தக் காலம் கண்ணுக்குத் தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டு மீண்டும் மீண்டும் அந்தத் தவறைச் செய்துகொண்டே இருந்தால், அந்தக் காலம் எப்படி கண்ணுக்குத் தெரியும் ?

**திரு. செ. முத்துசாமி :** தவறு செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. எந்த எந்தத் தவறுகள் இருக்கின்றன என்று சொன்னால், அவைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும். ஒரு தொழிலாளிக்கு இந்த வசதி கிடைக்கிறது. ஒரு வங்கி ஊழியருக்கு இந்த வசதி கிடைக்கிறது. இப்படி பல உதாரணங்களை நாங்கள் தருகிறோம். 25 ஆண்டுகள் கழித்து ஓய்வுபெறும் ஒருவர், தன்னுடைய பிள்ளைக்கு அந்த இடம் கிடைப்பதாக இருந்தால், 20 ஆண்டு

களிலேயே ஓய்வுபெற்றுப் போய்விடுவார். போஸ்டல் டிப்பார்ட்மென்ட்லே ஊழியர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறது. ரயில்வே ஊழியர்களுக்கு இந்தச் சலுகை இருக்கிறது. ஆகவே, அந்தமாதிரிச் சலுகைகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** என்னைப் பொறுத்த வரையில், இந்தச் சலுகைகளை நான் எதிர்க்கின்றவன் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால், அரசு என்ன நினைக்கிறது என்பதும், இங்கே இருக்கின்ற அனைத்துக் கட்சி, கட்சி சேராத பிரதிநிதிகள் என்ன கருது கிறார்கள் என்றும் தெரிந்துதான் முடிவெடுக்க முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முதலமைச்சர் அவர்கள் நினைப்பதும், அரசு நினைப்பதும் வேறுவேறா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஒவ்வொரு உறுப்பினருக்கும் வேறுபட்ட கருத்து சொல்ல உரிமை இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** எல்லோரையும் கலந்து பரிசிலனை செய்ய இருக்கும் நிலையைப் பாராட்டுகிறேன். நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் வசியப்படுத்திவிடுவோம் என்பது எங்களுக்குத் தெரியும். மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து நாங்கள் அந்தச் சலுகைகளைப் பெற்றுவிடுவோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-20)

இப்போது மாநிலத்தில் மேல்நிலைக் கல்வி வந்திருக்கிறது. மேல்நிலைக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்கள் எம்.பில், டாக்டர் பட்டம் பெறும் வாய்ப்பில்லாமல் இருக்கிறது. இத்தகைய வாய்ப்புகள் கல்லூரி ஆசிரியர் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரியிலிருந்த பி.யு.சி. வகுப்பு இன்றைய தினம் மேல்நிலை வகுப்பிற்கு வந்துவிட்டது. ஆனால் அதைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு எம்.பில், படிக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே இந்த நிலைமையை மாற்றி அவர்களும் எம்.பில். படிக்க வாய்ப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் நூலகர்களைப் போட வேண்டும். பல மேல்நிலைப் பள்ளிகளில் நூலகர்களே இல்லாததன் காரணமாக அங்கே நூல்களை எடுத்து படிக்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. பல இடங்களில் நூலகங்கள் மூடப் பட்டிருக்கின்றன. இதையும் அரசு கவனிக்க வேண்டும். அதைப்போலவே



மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை உடனடியாகப் போட வேண்டும். அதிலும் உரிய காலத்தில் போடும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிளஸ் 2 வகுப்புகளை நடத்தாத ஆசிரியர்களும் தேர்வாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகுப்புகளை எடுத்து, சொல்லிக் கொடுக்கும் வாய்ப்பில்லாதவர்கள்கூட தற்போது தேர்வாளர்களாக நியமிக்கப் பட்டிருப்பதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடற்பயிற்சி ஆசிரியர்களைப் பொறுத்தவரை (பி.இ.டி.) மேல்நிலைப் பள்ளிகளில் முதல் நிலை பி.இ.டி. ஆசிரியர்களாகச் சில இடங்களில் பெண்கள் பணியாற்றுகிறார்கள். அப்படி பி.இ.டி. ஆசிரியர்களாகப் பெண்கள் பணியாற்றினால், அவர்களுக்கு 25 ரூபாய் அலவன்ஸ் தற்போது வழங்கப் படுவதில்லை. ஆண் ஆசிரியர் சொல்லிக் கொடுத்தால், 25 ரூபாய் அலவன்ஸ் உண்டு, ஆனால் பெண்கள் அத்தகைய ஆசிரியர்களாக இருந்து சொல்லிக் கொடுத்தால் அலவன்ஸ் இல்லை என்று சொல்வது சரியில்லை 'கோ-எஜுகேஷன்' ஒரு பள்ளியில் இருக்கிறது என்றால், அங்கே 50 பெண்கள் படிக்கிற நிலையில் பெண்களே பி.இ.டி. ஆசிரியராகப் பணியாற்றும் நிலை உருவாகிறது. ஆனால் அவர்களுக்கு 25 ரூபாய் அலவன்ஸ் இல்லை என்ற நிலைமையை மாற்றி அவர்களுக்கும் 25 ரூபாய் அலவன்ஸ் கொடுக்க அரசு ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உடல் வளம்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல வகையில் வலியுறுத்தி வருகிறார்கள். அவருக்கு எந்த அளவுக்கு உடல் வளம் இருக்கிறதோ அதைப்போல் மக்களுக்கும் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். உடல் வளமாக இருந்தால்தான் மனதும் வளமாக இருக்க முடியும். இதன் காரணமாகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குத் தனியாக ஒரு அமைச்சரையே நியமிக்க இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவருடைய நல்லெண்ணத்தை நான் இந்த வகையில் பாராட்டுகிறேன். இப்படிச் செய்வதன் மூலமாக நமது நாட்டு வாலிபர்கள் ஒலிம்பிக் போன்ற போட்டிகளில் கலந்துகொண்டு முன்னணியில் நிற்பார்கள். அத்தகைய நிலைமைகளை உருவாக்க புதிய அமைச்சர் முயற்சிகளை மேற்கொள்வார் என்று நம்புகிறேன்.

மூன்றாவது ஊதியக் குழு பி.பி.எட். படித்தவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மாதம் ரூபாய் 600. என்று சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் அரசாங்கம் அதை இன்னும் அமுல்படுத்தாமலேயே இருக்கிறது. கல்வித்

துறையில், மற்ற எல்லாவற்றையும் அமுல்படுத்திவிட்டாலும், இந்தச் சிபாரிசை மட்டும் இன்னும் அமுல்படுத்தாமல் இருக்கிறார்கள். காரணம் கேட்டால், பி.டி. படித்த ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் மாதம் ரூபாய் 450 என்று இருக்கும்போது, இவர்களுக்கு மட்டும் ரூ. 600 கொடுப்பது எப்படி நியாயமாகும் என்கிறார்கள். இந்த ஆசிரியர்கள் விளையாட்டுகளில் நிரம்பத் தேர்ச்சி பெற்றவர்கள் என்பதனால்தான் 3-வது ஊதியக் குழு இதற்கு பல்வேறு விளக்கங்களையும் சொல்லி அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 600 தேவை என்று நிர்ணயித்திருக்கிறது. எனவே அத்தகைய ஆசிரியர்களுக்கு 3-வது ஊதியக் குழு சிபாரிசு செய்த ரூ. 600 அடிப்படைச் சம்பளமாக வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்.)

அடுத்து, செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களும், ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் சிலரும் தற்போது புலவர்களாகவும் பி.டி. ஆசிரியர்களாகவும் பயிற்சி பெற்றிருக் கிறார்கள். அவர்களெல்லாம் நீண்ட பணியின் காரணமாக ஏற்கெனவே பி.டி. ஆசிரியர் சம்பளத்திற்கு மேல் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் படிப்படியான ஒரு திட்டத்தின் அடிப்படையில் பி.டி. ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக அவர்களுக்கெல்லாம் அதிகபட்சமாக ஒரு இன்கிரிமெண்ட்தான் கூடுதலாகக் கிடைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, தமிழ் நாட்டில் உள்ள ஹையர் கிரேடு ஆசிரியர்கள் சுமார் 10,000 பேர்களைப் படிப்படியாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தி, இனி இங்கே ஹையர் கிரேடு பதவிகளுக்கே ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்கள். கல்வித் துறையில் அது ஒரு மிகப் பெரிய சாதனை என்று பாராட்டியிருக்கிறோம். அதைப்போல இந்த ஆட்சியின் காலத்திலேயே படிப்படியாக புலவர் மற்றும் பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர் களும் பதவி உயர்வு பெறுவதற்கு வாய்ப்பாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அவர்களை முன்னேறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள் ஓய்வு பெறும்போது, 3-வது ஊதியக் குழு ஒரு சிபாரிசு செய்தது. அதாவது 3-வது ஊதியக் குழு அறிவித்த சம்பள விகிதத்திற்கு ஆசிரியர்கள் போகும்போது, அவர்கள் எந்தத் தேதியில் அந்த விகிதத்திற்குச் சென்றாலும், 30—6—1979-க்குள் சென்றால், புதிய சம்பள விகிதத்தில் குறைந்த உயர்வு தரப்படும் என்று இங்கே சட்ட மன்றத்திலேயே வாக்குறுதி அளிக்கப்பட்டது. அது எல்லா இடங்களுக்கும் சுற்றறிக்கையாக அனுப்பப்



பட்டிருக்கிறது. ஆனால் சில பஞ்சாயத்து ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், அந்த உத்தரவே 30—6—1979-க்குப் பிறகுதான் போய்ச் சேர்ந்திருக்கிறது. 30—6—1979-க்குள் இதை அமுல்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த உத்தரவே 30—6—1979-க்குப் பிறகுதான் சில ஊராட்சி ஒன்றியங்களுக்குப் போய்ச் சேர்ந்ததன் காரணமாக, அவர்கள் அங்கே உள்ள ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகையைத் தர முடியாமல் போய் விட்டது. குறிப்பாக மதுரை மாவட்டத்தில் தொப்பம்பட்டி, கோவை மாவட்டத்தில் அவிநாசி மற்றும் திருப்பூர் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இந்த உத்தரவு உரிய காலத்தில் கிடைக்கவில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கேட்டால், அவர்கள் அனுப்பிவிட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த உத்தரவு உரிய நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடைக்காத காரணத்தால், ஆசிரியர்கள் அல்லற்படுகிறார்கள். இந்த அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு ஒரு உத்தரவைப் பிறப்பித்தாலும், அது ஆசிரியர்களுக்குப் பயன் அளிக்காத நிலை இருக்கிறது. இதற்கும் அரசு பரிகாரம் தேட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சென்சஸ் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் எப்படியாவது ஒரு முடிவுக்கு வர வேண்டும். நீட்டிக் கொண்டே போனால் எப்படி? மேலும் பட்ஜெட்டில் முதலமைச்சர் அவர்கள் தினமும் அவைக்கு வருகிறார். பேசும் சந்தர்ப்பமும் உறுப்பினருக்கு இருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, விரைவில் முடித்து விடுகிறேன். சென்சஸ் பிரச்சினை என்பது இன்றைக்கு எரிகிற பிரச்சினையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றிய ஒரு அறிவிப்பை அவையிலேயே அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். களத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நல்ல உத்தரவாதம் தாருங்கள். அவர்கள் நல்லபடியாகப் பணியாற்றுவார்கள் என்று சொல்லிக் கொண்டு, அத்தகைய உத்தரவாதம் கொடுத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டுவார்கள் என்று கூறி, இப்போதெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த செஷன் முழுவதும் தவறாமல் அவைக்கு வருகிறார்கள் என்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த மனநிறைவை அளிக்கிறது என்பதையும் சொல்லி, இதைத்தான் சென்ற கூட்டத் தொடரின் போது நாங்கள் கேட்டுக் கொண்டோம் என்பதையும் நினைவூட்டி, பல்வேறு பிரச்சினைகளை இங்கே அவையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, கொஞ்சம் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டு விட்டேன் என்றாலும், தயவுசெய்து மன்னிக்க வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, அரசு மேற்கொண்டுள்ள 17 நகரவை உயர்நிலைப் பள்ளிகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தப் 17 பள்ளிகளையும், ஏ, பி பிரிவுகளுடன் இணைத்து ஒரே பிரிவாக ஆக்கி, அரசு மே மாத இறுதியில் ஆணை பிறப்பித்துள்ளது என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : இப்படிப்பட்ட உத்தரவுகளை அரசு பிறப்பிக்கும் போதுகூட, ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் எங்களுக்கு அவைகளின் நகல்கள் அனுப்பப்படுவதில்லை என்ற காரணத்தால், அவைக்கே தவறான தகவலைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இனியாவது ஆசிரியர் தொகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இத்தகைய ஆணைகளின் நகல்களை உடனடியாக அனுப்பி வைக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் சம்பந்தப் ட்ட அரசாணைகள் ஆசிரியர் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ங்களுக்கு அனுப்பப்படுவதில்லை . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அடுத்துப் பேசும்போது இதைப்பற்றிக் குறிப்பிடலாம். இப்படி எல்லா வற்றிலும் ஆசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு பேசிக் கொண்டிருந்தால், மற்றவர்களுக்கு எப்படி நேரம் ஒதுக்குவது ? எனவே இப்போது உட்கார வேண்டும்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீலாவதி அவர்கள் பேசுவார்.

* செல்வி அ. லீலாவதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மதி லீலாவதி அல்ல, செல்வி லீலாவதிதான் என்பதைத் தெரிவித்துக் கிறேன்.

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களையும் கூற எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் எனது நன்றியறிதலைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற விவாதத்தின்போது ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் நான் என்னை அறிமுகம் செய்துகொள்ள விரும்புகிறேன். ஆசிரியர் சமுதாயத்தைச் சார்ந்த ஒருவரே ஆசிரியர் தொகுதிக்கு வேட்பாளராக நின்று போட்டியிட





வேண்டும் என்ற வகையில், பட்டதாரி ஆசிரியர் சங்கமும், தமிழ்நாடு அனைத்து ஆசிரியர் சங்கமும் என்னை வேட்பாளராக நிறுத்தியது. இதற்கு முன்னால் இருந்த நிலைமையை மாற்றி, சரித்திரத்தை மாற்றி, நான் ஆசிரியர் சமுதாயத்தின் உறுப்பினராக இங்கே மேலவையில் அமர்ந்திருக்கிறேன்.

நான் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் போட்டியிட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் அணுகி, எங்களுக்கு அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். காரணம் 1974 ஆம் ஆண்டில் இந்த வகையில் பல கசப்பான உணர்வுகள் ஏற்பட்டன. ஆகவே எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அவரிடம் கோரியபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'எந்த வகையில் உங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று மிகுந்த பெருந்தன்மையோடு கேட்டார்கள். அதைப்போலவே ஆதரவும் அளித்தார்கள். அதுமட்டுமல்ல, நான் வெற்றிபெற்று வீரவாகை சூடிக்கொண்டு முதல்வர் அவர்களைச் சென்று பார்த்தபோது, 'உங்களுடைய தகுதிக்கு வெற்றி பெற்றீர்கள் ; அந்த அளவுக்கு ஆசிரியர் சமுதாயத்தில் சிறப்பாக இருக்கிறீர்கள்' என்று மிகப் பெருந்தன்மையோடு கூறினார்கள். எனது நினைவில் அதை நான் இன்னும் பசுமையாக வைத்துக் கொண்டிருக்கிறேன். எனவே இந்த அவையில் முதற்கண் ஆசிரியர் சமுதாயத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களின் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் சமுதாயத்தில் ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளின் காரணமாக ஆசிரியர்கள் மிகவும் துன்புறுகிறார்கள். குறிப்பாக தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் படும் வேதனை இந்த அவையில் உள்ளவர் களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும் என்று நம்புகிறேன். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் அங்கே இன்னும் கொத்தடிமைகளாகத்தான் நடத்தப்படுகிறார்கள். விடுதலை பெற்ற நாட்டில் இத்தனையாண்டுகளுக்குப் பிறகும்கூட, தனியார் பள்ளி ஆசிரியர்கள் இன்னும் அடிமைத்தளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பெண் ஆசிரியர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் இந்த அரசு விடுதலை வாங்கித் தரவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் பெண் ஆசிரியர்களை வீட்டில் வேலை செய்யும் நாதிகளைப்போல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னமும் அப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இதுகுறித்து என்னிடம் பல பிராதுகள் வந்திருக்கின்றன. சி.ஈ.ஓ., மற்றும் டி.இ.ஓ.-க்களிடம் இதைப்பற்றிக் கூறிய

போது, அவர்களும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது மிகவும் வேதனைக்குரியது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-30)

கவர்னர் உரையில் விவசாயிகள் பிரச்சினையைத் தீர்ப்பதில் முழுக் கவனம் செலுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பசிக்கு உணவு முக்கியம் தான். வெறும் உருவங்கள் தாங்கிய உடல் மட்டும் எந்த முன்னேற்றங்களையும் செய்ய முடியாது. மக்களின் அறிவுப் பசியைப் போக்கி ஒரு முன்னேற்றமான தமிழகம் அமைத்திட ஆசிரியர்களின் மேம்பாடுகள் கவனிக்கப்பட வேண்டும் என இந்த அவையில் வலியுறுத்த விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்க இந்த அரசு முடிவெடுத்துள்ளதை வரவேற்கிறோம். அதேபோல் தனியார் பள்ளி, மாநகராட்சிப்பள்ளி ஆசிரியர் களையும் அரசு ஊழியர்களாக்க வேண்டுகிறோம். 'A', 'B'பிரிவு இணைப்பு ஏற்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் (1—4—1970 பிரச்சினை) தீர்க்க முடியாத சில பிரச்னைகள் இருப்பது போல் ஆசிரியர்களுக்கு எந்தவித குழப்பமும் இல்லாமல் செய்ய வேண்டுமென விண்ணப்பிக்கிறேன்.

ஆசிரியர்கள் மேம்பாட்டிற்கான எந்தத் திட்டங்களும் இந்த உரையில் காணப்படவில்லையே என்று ஆசிரியர் சமுதாயத்தினர் வருத்தம் தெரிவித்தனர். ஆனால் இரண்டரை ஆண்டுகளில் ஆசிரியர் பிரச்சினையைத் தீர்க்க முன் வந்த அரசு நிச்சயம் ஆசிரியர்களின் அனைத்துப் பிரச்சினை களையும் தீர்க்கும் என நான் முழுமையாக நம்புகிறேன். ஆசிரியர் இயக்கங்களை வளர்க்க உதவிய ஒரே அரசு புரட்சித் தலைவரின் அரசு என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. கல்வியமைச்சர் அவர்களும் இயக்கரீதியாக வரும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முயன்று வந்தார் என்பதை இங்கு நான் சொல்லாமலிருக்க முடியாது.

மாதா, பிதா, குரு, தெய்வம், நாம் மனதார ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும். சமுதாயத்தை வேகமாக மாற்றத்தக்க இந்த ஆசிரியர்களின் நிலைமையை கவனிக்க வேண்டும். குறிப்பாக தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இந்த ஆசிரியர்கள் நடத்தப்படும் முறை சாதாரண மனித இயல்புக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்பதை மாண்புமிகு அமைச்சர்களும், சபை உறுப்பினர்களும் அறியாததல்ல.

சிற்றாள் வேலைக்குக் கூட உத்தரவாதம் வேண்டும். ஆனால் இந்நாளில் பெத்தப்படித்த ஆசிரியர்களின் வேலைக்கு உத்தரவாதம் இடையாது. இப்பணியில் ஊதியம் ஒன்றையே பிழைப்பூதியமாக நம்பி வாழும் ஆசிரியர்கள்



என்றைக்கு இந்த அரை வயிற்றுக் கஞ்சியும் பறிபோய் தெருவில் நிற்க நேரிடுமோ என்ற பயம் வாட்ட, நடைப்பிணங்கள்போல நலிந்து சாவது நான் இந்த மன்றத்தில் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல.

தனியார் பள்ளியின் நிர்வாகிகள் ஆசிரியர்களை தினக்கூலி போல் நடத்து கிறார்கள். ஆண்டான் அடிமையைப் போல் எக்காளமிட்டு, அவர்கள் இச்சைக்கு ஈடு கொடுக்காதபோது, "இன்று உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டால் யாரும் என்னைக் கேட்க முடியாது" என்ற ஆணவப் போக்கில் நடமாடுகிறார்கள். எந்த சமுதாயக் கட்டுப்பாட்டின் கீழும் வரமறுக்கும் எத்தர்கள் இவர்கள். எனவே அரசாங்கம் சட்டமுறைகளை ஒழுங்குபடுத்தி ஏட்டில் இருப்பவை கோட்டிலும் நியமிக்கப்பட்டு ஆசிரியர்களுடைய தன்மானத்தை நிலைநிறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகிகளின் கொடுஞ்செயல்கள் பெண்கள் பகுதியில் அதிகமாகின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகியின் எந்தச் செயலுக்கும் இந்தப் பெண்கள் ஈடு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்து கிறார்கள். தங்கள் வீடுகளில் வேலைக்காரிகள்போல் காரியமாற்றவும், தாதிகள் போல் பணிவிடைகள் செய்யவும் சொல்லும் நிலை இந்தத் தங்கத் தமிழ் நாட்டில் நடக்கின்றது என்பதை உறுப்பினர்கள் எல்லாம் அறியாதது அல்ல. சென்னையிலே, முக்கியமாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் படும் அவல நிலை மிகவும் மலிந்துவிட்டது. தண்டையார்பேட்டையில் உள்ள அருட்பெருஞ்சோதி பள்ளி நிர்வாகி, ஆசிரியர்களைப்படுத்தும் இன்னல் களுக்கு அளவே இல்லை. எனது வெட்கத்தைவிட்டு இந்த சபையிலே சொல்ல வேண்டியுள்ளது. நிர்வாகியைக் குளிப்பாட்டுவதும் ஆசிரியர்களின் கடமைகளில் ஒன்றாகுமாம். அவ்வாசிரியர்கள் பல காலம் பொறுத்து 10—3—1980 அன்று மாவட்டக் கல்வி அதிகாரிக்கும், முதன்மைக் கல்வி அதிகாரிக்கும் தங்கள் இந்த அவல நிலையைத் தெரிவித்துள்ளனர். இதுகாறும் கல்வி அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் எடுக்காதது குறித்து மிகவும் வருந்துகிறேன்.

தனியார் பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்களை காரணமின்றி 'சஸ்பெண்ட்' செய்துவிடுகிறார்கள். அரசு என்னதான் டிரிபியூனல்களை வைத்திருந்தாலும், ஆறேழு ஆண்டுகளாக அவர்களை மறுபடியும் வேலையில் சேர்த்துக்கொள்ளாத (ரீயின்ஸ்டேட் செய்யாத) நிர்வாகமும் உண்டு. சோஷியல் வெல்பேர் மிடில் ஸ்கூலில் 7 ஆண்டுகளாக 'ரீயின்ஸ்டேட்' பண்ணப்படாத ஆசிரியர்கள் உள்ளனர். இது போன்ற கல்வித் துறையின் மெத்தனப் போக்கை யாரிடம் சொல்லி அழுவது?

படிக்காதவர்கள் கூட மோட்டைக் கையெழுத்துப் போடத் தயங்கும் இந்த நாளில், இந்த வருமானமும் இல்லாவிட்டால், என்ன செய்வது என்று தன் தலைவிதியை நொந்துகொண்டு தலைவிதியே என்று பி.ஏ., எம்.ஏ. படித்த பட்டதாரிகள் வேலை செய்கின்றனர். அதிக நேர வேலை, அடிமைத்தனம் இதற்கெல்லாம் அடித்தளமாக இப்பள்ளிகள் நடப்பதை நாடே அறியும். ஊரறிந்த உண்மைக்குத் தம்பட்டம் தேவையில்லை. எனவே இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில்தான் இவ்வளவு அட்டகாசம் என்றால், அரசுப் பள்ளிகளில் நடப்பது மற்றொரு வர்க்கப் போராட்டமாகும். தலைமை ஆசிரியருக்கும் கல்லூரி முதல்வருக்கும் ஆசிரியர்கள் ஏவலாளர்களாக இருக்கின்ற நிலை இருக்கின்றது. தலைமை ஆசிரியரும் கல்லூரி முதல்வருமே பள்ளி, கல்லூரி நிலையங்களை இயக்கி விடுவது போன்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. சுய தேவையையும் சுய மரியாதையையும் காப்பாற்றிக் கொள்ளத்தான் கல்வியே ஒழிய, இவைகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு உயிரற்ற பிணங்களாக வாழ ஆசிரியர் சமுதாயம் இனி தயாராக இல்லை. கல்வியின் தூண்கள் ஆசிரியர்கள்தான் என்பதை அனைவரும் உணர்ந்து அதன்படி ஆசிரியர்களை நடத்த வேண்டுமென அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஆணைகளை மதிக்காத சில தலைமை ஆசிரியர்கள் உள்ளனர். 15 நாட்கள் மருத்துவ விடுப்பு எடுத்தால், தலைமை ஆசிரியரே அதனை வழங்க வேண்டுமென்று ஆணையிருக்க, ஒரு பெண் ஆசிரியையை கும்மிடிபூண்டி அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் "நீ மெடிக்கல் போர்டில் சாங்சன் வாங்கி வந்துதான் பள்ளியில் சேர வேண்டும்" என்று ஆணையிட்டு, 15 நாட்கள் விடுப்பு எடுத்த அந்த ஆசிரியையை 29 நாட்கள் நாய் போல் அலையவைத்து இன்னும் 29 நாட்கள் மறு விடுப்பை இழந்த கதையை ஓர் ஆசிரியை என்னிடம் கூறும்போது கண்ணில் நீர் கலங்கியது. அதிகாரிகளிடம் முறையிட்டேன். எந்தப் பயனும் இல்லை. இம்மாதிரி முறைகேடாக நடந்துகொள்ளும் தலைமை ஆசிரியர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் நியாயம் கிடைக்கும்.

பள்ளி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஆமை ஓட்டத்தையும் மிஞ்சி விடும் அளவுக்கு கோப்புகள் நகர்கின்றன. அங்கு சிறைப்பட்ட கோப்புகளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை ஆயுள் தண்டனை;





ஆனால் ஆசிரியர் பிரச்சினைகளுக்கு ஒரு தூக்குமேடை. இவற்றுக்கெல்லாம் தீர்வு காண ஆசிரியர் சமுதாயம் ஏங்கி நிற்கின்றது. இந்த அரசின்மேல் ஆசிரியர் சமுதாயம் முழு நம்பிக்கையையும் வைத்துள்ளது. அவர்கள் நம்பிக்கை வீண் போகாமலிருக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிக் கட்டிடங்கள் மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றன. அவற்றை இந்த அரசு எடுத்துக்கொண்டு ஒழுங்கான முறையில் கட்டிடங்களை அமைக்க வேண்டுமென்று நான் இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், செண்ட்ரல் ஸ்கூல் போர்ட் என்ற பெயரில் பல பள்ளிகள் காளான் முளைத்ததைப் போல சென்னையில் முளைத்திருக்கின்றன. அப்பள்ளிகளில் ஏகப்பட்ட பணத்தை பீசாக வாங்கி விடுகிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு 200, 300 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு மத்திய அரசிலிருந்து லைசன்ஸ் கொடுக்கக்கூடாது என்று இந்த அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. எத்தனை ஆண்டுகள் வேலை செய்தாலும், அவர்களை வேலைநீக்கம் செய்து விடுகிறார்கள். எந்தவித கட்டுப்பாட்டின் கீழும் வராமல் அவர்கள் இயங்குகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு பள்ளிதான் பெரம்பூரிலுள்ள செயின்ட் மேரீஸ் பள்ளி. அங்கு ஒரு போராட்டமே நடைபெற்று வருகிறது. அங்குள்ள எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து போராட்டம் நடத்தி வருவதை செய்தித் தாள்களில் படித்திருப்பீர்கள். இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியை அரசு அறியும் என்று கருதுகிறேன். அதுவும் குறிப்பாக பாலு கார்மென்ட்ஸ், பாலு எக்ஸ்போர்ட்ஸ், ராசி எக்ஸ்போர்ட்ஸ், ராதா சில்க் போன்ற நிறுவனங்களில் உள்ள பிரச்சினைகள் மிக முக்கியமானவைகளாகும். 700 பெண்கள் வேலையை இழந்து மாதக்கணக்காக வாடிக்கொண்டிருக்கின்றனர். வெளிநாட்டுக்கு உடைகளைத் தயாரித்து அனுப்பி அந்நிறுவனங்கள் அதிகமான லாபத்தை அடைகின்றன. அத்தகைய தனியார் நிறுவனங்கள் புரியும் அட்டூழியத்தைச் சொல்லப்போனால், நேரம் போதாது. ஆகவே மேலும் காலம் தாழ்த்தாமல் அப்பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முன்வர

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பல மாதங்களாக அப்பெண்கள் வாடிய முகத்துடன் தெருவில் நிற்கும் கோரக் காட்சியைக் காண சகிக்கவில்லை. ஆகவே அந்நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் லைசன்சை உடனே ரத்து செய்யும்படி மத்திய அரசிலுள்ள மினிஸ்ட்ரி ஆஃப் காமர்சுக்குக் கடிதம் எழுத வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அம்பத்தூரிலுள்ள குளோத்திங் பேக்டரியில் பணிபுரியும் பெண்களுக்கு ஒரு நாளைக்கு 2, 3 ரூபாய் என்று கொடுத்துவிட்டு, 9 மணி நேரம் வேலை வாங்குகிறார்கள். ஒரே குடும்பத்திலுள்ள 2, 3 பெண்கள் அந்நிறுவனத்தில் வேலை புரிந்து மாதம் ஒன்றுக்கு 270 ரூபாய் தன் குடும்பத்துக்கு வரும் என்ற நிலையில் அங்கே உழைக்கிறார்கள். இப்படி பெண்களுடைய வறுமையை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு அந்த நிறுவனங்கள் பெண்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள். ஆகவே இந்த அரசு இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு தீர்வுகாண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வரதட்சிணைக் கொடுமையால் உயிரை விடும் பெண்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சில சமயங்களில் 'ஸ்டவ் ஆக்சிடென்ட்' என்று சொல்லி மாப்பிள்ளை வீட்டார் தப்பித்துக் கொள்கின்றனர். ஏகப்பட்ட நகைகளைப் போட்டு பெண்களுக்குத் திருமணம் செய்து அனுப்பினால், 3 மாதங்களுக்குள், 6 மாதங்களுக்குள் அவற்றையெல்லாம் பிடுங்கிக்கொண்டு, மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைக் கொலை செய்து விடுகிறார்கள். இப்படிச் செய்தது உண்மை என்று தெரிந்தால், 'ஜுடிசியல் என்கொயரி' வைக்க வேண்டும். இப்போது 'போலீஸ் என்கொயரி' தான் வைக்கிறார்கள். 'ஜுடிசியல் என்கொயரி' வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அடிக்கடி கோர்ட்டுக்குப் போய் அலைந்து வர வேண்டிய நிலை ஏற்படும். அதனால் அவர்களுக்குக் கொலை செய்யும் துணிச்சல் வராது என்று நான் எண்ணுகிறேன். ஆகவே இந்த மாதிரி சந்தேகச் சூழ்நிலையில் பெண்கள் இறந்து விட்டால், அது குறித்து 'ஜுடிசியல் என்கொயரி' வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாகவே அப்படி இறந்துவிட்ட பெண்களின் நகைகளையும் பணத்தையும் மீண்டும் பெண் வீட்டார் பெறுவதற்கு சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சட்டம் கொண்டு வந்தால், ஓரளவுக்கு பெண்களைக் கொலை செய்வதை நிறுத்திவிடுவார்கள் என்று நினைக்கிறேன்.



(பிற்பகல் 5.40)

தன் மகன் தப்புச் செய்தான் என்பதை அறிந்த மன்னன் தன் கையையே வெட்டி வழங்கிய பாண்டிய பரம்பரையில் வந்த அரசு இந்த அரசு என்று நம்பிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர் இனத்திற்கும் பெண் குலத்தை தாய்க் குலமாக மதிக்கும் இந்த அரசு பெண் குலத்திற்கும் இனியும் இம்மாதிரியான அநீதிகள் இந்நாட்டில் நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்தும் என்ற முழு நம்பிக்கையுடன் அமைகிறேன்.

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI: Hon. Chairman, while conveying my thanks to the Governor for his Address, as a social worker, I would like to bring certain points to the notice of this Welfare Government so that our welfare schemes could be very objective.

We have very many well-known voluntary organisations in this State. If one makes mention of well-known organisations, one always refers to Tamil Nadu and Maharashtra. I would not like these well-known organisations manned by well-known voluntary agencies to wither away for lack of funds, lack of en- couragement and due to many difficulties. I would like the facili- ties to be made easy to get for those who are engaged in such welfare programmes. We have got several Centrally Sponsored Schemes. It is true that sometimes there is inordinate delay in forwarding the applications to the Government of India with the result that many organisations miss the Central Grants. I feel that if the Directorate of Social Welfare is made more aware of the difficulties of these organisations, the schemes could be more fruitfully implemented. It is found that in the last two years we had four Directors of Social Welfare and many schemes could not be got sanctioned because of these continuous transfers. There is no rule that the Director of Social Welfare should be a woman. But, I feel that there should be a convention that a woman should be made Director of Social Welfare. I have a reason for saying this. In the past, we had Selvi Ramesh, Thirumathi Padalkar and Thirumathi Lakshmi Pranesh in that post, and now we have Thirumathi Soosamma as Director of Social Welfare. All of them have been doing very well in that post.

building grant and equipment grant, it will be a great relief to these organisations. It would make the Nursing course very viable, useful and purposeful. I thought of providing hostels in the educational institution managed by me. For this, I approached a German agency who were very generous enough to give a grant of Rs. 3 lakhs to put up a hostel and it is now coming up. Today, just when I was starting to attend the Council meeting, the officers of the Indo-German agency came and met me. They evinced much interest in the + 2 scheme of the State Government and they complimented the State Government on this wonderful programme. They asked me to convey their congratulations to the State Government on implementing this scheme. So, I take this opportunity to convey to the Hon. the Chief Minister and our very dynamic Education Minister that this scheme has been appreciated not only by other State Governments but also by foreign agencies. The foreign agencies show very keen interest in this scheme. The scheme could be made more purposeful if the Government could increase the quantum of grants to these educational institutions.

I would request the Hon. the Education Minister who is now here kindly to revive the National Council of Women's Education which was in existence earlier. This agency was very helpful in the past in bringing to the notice of the Government the difficulties faced by women's organisations. If this body is revived again, I am quite confident that we will be able to make women's education very purposeful and useful. As we are all aware, if women are educated, many of the discriminations will automatically go away.

(பிற்பகல் 5-50)

Now, I would like to say something about a women's co-operative which I am incharge of. In that organisation, we have got 200 women-workers and we have to find work for them to do. Nowadays, we are talking of the programme of work for everybody. This co-operative society is doing really very good work and it is one of the very few societies which have been giving bonus to their workers. In one of my earlier speeches in the House, I made an appeal to the Hon. the Labour Minister that orders from the I.T.I's might be given to this women's co-operative society. We were getting those orders in the past. If the practice of giving those orders to our society is revived, the



women would get more work and get income to supplement their family income. I would like to say that these 200 workers are doing wonderfully good work. Recently we got orders to the tune of Rs. 2½ lakhs from the Hindustan Photo Films, Uthagamandalam. Within 15 days, we supplied all the uniform-dresses required by them. They were so happy over it that they have placed another order with our society. This would clearly show that the competence of women is in no way less. The Chairman of the Housing Board is also here and I would like to make an appeal to him. It would be good if he could allot some place either in the premises of the Housing Board office or in some other place to locate a Central Cutting Centre. By that, these woman-workers would be immensely benefited. Now we have to pay rent for the building in which the Centre is located. Therefore, if the Chairman of the Housing Board could give us a place free of rent or on a nominal rent, we will be very happy to get that assistance.

THIRU G. SWAMINATHAN: Sir, I would like to have one clarification. The hon. Member can make an appeal to the Hon. Minister in charge of Housing. But, can she make an appeal direct to the Chairman of the Housing Board who happens to be a Member of this House?

THIRUMATHI MANDAKINI KRISHNAMURTHI: I am sorry, Sir. I am only making an appeal through you. The Hon. the Health Minister is here and I would like to make an appeal to him also. In the past also, I have mentioned a lot about the usefulness of having Nursing Course in the +2 scheme of education. I feel that the Health Department also could take advantage of the existence of this Course. I read in the newspapers that the Hon. the Health Minister was having a programme of revamping rural medical centres. He can have, as a second line of defence, the students who pass out of this Nursing course. In my institution, 35 girls appeared for the examination in Nursing Course this year. Even before the results are out, 20 of them are already employed. The other 15 have opted to pursue studies in B.Sc. (Nursing). There is so much of demand for employing these students. If they are posted to rural areas, they will be doing very useful work. After all, the Health Department is not going to spend any money on their education.

I would like to make another suggestion also in this regard. A six months' course may be introduced for giving these girls training in Auxiliary Nursing Midwifery. If such training is given, these girls would become qualified to become A.N.M.'s.

Sir, I hope that we have before us a year of welfare activity and that voluntary welfare organisations would have a bright future. I congratulate the hon. Member Selvi Leelavathi on the speech she made a short time ago. But, I would like to tell her that all the voluntary organisations are not to be branded as bad. There may be one or two organisations in whose case the Grants may have to be stopped. But if she says that all voluntary organisations treat the teachers as slaves, I do object to it. I am myself managing a voluntary organisation. We look after our teachers much better than anybody else. The Hon. the Education Minister himself once mentioned on the floor of this House that there was more enrolment in private institutions than in other institutions. So, I would like to say that there are many good institutions also. Recently, before your election, you were approaching the staff of voluntary organisations and you came to my institution and also spoke to my teachers......... ...

VICE-CHAIRMAN (Thiru P. R. THOMAS) : The hon. Member is requested to address the Chair. Through the Chair, she may address the other hon. Member.

Thirumathi MANDAKINI KRISHNAMURTHI : I only want to assure her that all the voluntary organisations are not that bad. Thank you.

THIRUMATHI TARA CHERIAN : Mr. Vice-Chairman, I somehow misunderstood and I thought I was going to speak tomorrow and, therefore, I have not come prepared. But, all the same, the Hon. Chairman gave us an assurance that during the Budget Session we would be given ample time to talk, to debate, to find fault with and give constructive criticism, which I am sure the Government will take note of.

First, I would like to take this opportunity to congratulate and thank His Excellency the Governor for the very brief and short Address, which I am sure will be helpful to understand the policy of the Government. While appreciating all the points





that he has made, I think that some of the things, which I consider important, have been left out. I am not going to take much time because my mind moves much quicker than my tongue. It is good, in a way, because I need not wag my tongue for long. To the ideas contained in what little statements I make, Mr. Vice-Chairman, through you I request the hon. Members to make their own additions, deletions and subtractions.

Sir, once again, I congratulate the Hon. the Chief Minister and the Members of his Cabinet on the thumping majority with which they have been returned, in spite of the short notice they had for the Elections. I hope that the Hon. the Chief Minister will not misunderstand me. I do not think that he knows me personally, though he must have known my husband. Sir, I went to the swearing-in ceremony in which the Hon. the Chief Minister and other Ministers were sworn in. On that day, I started quite early and, thank God, I reached there in time. People in large numbers from all over the State had come there. I must here emphasise that even a man in the street who may be an illiterate shows interest in such things. Here, I would also like to say something about my mother. She was married at the age of 13 and she became a mother at 14. Though she sent me to College, I learnt more from her than in the College. Therefore, I would say that the people have had confidence in the Cabinet which has come into power and, therefore, its responsibility will be even much greater. I feel that the people always have a part to play in everything. The Government alone, by themselves, cannot do everything. It is with the co-operation of the people that Government can do much more. I am sure that the Government will make use of the people to carry out many of the policies which they have enunciated.

I must congratulate the Hon. the Chief Minister on having taken in a person belonging to my sex as a lady Minister. There was representation for ladies in his Cabinet previously also. The present lady Minister seems to be a very pious person. She is educated and had been a teacher. I am confident that with the help, understanding and briefing by our very good I.A.S. Officers, she will be able to perform her duties wonderfully and most efficiently.

[Thirumathi Tara Cherian]



Sir, I am not a feminist and I have never been a believer in women's liberation. But, I think that the time has come when Tamil Nadu has to set an example to the other States in many things. One such thing is to value the position of women who can stand shoulder to shoulder with men and function in many fields. If we turn the pages of the history of our country, we can see what women have done. If they have the necessary qualifications and if they have the merits, I do not see why they should not be given chances so that they may get an example for the other sex also to emulate.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

Sir, I am glad to see from the newspapers that the Hon. the Chief Minister is going to expand his Cabinet and take in some young people. Very soon, the burden of Government would fall upon the younger generation. Therefore, it is necessary that young people are inducted as Ministers. It is also necessary that they should be given the necessary training and should be disciplined because a person who has got to lead has got to be led.

Sir, I do not find any particular mention by the Governor in his Address about the education policy of the Government, which I think needs a lot of re-orientation. In our Education Minister, we have got an able person who has enunciated during his term various policies on formal education, non-formal education, adult education and what not. I am sure that he will continue to do so.

I would like to say something about the ticklish and controversial issue of Prohibition. Hundreds of thousands of persons who are the breadwinners of their families have been put behind the bars. There is a saying in English: "A rich man gets away with many things and not a poor man". It is not that I want scrapping of Prohibition and it is not that I want that people should be allowed to drink. I know that there is a system by which one can get a permit for Rs. 25. But, I feel that the time has come when the Government will have to think about the policy which they are going to introduce in this regard. The selling of spurious drinks and bootlegging have come to stay. We do not know how many thousands of people are





[Thirumathi Tara Cherian]

going to be blinded and how many people are going to die because of these spurious drinks. Therefore, the selling of spurious drinks and bootlegging will have to be stopped. I am sure that the Government will be able to handle this also.

(பிற்பகல் 6-00)

நானும் ஒருசில வார்த்தைகள் தமிழிலே சொல்ல முன் வருகிறேன். நான் தமிழிலே பேசுவதிலே பிழை இருந்தால் தயவுசெய்து திருத்தவேண்டும். தமிழிலே இருக்கக்கூடிய அலங்காரம் பற்றி, ஸ்தானம் பற்றி, ஸ்தலம் பற்றி யாரும் குறைவாக மதிப்பிட முடியாது. தமிழிலேயே எல்லாம் நாம் செய்ய முடியும். ஆனாலும் நான் தலைவர் அவர்களை விசேஷமாகக் கேட்டுக்கொள்வதெல்லாம் நம்முடைய கொள்கையே இரு மொழிக் கொள்கை என்பதுதான். 2 மொழிகள் கட்டாயம் வேண்டும்.

The policy which has been accepted is the two-language policy. Our young men and women can stand comparison in their capability with those in any other part of India or even outside. But, how many of our Tamilians have been able to get into the higher Services? In the past, we had famous people like the Right Hon. Srinivasa Sastry and Dr. Radhakrishnan. No Englishman could talk the English that they could talk. Pandit Jawaharlal Nehru was famous, not only because he was the son of late Motilal Nehru and not only because he fought for the freedom of India but also because of his command over the English language. He became popular because he was able effectively to put across his views about India in conferences and meetings at places like the United Nations. The same thing holds good about Dr. Radhakrishnan also. When I had been to a small place called Honololu, I had occasion to attend a meeting addressed by him. There was pin-drop silence in the hall which was packed to its capacity by people who had come to hear him speak in a beautiful language. Even in our small towns, we see a lot of parents sending their children only to learn in English. Therefore, let us not neglect English. It is the window through which we can know about the world. Therefore, while it was true. ............

தமிழர்கள் பலர் ஆங்கிலத்தில் பெயர் பெற்றிருந்தார்கள். அதுபோல் முன்
காலத்திலே தமிழ் பண்டிதர் வருகிறார் என்றால், கோட் போட்டிருப்பார்,
தலைப்பாகை அணிந்திருப்பார். அவருக்கு 10 ரூபாய்தான் சம்பளம்.
இப்போதும் தமிழ் பண்டிதர்களுக்கு உரிய மரியாதையை கட்டாயம் நாம்
கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலத்தைத் தள்ள
வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் உறுப்பினருக்கு ஒன்று சொல்ல
விரும்புகிறேன். விவாதத்திற்காக அல்ல. தகவலுக்காகச் சொல்கிறேன்.
இங்கிலீஷ் **as a language** என்ற முறையில் உபயோகிக்கிறார்கள்.
இப்போதும் (as a language) ஆங்கிலத்தை யாரும் படிக்க ஆட்சேப
மில்லை. ஆனால் அபிசியல் லேங்குவேஜ், ஆட்சி மொழி எந்த மொழி
என்பதுதான் பிரச்சினை.

**திரு. செ. முத்துசாமி :** பல தமிழர்கள் ஆங்கிலத்தில் புலமை பெற்றிருந்
தார்கள், பெயர் பெற்றிருந்தார்கள் என்று சொன்னார்கள். அது ஆங்கிலேயர்
கள் ஆட்சி செலுத்திய காலம். ஆங்கிலம் ஆதிக்கம் பெற்ற காலம். பேரறிஞர்
அண்ணா அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர்கள். என்
மாண்புமிகு தலைவர் அவர்கள்கூட தமிழிலே மிக அருமையாகப் பேசக் கூடிய
ஆற்றல் பெற்றவர்கள். ஆகவே மொழி ஆற்றல் என்பது எல்லா மொழி
களிலும் இருக்கிறது. தமிழ் மொழியிலும் அந்த ஆற்றல் இருக்கிறது.
ஆங்கிலம் ஒன்றுக்கு மட்டும்தான் அந்த ஆற்றல் இருக்கிறது என்கிற கருத்து
உடன்பாடான கருத்தல்ல.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** விவாதம் வேண்டாம். இத்தோடு
இந்தப் பிரச்சினையை விட்டு விடலாம்.

**திருமதி தாரா செரியன் :** அண்ணா அவர்கள் எனக்கும் புருஷனுக்கும்
சிநேகம். அண்ணாவின் குணம் எங்களுக்குத் தெரியாததல்ல. அவர்
எங்களுக்கு நன்கு தெரிந்தவர்தான். எங்களோடு பழகியவர்தான். ஆனாலும்
நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்பொழுது மெட்ராஸ் சிட்டி ஒரு
காஸ்மோபாலிட்டன் சிட்டி. எல்லா இடங்களிலேயும் அழகு அழகாகக்
கட்டிடம் கட்டுகிறார்கள். பஞ்சாபில் உள்ளவர்கள் இங்கே வாழ்கிறார்கள்.
அதுபோல் அமெரிக்காவில் உள்ளவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கும்
புரிகிற மாதிரி ஒரு லேங்குவேஜ் வேண்டாமா ? அதுபோல் வேறு மொழிக்கார



கள். இந்தக் கவுன்சிலுக்குப் பார்வையாளர்களாக வருகிறார்கள். இங்கே
ஆளும் கட்சியினர் எதிர்க் கட்சியினர் சண்டை போட்டுப் பேசுவதைப் பார்க்க
வருவார்கள். அவர்களுக்கெல்லாம் புரிய வேண்டாமா ?

It is a cosmopolitan city. With the coming in of Gujaratis
and Parsis, it became a cosmopolitan city. It is one of the
most well-known cosmopolitan cities which can be compared with
any other city in the world. I know that, as a policy of the
Government, we have accepted the two-language formula. While
working for the improvement of our own language, let us not
neglect the English language.

**திரு. க. இராமமூர்த்தி :** விவாதத்திலே குறுக்கிட வேண்டாம் என்று
தான் நினைத்தேன். இருந்தாலும் தகவலுக்காகக் கேட்கிறேன். ஒரு
உறுப்பினர் அவருடைய இருக்கையிலே இல்லாமல் வேறொரு இருக்கையிலே
வந்து பேசலாமா ? வேறு இடத்திலேயிருந்து பிரச்சினைகளை எழுப்பலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் வேறு ஏதாவது பேசுவார்
என்று பார்த்தேன். வேறு இடம் என்பது பதிவேட்டில் இடம் பெறாது.
உறுப்பினர் பேசிய கருத்துத்தான் பதிவேட்டில் சேர வேண்டும்.

(பிற்பகல் 6-10)

**Thirumathi TARA CHERIAN :** I have said this with a good intention. The Government may take note of what is necessary. It is not that every word spoken by me should be taken note of.

I hope that I will not be misunderstood if I say that the law
and order situation in our State is not all that good. I hope that
the Government will look into this. There is more than one
reason why law and order could not be maintained. There is
poverty and people, while they are hungry, go about stealing.
The strength of the Police Force is not adequate enough to have
control over the situation. Moreover, Government are effecting
a large number of transfers of Police Officers. I will not go
into details because I am sure that the present Government will
look into it.

Sir, after the death of my husband, I have not been going
outside my home very often. But I do so sometimes and I meet
some people. I hope that the Government will not misunderstand
me if I say that there have been delays in the disposal of some
files and in passing orders in certain matters. The I.C.S. men

were all capable men but they have all gone now. In their place we now have I.A.S. Officers who are also well-qualified. If Government could make them take more interest, I am sure that it will be possible for us to get the files moving very fast.

Sir, reference has been made in the Governor's Address to the fact that investments by the Centre in Tamil Nadu have gone down from 8 per cent to 4 per cent. I am not talking on behalf of any political party. So many political parties contested the Elections and there were so many mushroom parties also. Every party issued a manifesto before the Elections. But after a few days, they may not be able to carry out what they stated in the manifesto and they may not know to which programme priority should be given. In such a case, the views of the Opposition would be of help to them. In a democracy, there has to be Opposition. Here also, I get nostalgic memories of my husband who was closely associated with this House. This is one of the august Houses that we can think of. In the past stalwarts have sat on both sides of the House. They used to cross swords and exchange repartees but never did they hit below the belt. I hope that the same dignity will always be maintained. Let us fight for the right. If the Opposition states that something has gone wrong, it is for the Government to see that it is rectified. The ruling Party at the Centre is not in power in at least three States now. This shows that the people are always watchful and that it is the people who have to see how the Government work. I hope that the Government would always listen to what the Opposition says.

Sir, people used to say in Tamil: "மூக்கை நேராகவும் தொடலாம்; சுற்றி வளைத்தும் தொடலாம்"

' There may be 101 ways of circumventing a thing and getting what we need. I would like to say something about the working of one or two State Corporations in Tamil Nadu. I had occasion to know something about the working of the TACEL Board. It inherited all the deficits that occurred earlier and so, it was not able to show any profit. I am sure that in the new set-up consisting of efficient officers, that Corporation will be able to show profits. If the private sector could make money in that field and show profits, the public sector also can do the same thing.



I would like to make another request to the Hon. the Chief Minister. I request him to get a legislation passed by which a certain percentage of jobs could be reserved for the physically handicapped persons. I know that this subject has been talked about both inside the House and outside. I know that many handicapped persons are being employed. But if we consider the number of such persons, the job opportunities available to them are not adequate. I, therefore, consider that Government may take up a review of the problem.

Before I finish my speech, I would like to say that it is not easy to run a Government. The new Government have inherited the liabilities and assets of the previous Government and they may have their own teething troubles. They have to settle everything before they could implement their policies. In this connection, I would like to make a suggestion. It would be good if Government could lay on the table of the House, notes about their policies, wherever such policies could be made known to the Members of this House and to the public. If people come to know what is happening at the level of Government, they will understand and there will be no unnecessary criticism. So, it would be good if they lay notes on policies from time to time, say, 10 or 15 notes on policies for every quarter. In that case, we will know what are the bottlenecks and why the policies could not be carried out. It will give us an idea about how to change our policies so that we may achieve what we want.

With these words, I conclude my speech and I hope that you will be able to give more time during the Budget Session. Thank you.

*திரு. க. மீனாட்சிசுந்தரம்:* மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கூட்டத்தொடர் தொடங்கி முதன்முதலாக இந்த ஆளுநர் உரையின் மீது பேசும் போது, புதிதாக அமைச்சரவை அமைத்து இங்கே வீற்றிருக்கின்ற அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுக்கும்—முதலமைச்சர் அவர்கள் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும்—ஆசிரியர் சமுதாயத்தின் சார்பிலும் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பிலும் நான் பாராட்டுதல்களையும் வாழ்த்துக் துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு வீற்றிருக்கும் மாண்புமிகு

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 ஜூன் 27

அமைச்சர்கள் 18 பேர்களில், 5 பேர் ஆசிரியர்களுடன் தொடர்பு உடையவர்கள். அதிலே, எனக்கு ஆசிரியாக நான் கொண்டிருந்த மாண்புமிகு நாவலர் அவர்களும் இன்றைக்கு இங்கே அமைச்சராக வீற்றிருக்கிறார்கள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே மீண்டும் பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர் காலத்திலே கல்வி அறிவு பெறும் வாய்ப்பை கிராமங்களுக்கும் நல்க வேண்டும் என்று மேல்நிலைக் கல்வியை கிராமங்களுக்கும் நல்கிய அந்தப் பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்கள் மீண்டும் கல்வி அமைச்சராக வந்திருப்பது எங்களுக்கு உள்ள சிக்கல்களை எடுத்துக்கூறி நிவாரணம் பெற எளிதாக இருக்கும் என்பதால், மீண்டும் அவரை நான் பாராட்டுகிறேன். உள்ளாட்சித் துறையிலே சுறுசுறுப்பாகப் பணியாற்றி வந்த அமைச்சர் மாண்புமிகு திரு. காளிமுத்து அவர்கள் அந்தத் துறைபற்றிய அனுபவங்கள் எல்லாம் தெரிந்து எங்களுக்கு நன்மை செய்ய இருந்தாலும், இன்றைய தினம் துடிப்புமிக்க ஒருவர் மாண்புமிகு திரு. குழந்தைவேலு அவர்கள் அந்தத் துறைக்கு அமைச்சராக வந்திருக்கிறார்கள். ஆசிரியர் சமுதாயத்தைச் சேர்ந்த திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் இங்கே அமைச்சராக வீற்றிருக்கிறார்கள். ஆக, இங்கே வீற்றிருக்கும் 18 அமைச்சர் பெருமக்களிலே 5 பேர்கள் எங்களோடு தொடர்புடையவர்கள். மற்றவர்களைப் பாராட்டவில்லை என்று சொல்லவில்லை. இவர்கள் கல்விக்குத் தொடர்புடையவர்கள் என்ற வகையிலே சிறப்பாகப் பாராட்டுகிறேன். அமைச்சர் பெருமக்களில் 18-க்கு 5 பேர்கள் இருப்பதைப் போல், இந்த ஆளுநர் உரை மொத்தம் 9 பக்கங்கள் இருந்தாலும் அதில் 1½ பக்கங்களை கல்வி சம்பந்தமான பிரச்சினைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இந்த அளவுக்கு ஆளுநர் அவர்களுடைய உரை இருக்கிறது என்பதைப் பார்க்கின்றபொழுது, நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டியதையெல்லாம் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி விட்டார்கள். நான் எதையும் சொல்லவேண்டிய அவசியமில்லை. கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்கும் சென்னை மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தை சீரமைப்பதற்காக சட்ட வரைவு ஒன்று கொண்டுவர இருப்பதும் காரைக்குடியில் உள்ள கல்விக் கூடங்களை இணைத்து பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் தமிழ் பல்கலைக் கழகம் அமைக்க அரசு முன் வந்ததும் நான் பாராட்டுதற்கு உரிய விஷயங்கள். இந்த நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். தமிழ் பல்கலைக் கழகம் என்று சொல்கிற போது முத்தமிழ்க் காவலர் திரு. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களும் நம்முடைய தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களும் என்றைக்கும் நம்முடைய இதயத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நினைவு கூர்கிறேன். அவ்வாறின்



1980 ஜூன் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

கொள்கையான இருமொழிக் கொள்கையை இந்த அரசு உறுதியுடன் கடைப் பிடிக்கும் என்று குறிப்பிட்டிருப்பதையும் நான் வரவேற்கிறேன்.

(பிற்பகல் 6-20)

வாழ்த்துகிறேன். இருமொழிக் கொள்கை குறித்து அவையிலே பல்வேறு வகையான சர்ச்சைகள் எழுந்தன என்றாலும், ஆசிரியர் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், அரசு இருமொழிக் கொள்கையிலிருந்து சற்றும் பிறழாமல் இருக்க வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுதான் பெரும்பான்மையான ஆசிரியர்களின் கருத்தாகும்.

இந்த அரசை நான் பாராட்டுவதற்கு முன்னால் சில செய்திகளையும் நான் இங்கே தெரிவித்தாக வேண்டும். அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை எல்லா இயக்கங்களையும் சேர்ந்த கோரிக்கையாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்றவர்களும் தேர்தலுக்கு முன்னாலே "அனைத்து ஆசிரியர்களையும் நாங்கள் அரசு ஊழியர்களாக ஆக்குவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது நான்கூட மெத்த மகிழ்ச்சியோடு தனியார் பள்ளி ஆசிரியர்கள் உட்பட, நகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்கள் உட்பட அனைத்துப் பள்ளி ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க இருக்கிறது அரசு என்று நினைத்தேன். நாங்கள் கேட்டதோ ஒரு ரூபாய், தருவதாகச் சொன்னதோ 50 காசு, ஆனால் பின்னால் தந்ததோ 25 காசு என்று சொல்லத்தக்க வகையில் இன்றைய தினம் அரசு ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக அனைத்து ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க இருக்கிறது இந்த அரசு என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது இப்போது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை மட்டும், அதிலும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை மட்டும் அரசு ஊழியர்களாக ஆக்க இருக்கிறோம் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் மாநகராட்சி, நகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் அடங்க மாட்டார்கள். 50 காசாவது கிடைக்கும் என்று நாங்கள் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், 25 காசுதான் தரப்படும் என்கிற வகையில், இந்த அறிவிப்பு வந்திருக்கிறது என்றாலும், இதை நாங்கள் விட்டுவிட்டதாக இல்லை. இதைப் பெற்றுக்கொள்ளத் துடிப்போடு இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 ஜூன் 27

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிடுவதனாலேயே அவர்களுக்கு வேறு பல பெரும்பான்மையான புதிய பலன்கள் ஏற்படுகின்றனவா என்றால், அப்படியொன்றும் இல்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாவேன். இன்றைய தினம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் உண்டோ அவைகள் அனைத்தையும் பெற்று வருகிறார்கள். வேண்டுமானால் கடன் வசதி பெருகலாம், பதவி உயர்வு சற்று அதிகரிக்கலாம், மருத்துவ ஈட்டுச் செலவை விரைவில் பெறலாம் அல்லது சற்று கூடுதலாகப் பெறலாம். இவைகளைத் தவிர வேறு சிறப்பான புதிய சலுகைகள் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் படும் அல்லல்களிலிருந்து அவர்களை மீட்கும் வகையில் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருந்தால், அவர்களுக்குப் பல்வேறு நன்மைகள் ஏற்பட்டிருக்கும். இன்றைய தினம் தனியார் பள்ளி நிருவாகியைக் குளிப்பாட்டும் வேலையைக்கூட ஆசிரியர்களும் ஆசிரியைகளும் செய்ய வேண்டியிருக்கிறது என்று வேதனையோடு குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு தனியார் பள்ளி ஆசிரியர்கள் சங்கடப்படுகிறார்கள். எனவே, இந்த நிலைமைகளிலிருந்து அந்த ஆசிரியர்களை மீட்கிற வகையில் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருந்தால், அதை ஆசிரியர் சமுதாயம் இன்னும் பெருமையோடு, பாராட்டுதல்களோடு வரவேற்கும் நிலைமை உருவாகியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களைப்பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, உயர்நிலைப் பள்ளிகள் மற்றவைகளைப்பற்றி எல்லாம் ஒன்றும் சொல்லப்படாமல் விடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இப்போது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை மாற்றுகிறபோது, எந்த வகையில் மாற்ற இருக்கிறார்கள் என்பதை எங்களால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஏனென்றால், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், அங்கே இரட்டையாட்சி முறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்று ஊராட்சி ஒன்றியம் ஆசிரியர்களை அடக்கியாள முயல்கிறது. அதே நேரத்தில் கல்வித் துறையும் அதில் ஆதிக்கம் செலுத்த முயலுகிறது. நாங்கள் கேட்டதெல்லாம் எங்களுக்கு ஒரே எஜமானர்தான் தேவை என்பதாகும். ஆகவே இரட்டையாட்சி ஒழிக்கப்படும் வகையில் இந்த அறிவிப்பு அமைந்திருக்கிறதா என்றால், அதுவும் சந்தேகமாக இருக்கிறது. காரணம்—நான் கேள்விப்பட்டதன் அடிப்படையில் சொல்லுகிறேன்—ஊராட்சி



1980 ஜூன் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

ஒன்றியப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் அவைகளின் நிருவாகத்தை ஊராட்சி ஒன்றியங்களே வைத்துக்கொள்ளப் போகின்றன என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்குவது என்பது பாதிக் கிணறு தாண்டுவதாகத்தான் அமையும். இதை விடுத்து முழுக் கிணற்றையும் தாண்டும் வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று, கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இரட்டையாட்சி முறையை ஒழித்து கல்வித் துறையே அனைத்துப் பள்ளிகளையும் ஏற்கிற முறையில் ஊராட்சிப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக அமைகிற வகையில் மாறுதலைச் செய்தால், அது புரட்சிகரமான மாறுதலாக இருக்கும், அதற்கு ஆசிரியர் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான பாராட்டுதல் கிடைக்கும் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கட்டிடங்கள் உட்பட அரசே எடுத்துக்கொள்ள வேண்டும். [illegible] துறையினரிடம் அவைகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒப்படைக்க வேண்டும். பள்ளித் துணை ஆய்வரோ ஒன்றியக் கல்வி அலுவலராகப் பெயர் மாற்றம் செய்து அழைக்கப்பட வேண்டும். அவரே ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும், அவர்கள் நல நிதிக் கணக்கைப் பராமரித்தல், முன் பணம் கடன் கொடுத்தல், மருத்துவச் செலவிற்குப் பணம் கொடுத்தல் போன்ற பணிகளையெல்லாம் செய்யக்கூடிய முறையில் நிலைமைகளை உருவாக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளில் [illegible]யெல்லாம் பின்பற்றுகிறார்களோ அவைகளையெல்லாம் இந்தப் பள்ளிகளிலும் பின்பற்ற வேண்டும். அந்த வகையில் நிலைமைகளை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போதைய முறையில் பல்வேறு விதமான சிக்கல்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் அரசு ஆலோசனை செய்ய வேண்டும். இதற்கு முன்னோடியாக கல்விக் குழுவைக் கூட்டிட வேண்டும். இதற்கான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால் எங்களுடைய இயக்கங்களின் பொறுப்பாளர்களையெல்லாம் அழைத்து அவர்களையும் ஆலோசனை கேட்டு சிக்கல் இல்லாத வகையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய துர்திருஷ்டம், நான் எப்போது பேசினாலும், இந்த அவையில் கல்வி அமைச்சர் அவர்களோ உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோ இருப்பதில்லை. சில நேரங்களில் நான் சொல்ல வேண்டியவற்றையெல்லாம் சொன்ன பிறகு அவர்கள் வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக நான் மீண்டும் அந்தக் கருத்துக்களையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்றாலும் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த அவையில் இருப்பதால், மற்ற அமைச்சர்கள் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதால், நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1980 ஜூன் 27

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, ஆசிரியர்களின் மாறுதல்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த அளவுக்கு நாங்கள் சலுகைகளைத்தான் கேட்கிறோம். முதல்வர் அவர்கள் பேசும்போது 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசையா' என்று கேட்டார்கள். மீசை வைத்துள்ள எனது நண்பர் ஒருவர் சொன்னதை நான் கேட்டிருக்கிறேன். மீசை வைத்திருப்பவர்கள் கூழ்குடிக்கிறபோது சில பகுதி மீசையில் ஒட்டிக் கொள்வது உண்டு. குடித்துவிட்டு உட்கார்ந்திருக்கும்போது மீண்டும் கழுவாமல் விட்டுப் போனதை நாக்கால் நக்கிப் பார்த்து சுவைக்க அப்போது வாய்ப்பு ஏற்படும் என்று சொன்னார். அந்த அளவுக்கு கூழும் இருக்க வேண்டும், மீசையும் இருக்க வேண்டும். சுவையும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் தவறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும். ஆசிரியர்களின் மாறுதலை ஒன்றிய அளவிலேயே செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாவேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் ஏ, பி பிரிவுகளை இணைக்கும் மாபெரும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டவர்கள். ஆனால் இன்றையதினம் ஏ மற்றும் பி பிரிவுகள் இணைக்கப் பட்ட பிறகும்கூட, அது நீண்ட காலமாகச் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறி, அது வழக்கு மன்றத்திற்கும் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. இன்றைக்கும் அந்தப் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. அதுபற்றிய கூக்குரல் ஒரு பக்கம் இருந்து கொண்டேயிருக்கிறது. அது இன்னமும் தொங்கலிலேயே நிற்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள், அதைப் போல இல்லாமல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக ஆக்கும்போது, உடனடியாக அதை எப்படிச் செய்ய முடியுமோ அந்த வகையில் செய்ய வேண்டும், ஆசிரியர்களின் தகுதிக்கு ஏற்ப உயர்வு கிடைக்கும் வகையில் அதனைச் செய்ய வேண்டும். அந்த வகையில் இணைப்பு முயற்சி இருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்குள்ள அச்சமெல்லாம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும் நிலையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கும்படி சட்டத்தைப் பிறப்பித்துவிட்டால், அதற்குப் பின்னாலே வரும் 5 ஆண்டுக் காலத்திற்கு அந்தச் சட்டத்திலே இருக்கிற சிக்கல்களைப் போக்குவதற்கே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். மற்ற கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால்தான் செய்கிற செயலைத் திறமையாக, சட்டச் சிக்கல் இன்றி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு முன்னாலே



1980 ஜூன் 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அறிவித்ததில் ஒரு பகுதியையாவது நிறைவேற்றும் வகையில் ஆளுநர் உரையில் ஒரு உத்தரவாதம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க ஆளுநர் உரையில் உத்தரவாதம் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு முன்னால் முன்பு ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களின் குறைகளைக் கேட்டு அவ்வப்போது அவைகளை நிவர்த்திக்க ஒரு தனிக் குழு அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட குழுவை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரைவில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவைகளைக் குறிப்பிடும்போது, சிலவற்றை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்புடைய அமைச்சர்கள் இங்கே அவையில் இல்லை என்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால், இதைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையில் 4-வது பத்தியில் "நேர்மைக்கும் நாணயத்திற்கும் சிறப்பான பெயர் பெற்றுள்ள என் அரசு, அதை உறுதிப் படுத்தும் வகையில் தூய்மையைப் பொது வாழ்விலும் நிர்வாகத்திலும் என்றும் நிலைநாட்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். இந்த அரசு நிச்சயமாக அதை நிலைநாட்டும் என்று நம்புகிறேன். ஆனால் இந்த நோக்கில் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்றும் நான் கருதுகிறேன். 1967 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி அமைந்தது. அந்த ஆட்சி அமைவதற்கு முன்னால் 1967 ஆம் வருடத் தேர்தலில் ஆசிரியர்கள் பல்வேறு பகுதிகளில் பல்வேறு நிலைகளில் ஈடு படுத்தப்பட்டிருப்பார்கள் என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அந்த நிலைகளையெல்லாம் நாங்கள் அவரிடம் எடுத்துச் சொல்லி நிருவாகத்தில் பழி வாங்குகிற வகையில் நடைமுறைகளைப் பின்பற்றக் கூடும் என்று எங்கள் அச்சத்தைத் தெரிவித்தபோது, "இந்த ஆண்டு ஆசிரியர்களை எங்கும் மாறுதல் செய்ய வேண்டாம்" என்ற உத்தரவை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறப்பித்தார்கள் என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இதை நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், நிருவாகத்திலும் பொது வாழ்விலும் என்றும் தூய்மையையும் நேர்மையையும் நிலை நாட்டும் என்ற வாசகங்கள் ஆளுநர் உரையில் காணப்படுவதால், அதற்கேற்ப நடைமுறைகள்

இருப்பதற்குப் பதிலாக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மாறுபட்ட சூழ்நிலைகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், வடாற்காடு மாவட்டம் நாட்ரம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 44 ஆசிரியர்களை மாறுதல் செய்து ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது 19—6—1980 அன்று பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அங்கே இருக்கிற மக்கள் பிரதிநிதி முயற்சி செய்து, மேலே வந்து இங்கேயிருந்து செய்தி அனுப்பி ஆசிரியர்களெல்லாம் அந்தந்தப் பள்ளிகளிலிருந்து விடுபட்டு புதிய பள்ளிகளில் சேர்ந்த பிறகு, அந்த ஆணை நீக்கப்பட்டு, மீண்டும் அந்த ஆசிரியர்கள் தாங்கள் பணியாற்றிய பழைய பள்ளிகளிலேயே சென்று பணியாற்றிட வேண்டுமென்று 20—6—1980 அன்று ஆணையிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 6-30)

முதல் நாள் பிறப்பித்த ஆணையை ஏற்று 44 ஆசிரியர்கள் புதிய இடத்திற்குச் சென்று சேர்ந்ததற்குப் பின்னால் இரண்டாவது நாள் மீண்டும் பழைய இடத்திற்குச் செல்லுங்கள், மேலும் 160 இடங்களுக்கு மாறுதல் உத்தரவு பிறப்பிக்க பட்டியல் தயாரித்திருக்கிறோம் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை ஆசிரியர்களுக்கு அறுவறுக்கத்தக்க சூழ்நிலையை ஏற்படுத்தும். ஆகவே இதைத் தடுக்க அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முன்னாள் ஒரு முறை இப்படி ஆசிரியர்கள் அலைக்கழிக்கப்பட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் நான் ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன என்று நான் சொன்னபோது, முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அதை அனுப்பி உரிய நடவடிக்கையை எடுக்கச் சொல்லி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உரிய விசாரணையைச் செய்து அந்தத் தவறுகளைக் களைந்தார்கள். இந்த நடைமுறையை மீண்டும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கை மாவட்டம், குன்றத்தூரில் அப்படிப்பட்ட ஆசிரியர்கள் பிரச்சினைகள் இருக்கின்றன. மாறுதல் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்னதாக வெளியே இருப்பவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் தலையிட்டு புதியதொரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் தவிர்ப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





முகவை மாவட்டம் காரியாப்பட்டியிலேகூட இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. முதல்வர் அவர்கள் தவறுகள் நடக்கக் கூடாதென்று கருதக் கூடியவர் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அங்கே இருக்கக் கூடியவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தலையிட்டு பல ஆசிரியர்களைப் பழி வாங்குகிற வகையில் மாறுதல்களைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகளுக்குப் பாராட்டு விழா எடுக்க இருப்பதாகவும் அவர்களுக்காக ஆசிரியர்கள் நிதி திரட்ட வேண்டுமென்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால், அவர்களை மீண்டும் மாறுதல் செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்கள் என்று உருட்டல், மிரட்டல்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளைத் தவிர்க்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசாணையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கல்வி சம்பந்தமாகப் பிறப்பிக்கப்படுகிற ஆணைகளின் நகல்களை ஆசிரியர் பிரதிநிதிகளுக்கு வழங்க வேண்டுமென்று நாங்கள் வேண்டுகோள் விடுத்து, அமைச்சர் அவர்களும் அதற்கு ஒப்புதல் அளித்து, அதற்குப் பின்னாலே செயலாளர் மூலமாக எல்லாத் துறைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. என்றாலும், இன்றுவரையில் எங்களுக்கு அரசாணைகளின் நகல்கள் வருவதே இல்லை. அதனாலேதான் அரசு இட்ட ஆணைகளைப் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே சரியான தகவல்களைக் கேட்க முடியாமல் வேறு வகையிலே பேசி, சற்று முன்பு நடந்ததைப் போல், மீண்டும் ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. செயலாளர் அவர்கள் சுற்றறிக்கை அனுப்பிய பிறகும், இன்று வரை அரசாணைகளின் நகல்கள் கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அவைகள் எங்களுக்குக் கிடைத்திருந்தால், நாங்களும் இந்த அரசின் சாதனைகளைப்பற்றிச் சிறப்பாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 50 ரூபாய் வழங்கப்படுமென்று ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை நான் பாராட்டக் கடமைப்பட்டவன், வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஆசிரியர்களில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் சான்றிதழ்களைப் பெற்று வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பட்டதாரிகளுக்குத் தருவதைப் போலவே, அவர்களுக்கெல்லாம் மாதந்தோறும், 50 ரூபாய் தருவதற்கு அரசு முன்வரவேண்டும். 3 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அரசில் பணி புரிய வேண்டுமென்று ஒப்பந்தம்

செய்துகொண்டு அவர்களை ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்புகிறோம். ஆனால் பயிற்சியை முடித்த பின்னர் ஆண்டுக் கணக்கில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் உதவித் தொகை தரும் வகையிலே திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு அகவிலைப்படியை அளிப்பார்கள். அதற்குப் பின்னாலே மாநிலத்திலே அகவிலைப்படியை அளிக்க வேண்டுமென்று கோரிக்கையை எழுப்புவோம். பிறகு நான்கு மாதங்கள் கழித்து அந்த அகவிலைப்படியை வழங்குவார்கள். மத்திய அரசு வழங்கியவுடனே மாநில அரசும் அகவிலைப் படியை வழங்கும் என்று கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டிருந்தாலும், இன்னும் இரண்டு தவணை அகவிலைப்படி நிலுவையில் இருக்கின்றது. அதைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களிடமிருந்து ஒரு தொகையைப் பிடித்துக் கொண்டு அவர்கள் ஓய்வுபெறும்போது பத்தாயிரம் ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். ஆசிரியர்களுக்கும் இத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டிருந்தோம். இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னால் முதல் பட்ஜெட்டில் கொள்கையளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, இரண்டாவது பட்ஜெட்டில் இத்திட்டத்தை அறிவித்து அதற்குப் பின்னாலே ஊழியர்கள் சங்கங்கள் இந்த ஏற்றுக்கொள்ளுகின்றனவா என்று அறிய வேண்டுமென்று சொல்லப்பட்டு, இது வரையிலும் நடைமுறைப்படுத்தாமலேயே இருக்கிறது. அதை விரைவுபடுத்தி அனைத்து ஊழியர்களுக்கும் மனநிறைவை ஏற்படுத்த மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே இருக்கக் கூடிய உறுப்பினர்களுள் ஆசிரியர் பகுதியிலே இருப்பவர்கள்தான் மிக மிக ஏழைகளாக இருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. மற்றவர்களும் இருந்தால் கோபித்துக்கொள்ள வேண்டாம். மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் பல இடங்களுக்கு நேரில் செல்ல முடியாத நேரத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டியது அவசியம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே தொலைபேசியை வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்களே திட்டமிட்டு ஒரு ஏற்பாட்டை கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னதாகச் செய்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே ஓர் அறிவிப்பைத் தந்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் தொலைபேசி வசதியை அரசே செய்து தரும் என்று தெரிவித்தார். ஆனால் இன்றுவரை அத்திட்டம் செயல்படுத்தப்படவே இல்லை. நாங்கள் புதவி விட்டுப் போனபின்



செய்து தந்தால் பயனில்லை. ஆகவே விரைவாக இவ்வசதியைச் செய்து தரவேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன். இது குறித்து நான் கடிதம் எழுதிக் கேட்டிருக்கிறேன். ஆனால் பதில்கூட வரவில்லை. இப் பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாட நூல்களுக்கு, நோட்டுப் புத்தகங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக் கின்றது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் 25 நிமிடங் களாகப் பேசிக் கொண்டிருக்கிறார். விரைவாக முடிக்க வேண்டும்.

முன்பு தனியார் வெளியிட்டுக் கொண்டிருந்தவைகளை இப்போது தமிழ் நாடு பாடநூல் நிறுவனத்தினர் வெளியிடுகிறார்கள். இது சிறப்பான முயற்சி. ஆனால் அவைகள் கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், தனியார் துறைக்கு ஆக்கம் அளிக்கும். இப்படித் தட்டுப்பாடு ஏற்பட்டால், இத்துறை நன்றாகச் செயல்படவில்லை என்ற அவப் பெயர் ஏற்படும். அத்தகைய அவப்பெயர் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒத்தி வைப்புத் தீர்மானங்களையும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களையும் தந்தால், அப்பொருள்கள் பற்றி ஆளுநர் உரையில் பேசலாம் என்று குறிப் பிட்டு அத்தீர்மானங்களைத் திருப்பியனுப்பிவிடுகிறார்கள். ஆளுநர் உரையின் மீது பேசும்போது அவகாசம் தராமல் தலைவர் அவர்கள் மணி அடித்துக் கொண்டேயிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. இப்படிப் பேச முடியாத நேரத்தில் அவற்றை ஒத்தி வைப்புத் தீர்மானமாகவும், கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் கொடுத்தால், அதையும் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது தலைவர் அறையில் பேச வேண்டிய விஷயம். முதலமைச்சரைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** எதற்காகச் சொல்கிறேன் என்றால், *

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே கொடுத்தது பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே அதைப் பற்றிச் சொல்லக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அது எனக்கு எழுத்து மூலம் திருப்பியனுப்பப் பட்டுவிட்டது.

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எழுத்து மூலம் கொடுத்தாகிவிட்டதென்றால், அதைப்பற்றி எழுப்புவது முறையல்ல.

**மாண்புமிகு திரு. கா. இராசா முகமது :** தலைவர் அவர்களே, வார்த்தைகள்கூட அவைக் குறிப்பிலே இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சொல்ல அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அது உங்களுடைய பரிசீலனையில் இல்லை. திருப்பியனுப்பப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருப்பியனுப்பியிருந்தால் அதைப் பற்றி எழுப்பவே கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆளுநர் உரையிலே சிறப்பாக பல அம்சங்கள் இருந்தாலும், எதிர்பார்க்கிற சில அம்சங்கள் இல்லை. என்.ஜி.ஜி.ஓ.-க்களுக்கு மேலவையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமென்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அதுபற்றி ஆளுநர் உரையிலே ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. பல நன்மைகள் இருக்கிறதென்றாலும், இப்படிப்பட்ட சில நன்மைகளையும் அறிவித்திருந்தால், மிக நலமாக இருந்திருக்கும். சென்சஸ் பற்றிச் சொன்னார்கள், யார் யாருக்கு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்வதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் தேர்தல் நேரத்தில் வாக்குச்சாவடிகளில் தேர்தல் பணிபுரியும் வாய்ப்பையும் வழங்க உத்தரவிட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்நிலை இல்லாததால், இதுபற்றி நாடு பூராவும் கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. 244 பேர்கள் போட்டதில் 7 பேர்கள் மட்டுமே வகுப்புக்குச் சென்றிருக்கிறார்கள். இது குறித்து அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அதிருப்தி நிலை நாட்டிலே இருக்கிறது. ஆகவே இதுபற்றிய அறிவிப்பை முதல்வர் தந்தால், போராட்டத்தை தடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.40)

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1980 ஜூன் 28.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. அறிவிப்பு.

**புதிய உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருவாளர்கள் ஜேப்பியார், வி. வி. ஆனந்தம், எஸ். ஆர். இராதா ஆகியோர் நேற்று மாலையும் திருவாளர்கள் ஆர். டி. சீதாபதி, ஏ. ஜே. தாஸ் ஆகியோர் இன்று மாலையும் எனது அறையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.)

### 2. கவன ஈர்ப்பு.

**சேலம், கோட்டை மாரியம்மன் கோவிலுக்கு 120 அடி உயர இராஜ கோபுரம் கட்டுமாறு ஆர்ப்பாட்டம் செய்தது குறித்து.**

*** திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“சேலம், கோட்டை மாரியம்மன் கோவிலுக்கு 120 அடி உயர இராஜ கோபுரம் கட்டுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தது குறித்து.”

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

@ 253-259 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1980 ஜூன் 28

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த இராஜ கோபுரம் உயரமாகக் கட்டவேண்டியது பற்றி சேலத்திலே ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு அரசு நல்ல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இருந்தபோதிலும் அங்குள்ள அதிகாரிகள் அதற்குத் தகுந்த கோவாப்பரேஷன் கொடுக்காமல், அந்தப் பணிக்கு இக்கட்டுக்கள் ஏற்படுத்தியிருப்பதாக அங்குள்ளவர்களுக்கு ஒரு எண்ணம் இருக்கிறது. ஆதலாலே, கூடிய விரைவிலே இந்த அரசு அந்த இராஜகோபுரம் பிளான், எஸ்டிமேட்களை ஏற்பாடு செய்து இன்னல்களை நீக்கி அஸ்திவாரத்தை சீக்கிரத்திலேயே போட்டு முடிக்க ஏற்பாடு செய்யும் என்று நினைக்கிறேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற விவரமான அறிக்கையை மாண்புமிகு அங்கத்தினர்கள் படித்திருப்பார்களானால், அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கமாட்டார்கள். ஆகவே அவர்கள் இந்தக் கோரிக்கையை எழுப்பியதன்மூலம், அரசாங்கமோ, அறநிலையத்துறை அதிகாரிகளோ, திருப்பணிக்குழுவோ நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதைப் போன்ற ஒரு உணர்வை இந்த மன்றத்திலே எழுப்பியிருக்கிறார்கள். முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இன்றைக்கு உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிற அந்தக் கோயில் பாதுகாப்புக்குழுத் தலைவர் உடன்பட்டு கையெழுத்துப் போட்டிருக்கிறார். நடவடிக்கைகள் முறையாக எடுக்கப்பட்டு வருகின்றன. ஓய்வு இருக்கும்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்களும் இந்த மன்றத்தின் மற்ற உறுப்பினர்களும் இந்த அறிக்கையை விரிவாகப் படித்து விவரங்களைத் தெரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். பத்திரிகையாளர்களுக்கும் இது கிடைக்கும் என்று நம்புகிறேன்.

## 3. ஆளுநர் உரையின்மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது எங்களது அணியின் சார்பாக கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையின்மீது கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பு, தமிழக மக்களுடைய பெருவாரியான [illegible] பெற்று அமோகமான ஆதரவைப் பெற்று வெற்றி பெற்ற புதிய வரலாறு படைத்த இந்த அரசுக்கும். இந்த ஆட்சி[illegible]மைப் பொறுப்பை



ஏற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அவரது தலைமையை ஏற்று ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கின்ற மற்ற அமைச்சர்களுக்கும் எங்களுடைய நல்வாழ்த்துக்களை இந்தச் சமயத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தேர்தலின் தீர்ப்பு மிகத் தெளிவான தீர்ப்பு என்பது ஆளுநர் அவர்களின் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்ற அதே நோக்கிலே அந்தத் தேர்தல் தீர்ப்பை ஏற்று மக்களுடைய நம்பிக்கைக்கு ஏற்ற வகையிலே மக்களுடைய நம்பிக்கையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் அவ்வாறு பூர்த்தி செய்வது முக்கியமாகும். அந்த வகையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய கடமைகளைச் செவ்வனே செய்து தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்காகவும் தங்களை அர்ப்பணித்துக்கொள்வார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக பட்டதாரிகள், ஆசிரியர்கள் தொகுதி தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலிலே ஆசிரியர் தொகுதியிலிருந்து நம்முடைய மதிப்பிற்குரிய திரு. பா. ரா. தாமஸ் அவர்களும், சகோதரி செல்வி லீலாவதி அவர்களும், பட்டதாரிகள் தொகுதியிலேயிருந்து நம் மதிப்பிற்குரிய டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தார்மீக ஆதரவைப் பெற்று, அவர்களுடைய தோழமைக் கட்சிகளுடைய ஆதரவைப் பெற்று அடைந்த வெற்றி எல்லாரும் பார்த்து வியக்கின்ற வகையிலே இந்திய வரலாற்றிலே ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இந்தியாவினுடைய பல்வேறு மாநிலங்களிலும் இந்தத் தேர்தலினுடைய முடிவை எதிரொலிக்கும் வகையிலே, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் பார்த்து வியக்கின்ற வகையிலே, இந்தத் தேர்தல் முடிவு அமைந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன், வியக்கிறேன். இது தமிழ் நாட்டு அரசியலிலேயே ஒரு திருப்பு முனையாக அமைந்திருக்கிறது. அப்படி திருப்பு முனையாக அமைவதற்கு ஆசிரியர் பெருமக்கள் தங்களுடைய பங்கைச் செலுத்தும் முறையில் செயலாற்றியிருக்கிறார்கள். அதில் நல்ல பங்கைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதைக் குறித்து நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அதுபோல் தங்களுடைய தார்மீக ஆதரவையும், நல்ல உதவிகளையும் [illegible]தமைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், [illegible] அமைச்சர்களுக்கும் எங்கள் மனமார்ந்த

யிலே ஏழை மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற உறுதியுடன் தைரியமாகச் செயல்பட வேண்டும், யாருக்கும் அஞ்சாமல் செயல்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய மிகப் பணிவான கோரிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிர்வாகத்தினுடைய தாமதத்தைப் பற்றிச் சொல்லும் போது, ஒன்றைச் சொல்கிறேன். அந்தத் தாமதத்திற்கு இந்த ஆட்சி பொறுப்பு என்று சொல்மாட்டேன். மேல்நிலைப் பள்ளித் தேர்தல் முடிவுகள் வருவதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதம் இறுதியில் தான் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் விளைவு என்ன ஆகியிருக்கிறது ? இப்போது ரீஜனல் இன்ஜினியரிங் காலேஜில் தமிழகத்திற்கு 89 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரீஜனல் இன்ஜினியரிங் கல்லூரிக்கு விண்ணப்பம் பெற்று அனுப்ப வேண்டும். அந்த விண்ணப்பங்கள் 25-ம் தேதியே சென்று சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் 25-ஆம் தேதி கடந்துவிட்டது. அவர்கள் மிக திட்டவட்டமாக தங்களுடைய பிராஸ்பெக்டஸில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ' தமிழ் நாட்டு மாணவர்கள் எல்லாம் 25-ம் தேதிக்குள் தங்களுடைய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். 25-ம் தேதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் ' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடங்களை நாம் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் உடனடியாக தமிழக அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இந்தக் கடைசித் தேதியைத் தள்ளி வைத்து நமது மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிவுகள் வெளிவந்த பிறகு மாணவர்கள் மனுக்களை அனுப்புவதற்கு வசதியாக, அந்த விண்ணப்பங்கள் அனுப்பப் பெறுவதற்கு ஏற்ப தேதியை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஹையர் செகண்டரி பரிட்சை எழுதி முடிவு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற மாணவர்கள் இந்தப் பொறியியல் கல்லூரியிலே சேர்வதற்கு எந்த சிரமமும் இல்லாத வகையிலே நாட்கள் நீட்டிக்கப்படும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, ரீஜினல் இன்ஜினியரிங் காலேஜ் மற்றும் கல்லூரிகளுக்கும் காமன் செலக்‌ஷன் கமிட்டி என்று வைத்துத்தான் நாம் மாணவர்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 4-10)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** [illegible] மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்காக [illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.





இன்னொன்று. ' ஏ ' ' பி ' பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகள் இணைப்புக்கான ஆணை, மிகத் தெளிவாக 2—11—1978-ல் வெளியிடப்பட்டது. அதற்குப் பிறகு அது குறித்து உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, அதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று, கடந்த 1979 ஆம் ஆண்டு அக்டோபர்—நவம்பர் மாதத்தில் அது குறித்து இறுதியான தீர்ப்பு வந்தது. ஆனால் நான் ஒன்றை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த ஆணை இன்றுவரை முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. காரணம் வெளியிலே தவறான, ஆதாரமில்லாத ஒரு பிரச்சாரம் நடைபெறுகிறது. அதாவது மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் சிறிது காலம் ' பி ' பிரிவில் பணியாற்றியவர், அதனால் அவர்களுக்கு அதில் பாசமுண்டு, அதனால்தான் இரண்டையும் ஒன்றாக இணைத்திருக்கிறார்கள் என்ற தவறான பிரச்சாரம் நடைபெறுகிறது. கடந்த 10 ஆண்டுகளில் பேரவை, மேலவை நிகழ்ச்சிக் குறிப்புகளை எடுத்துப் பார்த்தால், அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த இணைப்பை வற்புறுத்திப் பேசியிருப்பதைக் காணலாம். இந்த மன்றத்தில் மட்டுமல்லாமல், வெளியிலேயும் பேசியிருக்கிறார்கள். இது ஒரு முற்போக்கான திட்டம். இது முற்போக்கான திட்டமென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே நீதிபதிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆணை இன்றுவரை முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை. அந்த ஆணை செயல் படுத்தப்பட்டால்தான், ' பி ' பிரிவு ஆசிரியர்களுக்குரிய நியாயம் கிடைக்கும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறையிலே டெபுடி இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் என்ற பதவி இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், அந்தப் பதவியில் ' ஏ ' பிரிவைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், ' பி ' பிரிவைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால், உண்மை நிச்சயமாகத் தெரியும். சுப்ரீம் கோர்ட்டின் தெளிவான தீர்ப்பு கிடைத்த பிறகும் ஆணையைச் செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. கல்வி அமைச்சரவர்களுக்குக் காரணம் தெரியும். எனவே இது போன்ற காலதாமத்தைத் தவிர்க்க வேண்டும். இது வேண்டுமென்றே நிகழ்கிறது. Deliberate delay நடைபெறுகிறது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, 4 மாதக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆட்சி இல்லாத நிலைமையில், இப்போது மீண்டும் அந்த ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய குறையை விரைவில் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஜூன் 28

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் இப்போது சுட்டிக் காட்டியது கூட பொதுவாக நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள கால தாமதம்தான். இந்த அரசுதான் இதற்குக் காரணமென்று நான் சொல்லவில்லை. அரசு இப்போது வந்துள்ளதால், இதை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் இது குறித்து வாக்குறுதி தந்தமைக்காக என்னுடைய நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். சேலத்திலே, அண்மையிலே தலைமை ஆசிரியர் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. அதிலே 'பி' பிரிவைச் சேர்ந்த 15 ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. 'ஏ' பிரிவைச் சேர்ந்த 3 ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. ஆனால் 'பி' பிரிவைச் சேர்ந்த தலைமை ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். 'ஏ' பிரிவு தலைமை ஆசிரியர்கள் அந்த மாவட்டத்திலேயே இருக்கிறார்கள். வெளி மாவட்டங்களுக்குப் போகக் கூடாது என்பதில்லை. ஆனால் ஒரு பிரிவுக்கு நியாயம், மற்றொரு பிரிவுக்கு அநியாயம் என்றால் எப்படி? இதை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லாததால், நாம் தாராளமாக நிர்வாகத்தை நடத்தலாமென்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

இன்னொன்று. மூன்றாம் ஊதியக் குழு அறிக்கையில் இருக்கும் முரண்பாடுகளைக் களைய ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழுவின் அறிக்கையை விரைவுபடுத்த ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு தலைவரவர்கள் மணியடித்தார்கள்)

மாண்புமிகு முதலமைச்சரவர்கள், சென்ற ஆண்டு, நிர்வாகத்திலே தாமதத்தைத் தவிர்க்க எவ்வாறு விரைவாகக் காரியங்களைச் செயல்படுத்தலாமென்பதை ஆராய ஐ. ஏ. எஸ். அதிகாரி ஒருவர் தலைமையில் ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழுவின் அறிக்கை இன்னும் வரவில்லை. அந்த அறிக்கையை வெளியிட்டு, அந்தக் குழுவின் கருத்துக்களைச் செயல்படுத்தி, நிர்வாகத்தை விரைவுபடுத்துவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்டு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒவ்வொரு துறையிலும் டைரக்டர்—Head of the Department இருக்கிறார். அவர் அமைச்சர்களிடம் சென்று பேசுவதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும்.



'Head of the Department will become the ex-officio Secretary' என்று சில மாநிலங்களிலே ஏற்படுத்தி, செயல்படுத்துகிறார்கள். அந்த மாநிலங்களில் 'Head of the Department, ex-officio Secretary' கோப்புகளை எடுத்துச் சென்று, அமைச்சர்களிடம் பேசி, காரியங்கள் சீக்கிரம் நடக்க வாய்ப்பாக இருக்கிறது என்பதை முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கேரள மாநிலத்திலே டிஸ்டிரிக்ட் கவுன்சில் என்று ஏற்படுத்தி, அதற்கான சட்டமுன்வடிவு கொண்டு வந்து, அதிகாரத்தைப் பரவலாக்கி, காரியங்களை விரைவுபடுத்தி, ஏழை எளிய மக்களுக்கு அரசின் உதவி உடனடியாகச் சென்றடைய வழி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சட்ட முன்வடிவைக் குடியரசுத் தலைவரவர்களின் அனுமதிக்கு அனுப்பி, அவர் அனுமதி கிடைக்கும் நிலைமை இருக்கிறது. அது வெற்றிகரமாக இருந்தால், தமிழ் நாட்டிலும் அதுபற்றி ஆராய்ந்து பார்க்கலாமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு, தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் 10 நிமிடங்களே கேட்டார்கள். 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சீக்கிரம் முடித்து விடுகிறேன். வேலையில்லாத பட்டதாரிகளுக்கு உதவித் தொகை தரும் திட்டம் பற்றி இந்த அரசு முன்பு அறிவித்ததை மீண்டும் செயல்படுத்த தீவிரமாக இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். 50 ரூபாய் கொடுத்தாலும் அல்லது அதை உயர்த்தி 100 ரூபாயாகக் கொடுத்தாலும் சரி, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அப்படி அலவன்ஸ் கொடுப்பதோடு நிறுத்திவிடாமல், அவர்கள் ஏதாவது ஒரு அலுவலகத்தில் ஒரு மணி நேரமாவது பணியாற்றுமாறு செய்து, அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 'Empty mind is Devils' workshop' என்று சொல்லுவார்கள். காலையிலோ, மாலையிலோ ஒரு மணி நேரமாவது அவர்களுடைய பணியை அரசு அலுவலகங்கள் அல்லது பள்ளிகளில் பெறுகின்ற வகையில் திட்டத்தைத் தீட்டினால் நல்லது. அரசு உதவித் தொகை கொடுக்கிறது, அதே சமயத்தில் அவர்கள் உழைப்பு கொடுக்கிறார்கள். அதன்மூலம் உழைப்பிற்கு மதிப்பு கொடுக்க வேண்டுமென்ற தத்துவத்தை அவர்கள் புரிந்து கொள்ள வழி வகையை ஏற்படுத்தலாமென்று சொல்லிக்கொள்கிறேன். 50 ரூபாய் என்பதை 100 ரூபாயாகக்கூட கொடுக்கலாம். ஆனால் அதே சமயத்தில் அவர்களிடமிருந்து வேலை பெறவேண்டும்.

அடுத்து, நிர்வாகத்தில் தூய்மை பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேச ஆரம்பித்து ரொம்ப நேரமாகிறது. இன்னும் 2, 3 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** நிர்வாகத் தூய்மைபற்றி இந்த அரசு கடந்த 2½ ஆண்டுகளாகச் செய்துவருவதைப் பாராட்டுகிறேன். சில விஷயங்களில் கண்ணுக்குத் தெரிகிற குற்றங்களைக் களைய முடியவில்லை. சப்-ட்ரெஷரீஸ் இருக்கின்றன. அங்கே Pay bill, arrear bill ஆகியவற்றை அனுமதிக்க வேண்டி அனுப்பும்போது, குறிப்பிட்ட தொகை கொடுத்தால்தான் தமிழகத்திலுள்ள துணைக் கருவூலங்களில் அவற்றை அனுமதிக்கும் நிலைமை இருக்கிறது என்பது உண்மை. இது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. குறிப்பிட்டு ஒன்றிரண்டைச் சுட்டிக் காட்டலாம். நிறைய இருக்கின்றன. அங்கே இருக்கும் நிர்வாகத்தில் System of Administration உள்ள கோளாறு லஞ்சம் வாங்க இடம் தருவதாக இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும். அவர்கள் லஞ்சம் பெறாமலிருக்க அதன் நடைமுறையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கோவை, திருச்சியில் பல்கலைக் கழகங்கள், காரைக்குடி பல்கலைக் கழகம் ஆகியவற்றை நிறுவுவதற்கான முயற்சிகளுக்கு எங்கள் மனப்பூர்வமான ஆதரவு உண்டு. அதற்கு எப்போதும் வரவேற்பு உண்டு. அதற்காக இந்த அரசை வாழ்த்துகிறேன். இந்த நேரத்தில் மேலும் ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களுக்கு ஒரு விவசாயப் பல்கலைக் கழகம் வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. திருக்கோவிலூருக்குப் பக்கத்தில் வனப் பகுதியில் 600 ஏக்கர் நிலம் இருக்கிறது. விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு 400 ஏக்கர் நிலம்தான் வேண்டும். எனவே நான்கு மாவட்டங்களுக்கும் பயன்படும் வகையில் ஒரு விவசாயப் பல்கலைக் கழகத்தைத் துவக்க அரசு முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் நிர்வாகச் சீர்திருத்தத்திற்காக ஒரு சட்ட முன்வடிவு வர இருப்பதை வரவேற்கிறேன். தற்போது தமிழகத்தில் இருக்கிற தனியார் பாலிடெக்னிக்கிலுள்ள ஆசிரியர்களுக்கு எந்த விதமான சட்டப் பாதுகாப்பும் இல்லை. அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே ஒரு சட்ட முன்வடிவை அரசு கொண்டுவர



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் நீண்ட காலமாகக் கேட்டு வந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்று, அதைச் செயல்படுத்துமென்று ஆளுநர் அவர்கள் உரையில் தெளிவாக அறிவித்திருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். அதற்கான ஆணையை வெளியிட வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களும் அரசுப் பள்ளி ஆசிரியர்களைப்போல் எல்லாச் சலுகைகளையும் பெற அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக ஒன்றே ஒன்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 4-20)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஒன்று சொன்னால் அதில் வலிமை இருக்க வேண்டும். மற்றவர்கள் நேரத்தையும் எடுத்துக் கொண்டு உறுப்பினர் பேசுகிறார். இன்னும் பலபேர் பேச வேண்டியிருக்கிறது. ஐந்து நிமிடம் கொடுத்தால் போதுமென்று சொன்னார்கள். இருபது நிமிடம் ஆகிவிட்டது. பேசிக்கொண்டே போவது சரியல்ல.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** எங்கள் அணியில் திரு. தாமஸ் பேசவில்லை, நான் மட்டும் பேசுகிறேன். இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். அடுத்து, அரிசன நலத் துறையைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். அந்தத் துறை இயங்குகிறதா இல்லையா என்ற சந்தேகம் எனக்கு உண்டு என்று நான் ஏற்கெனவே ஒரு முறை இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அந்தத் துறை குறித்து கசப்பான அனுபவங்கள் எனக்கு நிறைய உண்டு. அரிசன நலத் துறையிலே குறிப்பாக கல்வித் துறையிலே மாணவர்களுடைய முன்னேற்றத்திற்காக பல முறை பல குறைகளை, பல பிரச்சினைகளைக் கூறியும் கடந்த இரு ஆண்டுகளாக மிகக் கசப்பான அனுபவங்கள் தான் எனக்கு ஏற்பட்டன. அவற்றையெல்லாம் நான் இங்கே விவரிக்க முடியாது. கால அவகாசமும் கிடையாது. உண்மையிலேயே அரிசன நலத் துறை என்று அரிசனங்களின் பெயரைக் கொண்டுள்ள அந்தத் துறை அரிசன வகுப்பைச் சார்ந்த மக்களுக்காக, அவர்களின் முன்னேற்றத்துக்காகச் செயல்படவில்லை, அதாவது அவர்களின் நலனுக்கு மாறாக இயங்குகிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் துறையை அவசியம் சீரமைக்க வேண்டும். அரிசன மக்களின் முன்னேற்றத்துக்காக உண்மையிலேயே அந்தத் துறை பாடுபட வேண்டுமானால், அந்தத் துறையைக் கட்டாயம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு ஆளுநர் உரை மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப் பளித்தமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு நிறுவனங்களுக்காக சட்டத்திருத்தம் கொண்டு வந்து கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது அது நிறைவேற முடியாமல் போய் விட்டது. மீண்டும் அதை நிறைவேற்றுகின்ற வகையிலே ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் மிக மிக உளம் கனிந்து வரவேற்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களுக்காக ஆளுநர் உரையிலே ஐந்து கோடி ரூபாய்க்குத் தேங்கியிருக்கின்ற சரக்கைக் கொள்முதல் செய்வது என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது. ஆனால் இப்போது கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய் அளவிற்கு அங்கே சரக்குகள் தேங்கியிருக்கின்றன. ஐந்து கோடி ரூபாய் என்பது கடலிலே கரைக்கும் பெருங்காயம் போல் இருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பணம் ஒதுக்கித் தந்திருக்கலாம். இருக்கின்ற நிதி நிலையை அனுசரித்து ஒதுக்கியிருக்கிறார்கள். நிதி நிலையைப் பொறுத்துத் தான் ஒதுக்க முடியும். அதையும் வரவேற்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் ஒன்று கடந்த சட்டமன்றத் தொடரின்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு, எல்லா மாவட்டங்களுக்கும் குழுவினர் சென்று நடைமுறையில் பிரச் சினைகளையெல்லாம் ஆய்வுக் குழுவினர் பரிசீலித்து, ஆவன செய்ய வேண்டிய நிலையில் கடைசியாக தென்னாற்காடு மாவட்டத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலைமையில் 17 ஆம் தேதி அன்று செல்வதாக இருந்தது. துரதிருஷ்டவசமாக அன்று இரவே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியைக் கலைத்து விட்டார்கள். அதனால் எங்களுடைய ஏழையெளிய நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவும் நிறைவேறாமல் போய்விட்டது. மீண்டும் அதற்கு ஒரு ஆய்வுக் குழுவை அமைத்து தமிழகம் முழுவதும் அந்த ஆய்வுக் குழு சுற்றி வந்து, பிரச்சினைகளைப் பரிசீலனை செய்து ஆய்வு செய்ய வேண்டுமானால், அதற்கு இன்னும் ஓராண்டு ஆகும். கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட இந்தத் துறையில் இருக்கக் கூடிய நாங்கள் என்றைக்கு மனிதன் துணி கட்ட ஆரம்பித்தானோ அன்று முதல் கோடிக்கணக்கான மக்களுக்கு கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்கிறோம். ஆனால் மனிதன் துணி கட்ட ஆரம்பித்த நாள் முதல் சட்ட ரீதியில் பாதுகாப்பு இல்லை. அந்தச் சட்டப் பாதுகாப்பைக் கொண்டு வரவேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் முனைந்தபோது, துரதிருஷ்டவசமாக ஆட்சி கலைக்கப்பட்டது. மீண்டும் அதைப் பரிசீலனைக்கு அனுப்பிவிடாமல், சட்ட அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர்,





முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆகியோர் நேரிடையாக உட்கார்ந்து கலந்து பேசி அதைச் சட்டமன்றத்திற்குக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நீலநாராயணன் அவர்கள் ஒன்றைச் சொன் னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் தேர்தலுக்குப் பிறகு கொல்லப்படுகிறார்கள் என்று வருத்தத்தோடு சொன்னார்கள். சற்று மிகைப்படுத்தியும் சொன்னார்கள். தேர்தலுக்குப் பிறகும், தேர்தலுக்கு முன் பும் எங்கள் தொண்டர்கள் தான் அதிக அளவில் கொல்லப்பட்டதாக ஆளுநர் ஆட்சிக் காலக் கணக்கு சொல்கிறது. மொத்தம் 26 பேர் கொல்லப்பட்டதாகவும் அதில் 18 பேர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் என்றும் கணக்கு கூறுகிறது. அதை மறந்துவிட்டு உறுப்பினர் பேசியிருக்கிறார். மது ராந்தகத்தில் எம். ஜி. ஆர். மன்ற முன்னணிக் கழக வீரர் அகமது பாட்சாவை பெட்ரோல் ஊற்றி சாகடித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் செய்தார்கள். இந்த ஆட்சி மட்டும் வராமல் இருந்திருந்தால், இன்றையதினம் நானே உயிரோடு இருந்திருக்க முடியாது. ஆளுநர் ஆட்சி இருந்தபோது கூட, திருவான்மியூரில் திட்டமிட்டு என்னைக் கொல்ல வந்தார்கள். நல்லவேளை தப்பி வந்தேன். புரட்சித் தலைவர் அவர்கள் ஏழையெளிய மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். நான் திரு. நீலநாராயணன் அவர்களைப் போல் கடைந்த மோரையே திரும்பத் திரும்ப கடைந்து கொண்டிருக்கத் தயாராக இல்லை. ஆகாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பது போல் புரட்சித் தலைவர் ஆட்சியைப்பற்றிச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

நான் ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். மத்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது லாபகரமாக இருக்காது என்று சொல்லி யிருக்கிறது. சர் ஏ. இராமசாமி முதலியார், டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் போன்றவர்கள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே, அன்றைய தினம் கவர்னராக இருந்த ஆர்ச்சிபால்ட் நை அவர்கள் காலத்திலேயே, அதைப் பற்றி ஆராய்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் நல்லது என்று சொல்லியிருக்கிறார்கள். அது தஸ்தாவேஜில் கூட இருக்கிறது. அதை மீண்டும் கொண்டு வந்தால் இலங்கையைச் சுற்றி வருகிற கப்பல் எல்லாம் தூத்துக்குடி வந்து அந்தத் துறைமுகம் கொச்சி துறைமுகம் போல், பம்பாய் துறைமுகம் போல் ஆக வாய்ப்பு இருக்கிறது. அதேநேரத்திலே நம்முடைய வியாபாரமும் பெருகும். ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும். மொத்தத்தில் ஆளுநர் உரை திருப்தியாக இருக்கிறது. அதை வரவேற்கிறேன். கைத்தறி

நெசவாளர்களுக்காக ஆய்வுக் குழு போடாமல் உடனடியாக சட்டமுன்வடிவைக் கொண்டுவர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு பேசவாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே பேசிய பல உறுப்பினர்கள் பொதுவாக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள இந்த ஆட்சியைப் பாராட்டினார்கள். அமைச்சரவையைப் பாராட்டினார்கள். ஜனநாயக முறைப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற இந்த அரசாங்கத்துக்கும், அமைச்சர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சி என்ற முறையில் இப்படிப் பாராட்டுகின்ற நேரத்தில் இந்த ஆட்சி செய்கின்ற எந்த நல்ல காரியங்களாக இருந்தாலும், அவைகளை வரவேற்க நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதேநேரத்தில் இந்த ஆட்சி கெட்ட காரியங்களைச் செய்ய முற்படுமானால் அல்லது கெட்ட காரியங்கள் செய்வதற்கு உறுதுணையாக இருக்குமானால், எதிர்க் கட்சி என்ற முறையிலே அதைக் கண்டிக்கவும் நாங்கள் உரிமை பெற்றவர்கள் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அதுமட்டுமல்ல ; இந்தத் தேர்தல் வெற்றி தோல்வியைப்பற்றி நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஜனநாயகத்தில் மக்கள் தந்த தீர்ப்பை மகேசன் தந்த தீர்ப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தர்மத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதிலும் எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் தேர்தல் முடிவுகள் வந்த பிறகு, இந்தத் தீர்ப்பை மகேசன் தீர்ப்பாக ஏற்றுக்கொள்கிறோமென்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இப்படி அவர்கள் அறிவித்ததற்குப் பின்னாலும் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் பற்றி என்ன பேசுகிறார்கள் அல்லது எழுதுகிறார்கள் என்பதைப் பற்றியும் நாங்கள் எண்ணிப் பார்க்கிறோம். அதேநேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தோற்று விட்டது, திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் செல்வாக்கை இழந்து விட்டது, கருணாநிதி விடைபெற்று விட்டார் என்று நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும், எழுதிக் கொண்டும் இருக்கின்றவர்களைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

வாகைக்குளத்தில் துப்பாக்கிக் குண்டுகள் பொழிந்ததுபற்றி நாங்கள் சொன்னபோது, அங்கே விழுந்த துப்பாக்கிக் குண்டுகளை நாங்கள் மக்களிடத்தில் நினைவுபடுத்தியபோது, அவை துப்பாக்கிக் குண்டுகள் அல்ல,



பூமாரி பொழிந்தது என்று அந்த மக்கள் ஏற்றுக்கொள்வார்களானால், திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காக வெட்கப்படவில்லை. உடுமலைப் பேட்டையில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதை நாங்கள் நினைவுபடுத்திய போது, இந்த ஆட்சியைப்பற்றிக் குறை சொல்லுவதற்காகக் கூறுகிறோம் என்று அந்த மக்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால், திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காகவும் வெட்கப்படவில்லை. இந்த ஆட்சியில் நடந்துள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டுவது எதிர்க் கட்சியின் கடமை என்பதால் தானே நாங்கள் அவற்றைச் சுட்டிக்காட்டுகிறோம்.

புட்லூர் தண்டபாணி பற்றிச் சொல்வதால் அந்தத் தொகுதி மக்கள் எதிர்க் கட்சி தன்னுடைய கடமையைச் செய்தது என்ற அளவில் அவர்களும் நாங்களும் மன நிறைவு கொள்கிறோம். அதே நேரத்தில் மக்கள் என்ன தீர்ப்பை அளித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மக்கள் தீர்ப்பை நாங்கள் மதிக்க எப்போதும் தவறியதில்லை. இன்னொன்றையும் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அடையாளம் தெரியாமல் ஒழிந்து விட்டது என்று நினைத்துக் கொண்டு மகிழ்ச்சியடைவார்களேயானால், அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றைச் சொல்வேன், திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பின்னால், இந்தக் கூட்டணிக்குப் பின்னால் எந்த அளவுக்கு மக்கள் இருக்கிறார்கள் என்பதையும் ஆட்சியில் உள்ளவர்களுக்கு நினைவுபடுத்துவது எனது கடமையென்று கருதுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு 83,76,958 பேர் வாக்களித்திருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்கு 92,52,796 பேர் வாக்களித்திருக்கிறார்கள். இடையிலே இருக்கின்ற 8, 9 லட்சம் ஓட்டுகள்தான் இன்றையதினம் எங்களை எதிர்க் கட்சியிலும், அவர்களை ஆளும் கட்சியிலும் உட்கார வைத்திருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்துவதோடு அந்த ஜனநாயக முறையைத்தான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்துக்குச் செல்வாக்கு இல்லை யென்று அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பார்களேயானால், அதிலே எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அந்த எண்ணத்தில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தால் நாங்கள் அதிலும் குறுக்கிடத் தயாராயில்லை.

(பிற்பகல் 4-30)

இன்னும் ஒரு கருத்து கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. நீலநாராயணன் அவர்கள் சொன்னார்கள். நடந்து முடிந்த தேர்தலில் 18, 15 வயதானவர்கள் கூட ஓட்டு போட்டார்கள், ஆகையால் தான் வெற்றி பெற்றார்கள் என்று

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1980 ஜூன் 28

சொன்னார்கள். அது உண்மையா அல்லவா என்பதைப்பற்றி நான் விவாதத்திற்குப் போக விரும்பவில்லை. அப்படி உண்மையிலேயே நடந்திருந்தால், அவர்களுடைய திறமையை நான் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட திறமை எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய எங்களுக்கு இல்லை என்பது வருந்தத்தக்கது. அந்தக் காரியங்கள் நடந்திருந்தால், அதற்காகத் தேர்தலுக்குப் பின்னாலே பழியைச் சொல்லி நாங்கள் தப்பித்துக்கொள்ளத் தயாராக இல்லை. இன்னும் ஒன்று பேசப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள்; கருணாநிதியும், இந்திரா காந்தியும் சேர்ந்துதான் கலைத்துவிட்டார்கள் என்ற இந்தப் பேச்சு தேர்தல் நேரத்தில் நாட்டிலே பேசப்பட்டது. நான் இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழக சட்டசபை கலைக்கப்பட்டவுடன், ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் மகிழ்ச்சி தெரிவித்து அறிக்கை விட்டதுபோலவும் அல்லது திராவிட முன்னேற்றக் கழகம்தான் டெல்லிக்குத் தூது போய் இந்த ஆட்சியைக் கலையுங்கள் என்று விண்ணப்பம் போட்டது போலவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதிதான் இந்த ஆட்சியைக் கலைக்கச் செய்து விட்டார் என்று பேசினார்கள். ஆனால், நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், நாடாளுமன்றத் தேர்தல் நடந்தவுடனே, சட்டமன்றத்திலே மிகத் தெளிவாகச் சொன்னார்கள். 'உங்களுடைய ஆட்சியை டிஸ்மிஸ் செய்யுங்கள்' என்று நான் கேட்கமாட்டேன் என்று சொன்னார்கள். எங்கேயாவது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரோ, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களோ இந்த ஆட்சியைக் கலையுங்கள் டிஸ்மிஸ் செய்யுங்கள் என்று சொன்னார்கள் என்று நிரூபித்தால், எடுக்கின்ற எந்த முடிவாக இருந்தாலும் அதற்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். இன்றைக்கு என் கலைத்தார்கள் என்று கேட்கக்கூடும். 1977-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தவுடன், ஜனதா அரசு ஆட்சிக்கு வந்தவுடன், அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சி எந்தெந்த மாநிலங்களில் நடைபெற்றுவந்ததோ அந்த மாநிலங்களில் எல்லாம் ஆட்சி கலைக்கப்பட்டது. 1977-ஆம் ஆண்டு சில மாநிலங்களில் அரசு கலைக்கப்பட்டதே, அப்போது திரு. கருணாநிதிதான் சொன்னாரா? இப்போது 9 மாநிலங்களில் ஆட்சி கலைக்கப்பட்டதே, இவைகளைக் கலைக்கவும் நாங்கள்தான் சொன்னோமா? 1977-ஆம் ஆண்டு, இப்போது நடந்ததற்கு முன்மாதிரியாக இருந்தது. அப்போது இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கின்றவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். ஆட்சியில் இருந்த நேரத்திலே அவர்கள் அதைக் கண்டிக்கவில்லை. ஜனதா அரசாங்கம் செய்தது தவறு என்று அவர்கள் சொல்லவில்லை. இந்திய



1980 ஜூன் 28] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அரசியல் சட்டத்தில் 356-வது பிரிவு இருக்கும்வரை இந்த அநீதிகள் நடக்கும் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னபோது, அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அன்றையதினம் அமைதியாக இருந்தார்கள். யாரையோ கலைக்கிறார்கள், எங்கேயோ நடக்கிறது என்று இருந்தார்கள். அந்த நிலைமை இப்போது அவர்களுக்கே வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் யாரிடத்திலேயும் போய் விண்ணப்பம் போட்டுக் காத்திருக்கவில்லை. நாடாளுமன்றத்திலே உறுப்பினரான திரு. மாறன் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, 356-வது பிரிவை எடுக்க வேண்டும் என்று கேட்டபோது, திரு. பூபேஷ் குப்தா அவர்கள் அதை ஆதரித்துப் பேசினார்கள். திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் பேசினார்கள். ஆனால் ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள், கலைத்துவிட்டார்கள் என்று வேகமாக மேடைகளிலே, முழங்கும் கட்சியைச் சார்ந்தவர்கள் அந்தக் கட்சியின் உறுப்பினர்களுக்கு என்ன உத்தரவு போட்டார்கள்? 356-வது பிரிவு நீக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்தபோது அந்தப் பிரிவு இருக்க வேண்டும் என்று வாதாடியவர்கள், இன்றைக்கு ஆட்சி கலைக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகம் மீது பழி போடுவது நியாயம் தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, வன்முறையைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் பேசும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 16 பேர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 16 பேர்களா, 6 பேர்களா என்ற கேள்விக்கு நான் போகவில்லை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இறந்துவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் மகிழ்ச்சியடையவில்லை. அதுபோல், தி.மு. கழகத்தினர் இறந்துவிட்டால் அ.தி.மு.க-வினர் மகிழ்ச்சியடைவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. தேர்தல் நேரத்தில் சம்பவங்கள் நடந்துவிடுகின்றன. நான் 'வேதனையோடு' என்று கூட சொல்லமாட்டேன், இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். நான் தேர்தலிலே வேலை செய்த காரணத்தாலே, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்னை விரோதி என்று நினைத்து, என்னை ஒழிக்க வேண்டும் என்று நினைத்தால் அதைப்பற்றி நான் பயப்படவில்லை, அச்சப்படவில்லை. தேர்தல் முடிவுகள் வந்துகொண்டே இருந்தன. அப்போது என்னுடைய வீடு தாக்கப்பட்டது. பால் டெப்போவிலிருந்து பால் புட்டிகளைக் கொண்டு வந்து, டி.வி. செய்திகளை என் மனைவி மக்கள் வீட்டில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் மீது வீசி தாக்கினார்கள். நான் அரசியலிலே இருக்கும் காரணத்திற்காக குடும்பத்தினர் தாக்கப்பட வேண்டுமா? இந்த அரசாங்கம்

எந்த முடிவெடுத்தாலும் எதிர்க் கட்சியாக நாங்கள் இருப்பதால், எந்த நிலைக்கும் எங்களைத் தயார்படுத்திக்கொள்ள நாங்கள் தயங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் உரை நிகழ்த்தும்போது, அவருடைய உரையைக் கேட்டேன். நாட்டில் எங்கே அராஜகங்கள், வன்முறைகள் நடந்தாலும், அவைகள் ஒடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இந்த நாட்டிலே அவர்கள் அதை நிலைநிறுத்தினால், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுக்கு ஒத்துழைப்புத் தரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலே எந்தெந்தக் கட்சிக்கு எப்படி ஓட்டுகள் வந்தன என்பது ஒருபுறமிருந்தாலும், எல்லா அரசியல் கட்சிகளும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள். அப்படி எல்லாக் கட்சிகளும் வாக்குறுதிகளைக் கொடுக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகமும் சில வாக்குறுதிகளைக் கொடுத்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சில வாக்குறுதிகளைக் கொடுத்தது. மக்கள் அந்த வாக்குறுதிகளை நம்பித் தான் ஓட்டுகளைப் போட்டார்கள் என்று நான் நம்பவில்லை. ஆனால், குறைந்தது ஒரு 60 சதவீதம் மக்கள் ஒரு கட்சி கொடுக்கும் வாக்குறுதிகளை நம்புகிறார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படத் தக்கவைகள் தானா, அவைகள் நிறைவேற்றப்பட முடியுமா என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். என் கையிலே இருக்கும் இந்தப் பத்திரிகை 'அண்ணா' பத்திரிகை. 3—5—1980 (சனிக்கிழமை) நாளிட்டது. இந்த நாளேட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த வாக்குறுதிகளைப்பற்றி இன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், 'நடக்காததையெல்லாம் கூறி மக்களை ஏமாற்றுகின்ற கருணாநிதியின் அறிவிப்புகள், மதுரைக் கூட்டத்தில் புரட்சித் தலைவர் எச்சரிக்கை' என்று இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஏதாவது வாக்குறுதி கொடுத்தால், அவைகள் நடக்காது; ஏமாற்றுகின்ற வேலை. நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், அதேநேரத்தில் நம்முடைய இன்றைய முதலமைச்சர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்கள். அந்தத் தேர்தல் அறிக்கையை நான் இந்த நேரத்தில் நினைவுபடுத்துவது மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறேன். எத்தனையோ வாக்குறுதிகளை, எத்தனையோ தேர்தல் அறிக்கைகளிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாவற்றையும் படிப்பது இந்த அவையின் நேரத்தை வீணாக்குவதாகுமென்று கருதுகிறேன். ஆனால்,



சிலவற்றைக் குறிப்பிடுவது என்னுடைய கடமையென்று நான் கருதுகிறேன். வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள மக்கள் வேலை கிடைக்கும் காலத்தில் ஓரளவிற்கு வாழ்ந்தும், வேலையற்ற நேரத்தில் பட்டினி கிடந்தும் வாழ்க்கை நடத்தும் நிலையை மாற்றிட வேலை கிடைக்காத காலத்தில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வயது வந்த ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் கிடைக்கச் செய்வோம் என்று சொன்னார்கள். இதை மக்கள் நம்பியிருக்கிறார்கள் என்று நான் சொன்னால் சிலர் மறுக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் அந்த வாக்குறுதியை மக்கள் நம்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு கட்டாயமாக வேலை தரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பதற்கு இடம் இல்லாமல் தவிக்கும் எல்லோருக்கும் மனைப்பட்டா கிடைக்கச் செய்வோம். வேலையில்லாத பட்டதாரிகள் தமிழகத்திலே சுமார் 1 லட்சம் பேர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் உதவித்-தொகை வழங்கி, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி செலவிட அ.தி.மு.க. அரசு வாக்குறுதி அளித்தது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி செகண்டரி கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாது இருக்கும் ஆசிரியர்களுக்கும் மாதம் ரூபாய் 50 அளிக்கப்படும். மருத்துவப் பயிற்சி பெற்ற 10 ஆயிரம் மருத்துவப் பெண் உதவியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பிரசவித்த ஏழைத் தாய்மார்களுக்கு ரூ. 50 வீதம் மூன்று மாதத்திற்கு சத்துணவிற்காக ரூ. 150 தரப்படும். பட்டினி கிடக்கும் அவல நிலை யாருக்கேனும் ஏற்படின்

(பிற்பகல் 4-40)

அத்தகையோர் அங்குள்ள அரசு அதிகாரியை அணுகி தன் நிலையை விளக்கினால், உடனடியாக அவருக்கு உதவித் தொகை ரூ. 100 பெற்றுத் தரப்படும். பின்னர் அத்தகையோருக்குத் தேவையான வேலை வாய்ப்புக்கும் வழிவகை செய்து தரப்படும் என்று சொல்லப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால், அவர்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாகத் தர ஏற்பாடு செய்யப்படும். நலிவுற்ற விவசாயப் பொருளாதாரத்தைச் சீரடையச் செய்து முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதற்காக மாநில அளவில் தனியான விவசாய வளர்ச்சித் திட்டக் குழு நிறுவப்படும். அதன் தலைவராக முதலமைச்சர் இருப்பார். துணைத் தலைவராக அமைச்சரின் அந்தஸ்தில் கட்சி சார்பற்ற ஒருவர் நியமிக்கப் படுவார். இப்படியும் சொல்லப்பட்டது. அது மட்டுமல்ல, விவசாயிகள் கடன் ரத்தைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், விவசாயிகளின் கடன் ரத்துபற்றி நாங்கள் எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசும்போதுகூட, விவசாயிகளின் கடனைப்பற்றிய விளக்கம் ஒன்றைக் கேட்டு, இதுபற்றிய வெள்ளை அறிக்கை ஒன்றை மன்றத்தில் வைக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதோடு சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் அத்தனை பேர்களுடைய கடனையும் ரத்து செய்ய வேண்டுமா, அதைப்போலவே டிராக்டர்களுக்காக வாங்கிய கடன்களையும் ரத்து செய்ய வேண்டுமா என்றெல்லாம் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை, தெளிவாக, திரு. நாராயணசாமி நாயுடு தலைமையில் உள்ள தமிழக விவசாய சங்கத்தின் 9 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் பரிசீலனை செய்யப்படுவதுடன், தஞ்சை போன்ற பல்வேறு மாவட்டங்களில் ஆங்காங்கே உள்ள விவசாயிகளின் பிரச்சினை குறித்து கோரிக்கை எழுப்பும் விவசாய சங்கங்களின் முறையீடுகள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு உரிய முறையில் தீர்த்து வைக்க, திராவிட முன்னேற்றக் கழகம் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அது நமது முதலமைச்சர் அவர்களுக்குக் கொஞ்சம் வருத்தமாகக்கூட இருந்தது. இந்தத் தீர்மானம் தெளிவாக இல்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தில் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வோம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பாகச் சொல்லவில்லை; ஆனால் நாங்கள் அப்படியில்லை; எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் தெரியுமா என்று கேட்டு, அன்றையதினம் இப்போது முதலமைச்சராக இருப்பவர் பேசி இருக்கிறார். (உறுப்பினர் தம் கையில் நாளேடு ஒன்றை வைத்துக் கொண்டிருந்தார்) இது 'அண்ணா' பத்திரிகை. சென்னை 15—5—1980 தேதியிட்ட பத்திரிகை. இதில் போடப்பட்டிருக்கிறது. "தேர்தல் அறிக்கையில் கூறாமல் மேடையில் முழங்கும் மர்மம்" "விவசாயிகள் கடன் ரத்து விவகாரத்தில் தி.மு.க.-வின் தில்லுமுல்லு" என்று போட்டிருக்கிறது. அதில் "திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை சரியில்லை" என்று சொல்லிவிட்டு "நாங்கள் என்ன செய்யப் போகிறோம் தெரியுமா" என்று கேட்டுவிட்டுச் சொல்லுகிறார். "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகள் கடன்கள் ரத்து செய்யப்படும். அதற்காக உதவி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். மத்திய அரசு மறுத்தால், 5 ஆண்டு காலத்திற்குள் கழக அரசே அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யும்". இது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் திட்டவட்டமாக, தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்.



ஆனால் ஆளுநர் உரையில் விவசாயிகளின் கடன் ஏதாவது ரத்து செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்களா என்று பார்த்தேன். அப்படி ஒன்றையும் காணோம். அதற்கு மாறாக, மத்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்கப் போகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசின் துணை வேளாண்மை அமைச்சர் ஒரு பத்திரிகையின் பேட்டியில் வேறு விதமாகப் பதில் அளித்திருக்கிறார். மத்திய அரசாங்கத்தை உடனடியாகக் கேட்கப் போகிறோம் என்று ஆளுநர் உரையைத் தயாரித்து ஒரு வார காலம் கடந்துவிட்டது. ஏறக்குறைய இவர்கள் ஆட்சிக்கு வந்து 20 நாட்களுக்கு மேலாகிவிட்டது. இதுவரையில் அவர்கள் ஏதாவது மத்திய அரசிடம் இதுபற்றி முறையிட்டிருக்கிறார்களா என்றால், இல்லை. இதுபற்றி அந்த மத்திய துணை அமைச்சர் சொல்கிறார்.

"Thiru Swaminathan said that if the State Government offered a higher support-price than announced by the Centre, the Union Government would not object but the State would not be given any subsidy. He said, even now many States offered higher support-prices. He said the Tamil Nadu Government had not yet approached the Centre for assistance to write off farmers' debts." என்று சொல்லப்பட்டிருக்கிறது. உடனடியாக மத்திய அரசாங்கத்தை அணுகி கடனை ரத்து செய்யக் கோரி நடவடிக்கை மேற்கொள்ளுவோம் என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால், இல்லை என்பது மட்டுமல்ல, தமிழக அரசாங்கத்தின் சார்பில் அப்படிப்பட்ட முறையீடு எதுமில்லை என்று மத்திய அரசின் துணை வேளாண்மை அமைச்சர் கூறியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பேச்சினிடையே குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். என்றாலும், அணுகுவோம் என்பதற்கும், அணுகினோம் என்பதற்கும் வேறுபாடு கருதாமலேயே மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரே என்று நான் வருத்தப்படுகிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: நான் எனது பேச்சிலே "இந்த அரசாங்கம் அணுகினோம் என்று சொன்னதாகச்" சொல்லவில்லை. அணுகுவோம் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த ஆட்சி வந்து 20 நாட்களுக்கு மேலாகிறது. இந்த 20 நாட்களில் ஒரு கடிதம் எழுதுவதற்கு என்ன காலதாமதம் என்றுதான் கேட்கிறேன். அதற்கான நேரம் இல்லாமல் போய்விட்டதா? ஏனென்றால், விவசாயிகளுடைய பிரச்சினையைத்தான் மிக முக்கியமான பிரச்சினையாக ஒன்பது அம்சப் பிரச்சினையாக வைத்து, அதை நம்பித்தான் திரு. நாராயணசாமி நாயுடு தலைமையில் உள்ள விவசாய

சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கடந்த கால நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டு, பச்சைத் துண்டுபோட்டுக் கொண்டு பச்சைக் கொடி காட்டினார்கள். அதற்காக கேட்கிறேன். ஏன் ரத்து செய்யவில்லை என்று கூடக் கேட்கவில்லை. மத்திய அரசு பணம் தராவிட்டால், ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் நாங்களே அந்தக் கடன்களை ரத்து செய்வோம் என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் உரையிலோ இதற்காக மத்திய அரசை நாங்கள் நாடுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவேதான் கேட்கிறேன், ஏன் இதுவரை மத்திய அரசாங்கத்தை அணுகவில்லை? மத்திய அரசாங்கத்தை மாநில அரசாங்கம் இது சம்பந்தமாக அணுகவில்லை என்று மத்திய அமைச்சரே சொல்லியிருக்கிற காரணத்தால், ஏன் இன்னும் அணுக வில்லை என்றுதான் நான் கேட்கிறேன்.

இதைப்போலவே 60 வயது கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மாத ஓய்வு ஊதியம் தரப்படும் என்று சொல்லப்பட்டது. இப்படிப் பல வாக்குறுதிகள் தேர்தலுக்கு முன்னாலே தேர்தல் அறிக்கையிலேயே சொல்லப் பட்டது. அதுமட்டுமல்ல. அரசே மலிவு விலையில் 22 காரட் தங்கத்தில் தாலிகள் தயாரித்து மக்களுக்குக் கிடைக்கச் செய்வோம், வேலைவாய்ப்பு இழந்துள்ள பொற்கொல்லர்கள் பல்லாயிரக்கணக்கானோருக்கு இதன் வாயிலாகத் தொடக்க காலத்தில் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

அதுமட்டுமல்ல, தெருவுக்குத் தெரு, எந்தச் சுவற்றில் பார்த்தாலும் ஒரு வாசகம் எழுதப்பட்டது "ராமாயி வயசுக்கு வந்துவிட்டா. அடுத்த மாதம் கல்யாணம். கருணாநிதியே தாலிக்குத் தங்கம் எங்கே" என்று கேட்கும் வாசகங்கள் சுவற்றுக்குச் சுவர் எழுதப்பட்டது. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை இந்த விளம்பரத்தை அப்படியே புகைப்படமாக எடுத்து வெளி யிட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது என்ன ராமாயி?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அது அவர்களுக்குத்தான் தெரியும். கன்னியாகுமரியிலிருந்து, கோவையிலிருந்து சென்னைவரை எந்தத் தொகுதி யில் பார்த்தாலும், இதுபோன்ற சுவரொட்டிகளும், வாசகங்களும் எழுதப்பட் டிருந்தன. அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று என்றுகூட நான் கேட்கவில்லை. "20 நாட்கள் தானே ஆயிற்று நாங்கள் ஆட்சிக்கு வந்து, இதற்குள்ளாகவா?" என்று கேட்கக் கூடும். எனவே நான் அதைக் கேட்கவில்லை. இந்த ஆட்சியாளர்கள் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை ஆண்டவன் என்று



ஒருவன் இருந்து அவன் அவதாரம் எடுத்து வந்தால்கூட நிறைவேற்ற முடி யாது. இவர்கள் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டு மென்று சொன்னால், தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 3,000 கோடி வருவாய் இருக்க வேண்டும். ஆனால் 1,000 கோடி ரூபாயைக்கூட வருவாயாக எட்ட முடியாமல் இருக்கிற நம் அரசாங்கம் இதையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்துவேன் என்று நினைக்கவேண்டாம். ஆனால் மக்கள் இவர்களை நம்பி அனுப்பியிருக்கிறார்கள். ஆட்சியாளர்களாகப் பார்த்து எந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக் கொள்ள விரும்புகிறார் களோ அப்போது நிறைவேற்றலாம். அதையெல்லாம் நாங்கள் கேட்க வில்லை. மக்கள் இவர்களை நம்பி ஆட்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் "ராமாயி வயசுக்கு வட்துவிட்டாள், அடுத்த மாதம் கல்யாணம். கருணாநிதியே தங்கம் எங்கே" என்று ஏதோ கருணாநிதியிடம்தான் தங்கம் இருப்பதைப் போல் எழுதினார்களே, இப்போது அவர்களே அந்தப் பொறுப்புக்கு வந்திருக் கும்போது, எப்போது அவர்கள் தங்கம் தரப்போகிறார்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். மே மாதத்தில் சொன்னார்கள். இப்போது ஜூன் மாதம் நடக்கிறது. எனவே குறைந்தபட்சம் ஒரு வாக்குறுதியை யாவது நிறைவேற்றக்கூடாதா என்றுதான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னைப் பார்த்துத் திருப்பிக் கேட்கலாம், "பாண்டிச்சேரியில் உங்கள் கட்சி ஆட்சி செய்கிறதே அங்கே கொடுத்துவிட்டீர்களா?" என்று. நாளை முதல் அங்கே—பாண்டிச்சேரியில்—தாலிக்கு 4 கிராம் தங்கம் தரப்படும். அதில் 2 கிராம் 250 ரூபாய் விலையிலும் மீதி மானியமாகவும் கொடுப்பதாக அங்கே அமைச்சரவை முடிவு செய்து அதை நாளை முதல் அமுல்படுத்தப் போகிறார்கள். நாங்கள் கொடுத்த வாக்குறுதியைப் பாண்டிச்சேரியில் நிறைவேற்றிக் காட்டுகிறோம். இங்கே உள்ள ஆட்சியாளர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்ற கேள்வியை மட்டும் கேட்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படி எவ்வளவோ வாக்குறுதிகளைத் தந்தார்கள். இன்றையதினம் அந்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றப் போகிறார்கள் என்று இந்த நாட்டு மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-50)

அது மட்டுமல்ல. இன்றைய தினம் தேர்தலிலே வெற்றி பெற்றவுடன் நடைபெற்ற கலவரங்களைப் போல் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்த தும் எங்கேயாவது இப்படிப்பட்ட கலவரங்கள் நடந்தனவா என்பதை எண்ணிப்பாருங்கள். சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்தவுடன் இவ்வளவு

கலவரங்கள் நடக்கக் காரணம் என்னவென்பதை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தவுடனே அதில் ஏற்பட்ட தோல்விக்காக முதலமைச்சர் அவர்கள் ஆறுதல் தத்துவங்களைச் சொல்லியிருந்தார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் எங்கள் கூட்டணி 38 இடங்களிலும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டு இடங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர் தெளிவாகச் சொல்லியிருந்தார். அவர் கூறிய அந்த ஆறுதல் வார்த்தைகளை நான் படித்துப்பார்த்தேன். தேர்தலில் தோற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லுவதைப் போல அது அமைந்திருந்தது. "தோல்வியைக் கண்டு மனம் துவளக்கூடாது. வெற்றியும், தோல்வியும் தொடர்ந்து தொடர்ந்து வரும்" என்று சொல்லியிருந்தார்கள். அதுமட்டுமல்ல, "அரசியலிலே வெற்றி, தோல்வி என்பது இரவு பகலைப் போல். உலகக் குத்துச் சண்டை வீரர் கூட தோற்றுத்தான் வெற்றி பெற்றிருக்கிறார். அதைப் போல அரசியலில் தோற்றவர் தோற்றுக் கொண்டேயிருப்பதுமில்லை. வென்றவர்கள் வென்று கொண்டேயிருப்பதுமில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இது எம்.ஜி.ஆர். பேச்சு 3—5—1980 அன்று.

இன்றைய தினம் தி.மு.க. தோற்றவுடன் கலைஞரைப்பற்றி, அவருடைய சரித்திரம் முடிந்துவிட்டதென்று ஒரு அமைச்சரே சொல்லியிருந்தார். தனிப்பட்டவர்களுடைய சரித்திரம் பற்றி எங்களுக்குக் க்வலையில்லை. சமுதாயத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென்பதுதான் எங்கள் குறிக்கோள். இப்படி அமைச்சர் ஒருவர் சொல்லியிருக்கிறார். என்பதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட, "அரசியலில் வெற்றி, தோல்வி என்பது சகஜம். வெற்றி கண்டு வெறி கொள்ளாதே" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அண்ணாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு கட்சியை வைத்திருப்பவர்கள், எங்கள் தோல்வியைக் கண்டு எப்படியெல்லாம் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதற்காக ஒரு உதாரணத்தைச் சொல்லுகிறேன்.

தேர்தலுக்கு முன்னாலே ஒப்பந்தம் செய்து கொண்ட படத்திற்காக வசனம் எழுதுவதற்காக கலைஞர் அவர்கள் மைசூர் சென்றார்கள். அதைப் பற்றிக் கூட இங்கேயிருக்கிறவர்கள் எப்படியெல்லாம் எழுதி மகிழ்ச்சியுடைந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "கருணாநிதியைக் காணோம்", "கருணாநிதி தூக்க மாத்திரையைச் சாப்பிட்டு வேதனை", "கருணாநிதிக்கு நெஞ்சுவலி, பெங்களூரில் சிகிச்சை" என்றெல்லாம் செய்திகளைப் போட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். இப்படியெல்லாம் உண்மைக்கு மாறான செய்திகளைப் போடுவதில், அதைப் படிப்பதில் அவர்களுக்கு



மகிழ்ச்சியிருக்குமானால், அதிலே கூட நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் உண்மையிலேலே கலைஞருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதா என்றால், இல்லை. ஒருவேளை அவர் போய்விட்டால் நன்றாக இருக்குமென்று நினைத்தார்களோ என்னவோ, அவர்களுடைய ஆசை நிறைவேறவில்லை. அதைத் தவிர மகிழ்ச்சியடைய ஒன்றுமில்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகத்தின் அடிப்படையில் பத்திரிகைகள் இயங்குகின்றனவா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இராமச்சந்திரன் கன்னி சீதை அக்கினிப் பரீட்சையில் மூழ்கி தான் கற்புடையவள் என்று நிரூபித்ததைப் போல எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றதன் மூலம் ஊழல் செய்யவில்லை என்று நிரூபித்துவிட்டார் என்று பெருமையாகப் பேசுகிறார்கள். அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்வதில் எனக்குக் கொஞ்சமும் சங்கடம் கிடையாது. இதே தமிழ் நாட்டில் ஐந்து மாதங்களுக்கு முன்னால் மக்கள் வேறுவிதமாகத் தீர்ப்பளித்தார்கள். அப்போது சீதையைப்பற்றிச் சொல்லியிருந்தால், வருத்தப்பட்டிருப்பார்கள். அப்போது ஏற்பட்ட தோல்விக்குப் பதில் சொல்லத் தயாராக இல்லை. இப்போது மட்டும் வெற்றி பெற்றவுடனே சீதையைப்பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள். ஆகவே ஆளும் கட்சிக்காரர்கள் இதற்கெல்லாம் இப்படியொரு காரணத்தைக் கற்பித்தால், 83 இலட்சம் மக்கள் அவர்களை எதிர்த்து வோட்டுப் போட்டிருக்கிறார்களே, அவர்களை மதிக்கத் தயாராக இல்லையா? 83 இலட்சம் மக்கள் நான்கு மாதங்களுக்கு முன்னால் எப்படி வோட்டுப் போட்டார்கள் என்பதைப் பார்க்கும்போது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைவிட 27 இலட்சம். . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், நான் சட்டமன்றப் பேரவையில் பேசியதைக் கேட்டேன் என்று சொன்னார்கள். அங்கே நான் என்ன சொன்னேன் என்று தெரிந்துகொண்ட பிறகும், இவர் ஏதோ சொல்லித்தான் தீர வேண்டும் என்ற முறையிலும், பாடம் படிப்பதைப் போலவும் பேசிக்கொண்டிருப்பது எனக்குப் புரியவில்லை. நான் பேசியதை நினைவுபடுத்திக்கொண்டால் நல்லது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள் மற்றவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. தலைவர் என்ற முறையிலும், முதலமைச்சர் என்ற

முறையிலும் அவர் பேசியிருக்கிறார். ஆனால் அது கட்சி உறுப்பினர்களால் பின்பற்றப்படுகிறதா என்பதற்காகத்தான் இவைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிச் சொல்வதால், ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க, ஒழிக்க திட்டம் தீட்டுவதாக அர்த்தமல்ல.

ஆளுநர் உரையிலே பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்லுகிற நேரத்தில், எதிர்க் கட்சியாகிய நாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். "உண்மைக்கும், தர்மத்திற்கும், நேர்மைக்கும் தமிழக மக்கள், இந்தியத் துணைக் கண்டத்திற்கே அளித்துள்ள பரிசுதான் இந்த ஏழாவது தமிழகச் சட்டப் பேரவையாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் சொல்கிற நேரத்தில் எது தர்மம், எது உண்மை, எது நேர்மை என்று கேட்க வேண்டியது எங்களுடைய கடமையல்லவா ?

இவர்கள் இப்போது வெற்றி பெற்று வந்திருந்தாலும், கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் நாங்கள் சொன்ன கருத்துக்களை, குற்றச்சாட்டுக்களை 83 இலட்சம் மக்கள் நம்பித்தான் இருக்கிறார்கள். நாங்கள் சொன்ன கருத்துக்களை 92 இலட்சம் மக்கள் நம்பவில்லையென்று சொல்லலாம். இதிலே 9 இலட்சம் மக்கள்தான் வித்தியாசம். அதை நாங்கள் மறுக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைவிட 27 இலட்சம் அதிக வாக்குகளை நாங்கள் பெற்றிருந்தோம். அந்த நிலை மாறுவதற்கு நான்கு மாதங்கள் ஆகியிருக்கின்றன. ஆகவே இப்போது இருக்கின்ற 9 இலட்சம் வாக்குகள் மாறுவதற்கு எத்தனை நாட்கள் ஆகுமென்ற கணக்கை நாங்கள் போடவில்லை. அதை விட்டுவிட்டு, "உண்மை, தர்மம், நேர்மை" என்று தமிழகம் பூராவும் சுவரொட்டி கூட ஒட்டியிருக்கிறார்களே, பேசியிருக்கிறார்களே, அது ஏன் என்று கேட்கவில்லை ; ஆனால் எது உண்மை, எது தர்மம், எது நேர்மை என்று கேட்கக் கூடாதா ?

மருத்துவக் கல்லூரி ஊழலைப்பற்றிச் சொன்னோம். நீதிபதி தீர்ப்புத் தந்தார்கள். பஸ் முதலாளிகள் தந்த பணத்தைப் பற்றிக் குறிப்பிட்டோம். அதை உண்மையென்று இந்த நாடு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்களா ? அதைப் போலவே எங்கள் தலைவர் சட்ட மன்றத்திலே பல ஆதாரங்களோடு குற்றச்சாட்டுகளைச் சொன்னார். சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கொண்டுவந்து விசாரணை நடத்தத் தயார் என்று பதில் சொன்னார்களே, அதை நிறைவேற்றினார்களா ? அப்படி





நிறைவேற்றாமல், நேர்மை, தர்மம் என்று சொல்லுவதில் என்ன நியாயம் இருக்கிறதென்று கேட்டால், நிச்சயமாக முதலமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளை திராவிட முன்னேற்றக் கழகம் சுமத்தியதை மறந்துவிடக் கூடாது.

இன்னொன்றைத் தெளிவாகச் சொல்லுகிறேன். 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அண்ணா தி. மு. கழகத்தினர் ஒரு ஊழல் புகார் பட்டியலைக் கொடுத்தார்கள். அதுபற்றி விசாரணை நடந்தது. இன்னும் நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்தாலும், நாங்கள் பயப்படப் போவதில்லை. எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையும் இல்லை. நடவடிக்கை எடுக்கட்டும். 1973 ஆம் ஆண்டு அப்படியொரு ஊழல் புகார் கொடுத்தவுடனே, மத்திய அரசாங்கம் அதை மாநில அரசுக்கு அனுப்பி வைத்தது. மாநில அரசும், மத்திய அரசுக்குப் பதிலை அனுப்பியது. அந்த பதிலினுடைய நகலை அச்சிட்டு ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினருக்கும், மேலவை உறுப்பினருக்கும் தந்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி ஒரு அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதற்கு வழி காட்டியதோ, அதைப் பின்பற்றி 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடனே நாங்களும் டில்லியில் ஒரு புகார் மனுவை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடத்திலே கொடுத்தோம். அது மாநில அரசுக்கு வந்திருக்க வேண்டுமென்று நான் நம்புகிறேன். மாநில அரசும், அதிலே எது உண்மை, எது ஆதாரமற்றது என்பதை ஆராய்ந்து மத்திய அரசாங்கத்திற்கு தன்னுடைய பதிலை அனுப்பியிருக்க வேண்டுமென்று நிச்சயமாக நம்புகிறேன். அப்படியில்லையென்றால் இனிமேலாவது அனுப்புவார்கள் என்று நம்புகிறேன். நாங்கள் சொன்ன நாற்பது குற்றச்சாட்டுகளில் எது எது ஆதாரமற்றது, அல்லது எல்லாமே ஆதாரமற்றதா என்ற பதிலை மத்திய அரசுக்கு அனுப்பும்போது அல்லது அனுப்பிய பதிலை இந்த மன்றத்திலே வைப்பார்களேயானால், "உண்மைக்கும், தர்மத்திற்கும், நேர்மைக்கும் தமிழக மக்கள் இந்தியத் துணைக் கண்டத்திற்கு அளித்துள்ள பரிசு" என்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

(பிற்பகல் 5-00)

எனக்குத் தெரிந்தவரையிலே சொல்கிறேன். மே மாதம் 23 ஆம் தேதி ஒரு பதில் இந்த அரசாங்கத்திலிருந்து சென்றிருப்பதாக நான் கேள்விப் பட்டேன். அது ஒரு சமயம் தவறாகக் கூட இருக்கலாம். ஏனென்றால் ஆதாரம் இல்லாமல் சொல்லக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்

காட்டுவார்கள். செல்லவில்லை என்று அவர் சொல்வாரென்றால், அதை நான் ஒத்துக்கொள்கிறேன். பதில் சென்றிருக்குமானால், அதனுடைய நகலை இந்த மன்ற உறுப்பினர்களுக்குத் தருவார்களானால், அதிலே அவர்கள் நியாயமானவர்கள் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்களானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், ஆளுநர் உரையில் எழுதியிருக்கின்ற வாசகத்தை முழுக்க முழுக்க அப்படியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் சிலர் பேசுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர் என்ற அளவிலே நான் என்னுடைய பதிலைச் சொல்லவேண்டியது கடமை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரொம்ப அமைதியாகத் தானே இருக்கிறார். அவர் கோபித்துக்கொள்வதாகக் காணோமே.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** “என்னுடைய பதிலைக் கேட்டதற்குப் பிறகு மீண்டுமா” என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் ஆளும் கட்சி சார்பிலே பேசப்படுகின்ற பேச்சு நாட்டு மக்களின் மத்திலே ரேடியோ மூலம், பத்திரிகைகள் மூலம் செய்தியாக வெளிவருகின்றது. அதனால் பொதுமக்கள் என்ன நினைப்பார்கள் ? ஒருவர் பேசுகிறார். பத்திரிகையிலே படிக்கிறேன். “எலெக்ஷன் என்றால் எம்.ஜி.ஆர்., கலெக்ஷன் என்றால் கருணாநிதி”. அதை ஆளும் கட்சியினர் கேட்டு மகிழ்ச்சியடையலாம். அதைப்பற்றி நான் தைரியமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், இந்தச் சட்ட மன்றத் தேர்தலாக இருந்தாலும், பஸ் அதிபர்கள் இந்தத் தமிழ் நாட்டிலே இருப்பவர்கள், அரசியல் கட்சிகளுக்குப் பணம் கொடுக்க வேண்டும், நன்கொடை கொடுக்க வேண்டும் என்பதற்காக வசூலித்தார்கள். “நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாங்கள் இந்த இந்தக் கட்சிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள்” என்று கேட்டார்கள். திட்டவட்டமாக நாங்கள் சொல்லி விட்டோம். “பஸ் அதிபர்களைப் பொறுத்த வரையில், எங்களுடைய முடிவு ஒன்றுதான். உங்களிடத்திலே நன்கொடை வாங்கிக்கொண்டு பிறகு நாளைக்கு ஆட்சியிலே இருக்கின்ற நேரத்தில் உங்களுக்கு சார்பாக இருக்கவேண்டும், அல்லது நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று எதிர்பார்த்து நீங்கள் இப்படி நன்கொடை கொடுப்பீர்களானால், அந்த நன்கொடைகள் எங்களுக்குத் தேவையில்லை”



என்று யார் அந்தக் கலெக்ஷன் செய்தார்களோ, வசூலித்தார்களோ அவர்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறோமே தவிர, நாங்கள் கலெக்ஷன் செய்யவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்று நகரசபைக்குத் தேர்தல் வரப்போகிறது. அப்படி உள்ளபடியே வந்தால் மகிழ்ச்சி. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி இவைகளில் எல்லாம் தேர்தல்கள் விரைவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் சென்னை மாநகராட்சித் தேர்தல் இன்னும் ஓராண்டு காலம் ஒத்தி வைக்கப்படுகிறது என்று சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லிவிட்டு 2 மாதத்தில் தொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வரட்டும். மகிழ்ச்சி அடைகிறேன். அதிலே 18 வயதுள்ளவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப் போகிறோம் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டது. அதை மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர் தாமோதரன் போன்றவர்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலே, திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்கிறேன். பதினெட்டு வயது என்று சொன்னாலும் வரவேற்கிறோம், 15 வயது என்று சொன்னாலும் வரவேற்கிறோம் அல்லது பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளுக்கு வாக்குரிமை என்று சொன்னால் அதையும் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனென்றால், ஆட்சியாளர்கள் எதைச் செய்தாலும் மக்கள் வரவேற்கும்போது, நாங்களும் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக அவர்கள் 18 வயது என்று சொல்லி, வாக்காளர் பட்டியல் என்று சொல்லி, வாக்காளர் பட்டியல் தயாரித்தாகவில்லை என்று சொல்லி, ஒத்திப்போடுவதற்கு என்று அந்தக் காரணத்தைக் காண்பிப்பார்களானால், அதையும் தான் நாங்கள் ஏற்போமே தவிர வேறு வழியில்லை. விரைவிலே 18 வயதினரை நிர்ணயித்து தேர்தலை நடத்த முன்வருவார்களானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இங்கே மத்திய அரசாங்கம் நம்முடைய மாநிலத்திலே செய்திருக்கின்ற முதலீடுகளைப்பற்றி ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். 1969 ஆம் ஆண்டு ரூ. 262 கோடியாக இருந்தது. அதாவது சுமார் 8 சதவிகிதமாக இருந்தது. இது அகில இந்திய அரசாங்கம், மத்திய அரசாங்கம் போடுகின்ற முதலீட்டில் 8 சதவிகிதம். இப்போது 15,[illegible] கோடி ரூபாய் முதலீடு. அதிலே 616 கோடி ரூபாய் நம்முடைய

தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது புரோபோர்ஷனேட்டாகப் பார்க்கும் போது 4 சதவிகிதம் தான் ஆகிறது. அது குறைந்திருக்கிறது. அதை நான் கண்டிக்கிறேன். 8 சதவிகிதமாக இருந்தது இதற்கு முன்னால், இப்போது ரூ. 616 கோடியாக இருக்கிறது, அது நமக்கு ஏறத்தாழ 1,300 கோடி ரூபாய் அளவுக்கு இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையே என்பதற்காக ஆட்சியாளர்கள் எந்த அளவுக்கு தமிழ் நாட்டின் வளர்ச்சியிலே அக்கறை கொண்டு உணர்ச்சி வசப்படுகிறார்களோ, அந்த எண்ணத்தைப் பெற்றிருக்கிறார்களோ, அதிலே கொஞ்சம்கூட குறைந்தவர்கள் அல்ல நாங்கள். தமிழ் நாடு முன்னேற வேண்டும், தமிழ் நாட்டிலே தொழில் வளம் பெருக வேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்பட வேண்டும் என்பதில் நிச்சயமாக ஆட்சியாளர்களை விட கொஞ்சமும் ஒரு சதவிகிதம் கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் குறைந்த அக்கறையுள்ளவர்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்திரா காங்கிரசோடு திராவிட முன்னேற்றக் கழகம் தோழமையாக இருக்கிறது. இந்த நேரத்திலே இங்கே ஆட்சியில் இருக்கக் கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிதி வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்கும்போது, அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைக்குமா என்று ஆட்சியிலே இருக்கின்றவர்கள் சந்தேகப்பட வேண்டாம். எந்தக் கட்சியோடு நாங்கள் தோழமை கொண்டிருந்தாலும், தமிழ் நாட்டினுடைய வளர்ச்சிக்காக தமிழக அரசு உரிமைக் குரல் கொடுக்கும் போது, அந்தக் குரலுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரலும் சேர்ந்து ஒலிக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் சில செய்திகளைச் சொன்னார்கள். நான் அதற்குள்ளே போகவில்லை. இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, தமிழ் நாட்டிலே என்ன செய்தார்கள், தொழில் வளர்ச்சியிலே அக்கறை காட்டினார்களா என்றெல்லாம் சொல்லவில்லை. 2½ ஆண்டுகளைப்பற்றி நான் மறந்துவிடுகிறேன். இப்போது தொழில் துறைக்காக ஒரு அமைச்சரை நியமித்திருக்கிறார்கள். அவர் இந்த நாட்டிலே தொழில்கள் வளருவதற்காக அதிகமான முயற்சிகளை எடுத்துக்கொள்வார் என்று நம்புகிறேன். அந்த அளவிலே தொழில்கள் வளருமானால், வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்படுமானால், நிச்சயமாக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் தொழில்கள் வளர்கின்றன, வளர்கின்றன என்று சொல்லிக்கொண்டு, தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இந்த அரசு எப்படி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டினால், யாரும் வருத்தப்படக்கூடாது, நான் திரும்பத் திரும்ப அதை ஒசையைக்



குறிப்பிடுகிறேன் என்று நினைக்கக்கூடாது. அரசாங்கம் சில தொழில்களுக்கு முதலீடு செய்கிறது.

'Tamil Nadu Industrial Investment Corporation, Tamil Nadu Small Industries Development Corporation'

போன்ற நிறுவனங்களின் மூலமாக நிதி உதவி செய்கிறார்கள். ஆனால் ஆளுங் கட்சிக்கு வேண்டியவர்கள், ஆதரவாக உள்ளவர்கள் அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களுக்கு ஒரு நியதி, ஆளுங் கட்சியை எதிர்க்கின்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு வேறு ஒரு நியதி என்றால், அது நியாயம்தானா? நியாயம் பற்றி இரண்டு இடங்களிலே ஆளுநர் உரையிலே வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கிற அரசு இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இடைக் காலத்திலே எனக்கு சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. [illegible] தவணைகள் கட்டவில்லை என்பதற்காக எதிர்க் கட்சியைச் சேர்ந்த அல்லது எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே நடவடிக்கை எடுத்து, அந்த நிறுவனங்களுக்கு 'சீல்' வைத்து, எப்படியாவது அந்தத் தொழிலைக் கெடுக்க முடியுமா என்று நினைத்தார்கள். எத்தனை தொழில்கள் கடந்த 2½ ஆண்டுகளாக அல்ல, 6 ஆண்டுகளாக, 7 ஆண்டுகளாக—உங்களுடைய ஆட்சிதானே என்று சொல்லுவார்கள்—நடவடிக்கை எடுக்கப்படாமல், நடத்த உதவி செய்திருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படி தொழில்களை ஒடுக்குவது என்று நினைத்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இன்றையதினம் எனக்குத் தெரிந்த வரையில் சொல்கிறேன்.

Vijaya Atomic Industries, Industrial Estate, Ranipet; Madhavan Printing Pre-s, Singampuneri; V. J. Industry, Industrial Estate, Ranipet; Sankar Industries, Arkonam; Western Industries, Industrial Estate, Ranipet; Dhanalakshmi Chemicals, Ranipet—

இப்படி ஏறக்குறைய 38 தொழில்கள். கடந்த 6 ஆண்டுகளாகப் பணம் கட்டவே இல்லை. அவர்கள் மீதெல்லாம் கடந்த 2½ ஆண்டுகளில் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. இப்படி நான் சொல்லுகின்ற காரணத்தாலே, அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொருளில்லை. தொழில்களை நடத்த இந்த அரசாங்கம் எப்படி உதவி செய்ய வேண்டுமென்று நினைக்க வேண்டும். யார் தொழில் நடத்துகிறார்கள் என்று எண்ணிப் பார்ப்பதைவிட அந்தத் தொழிலால் இந்த நாட்டுக்கு என்ன பயன் கிடைக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நான் குறிப்பிட்ட நிறுவனங்கள் எல்லாம் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய கடனில் ஒரு பைசாவைக்கூட கடந்த 6, 7 ஆண்டுகளில்

திருப்பித் தராமல் இருக்கும்போது, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லையே, எங்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களே என்று நான் சொல்லவில்லை. நல்லவேளையாக இந்த ஆட்சியிலே எங்களுக்கு ஏற்பட்ட நிலைமை அவர்களுக்கு வாராமல், தப்பித்தார்களே! எனவே நாட்டிலே தொழில் வளம் பெருக எப்படியெல்லாம் இந்த அரசாங்கம் திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று சிந்தித்துப் பார்த்து, செயல்பட வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-10)

இன்னொன்றையும் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் வெற்றி விழாக் கூட்டத்திலே ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்து எங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது மாநில சுயாட்சி என்ற கருத்து. நாங்கள் அந்தக் கருத்தைச் சொன்னபோது, அதை அண்ணா சொல்லவில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும்போது, மாநில சுயாட்சி கூடாது என்றும், அதிக அதிகாரங்கள் மாநிலத்துக்கு வரக் கூடாது என்றும் நினைத்துக் கொண்டு சொன்னார்கள். சட்டசபையிலே விவாதம் கூட நடந்தது. அன்றையதினம் மாநில சுயாட்சி அண்ணா அவர்களின் கொள்கை தான் என்று சொன்னபோது, இல்லையென்று சொன்னார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையில் அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் உடனே அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் எடுத்துக்காட்டிப் பேசினார்கள். அது அண்ணாவின் கொள்கை தான் என்று சொன்னார்கள். இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தக் குரல் ஒலித்திருக்கிறது. அதிலும் மாண்புமிகு முதலமைச்சரே தேர்தல் வெற்றி விழாக் கூட்டத்திலே அறிவித்திருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். இப்படியெல்லாம் சொல்வதனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்யுமோ என்ற சந்தேகம் துளியும் வேண்டாம். அதிக அதிகாரங்கள் வருமா வராதா என்றும் நான் சொல்ல மாட்டேன். ஆனால் மாநில சுயாட்சி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் குரல் என்பதை மட்டும் திட்டவட்டமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். பல திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள், பட்டிதொட்டியெல்லாம் மாநில சுயாட்சி பற்றிப் பேசியிருக்கிறார்கள். அதன் காரணமாக இன்றையதினம் சுயாட்சி, அதிக அதிகாரங்கள் என்பதுபற்றி சாதாரணக் குடிமகன் கூட மிக நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறான். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்தக் குரலை கடற்கரையில் ஒலித்தாரோ அதே





குரலைத் தீர்மானமாக சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையி
லும் கொண்டு வந்து இன்னின்ன காரணங்களால் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் வேண்டும், இன்னின்ன காரணங்களால் மாநிலங்கள் சரியாகச்
செயல்பட முடியவில்லை. ஆகவே சுயாட்சி வேண்டுமென்று உணர்த்துவார்களே
யானால், தீர்மானம் கொண்டு வருவார்களேயானால், திராவிட முன்னேற்றக்
கழகம் அதை மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கும் என்பதை மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். இன்றைய அரசியல் சூழ்நிலையில் மாநிலங்களுக்கு அதிக
அதிகாரங்கள் கொடுக்க வேண்டிய கட்டாயம் வளர்ந்துகொண்டிருக்கிறது.
மத்திய அமைச்சர்கள் கூட அப்படிப்பட்ட அதிகாரங்கள் பரவலாக்கப்பட
வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் சொல்
லப்போனால், நம்முடைய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வெளிப்
படையாகவே ஓராண்டுக்கு முன்னால் அந்தக் கருத்தைத் தெளிவாக எடுத்துச்
சொன்னார்கள். இன்று மத்தியில் இருக்கின்ற அமைச்சர்கள் முதல், இந்தியக்
குடியரசுத் தலைவர் வரை நம்முடைய குரலைப்பற்றி, நம்முடைய உணர்வு
களைப்பற்றி விவாதிக்கக் கூடிய அளவுக்கு இது வளர்ந்திருக்கிறது. அந்தத்
தீர்மானம் முதலில் இங்கே நிறைவேற்றப்பட்டு தமிழ் நாட்டிலிருந்து செல்லு
மானால் அந்தப் பெருமையில் நம் எல்லோருக்கும் பங்கு உண்டு. அந்தத்
தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் என்ற முறையிலே ஆட்சியாளர்
களுக்கும், சட்டமன்றத்திலே ஏற்கெனவே அந்தத் தீர்மானத்தை
நிறைவேற்றியவர்கள் என்ற முறையில் எங்களுக்கும் அதில் பெருமை உண்டு,
சரித்திரத்திலும் அது இடம் பெறும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆரம்பத்திலே தொடங்கி வைத்தவன் என்ற முறையிலே அடியேனுக்கும் பங்கு உண்டு. (சிரிப்பு)

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, தங்களுக்
கும் அந்தப் பெருமை நிச்சயம் உண்டு. நீங்களும் மகிழ்ச்சியடைவீர்கள்.
எல்லோருக்குமே மகிழ்ச்சியைக் கொடுக்கும். அப்படிப்பட்ட தீர்மானத்தைக்
கொண்டு வந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் முழுமனதோடு நிச்சயம்
ஆதரிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு பொதுவாக இந்த ஆளுநர் உரை
யிலே பாராட்டத் தக்க சில அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன என்
பதை தான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஊராட்சி ஒன்றிய
ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க இந்த அரசு எடுத்துள்ள நல்ல
முடிவை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. அதைப் போலவே
தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழகத்தில் உருவாக்கப்படும், அதற்கான முயற்சி
கள் எடுக்கப்படும், அரசு அதை அமைக்க முடிவு செய்துள்ளது என்று சொல்

லப்பட்டிருக்கின்ற கருத்தை உள்ளபடியே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். பாராட்டுக்கள் தெரிவிக்கும் அதே நோத்தில் தமிழ்நாட்டு மக்கள், எந்த உணர்வோடு ஆட்சியாளர்களை மீண்டும் தேர்ந்தெடுத்து ஆட்சிக் கட்டிலிலே உட்கார வைத்திருக்கிறார்களோ அந்த உணர்வுக்கு மதிப்பு கொடுத்து, எந்த நம்பிக்கையின் பேரில் அவர்கள் ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்களோ அந்த நம்பிக்கைக்கு மோசம் செய்யாமல், எந்த வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிக்கு வந்திருக்கிறார்களோ அந்த வாக்குறுதிகளில் முடிந்தவற்றை நிறைவேற்றி, தமிழ்நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய உணர்வுபூர்வமான தமிழ் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையை, முனைப்போடும் ஆழ்ந்த அறிவோடும் இங்கே வெளிப்படுத்தியிருப்பதற்கு நான் முதலிலே அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலவையில் இவ்வாறு விவாதங்கள் நடைபெறுவதும், சிறப்புமிக்க கருத்துக்கள் வெளியிடப்படுவதும் இயற்கைதான் என்றாலும் கூட, இந்தமுறை விவாதத்தில் கலந்துகொண்டவர்கள் ஏதோ கொஞ்சம் ஆட்சியிலே இருக்கின்றவர் மீது—எல்லோருமல்ல, குற்றம் காண வேண்டும் என்று விரும்புகின்றவர்கள் கூட கொஞ்சம் அனுதாபத்தோடு பேசியதை நான் நினைத்துப் பார்க்கும்போது, உண்மையிலேயே அவர்களுக்கெல்லாம் நாங்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை வெளியிடுவது என்னுடைய மாபெரும் பொறுப்பு என்று நம்புகிறேன். ஆளுநர் உரை என்பது ஆட்சியிலே இருக்கின்ற ஒரு கட்சியினுடைய கொள்கையை மேலெழுந்தவாரியாக எடுத்துச் சொல்லுகின்ற ஒரு கருத்து விளக்க அறிக்கையே தவிர, முறையாக ஒரு ஆட்சி என்ன செய்யப்போகிறது என்ற முழு விவரங்களையும் தருகின்ற நிதிநிலை அறிக்கை போன்ற அறிக்கை அல்ல என்பதையும் இங்கே நான் முதலிலே குறிப்பிடுவது நல்லது என்று நம்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையின் மீது பேசிய பலரும் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி இங்கே தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளைப் பற்றி, ஆசிரியர்களைப் பற்றி, பட்டதாரிகளைப் பற்றி, தொழில் வளர்ச்சியைப் பற்றி, தொழிலாளர்களைப் பற்றி, அதுபோலவே கட்சி மாறுகின்றவர்களைப் பற்றி, தாய்மார்களுக்கு—அவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றும்போது எப்படி பாதுகாப்பில்லை என்பது பற்றி, இப்படிப்பட்ட பல்வேறு கருத்துக்





கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒரு மாண்புமிகு உறுப்பினர் ஒரு கொள்கையை ஆதரித்தால் இன்னொரு மாண்புமிகு உறுப்பினர் அதற்கு நேர்மாறான கருத்துக்களை வெளியிடுகிற மரபுப்படி எப்போதும்போல இந்த மன்றத்திலே கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள வேண்டியது சரியான, பொறுப்பான காரியம் என்று கருதுகிறேன். இப்படி நல்லெண்ணத்தோடு சொன்ன கருத்துக்கள் அத்தனையையும் நான் ஏற்றுக்கொண்டு, மீண்டும் பதவியிலே அமர்ந்திருக்கிறோம், அமர வைத்திருக்கிறார்கள் என்ற நினைவிலே, பதில் சொல்லும்போது மிக எச்சரிக்கையோடு நான் பதில்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை நான் மறக்காமல் என் கடமையை ஆற்ற முனைகிறேன்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், நான் முதலிலே ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஆசிரியர் பிரதிநிதியாக வந்திருக்கின்ற அம்மையார் அவர்கள் மிகவும் மனம் நொந்து வேதனையோடு சில கருத்துக்களை வெளியிட்டார்கள். தாதிகளாக, சேவகிகளாக எல்லாம் வேலை செய்யவேண்டிய அவசியத்திற்கு ஆசிரியர்கள் ஆக்கப்படுகிறார்கள் என்ற வேதனையை அவர்கள்—அவர்களுடைய கருத்து என்று மட்டும் நான் சொல்லமாட்டேன், அடிவயிற்றிலிருந்து, வயிற்றெரிச்சலோடு என்று சொல்வார்களே அப்படி அடித்தளத்திலேயிருந்து வரும் வேதனைகளை—வார்த்தைகளாகக் கொட்டியதை நாம் கேட்டோம். இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் என்பதில் இந்த அரசுக்குக் கொஞ்சம் கூட கருத்து வேறுபாடு இல்லை என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் இத்தகைய கொடுமைகளை நீக்குவதற்கு சட்டத்தை எந்த எந்த வகையில் பயன்படுத்த முடியுமோ, எந்த அளவுக்கு சட்டங்கள் எங்களுக்கு அதிகாரத்தைத் தந்திருக்கின்றனவோ, அந்தச் சட்டங்கள் முழுவதையும் நாங்கள் பயன்படுத்தத் தவறமாட்டோம் என்ற உறுதியை இந்த மன்றத்தில் நான் வெளியிட கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 5-20)

அதோடு இந்த அவையில் பேசப்படாத ஒன்றைக்கூட சொல்லும் கடமை எனக்கு உண்டு என்பதால், அதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது பெண்கள் கற்பழிக்கப்படுகிற செய்திகள் ஆங்காங்கே நாளேடுகளில் வருவதைப் பார்க்கிறோம். அந்தக் கொடுமைகளுக்கும் முடிவுகட்ட, அப்படிப்பட்ட கொடுமையைச் செய்பவர்களுக்குக் குரானில் சொல்லியிருப்பதைப் போல் தூக்குத் தண்டனை விதித்தால்கூட பரவாயில்லை என்ற அளவுக்கு நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்ய எங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா

இல்லையா என்பதுகூட அல்ல, அப்படிப்பட்ட அதிகாரம் இருந்தால் அதைச் செய்வோம்; இல்லாவிட்டால் அதற்காக மத்திய அரசை வற்புறுத்தக்கூட நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் அந்த அம்மையார் அவர்கள் மூலமாகத் தாய்க் குலத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கும்போது ஏற்படுகிற வேதனை ஒவ்வொருவருக்கும் எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை நான் எண்ணிப் பார்த்துச் சொல்லுகிறேன் என்பது மட்டுமல்ல, அதனால் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்படுகிற சோதனையை வெறும் காவலில் அத்தகைய கொடுமையானவர்களை வைப்பதன் மூலமாகத் தீர்க்க முடியாது என்பதையும் அப்படிப்பட்ட கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதையும் உணர்ந்திருப்பதால்தான் தீவிரமான முறையில் இந்தக் கருத்தை முதலமைச்சர் என்ற பொறுப்பில் வெளியிட விரும்புகிறேன்.

இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இங்கே சொல்லப்பட்டவைகளும் சரி, நேரம் இல்லாத காரணத்தால் சொல்ல முடியாத அளவுக்கு விடப்பட்டவை களும் சரி, இவைகளைப்பற்றியெல்லாம் நாங்கள் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிடவே இதைச் சொல்கிறேன்.

ஒருவர் தன்னுடைய வாழ்க்கைத் துணைவியை ஒருவரிடம் ஒப்படைத்து, மருத்துவ சோதனை செய்து அவருக்குள்ள நோயைக் கண்டுபிடித்து மருத்துவம் செய்ய முனையும்போது அவருடைய மனைவியை—

(பார்வையாளர் வரிசையில் ஒருவர் கையில் ஒரு வெள்ளைத்தாளுடன் நுழைந்து ஏதோ பேச முனைந்தார். காவலர் அவரைத் தடுத்து வெளி யேற்றினார்.)

தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளுகிற சில தலைவர்கள்கூட, குறிப்பிடத் தக்கவர்கள்கூட இந்தக் கொள்கையில் பங்கு கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதன் விளைவாக அவர்கள் விவாகரத்துகூட செய்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தியைக் கேள்விப்படும் போது, இவர்களெல்லாம் இந்த நாட்டில் தலைவர்களாக, கட்சியின் பிரதிநிதிகளாக, சில கொள்கைகளுக்குப் பிரதிநிதிகளாக நடமாடுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, எண்ணும்போது இதற்கெல்லாம் முடிவு கட்டியாக வேண்டிய அவசியம் இந்த நாட்டில் மிகவும் தேவைப்படுகிறது என்பதையும், அதிலும் ஒரு ஹரிஜன குலத்தைச் சார்ந்த ஒரு வாழ்க்கைத் துணைவியை இப்படிச் செய்துவிட்டார்கள் என்று கேள்விப்படும்போது நிச்சயமாகத் தீவிரமான நடவடிக்கை தேவை என்பதை இந்த நாடு ஒப்புக் கொள்ளும் என்பதையும், நாடு அதை மறக்காதென்பதையும், அதற்கான வழிவகைகளை நாங்கள் நிச்சயம் செய்வோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் நான் சட்டமன்றப் பேரவையில் என்ன பதிலைச் சொன்னேனோ, அந்த பதில்கள் எதற்குப் பொருந்துமோ அதுபற்றி இங்கே பேசியதால்தான் நான் சட்டமன்றப் பேரவையிலேயே சொல்லிவிட்ட பிறகும் இங்கே ஏன் அதைச் சொல்லு கிறார்கள் என்று கேட்டேன். அவர் பேச வேண்டாம் என்பதற்காக நான் அதைச் சொல்லவில்லை.

ஐம்பது லட்சம் அல்ல 80 லட்சம் அல்ல, 5 லட்சம் வாக்குகளைப் பெற்று வந்திருந்தாலும்கூட, 5 வாக்குகள் மட்டுமே அதிகமாகப் பெற்று வந்திருந் தாலும்கூட அவர்களையும் நாங்கள் மதிக்கிறோம். அவர்களுக்கு வாக்களித்தவர்கள் எந்த எண்ணத்தோடு வாக்களித்தார்களோ அதைப் பற்றியும் சிந்திப்போம், அவர்களின் கருத்தையும் மதிப்போம் என்று சொல்லி, இன்றையதினம் தேர்தல் முடிந்துவிட்ட பிறகு, 'எவ்வளவு வாக்கு வித்தியாசம்? இது தெரியாதா?' என்றெல்லாம் பேச ஆரம்பித்ததால்தான் நான் அதைக் குறிப்பிட்டேனே ஒழிய, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அவருக்கே உரித்தான தகுதியோடு, அவருக்கே உரித்தான திறமையோடு, அவருக்கே உரித்தான பொறுப்போடு, அவருக்கே உரித்தான கடமை உணர்வோடு தன்னுடைய கருத்துக்களை வெளியிட முனைகிறபோது நாங்கள் மனமுவந்து, மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டே அதைக் கேட்டு ரசிப்போம் என்பதை அவர்கள் தயவுசெய்து நம்ப வேண்டும்.

ஏனென்றால், கோபம் வரக்கூடாது என்று சொல்வதாலேயே கோபம் வந்துவிடாது. (திரு. வசந்த பாயைச் சுட்டிக்காட்டி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப்பற்றி விளையாட்டாகச் சொன்னேனே தவிர, அவர் பேசக் கூடாது என்பதற்காகச் சொல்லவில்லை. இப்படிப்பட்ட விமரிசனங்கள் வரும்போது கோபப்படுவதாக இருந்தால், நாங்கள் எங்கள் பொறுப்பை மறந்துவிடுகிறோம் என்று பொருள்படும். எப்போது ஒருவர் பொறுப்புக்கு வருகிறாரோ அப்போதே அவர் மற்றவர்கள் குற்றம் குறை கூறுவதைக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் பொறுப்புக்கு வரவேண்டுமே தவிர, எல்லோருமே மாலை அணிவிப்பார்கள், எல்லோரும் பாராட்டிக் கொண்டேயிருப்பார்கள் என்று எண்ணினால், அதைவிடப் பைத்தியக்காரத்தனமான எண்ணம் வேறு எதுவும் இருக்காது என்பதை நன்கு உணர்ந்தவர்கள் நாங்கள். அமரர் அண்ணா அவர்களையே குற்றம் சொன்னவர்கள் எங்களையெல்லாம் விட்டு வைப்பார்களா என்பது நிச்சயமாக எங்களுக்குத் தெரியும். எதையும் கேட்க நாங்கள் தயாராக, நல்ல உணர்வோடு தயாராக இருக்கிறோம். தேர்தலில் நாங்கள் வாக்குறுதிகள் கொடுத்தோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை எப்படி நடைமுறைப்படுத்த

முடியும் என்றும், நடைமுறைப்படுத்த முடியுமானால் செய்யுங்கள், நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள், 3 ஆயிரம் கோடி ரூபாய் இருந்தால் தான், இதை நடைமுறைப்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்துச் சுமை எங்கேயிருந்து புறப்பட்டது, எப்படி வந்தது என்று தெரியாவிட்டாலும், இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு அவர்கள் எந்த எண்ணத்தோடு சொல்லுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளுகிறோம் என்பதற்காகத்தான் இதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கள் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். "விவசாயிகள் பெற்றுள்ள கடனைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். அப்படி மத்திய அரசு தர மறுத்தால், ஐந்தாண்டுகளில் இந்தக் கடனைத் தீர்க்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்" என்று சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வருவதற்கு இடமே இல்லை. தெளிவாக இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன் நிதியமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்களையும், பிரதமர் அவர்களையும் சந்தித்தோம். நிதியமைச்சர் அவர்களிடம் ஓர் அறிக்கையைக் கொடுத்தோம். விவசாயிகளுடைய பிரச்சினை எப்படி இருக்கிறது, எப்படித் தீர்க்க முடியும், பத்தாண்டுகளுக்கு அவர்கள் பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்க வாய்ப்புக் கொடுத்து அவர்கள் மேலும் நல்ல வாய்ப்பைப் பெறுவதற்குக் கடனையும் கொடுத்து அதை அவ்வப்போது திரும்பப் பெற்று, பத்தாண்டுகளுக்குப் பிறகு பத்தாண்டுகள் வட்டியில்லாத நிலையில் அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பப் பெற முடியுமா என்றும், அதற்காக ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்றும் கோரிக்கை நாங்கள் அவர்களிடம் வைத்தோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது போன்று கடனைத் தீர்க்க முடியாது என்று சொன்னால், இன்னொரு வழிவகையைக் கடைப்பிடிக்க முடியுமா என்பதையும் நாங்கள் அங்கே கேட்டோம். நாங்கள் எதுவுமே கேட்கவில்லையென்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் சொல்லுகிறார்கள் என்றால், அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஒருவரைப்பற்றி தரக் குறைவாகப் பேச நான் விரும்பவில்லை. அவர் மிகவும் நல்லவர். நிலைமைகளைப் பார்த்தால், அவரால் பொறுத்துக்கொள்ள முடியாது. திரு. நாராயணசாமி நாயுடுவைப் பார்த்துவிட்டு வந்த பிறகு சொல்வேன் என்று முதலில் சொன்னார்கள். அப்படிப் பார்த்துவிட்டு வந்து, கடைசியில் தீர்க்க முடியும் என்று சொல்லிவிட்டுப் போனதாக பத்திரிகையில் செய்தி வந்ததையும் பார்த்தோம். நிதியமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு வந்த



ஒருவன் சண்டையிடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். இப்போது ஒரு உதாரணத்திற்கு முகமது அலியைக் குறிப்பிட்டுக்காட்டுகிறேன். அவர் வெற்றியடைகிறார் என்றால், அதற்குக் காரணம் என்ன? அவர் தன்னுடைய பலத்தை நம்பித்தான் சண்டையிடுகிறார். இன்னொருவருக்கும் தனக்கும் ஏற்படுகின்ற போட்டியில், தன்னுடைய திறமை, தன்னுடைய தகுதி, தன்னுடைய வல்லமை, தன்னுடைய நுணுக்கத் திறன் இவைகளையெல்லாம் வைத்துத்தான் போட்டியிடுகிறார். அதிலே தோல்வி அடைகிறார் என்றால், மறுபடியும் முயன்று வெற்றி பெறுகிறார். நாம் எல்லாம் தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றால், நம்மையே நம்பி அல்ல. மக்கள் நம்மை நம்பி, மக்கள் நம்மை ஏற்றுக்கொண்டால்தான் பதவிக்கு வர முடியும். அதுவும் வெற்றி பெற முடியும். இந்த இடத்திற்கு அப்படித்தான் வர முடியுமே தவிர, நமக்குள் யார் பலசாலி, யார் பட்டம் பெற்றவர், யார் தகுதியுடையவர், திறமையுடையவர், அனுபவம் உடையவர் என்று வைத்துக்கொண்டு நாமே முடிவு செய்துகொள்ளக் கூடிய ஒரு தனிப் பிரச்சினை அல்ல. அதை மக்கள் நம்புகிறார்கள், வாக்கு அளிக்கிறார்கள், வருகின்றோம். ஆகவே அவர்கள் நம்பினால்தான் நாம் பதவிக்கு வர முடியுமே தவிர, மற்றவர்கள் கையில்தான் முடிவு இருக்கிறதே தவிர, நம் கையில் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே தோல்வி-வெற்றி என்பது, என்னைப் பொறுத்த வரையில், ஒன்றுதான். வாழ்க்கையில் பல தோல்விகளைச் சந்தித்த நான், மற்றவர்கள் பெரிய வெற்றி எனக்குக் கிடைத்திருக்கிறது என்று சொல்லும் போது, இரண்டையும் சமமாகப் பாவிக்கின்ற நிலைக்கு என்னைப் பக்குவப் படுத்திக்கொள்ள வாய்ப்பும் வசதியும் கிடைத்த காரணத்தால்தான், அன்று எப்படி இருந்தேனோ அப்படித்தான் இப்போதும் இருக்கிறேன். பதவி இழந்தபோதும் அப்படித்தான் இருந்தேன். பதவி போய்விட்டது என்று சொன்னபோது, 'மகிழ்ச்சி' என்று சொன்ன 'ராமச்சந்திரன்' ஒருவன்தான் இருப்பான் என்பதை—பெருமைக்காக அல்ல—சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காலையிலே கூடச் சொன்னேன் ஏதோ காரணம் இருக்கட்டும், யார் தூண்டுதலாகவாவது இருக்கட்டும், யார் போய் திரு. சஞ்சய் காந்தியைப் பார்த்து, 7 மணிக்கு மேல், தமிழகத்தையும் அந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று சொல்லக் காரணமாக இருந்தார்களோ அவர்கள் நினைத்துக் கொள்ளட்டும் மனச்சாட்சிப்படி. எங்களைப் பதவியை விட்டு வெளியேற்றியது எங்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி. அது சட்டத்திற்குப் புறம்பானது, நீதிக்குப் புறம்பானது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் செய்த காரியம் எங்களுக்குப் பலன் தந்தது. "உங்கள் மேல் நம்பிக்கை இல்லை, ராஜினாமா செய்யுங்கள், உங்கள் மேல் நம்பிக்கை இல்லை, மக்கள் நம்பிக்கை

இழந்துவிட்டார்கள், உங்கள் கட்சி தோற்றுப் போய்விட்டது, இனி கிடையாது" என்றெல்லாம் சொன்னார்கள். இதற்குப் பதில் எப்படிப் பெறுவது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தேன். அம்மையார் அவர் களுக்கு யோசனை சொன்னவர்களும், முடிவெடுத்த அம்மையார் அவர்களும் நல்ல காரியம் செய்து, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க நல்ல வாய்ப்பு என்று சொல்லுவதைவிட, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை ஏற்படுத்தித் தந்தமைக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்று சட்டமன்றப் பேரவையில் சொன்னதை இங்கும் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பிரச்சினையை எழுப்பியதால் அதைச் சொல்கிறேன். மிக்க மகிழ்ச்சி எனக்கு. மே மாதம் 23 ஆம் தேதி இங்கே யிருந்து பதில் அனுப்பப்பட்டிருக்கலாமென்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இரண்டரை, மூன்று மாதங்கள் தமிழகத்தில் ஆட்சி எப்படி நடந்தது? யார் யார் எப்படி என்னென்ன உத்தரவுகளைப் போட்டிருக்கிறார்கள், டெலிபோனில் எல்லாம் சொல்லி ஆட்களை மாற்றினார்கள்; காலையிலே ஒரு அதிகாரி, மாலையிலே ஒரு அதிகாரி— இப்படி இருந்தவர்களை எல்லாம் மாற்றி எப்படியெல்லாம் மிரட்டினார்கள், வேறுபடுத்திப் பார்த்தார்கள் என்பதெல்லாம் ஆட்சியில் இல்லாததால் தெரியாமல் இல்லை. நான் ஆட்சியை விட்டு இறங்கிய பிறகு, அப்படி குறிப்பு வந்திருக்கிறது. அதுபற்றி அதிகாரிகளுடைய கருத்து என்ன என்று கேட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் கருத்துக்களை எழுதி அனுப்பியிருக் கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. எனக்கு அனுப்பியிருந்தால், நான் பதில் சொல்லியிருப்பேன். எனக்கு அந்த வாய்ப்பைப் பிரதம அமைச்சர் அவர்கள் தரவில்லை. அதைத் தரும்படியாக எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் களும் வற்புறுத்தவில்லை. இரகசியம் என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் கொடுக்கும்போது, இரகசியம் என்று சொல்லவில்லை. துணிந்து வெளியிட்டோம். எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களையெல்லாம் தொகுத்து வெளியிட்டோம். 'இன்னா நாற்பது' என்பதை இரகசியம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. கப்பல் பேர ஊழல் நடந்ததாகச் சொன்னார்கள். ஏன் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வைக்கக்கூடா தென்று சொல்கிறார்கள். இதற்கு விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டா மென்று இருந்தேன். காலையிலே 20 நிமிடங்கள்தான் பேசினேன். ஆனால் இங்கே மேலவை உறுப்பினர்கள் பொறுமையாக இருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. இருந்தாலும் இங்கே சொல்லக்கூடிய நிலைமை உருவாகி விட்டதால் உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கிறது. திரு. சாண்டு அவர்களுக்குக் கடிதம் எழுதினேன், எதிர்க் கட்சியினர் சொல்லுகிறார்கள்,





உங்கள் மந்திரிகள் அங்கே இருந்தார்கள், எனவே சாதகமாக அவர்கள் எழுதி விட்டார்கள் என்று. எங்கள் மந்திரிகள் வெளியேறிய பிறகுதான் விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கடிதம் எழுதினேன் என்பதை இந்த

(பிற்பகல் 5-40)

மேலவையிலே ஆதாரத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் மந்திரிகள் ராஜினாமா செய்துவிட்டு வந்த பிறகுதான், 'இப்படிப்பட்ட வழக்கு, இதை அனுப்புகின்றேன், இதற்கு நீங்கள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வைத்து விசாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று கருத்துள்ள கடிதத்தை எழுதினேனே தவிர, எங்கள் அமைச்சர்கள் அங்கே இருந்தபோது இல்லை என்பதை மேலவை மூலமாக தமிழக மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அவர்கள் மறுத்துவிட்ட பிறகு, நாங்கள் அதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை, தேவையும் இல்லை. நான் வழக்குப் போட்டிருக்கிறேன். அதற்கு அடுத்த நிலை என்ன? திரும்பத் திரும்ப என்னைப்பற்றிச் சொல்லும்போது, நான் எந்த தண்டனைக்கும் தயார். ஆகவே யார் எங்கள்மீது அந்தக் குற்றம் சொன்னார்களோ, அவர்கள் வந்து அதை நிரூபிக்க வேண்டும். நாங்கள் மான நஷ்ட வழக்கு போட்டிருக்கிறோம். அது நீதி மன்றத்தில் இருக்கிறது. நீதிபதிகள் முன்னால் இருக்கிறது. அந்த வழக்கு முடியட்டும், தீர்ப்பு வரட்டும். என்ன உண்மை என்பதை நாட்டு மக்கள் அறியட்டும். இத்தனை ஆண்டுக்காலம் கோதுமை பேர ஊழல், பூச்சி மருந்து ஊழல் எல்லாம் காத்திருக்கவில்லையா? இதில் 4, 5 மாத காலம் பொறுத்திருக்கக்கூடாதா? இன்னும் சொன்னார்கள். ஒரு மணித் துளி அல்ல. ஒரு மணி அல்ல, 5 மாதங்கள் அல்ல, 5 ஆண்டுகள் அல்ல, சொன்னதைச் செய்கிறோம், செய்ய வேண்டுமென்ற கருத்துக்கள் இங்கே வெளியிடப்பட்டன. ஐந்து ஆண்டுகள் என்ன, 5 மாதங்கள் என்ன, உண்மை வெளிவந்தாக வேண்டும். நான் மான நஷ்ட வழக்குப் போட்டிருக்கிறேன். சட்டமன்றப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள், 'என்னிடம் ஆதாரம் இருக்கிறது, வழக்குமன்றத்தில் நிரூபிப்பேன்' என்று சொல்லியிருக் கிறார்கள். அவர் நிரூபிக்கட்டும். குற்றம் என்று நிரூபிக்கப்பட்டால், என்ன தண்டனை கொடுத்தாலும் அனுபவிக்கிறேன். சுப்ரீம் கோர்ட் நீதிபதி வேண்டுமென்று எங்களைக் கேட்பதை விட, லட்சியக் கூட்டணி வைத்துக் கொண்டிருப்பவர்களாகிய அவர்கள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி வேண்டுமென்று அங்கே கேட்கலாம். அப்படியும் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலும் எனக்கு ஆட்சேபமில்லை. ஊழல், ஊழல் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்ல வேண்டாமென்று தான் கருதினேன். இடைவெளி 2½ அல்லது 3 மாதங்கள் தான். இதற்கிடையிலே எம்.டி. போன்ற

தேர்வு நடந்தது. அதிலே கூட சிலர் சிலருக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். என்னிடம் சம்பந்தப்பட்ட சில கடிதங்கள் தரப்பட்டிருக்கின்றன. அவற்றை நான் மாண்புமிகு தலைவரவர்களுக்கு ஏற்கெனவே காண்பித்து விட்டேன். அவற்றையும் இங்கே வெளியிட இருக்கின்றேன். இது உண்மை தானா இல்லையா என்பதையும், இதில் இடப்பட்டிருக்கும் கையொப்பம் திரு. வீராசாமி அவர்களின் கையெழுத்து தானா என்பதையும், மாண்புமிகு தலைவரவர்களே, தாங்கள் பார்த்துச் சொல்லலாம். அவருடைய கையெழுத்து இல்லையென்றால், அப்படி யார் செய்தது என்பது குறித்து நான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏ. டி. மஞ்சுளா, டாட்டர் ஆஃப் திராவிடமணி என்பவருக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இது ஊழல் என்பது அல்ல. பொறுப்புள்ள பெரியவர்கள் செய்கின்ற ஒரு மாபெரும் கடமை. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே இந்த நிலைமை என்றால், ஆட்சிக்கு வந்திருந்தால், என்ன நிலைமை என்பதுபற்றி நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு தலைவர் அவர்களிடமே அந்தக் கடிதத்தைத் தருகிறேன். மாண்புமிகு தலைவரவர்கள் விசாரித்து உண்மை என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன் (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு தலைவரவர்களிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அதிலே என்ன ஊழல் இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் விசாரித்து வெளியிட்டால், ஊழல் இருக்கிறது என்றால், எந்த தண்டனைக்கும் நான் தயார். சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்க பொது மக்கள் வருகிறார்கள். அப்படி வருபவர்களில் சிலர் கடிதம் கொடுங்கள் என்று கேட்டு தொந்தரவு செய்கிறார்கள். நாங்களும் கொடுக்கிறோம். அதற்காக யாரையாவது வற்புறுத்தி கொடுத்துத்தான் தீர வேண்டுமென்று வற்புறுத்தினேனா? உத்தரவா போட்டிருக்கிறேன்? சிலர் வேலைக்கு வருகிறார்கள். 'நீங்கள் கடிதம் கொடுத்தால் கிடைக்கும்' என்கிறார்கள். நாங்களும் கடிதம் கொடுக்கிறோம். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கடிதம் கொடுப்பதில்லையா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடிதம் தந்திருக்கிறார்கள் என்று தான் குறிப்பிட்டார் ஏன் என்று அவர்கள் கேட்டிருந்தால் தான் உறுப்பினர் விளக்கம் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** ஒரு திருத்தம். 17 ஆம் தேதி எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அமைச்சரவையில் இருக்கும் போது கடிதம் அனுப்பினோம். பதில் வந்தது எங்கள் கட்சி அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையை விட்டு விலகிய பிறகு. திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





போதும், கடன்கள் தீர்க்கப்படும் என்று சொன்னதாகப் பத்திரிகையில் பார்த்தோம். பிறகு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று பத்திரிகையில் செய்திகள் வந்ததையும் படித்தோம். அதற்குக் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் பதில் சொல்லும்போது, கடன்களை அப்படியே ரத்து செய்வது என்பது இயலாத காரியம் என்று பதில் தந்ததையும் நாங்கள் பத்திரிகையில் படித்தோம். அதற்குப் பிறகும் இந்திரா காங்கிரஸ் சார்பாக பிரதமர் அனுப்பிய தூதுவர் நாயுடு அவர்களைப் பார்த்ததும், எங்களைப் போன்றவர்கள் அவரைப் போய் பார்த்ததும், திரு. வீராசாமி அவர்களும், கலைஞர் கருணாநிதி அவர்களும் எத்தனை முறை நாயுடுவைப் பார்த்தார்கள் என்பதும் நமக்கெல்லாம் தெரியும். அவர்கள் என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பதை என்னிடம் கூறியிருக்கிறார்கள். நாங்கள் பேசியதையும் மற்றவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலை வெளியே தெரிந்தால் பரவாயில்லை. நாங்கள் எந்த நம்பிக்கையைக் கொடுக்க முயன்றோமோ, எதைச் செயல்படுத்த விரும்பினோமோ, அதனுடைய வெளிப்படையான கருத்துதான் இது. "விவசாயிகள் பெற்றுள்ள கடனைத் தள்ளுபடி செய்ய மத்திய அரசை வற்புறுத்துவோம். அப்படித் தர மத்திய அரசு மறுத்தால் ஐந்தாண்டுகளுக்குள் அந்தக் கடனைத் தீர்க்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்."

"கடிதம எழுதியிருக்க முடியாதா? பத்து, இருபது நாட்களில் இது கூட செய்ய முடியாதா?" என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் அவருக்கே உள்ள நல்லுணர்வோடு கேட்டார்கள். நான் ஒன்றைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். கடந்த இருபது நாட்களுக்குள் என்னென்ன நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன? இருபதாம் தேதி நான் டில்லிக்குப் போவதாக இருந்தது. இது வெளிப்படுத்தப்பட்ட செய்தி. இந்த மன்றத்திற்கும், சட்டமன்றப் பேரவைக்கும் தெரியும். ஆனால் போக முடியவில்லை என்பதும் தெரியும். பிறகு துக்க நேரத்தில் சந்திக்க நேர்ந்தது என்பதும் தெரியும். இப்போது என்ன நிலை என்பதும் தெரியும். சட்டமன்றப் பேரவை இன்றைக்குத்தான் முடிந்திருக்கிறது. மேலவையும் இன்று தான் முடிகிறது என்று கருதுகிறேன். எப்படியோ. இந்த நிலைமையில்,

(பிற்பகல் 5-30)

நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்வதோ, முயற்சிக்கவே இல்லை என்று சொல்வதோ ஒரு சரியான குற்றச்சாட்டு அல்ல. குற்றம் சொல்ல தானால் சொல்லலாம். அதற்கு உரிமையிருக்கிறது.

(திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் எழுந்தார்கள்.)

அங்கத்தினர் அவர்கள் சொன்னதைத் தான் சொல்லப்போகிறேன். குற்றம் என்று அல்ல. அக்கறை என்று. அப்படியே வைத்துக்கொள்வோம். விவசாயிகள் மீதுள்ள அக்கறை காரணமாக நீங்கள் 10, 20 நாட்களில் ஏன் சொல்லியிருக்கக்கூடாது, சொல்லியிருக்க முடியாதா என்று கேட்டார்கள். பத்து, இருபது நாட்களில் ஒரு கடிதம் எழுதியிருக்க முடியாதா என்பது அக்கறை இல்லாததாகத் தோன்றும். அதுதான் குற்றம். அது அப்படித்தான் முடியும். நீங்கள் காட்டுகின்ற அக்கறைக்கு ஈடாக எங்கள் அக்கறையும் இருக்கின்ற காரணத்தால் தான் சொல்கிறேன். அந்தத் தவறை, அந்தக் குற்றத்தை நாங்கள் செய்தோம் என்பதுபோல உறுப்பினர் அவர்கள் பேச்சு அங்கு நிற்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அந்தக் குற்றத்தை நாங்கள் செய்யவில்லை என்பதைச் சொல்லத்தான் இவ்வளவு விளக்கம் சொல்கிறேன்.

"ராமாயி வயசுக்கு வந்துவிட்டாள், தங்கம் எங்கே" என்று கேட்டார்கள். நாளையதினம் அவர்கள் எத்தனை கிராம் கொடுக்கப் போகிறார்கள் என்று தெரிந்தால், இதைவிட நமக்கு இனிப்பான செய்தி இருக்க முடியாது. நாங்களும் சொல்லியிருக்கிறோம். அவர்கள் செய்திருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன். இன்னும் கொஞ்சம் விலை குறைவாக செலவில்லாமல் செய்வார்கள் என்றால், நல்லதுதான். அதில் அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது, எங்களுக்கும் பொறுப்பிருக்கிறது. நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அதிலே தவறு இல்லை. யார் நல்லது செய்தாலும், அதைப் பின்பற்றுவதால் பெருமையும் பாராட்டும் கிடைக்கும் என்பதைப்பற்றி யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. 400 ரூபாய்க்குத் தாலிக்குத் தங்கம் வேண்டுமென்றால், எங்களுக்கு வாக்குப் போடுங்கள் என்ற வால் போஸ்டர் ஒட்டும்போது என்ன நினைத்து ஒட்டினார்கள் என்பதுதான் கேள்வி. அதுபற்றி பேச்சைத் தொடங்குவதற்கு முன்னால் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். 400 ரூபாய்க்கு தாலிக்குத் தங்கம் என்கிறார்கள். அது எவ்வளவு தங்கம்? ஒரு பவுனா, ஒரு சவரனா அல்லது ஒரு தோலாவா? தங்கம் என்கிறார்களே, எவ்வளவு கொடுக்கப்போகிறார்கள்? இதற்கு என்று ஒரு வரையறை கிடையாதா? அதற்கு ஒரு எல்லைக்கோடே கிடையாதா? தாலிக்குத் தங்கம் என்றால், எவ்வளவு தங்கம் என்று கொடுப்பது? அந்த போஸ்டர்கள்கூட படம் பிடித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் பார்த்து மக்கள் ஏமாந்து வாக்களித்துவிட்டார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை.

தேர்தலில் தோல்வியை ஒப்புக்கொண்டோம். அது தவறு அல்ல. தோல்வி என்பது ஒருவருக்கு மட்டும் சொந்தமானதல்ல. அரசியலில் யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்பது மக்கள் விரும்புவது போலத்தான் இருக்கும் என்று சொல்கிறேன். அதற்கு மாற்று விளக்கம் தேவையில்லை.





மாண்புமிகு உறுப்பினர் நல்லெண்ணத்திலே அதைச் செய்திருக்கிறார். கடிதம் கொடுப்பதற்கு தொந்தரவு செய்தார்கள், அதற்காகக் கொடுத்ததாக உறுப்பினர் சொன்னார். இப்படிப்பட்ட சிபாரிசுகள் தான் கூடாது என்று குறை சொல்லுகிறார்கள். சாதாரணமாக ஏழை எளிய மக்கள் நேரிடையாகத் தேர்வுக்குச் சென்று அந்த இடத்தைத் தகுதியின் அடிப்படையில் அவர்கள் பெற முயற்சிக்கும்போது, கொஞ்சம் பிரமுகர்கள் என்று அழைக்கக்கூடிய தகுதியிருப்பவர்கள் அல்லது நாட்டிலே அனுபவம் உள்ளவர்கள், அல்லது பெரியவர் என்று அழைக்கக்கூடிய தகுதி பெற்றவர்கள் இப்படிப்பட்டவர்களுடைய சிபாரிசினால் இடம் இவர்களுக்குக் கிடைத்து விட்டால் சாதாரண அந்த ஏழையெளிய மக்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாகவே இருக்கிறது. ஆகவே பேவரிட்டிசம். ரெக்கமன்டேஷன் இதெல்லாம் கூடாது என்பது தான் ஒரு மிகப் பெரிய கொள்கை. அதிலும் இதுபோன்ற தேர்வுகளிலே இது கண்டிப்பாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதை நான் இங்கே வற்புறுத்துவதோடு நினைவு படுத்தவும் விரும்புகிறேன். இப்படி எல்லாம் நடைபெறுகிறது என்றால், அதை எந்த நோக்கத்தோடு அவர்கள் செய்தார்கள் என்பது அவர்களுக்குத் தான் தெரியும். ஆனால் நடைமுறையிலே இது சரிதானா என்பதைப்பற்றி மக்கள் நிச்சயமாகச் சொல்வார்கள் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று சொன்னவுடன் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் என்னை ஆதரித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இது தேவைதானா, இதனால் என்ன பலன் கிடைக்கும், இந்தியா முழுவதும் எவ்வளவு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன, தமிழுக்கு பல்கலைக் கழகம் என்றால், மருத்துவம், பொறியியல் இதுபோன்றவைகளுக்கெல்லாம் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டாமா, அது எப்படி உருவாகும், அப்படிப் பிரிந்தால் ஆங்கிலத் தினுடைய பலன் கிடைக்குமா, இதனாலே எதிர் காலத்திலே என்ன பலன் கிடைக்கும் என்றெல்லாம் கேட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையில், சில கொள்கைகளை நிறைவேற்றும்போது சிக்கல்கள் இருந்தாலும், சங்கடங்கள் இருந்தாலும், அவைகள் கொள்கைகள் என்ற வகையிலே, தமிழகத்தில் தமிழ் பல்கலைக் கழகம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அதைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு திரு. தாமோதரன் போன்றவர்கள் யோசனைகள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் 25, 30, 50 ஆண்டு களுக்குப் பிறகு, தமிழகத்திலே தமிழிலே எல்லாம் நடைபெறுகிறது என்ற நிலைமைகள் வந்து—நாம் குறித்த நேரத்திலே இந்தக் கடமையைச் செய்யத் தவறிவிடாமல்—பின்னாலே வருகின்ற எழுத்தாளர்கள் குறை சொல்ல

முடியாத அளவுக்கு—நாம் கடமையைச் செய்ய முன்வந்தோம், திரு. தாமோதரன் போன்றவர்களுடைய யோசனைகள் எல்லாம் பயன் படுத்தப்பட்டன என்று இருந்தால், அது எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்த்து, ஆறுதல் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், இன்னும் பல பிரச்சினைகளுக்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களைப் பற்றியும், தனியார் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுடைய, ஆசிரியைகளுடைய நிலைமைகளைப் பற்றியும், நான் தொடக்கத்திலேயே சொன்னேன். பொதுவாக இந்த அரசு அதை நன்கு கருத்தில் வைத்திருக்கிறது என்பதையும், சட்டம் எந்த அளவுக்கு எங்களுக்கு உதவுமோ அந்த அளவுக்கு ஆசிரியர் பெருமக்களுக்கு நாங்கள் உதவுவோம் என்பதையும் நான் மீண்டும் குறிப்பிட்டு உத்தரவாதம் தர விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பல்வேறு விவரங்களைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகளையெல்லாம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, இந்த ஆளுநர் அவர்களின் அறிக்கையிலே சொல்லாமல், நிதிநிலை அறிக்கையிலே சொல்ல வைத்திருக்கிறோம். என் அரசின் கொள்கைகளில் ஒருசிலவற்றை மட்டுமே நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு நான்கு ஐந்து நாட்கள் தான். நிதிநிலை அறிக்கை வெளிவந்துவிடும். அதற்குப் பிறகு கருத்துக்கள் முழுவதையும் உறுப்பினர்கள் சொல்லவும், நாங்கள் திருத்திக்கொள்ள வேண்டியவைகளைத் திருத்திக்கொள்ளவும், சேர்க்க வேண்டியவைகளைச் சேர்க்கவும், நாங்கள் புதிதாக ஏதாவது செய்திருக்கிறோம் என்று பாராட்டினால் அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டாலும், அப்படிப்பட்ட பாராட்டுதல்களைப் பெறத்தக்க வகையில் செயல்படவும், நாங்கள் நிச்சயமாக நல்லமுறையில் பணியாற்றி உங்கள் நன்மதிப்பைப் பெற முயல்வோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

யார் யாரிடம் லஞ்சம் வாங்கினோம் என்றெல்லாம் இங்கே கூறப்பட்டது. ஏதோ பஸ் சொந்தக்காரர்கள் வந்தார்கள் என்றும், மற்றவர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறோம், உங்களுக்கும் கொடுக்கிறோம் என்று சொன்னதாகவும், அதற்கு எங்களுக்கு வேண்டாம் தேவையில்லை என்று சொன்னதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னார்கள். அவருடைய கட்டுப்பாட்டுக்கு நான் தலைவணங்கி அவரைப் பாராட்டுகிறேன். ஆனால், அந்த பஸ் சொந்தக்காரர்கள் கவர்னர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி



அந்தக் கடிதத்தை அவர்களுடைய கமிட்டியிலே வைத்து தீர்மானமாகப் போட்டு எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நாங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான பணமும் கொடுக்கவில்லை என்றும், இப்படி வீண் குற்றச்சாட்டுகளை உருவாக்குவதன் மூலம் எங்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்ய விடாமல் தடுக்கிறார்கள் என்றும், இதைக் கவர்னர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்றும் கடிதம் எழுதியிருந்தார்கள். தீர்மானம் போட்டு எழுதியிருந்தார்கள். அதன் நகலை எங்களுக்கும் அனுப்பியிருந்தார்கள். அப்போது கூட நாங்கள் 5 பஸ்கள் என்ற நிலைமைக்கு, முடிவுக்கு வரவில்லை. பிறகு அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் சட்டமன்றப் பேரவையிலே வற்புறுத்திய பிறகு, அவர்கள் விருப்பத்திற்கேற்ப கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் வரையில், முன்பு சட்டமன்றப் பேரவையிலே உறுப்பினராக இருந்த மதுராந்தகம் ஆறுமுகம் முதற்கொண்டு ' 5 பஸ் இல்லையென்றால், நாங்கள் தலையிலே துண்டைப் போட்டுக்கொண்டு ஓடவேண்டியதுதான் ' என்று நிலைமைகளைச் சொன்ன பிறகு, நாங்கள் அந்த முடிவிற்கு வந்தோமே தவிர, இந்த உண்மைகள் எல்லாம் தெரியாத காரணத்தால், ஏதோ ' இன்னா நாற்பது ' என்று எழுதியிருக்கலாம். கூடிய விரைவில் அவர்களுடைய கையே ' இனியவை நாற்பது ' என்று எழுத வேண்டிய நாள் வரும் என்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

ஏதோ ஆபத்து என்று பேசுகிறார்கள். நான் பணிவோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுவரையில் எங்கள் நண்பர்கள் எத்தனை பேர் செத்திருக்கிறார்கள்—அதிலும் குறிப்பாகத் தேர்தலுக்குப் பிறகு—என்பதை எண்ணிப் பார்த்தால் எனக்கே கொஞ்சம் அச்சமாக இருக்கிறது. அந்த எண்ணிக்கையைச் சொல்ல, பதினாறா, ஆறா என்று கேட்டார்கள். அவ்வளவு சரியாக எப்படி அந்த எண்ணிக்கையைச் சொல்ல முடிகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி ஏதோ பேச எழுந்தார்.)

கொஞ்சம் இருங்கள். அதைத்தான் சொல்லுகிறேன். ஆனால் என்னுடைய எண்ணமெல்லாம், வெளியிடப்பட்ட எண்ணிக்கைதான் இது. தினமும் இது நடைபெறுகிறது. ஆகவேதான் சட்டமன்றப் பேரவையில் பேசும்போது நான் சொன்னேன். "அனைத்துக் கட்சியினரும் உட்கார்ந்து பேசுவோம், இதற்கொரு முடிவு கட்டுவோம், இது தேவையில்லாத ஒன்று, சாகடிக்கப் படுவது நாமல்ல, நம்மை நம்பியிருக்கும் தொண்டர்கள், நம் கொள்கைகளை

நிறைவேற்ற உழைக்கிற மக்களைத்தான் பழிவாங்கப்படும் நிலைமைக்கு நாம் ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம், அவர்கள்தான் சாகடிக்கப்படுகிறார்கள்" என்று குறிப்பிட்டேன். 16 வயதுப் பெண், குழந்தையோடு இருக்கிற பெண்ணின் கணவன் ஒருவரை தேர்தலுக்கு முன்னால் நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போதே, சென்னையில் பட்டப் பகலில் கத்தியால் குத்திக் கொன்றார்கள். அதுபற்றிய வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இதெல்லாம் எங்கே போய் நிற்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

ஒன்றை மட்டும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். யாராவது அரசியல் ரீதியாக—நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை, பொதுவாகச் சொல்கிறேன்—நாங்கள் தாங்கிக் கொள்கிறோம் என்று இதைப்போன்ற சமயத்தில் உண்மையிலேயே தாக்குதலுக்கு உள்ளானவர்களைப் பார்த்துச் சொன்னால் நான் சந்தேகப்படுவேன், இந்த நாட்டு மக்கள் சந்தேகப்படுவார்கள். இன்னும் ஏதோ சில திட்டங்கள் இருக்கின்றனவோ என்று தான் யாரும் சந்தேகப்படுவார்கள். ஆகவே அப்படிப்பட்ட சந்தேகம் வராத அளவுக்கு எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து பேசி ஒரு முடிவு எடுத்தால், இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். ஏனென்றால் இன்றையதினம் தேர்தல் முடிந்துவிட்டது. யார் தமிழன், யார் தமிழனில்லை, யார் ஆட்சி செய்ய வேண்டும், யார் ஆட்சி செய்யக்கூடாது, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கதையே முடிந்துவிட்டது, அங்கேயிருப்பவர்களெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்து விடுவார்கள், இனி அங்கே கூடாரம் காலியாகப் போகிறது என்று சொல்லி மாதங்கள் 3 அல்ல, இரண்டொரு மாதம்கூட ஆகவில்லை. ஆனால் நிலைமைகள் மாறிவிட்டன. இதெல்லாம் நம் கையிலே இல்லை. மக்கள் கையிலே இருக்கிறது. எனவே இதை எண்ணிப் பார்த்து நமது சக்திக்கு ஒரு எல்லைக்கோடு வைத்துக்கொண்டு, நம் தகுதிக்கு இதுதான் எல்லைக்கோடு என்று வைத்துக்கொண்டு அதற்குள் நாம் பணியாற்றினால், நிச்சயமாக நாம் நாட்டுக்கு நல்ல தொண்டாற்ற முடியும். இந்த நாட்டில் நல்ல அறிவுள்ளவர்களைப் பெற்றிருக்கிறோம். ஆய்ந்து ஆராய்ந்து எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடியவர்களை, சிறந்த கருத்துக்களைச் சொல்லும் நிபுணத்துவம் பெற்ற சான்றோர்கள் இந்த நாட்டில் இருக்கிறார்கள். உழைக்கிற மக்கள் இருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன வேண்டும் ஒரு நாட்டுக்கு? உழைப்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். நல்ல திட்டங்களைத் தீட்டுவதற்கு அனுபவம் பெற்ற ஆற்றல் மிக்கவர்கள் உள்ளார்கள். அவைகளைச் செயல்படுத்தத் தகுந்த அனுபவம் உள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். இதையெல்லாம் பெற்றிருந்தும் நாம் பின்தங்கியிருக்கிறோம் என்றால், எங்கே குறை



இருக்கிறதோ அதை நீக்க வேண்டும், எங்கே நாம் வஞ்சிக்கப்படுகிறோமோ அதை நீக்கி உரிமை பெறுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையில் என்னென்ன எதிர்பார்க்கிறார்களோ அதற்குரிய பதில்களையெல்லாம் பெறுவார்கள், அதுவரை பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, அப்போது கேட்கிற கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை ஆதாரத்தோடு சொல்ல நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லி, வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை இந்த அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்த மன்றத்தைக் கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல கொள்கை ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். முன்னேற்றமான நடவடிக்கைகளை மற்ற மாநிலங்கள் மேற்கொள்ளும்போது, நாமும் அவைகளை நல்ல உள்ளத்தோடு கடைப்பிடிப்போம் என்று கூறினார்கள். பத்திரிகையில் ஒரு செய்தி பார்த்தேன். மகாராட்டிரத்தில் 8 லட்சம் சிறு விவசாயிகளுக்கு 49 கோடி ரூபாய் கடன் தள்ளப்பட்டிருக்கிறது என்று அந்தச் செய்தி கூறுகிறது. அப்படிப்பட்ட முன்னுதாரணத்தை நமது மாநிலம் எந்த அளவுக்குக் கடைப்பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** செய்தி வதந்தியாகிவிட்டால், நாளை நம் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அவையில் இல்லாததால் திருத்தம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

அவை முன் உள்ள பிரச்சினை :

"1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 21 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் 2—7—1980 புதன்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-55)

## இணைப்பு.

(209 ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சேலம் மாவட்ட அருள்மிகு மாரியம்மன் ஆலயத்திற்கு இராஜகோபுரம் கட்ட 1936-ல் முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் சிலர் நீதிமன்றம் மூலம் தடை உத்திரவு பெற்றதால் இது நிறுத்தப்பட்டது. பிறகு 1962-ல் இதற்கான திருப்பணிக்குழு அமைக்கப்பட்டது. ஆனால் இக்குழு இதுவரையில் எடுத்த முயற்சிகள் பற்றி அறநிலையத்துறைக்கு அறிவிக்கப்படவில்லை. அத்தோடு, திருப்பணிக்கு வசூலிக்கப்பட்ட தொகைக்கும் கணக்குகள் தெரிவிக்கவில்லை. இதனால் 1971-ல் இக்குழு கலைக்கப்பட்டது. என்றாலும் கணக்குகளும் தொகையிருப்பும் ஆலய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை.

ஆலயப் பாதுகாப்புக் குழுக் காரியதரிசி ஆலயத்தின் கிழக்குப் பக்கத்தில் 120 அடி உயர இராஜ கோபுரம் கட்ட வேண்டுமென போராட்டம் நடத்துகிறார். இக்கோபுரத்திற்கு அஸ்திவாரம் போட போதுமான இடவசதி இல்லை. அந்தப் பக்கத்தில் நகராட்சி ஜலதாரைகளும் மின்சாரக் கம்பமும் இருக்கின்றன. அவற்றினையும் கோயிலைச் சேர்ந்த ஆறு கடைகளையும் இடித்து அப்புறப்படுத்த வேண்டும். கடைகளை இடிப்பதனால் கோயிலுக்கு மாதமொன்றுக்குக் கிடைக்கும் வாடகை ரூ. 1,417 நஷ்டம் ஏற்படும். 1936-ல் அளிக்கப்பட்ட நீதிமன்றத் தடை உத்தரவின் நகல் பெற்று அதன் விளைவுகள் பற்றி ஆராயப்பட வேண்டும். கோபுரம் கட்டுவதால், அண்மையில் உள்ள முக்கியமான பாதையில் போக்குவரத்து பாதிக்கப்படும். அஸ்திவாரம் எடுக்கும்போது அருகிலுள்ள கட்டிடங்கள் பாதிக்கப்படும். 75 அடி உயர இராஜ கோபுரம் கட்ட ஆகும் செலவு மதிப்பீடு சுமார் 10 லட்சம் ரூபாய் ஆகும்.

துணை ஆணையர் தன்னுடைய 5—6—1980 நாளிட்ட ஆணையில் புதிய திருப்பணிக் குழுவை அங்கீகரித்து ஆணை பிறப்பித்துள்ளார். அந்தத் திருப்பணிக் குழுவில், தமிழ்நாடு இந்துசமய ஆலயப் பாதுகாப்புக் குழு காரியதரிசி திரு. எம். இராமசாமி இடம் பெற்றுள்ளார். 17—6—1980 ஆம்





தேதியன்று இந்துசமய அறநிலையத்துறையின் மேற்பார்வைப் பொறியாளர் (Superintending Engineer) இந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டியினால் தருவிக்கப்பட்ட ஸ்தபதி, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் (பொது) நேர்முக உதவியாளர், ஆலய அறங்காவலர் குழுத் தலைவர், திருப்பணிக்குழு உறுப்பினர்கள், இதர அறங்காவலர்கள், சேலம் இந்து ஆலயங்கள் பாதுகாப்புக் குழுவின் செயலர் ஆகியோர் இடத்தைப் பார்வையிட்டு இராஜ கோபுரம் கட்டுவதில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்த பின்னர் இதற்குத் தேவைப்படும் ரூ. 10 லட்சத்தில் 75 சதவிகிதத்தை இந்து ஆலயப் பாதுகாப்புக் குழு வசூலித்துக் கொடுக்க வேண்டும் எனவும், இராஜ கோபுரம் மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்படவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இவற்றில் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டபின் ஆலயக் கோபுர வேலைகளுக்கான நிர்வாக அனுமதி, மதிப்பீடு தயாரித்தல், திருப்பணி துவக்குதல் போன்றவை ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இம்முடிவுகளுக்கு, சேலம், தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்புக் குழுச் செயலாளர், திரு. எம். இராமசாமி ஒப்புதல் தெரிவித்து கையொப்பமும் இட்டுள்ளார். இந்த முடிவுகளின்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 75 சதவிகிதம் உத்தேச மதிப்பீட்டுச் செலவுத் தொகையை நன்கொடை மூலம் வசூல் செய்யவும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் தனது 20—6—1980 நாளிட்ட குறிப்பில் ஆலயச் செயல் அலுவலருக்கும், இந்து ஆலயப் பாதுகாப்புக்குழு செயலருக்கும் அறிவுரை கூறியுள்ளார்.

இது 1936 ஆம் ஆண்டிலிருந்து இருக்கும் பிரச்சினை. இந்த விஷயத்தில் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பது உகந்ததல்ல. எனவே இந்த சிக்கலான பிரச்சினைகளுக்கு, தொடர் உண்ணாவிரதத்தின் மூலமாகவோ அல்லது மற்ற போராட்டத்தினாலோ முடிவு காண்பதென்பது நடைமுறைக்கு ஒவ்வாத காரியமாகும். மேலே குறிப்பிட்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்ட பின், உரிய நடவடிக்கைகளை அரசும் அறநிலையத்துறையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதால் போராட்ட முயற்சிகளைக் கைவிட்டு, [illegible]நிலையத்துறை யுடனும், அறநிலையத்துறையால் அமைக்கப்பட்ட திருப்பணிக் குழுவிற்கும் ஒத்துழைப்பைக் கொடுக்குமாறு அரசின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Trunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B.B. Ganguli Street, Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் :

ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 1-7-96 | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.